# சுட்டமண்



சிவசங்கரி

# சுட்டமண்

சிவசங்கரி

திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை-600 017.

முதற்பதிப்பு: செப்டம்பர், 1991
இரண்டாம் பதிப்பு: டிசம்பர், 1997
உரிமை : ஆசிரியருக்கே.

SUTTAMUN
By : SIVASANKARI
Second Edition : Dec. 1997

Pages : 336
Paper. 11 6 kg Cream wove

விலை : ரூ. 63-00

திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை,
தி. நகர், சென்னை-600 017
போன் : 4342899. Fax : 91-44-4341559

அச்சிட்டோர்
ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை-5

# சுட்ட மண்

## ஓர் அறிமுகம்

எதிர்பார்க்கவில்லை.

இப்படி இரண்டு பேருப். அடுத்தடுத்து. சற்றும் முன்னறிவிப்பு இன்றி என்னோடு இன்று தொடர்பு கொள்வார்கள் என்று—

அதுவும் இன்று!

நின்று நிதானமாய் உட்காரக் கூட அவகாசம் தராத தினுசில், ஒன்றன் பின் ஒன்றாய்—புதுத் தொடருக்கு கரு தேர்ந்தெடுப்பதிலிருந்து, அப்போலோ ஹாஸ்பிடலில் கமிட்டி மீட்டிங், பெண்கள் முன்னேற்ற திட்டக்குழு சந்திப்பு, கேரள எழுத்தாள நண்பர் எம். டி. வாசுதேவன் நாயரின் வருகை—என்று வரிசையாய் வேலைகள் கவனத்தையும், நேரத்தையும் ஆக்ரமிக்கக் காத்திருக்கும் இன்று!

ரமணன் போன் செய்ததில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. எங்களுக்கு அறிமுகம் ஆன பிறகு வருஷாவருஷம்

ஜனவரி முதல் தேதி அன்று நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் தொடர்பு கொண்டு 'புத்தாண்டு வாழ்த்துக்கன் ஸர்' என்று வாழ்த்துவது வழக்கம்தான் என்பதனால் இன்று அவன் பேசியது புதுசு இல்லை.

ஆனால் யமுனா தொலைபேசியில் அழைத்து 'ஹாப்பி நியு இயர் அங்கிள்' என்று கூறியது நிச்சயம் வியக்க வேண்டிய சமாசாரமே!

யமுனாவா! புத்தாண்டு வாழ்த்து தெரிவிக்கிறாளா?_ என்கிற ரீதியில் என் புருவங்கள் உயர்ந்ததை டெல்லியிலிருந்து பார்க்க முடிந்த மாதிரி யமுனா சிரித்தாள். பின் அந்தச் சிரிப்பு குரலில் விரவ, 'நம்ப முடியலையா அங்கிள்?' என்றாள்.

எப்படி நம்புவது? அவளை நான் அறிந்த நாளாய் அவளுடைய சிந்தனைகள், நம்பிக்கைகள் கொள்கைகளையும் நன்கு அறிவேனே. அப்புறம் இது என்னடா புது மாற்றம் என்று திகைக்காமல் வேறு என்ன செய்வது?

யமுனாவுக்குச் சின்ன வயசிலிருந்தே தெய்வம், மதம், ஜாதி, பண்டிகைகள், கொண்டாட்டங்கள் என்பதிலெல்லாம் சுத்தமாய் நம்பிக்கை கிடையாது. அவள் வளர்க்கப்பட்ட விதம் அப்படி.

ஊர் முழுவதும் புத்தாண்டையும், பொங்கலையும், தீபாவளியையும் கொண்டாடும்போது இவள் மட்டும் எந்த கேளிக்கையிலும் ஈடுபடாமல் 'அதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது' என்று தனித்து நிற்பாள்.

'கடவுள், மதத்துல நம்பிக்கை இல்ல. சரி வேண்டாம். ஆனா, பண்டிகைகளை, முக்கியமான நாட்களா கொண்டாடறதுல தப்பு என்ன? நாலு பேர் ஒண்ணா சேர்ந்து சந்தோஷமா, சிரிக்க, மகிழத்தானே இப்படி



ஒரு பழக்கத்தைப் பெரியவங்க உருவாக்கினாங்க?' என்று யாராவது அவளிடம் வாதாடினால், உதட்டைச் சுழித்து அலட்சியமாய் சிரித்துத் தோளைக் குலுக்குவாள். அப்புறம் 'சந்தோஷமா இருக்கவும், மனசு விட்டுச் சிரிக்கவும் ஜனவரி ஒண்ணாம் தேதி வரைக்குமோ, இல்ல தீபாவளி வரைக்குமோ ஏன் காத்திருக்கணும்! எல்லா நாளும் அப்படி இருந்தா என்ன? எப்பவுமே எல்லாருமே சிரிச்சுகிட்டே இருக்கறததான் நா விரும்பறேன். ஸோ ஒவ்வொரு நாளையும் பொங்கலா, கிருஸ்மஸ் தினமா நினைச்சிகிட்டா போச்சு! என்ன நா சொல்றது?' என்பாள் உரக்கச் சிரித்தவாறு.

இப்படி அழுத்தம் திருத்தமாகத் தன் கருத்துக்களை வெளியிடுவதோடு நிற்காமல், வாழ்க்கையிலும் கடைப்பிடிப்பவள் யமுனா என்பதால் சற்றுமுன் தொலைபேசியில் அழைத்து 'ஹாப்பி நியு இயர்' என்றதும் ஒரு நிமிஷம் என்ன பதில் கூறுவது என்று புரியாமல்தான் போயிற்று.

யமுனா மாறிவிட்டாளா?

நம்ப முடியவில்லையே!

'எனக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும், உங்களுக்கு இருக்கே அங்கிள்? அதனால், உங்களைச் சந்தோஷப்படுத்தவாவது நா 'விஷ்' பண்ணலாம் இல்லியா? 'விட்டுக் கொடுத்து வாழறதுதான் சந்தோஷத்தை அதிகரிக்கும்'னு சொல்வீங்க இல்ல, அது நினைப்புக்கு வந்தது. போன் பண்ணேன். எப்படி இருக்கீங்க அங்கிள்? புதுசா 'குங்குமத்துல' தொடர் எழுதப் போறீங்கனு விளம்பரம் பார்த்தேன். ரொம்ப சந்தோஷம். உங்க எழுத்தப் படிச்சு ரொம்ப நாளாச்சு. ஐ மீன் புது எழுத்து! பழைய நாவல்களைத்தான் திரும்பத் திருப்பப் படிச்சுகிட்டே இருக்கேனே! விளம்பரத்துல நீங்க எழுதப்போறதைத் தவிர மத்த விவரங்கள் எதுவும் குறிப்பிடல — என்ன

தலைப்பு கொடுக்கப் போறீங்க அங்கிள்? 'கரு' என ன்னு தெரிஞ்சுக்கலாமா?'

அதுபற்றித்தான் யோசித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து பேசிய நிமிஷங்களில் அவள் எதையோ என்னிடம் சொல்ல விரும்புவதையும், ஆனால் தயங்குவதையும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

'என்ன விஷயம் யமுனா?' என்று நான் கேட்டு அவள் சொல்லுவதைவிட, அவளாகக் கூறட்டும் என்று நான் தூண்டாததில் பொதுவாக சில விஷயங்களைப் பற்றிப் பேசியபின் 'நீங்க எழுத உட்கார்ந்திருக்கறப்ப நா தொந்தரவு பண்ண விரும்பலை அங்கிள்—அப்புறம் சாவகாசமா பேசறேன்...டெல்லி பக்கம் வர்ற வேலை இருக்கா? வந்தா அவசியம் என்னோடதான் நீங்க தங்கணும்; உங்ககிட்ட பேச நிறைய விஷயங்கள் இருக்கு' என்று கூறி அவள் தொடர்பைத் துண்டித்தாள்.

ரிஸீவரை வைத்துவிட்டு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தபோது 'சின்னச் சின்ன விஷயங்கள்ல ஸ்வபாவத்த மாத்திக்கறதுதான் எல்லாருக்கும் நல்லதுனு புரியுது —'விட்டுக் கொடுத்து வாழறது சந்தோஷத்தை அதிகரிக்கும்'னு நீங்கதானே சொல்லுவீங்க' என்ற வார்த்தைகள் மட்டும் மீண்டும் மீண்டும் மனசில் அலை மோதின.

அவளை அறிந்த நாளாய் நான் வெளியிட்டுள்ள இந்த கருத்துக்கு, அப்போதெல்லாம் முக்கியத்துவம் கொடுக்க முனையாதவள் இப்போது மட்டும் திடீர் ஞானோதயம் பெற்ற தினுசில் இன்று அதைக் குறிப்பிட்டுப் பேசுவது எதனால்?

'நான் மாறிவிட்டேன் அங்கிள்— எல்லாவற்றிலும் தான்' என்று மறைமுகமாய் எனக்கு உணர்த்த முயற்சிக்கிறாளா?



'நான் மாறிவிட்டதைப் புரிந்துகொண்டு எனக்கு உதவ முடியுமா?' என்று பூடகமாகக் கேட்கிறாளா?

சிந்தனை தீவிரமாக, உட்காரப் பொருந்தாமல் எழுந்து ஜன்னலிடம் சென்று நின்று கொண்டேன்.

எனக்குப் பிடித்தமான அரளிச் செடி ஜன்னலருகில் வெளியில் நின்று கொண்டு என் வரவுக்காகக் காத்திருந்த மாதிரி கொல்லென்று பூத்திருந்த சிவப்புக்கொத்து பூக்களை அசைத்து 'ஹலோ' என்று குசலம் விசாரித்தது.

கம்பிகளின் இடுக்கு வழியாகக் கையை நீட்டி, வெகு அருகாமையிலிருந்த, ஒரு கொத்தைக் கிட்டத்தில் இழுத்து, முகர்ந்து பார்த்தேன்.

அரளிப் பூக்களுக்கே உரிய அலாதி காட்டுப்பூ மணம் நாசியில் ஏறியது.

மதிய நேரத்தில் உச்சி வெயில் மேனியில்பட, தகதகக்கும் அரளிப் பூக்களைப் பார்ப்பது எனக்குப் பிடித்தமான ஒரு விஷயம்.

இந்தப் பூக்களையும், தோட்டத்து இதர ஜீவராசிகளையும், நீல வானத்தையும், அடிக்கடி உருவத்தை மாற்றிக் கொள்ளும் ஒற்றை மேகத்தையும் ரசிப்பதற்காகவே மேஜையை ஜன்னலை நோக்கிப் போட்டிருக்கிறேன்.

எழுத உட்காரும் பல சந்தர்ப்பங்களில் 'உனக்காக நான் பூத்திருக்கிறேன்; உனக்காகவே நான் கூவுகிறேன்; உனக்காகத்தான் நான் வானத்தில் உலா வருகிறேன்' —என்று மலர்களும், குயில்களும், மேகங்களும் என்னிடம் கூறுவதில் எதுவுமே எழுதத் தோன்றாமல் இந்த இயற்கைக் காட்சிகளை மட்டும் ரசித்துவிட்டு எழுந்து விடுவதுண்டு...

மொட்டை மாடி 'டாங்க்' நிரம்பி, உபரி தண்ணீர் வழிந்து, தோட்டத்து மண்ணில் சின்னக் குளமாக தேங்கி இருந்ததில் நாலு தவிட்டுக் குருவிகள் மஹா குதூகலத்தோடு உரக்கக் கத்தியவாறு குளித்துக் கொண்டிருந்தன

சற்றுத் தள்ளி தனியாய் மைனா ஒன்று...

வழக்கமாக மைனாக்கள் ஜோடி ஜோடியாய்த்தானே வரும்! இது மட்டும் ஏன் ஒற்றையாய் இருக்கிறது.

பார்வையைச் சுழற்றிக் கொய்யா, மா மரங்களை ஏறிட்ட போது அவற்றிலும் இரண்டாவது மைனாவை என்னால் பார்க்க முடியவில்லை.

என்னாயிற்று? ஒரு மைனா இரை தேடிப் போயிருக்கிறதோ? இருக்காதே. மைனாக்கள் எதைச் செய்தாலும் ஜதையாகத்தானே செய்யும் என்பார்கள்! அப்புறம்? ஒன்று செத்துவிட்டதோ? இல்லாவிட்டால் 'உன்னோடு வாழப் பிடிக்கவில்லை' என்று பறந்து போய்விட்டதோ-மனிதர்கள் மாதிரி?

பிரிந்துவிட்ட மனிதர்களைப் பற்றி எண்ணம் எழுந்த போது மீண்டும் ரமணனும், யமுனாவும் கவனத்திற்கு வந்தார்கள்.

ரமணன் பேசிய போதும் அந்தக் குரலில் ஏதோ ஒரு ஆதங்கம் இழைந்தது இப்போது ஞாபகத்துக்கு வந்தது.

'லீவு போட்டுட்டு மெட்ராஸுக்கு வரலாம்னு இருக்கேன். ஸர்—ஊர்ல இருப்பீங்களா, இல்ல ஏதாவது கூட்டத்துல பேச வெளியூர் போறதா இருக்கீங்களா!...உங்ககிட்ட பேசணும்...'



'உங்ககிட்ட பேசணும்'— யமுனா கூறின அதே வார்த்தைகள்.

இவனும் பேச வேண்டும் என்கிறான், அவளும் சொல்ல விஷயம் இருக்கிறது என்கிறான்...

என்ன விஷயம்!

அவளிடம் சொல்ல வேண்டியவற்றை இவனும், இவளிடம் கூற விரும்புவதை அவளும் ஒருவரிடம் மற்றவர் எப்படிச் சொல்வது என்கிற தயக்கத்தில் என்னிடம் வந்திருக்கிறார்களோ?

அப்படித்தான் இருக்கும் என்பது தெளிவாக, திரும்பி, நடந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டேன்.

இரண்டு பேருமே அதி புத்திசாலிகள். அடிப்படையில் நல்லவர்கள். சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவர்கள். ஆனாலும், இடையிடையே ஏனோ தேவையில்லாமல் 'கண்ணாமூச்சி' ஆட்டம் ஆடுகிறார்கள். எதற்காக?

ரொம்ப நேரமாக ரமணன், யமுனா பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது ஆயாஸத்தைக் கொடுக்க, அவர்களைப் பற்றின நினைவுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு வலுக்கட்டாயமாகப் புதுசாய்த் துவங்க வேண்டிய தொடர் கதைக்கான விவரங்களைச் சிந்திக்க முயற்சித்தேன்.

முடியவில்லை.

பிடித்தமான இருவர் தெரிந்தோ, தெரியாமலோ மன உளைச்சலோடு வாழ்வது வேதனையாக இருந்தது.

யமுனாவை எனக்குப் பதினைந்து வருஷங்களாகத் தெரியும் என்றால், ரமணனையும் கிட்டத்தட்ட பத்து வருஷங்களாக நன்கு அறிவேன்தான்.

தனித்தனியாக எனக்கு அறிமுகமான இவ்விருவரையும் சேர்ந்து நான் பார்க்க, பழகத் துவங்கி எத்தனை வருஷங்கள் ஆகி இருக்கும்? ஆறு? இல்லை இந்த செப்டம்பர் மாசம் வந்தால் சரியாக ஏழு!

'ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார்' விருது என்னுடைய 'விழுதுகள்' புத்தகத்துக்குக் கிடைத்தபோது அந்த விழாவில்தான் இரண்டு பேரும் சேர்ந்து என்னை முதன் முதலாய்ச் சந்தித்தார்கள்.

அப்புறம்...

கிட்டத்தட்ட ஒருமணி நேரத்துக்கும் மேலாய்யமுனா ரமணனைப்பற்றின நினைவுகளில் ஆழ்ந்து, அவர்கள் பேசிய பேச்சுக்களையும், அவர்கள் வாழ்க்கையில் இது வரையில் நடந்துவிட்ட சம்பவங்களையும் அலசினபோது திடுமென புத்தி விழித்துக்கொண்டு 'ஹா' என்று கடிவாளம் போட்டது.

புதுக்கதைக்குக் 'கரு'வாக இவர்களையே உபயோகித்தால் என்ன? இந்த இருவரைவிட ஸ்வாரஸ்யமான கதாபாத்திரங்கள் இருக்க முடியுமா? இவர்கள் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள் தற்சமயம் பலரின் அனுபவமாகவும் இருக்கிறது என்பதால், இதையே தொடராக எழுதினால் என்ன?

சின்ன பொறியாக ஜனித்தது, யோசிக்க யோசிக்க தமதமவென்று தீயாகி ஜ்வாலைவிட்டு எரியமுற்பட, இது நாழிகை பிடித்திருந்த சோர்வு மறந்தது. முன்னால் சாய்ந்து பேனாவையும், வெள்ளைத் தாளையும் எடுத்தேன்.

யோசிக்கவே அவசியமின்றி தலைப்பு வெளிப்பட்டது 'சுட்ட மண்.'



இதை வெற்றுத் தாளில் நடுநாயகமாய் மேலே எழுதினேன்.

'சுட்ட மண்'—வாண வேடிக்கைகளை, நெஞ்சைத் தொடும் உணர்ச்சி சம்பவங்களைக் கொண்ட கதையாக இருக்காது. இரண்டு நபர்களை, ஒரு ஆண் ஒரு பெண்ணை அவர்களின் குணங்களை, விருப்பு வெறுப்புகளை, கொள்கைகளை, பேச்சு வார்த்தைகளை, அதன் விளைவுகளை மையமாகக் கொண்டு புனையப்படும் சாதாரணக் கதையாகத்தான்—அல்ல, உண்மை நிகழ்ச்சிகளின் தொகுப்பாகத்தான் இருக்கும், இருக்க வேண்டும்.

வழக்கமாகப் பல கதைகளில் காணப்படுவது போல, கதாநாயகியோ அல்லது நாயகன் மட்டுமே பிரதானமாக இருக்காமல், இக்கதையில் இருவருமே முக்கிய கதாபாத்திரங்களாக இருப்பவர்கள். 'சுட்டமண்'ணில் ஹீரோவுக்கும் ஹீரோயினுக்கும் ஒரே அளவில் முக்கியத்துவம் காணப்படும் என்பதால் கதை இருவர் கோணத்திலிருந்துமே சொல்லப்படுவதுதான் நியாயமானதாக இருக்கும்.

ரமணன், யமுனா—நான் ஏற்கனவே குறிப்பிட்ட விதத்தில் ஸ்ட்ராங் மைன்டட் இன்டிவிஜிவல்ஸ்—தம்தம் வழிகளில் சுயமாக, சிந்திக்கக்கூடிய, இது வேண்டும், அது வேண்டாம் என்று கட்டம் கட்டம்கூடிய அழுத்தமான புத்தி கொண்டவர்கள். இதனாலேயே கதையை இருவரின் தனித்தனி கண்ணோட்டத்தோடும் சொல்வது அவசியமாகிறது.

ஆக, ஒரு அத்தியாயத்தை யமுனாவின் கண்ணோட்டத்திலிருந்து சொன்னால், மற்ற அத்தியாயத்தை ரமணனின் பார்வையில் எழுத வேண்டும் அப்போதுதான் ஒரே விஷயத்தை இரண்டுகோணங்களிலிருந்து புரிந்துகொள்ள வசதியாய் இருக்கும். ரோஜாவை இரண்டு பேர் நோக்கும்

போது ஒருவர் மலரைப் பார்க்கிற அதே சமயத்தில் மற்றவர் முள்ளைக் காணுகிற மாதிரி—ஒரே ஜன்னல் வழியாகப் பார்த்தாலும் ஒருவர் கண்ணில் வானத்து நட்சத்திரங்கள் தென்படுகையில், மற்றவர் பார்வையில் தரையில் இருக்கும் சேறு மட்டும் தெரிகிற மாதிரி—

கதையின் உருவம் வளர வளர, நகத்தைக் கடித்துக் கொண்டும் இன்னும் தீவிரமாய் யோசித்தேன்.

எதற்குமே இரண்டு கோணங்கள் மட்டும்தானா? இருவருடைய பார்வைகளைத் தவிர மூன்றாவது கண்ணோட்டம் ஒன்று இருக்க வேண்டாமா? முக்கியமாய், யமுனாவும், ரமணனும் கண்ணைக் கட்டிவிட்ட குதிரைகளாய் அவரவர் புத்தி சொல்வதே சரி என்கிற பிடிவாதத்துடன் செயல்படும்போது, நீங்கள் இருவர் சொல்லுவதும் செய்வதுமே முழுமையில்லை—நீட்டிய கையில் நீ நகங்களைப் பார்க்கிறாய், அவன் உள்ளங்கையைப் பார்க்கிறான்—இருவருடைய பார்வையும் ஓரளவுக்குச் சரிதான் என்றாலும் முழு கையையும் உணர வேண்டும் என்றால் இப்படி வாருங்கள். இங்கிருந்தும், அங்கிருந்தும் புரட்டிப், புரட்டிப் பார்த்துப் பூரணத்தைப் புரிந்து கொள்ளுங்கள் என்று சொல்ல மூன்றாவது நபர் இருந்தால் நன்றாக இருக்குமோ?

யமுனா ஒரு அத்தியாயம், ரமணன் இன்னொன்று-சரி. நடுநடுவில் தேவைப்படும்போது மட்டும் மூன்றாவது கோணத்தைத் தொட்டுக் காட்ட நானே வந்து போனால்?

பேனாவைக் கீழே வைத்துவிட்டு எழுந்தேன். கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடந்தவாறு சிந்தித்தேன்.

உதட்டைக் கடித்து, புத்தியை வேறெதிலும் மேயவிடாமல் ஆக்ரோஷத்துடன் யோசனை பண்ணியபோது



சின்ன விதையாக விழுந்த கரு. முளைவிட்டு இலை படர்த்தி, செடியாகிக் கம்பீரமாய் பூத்துக் குலுங்கும் ஒரு மரமாக வளர,

பரபரப்புடன் நாற்காலியில் அமர்ந்து 'கதாபாத்திரங்கள்' என்று எழுதி அடியில் கோடிட்டுவிட்டுக் குறிப்புகளை எழுதினேன்,

அடுத்து—அத்தியாயங்கள்! என்று இன்னொரு தாளில் எழுதி, எங்கே ஆரம்பித்து, எப்படி கொண்டு போவது, எவ்வாறு முடிப்பது என்ற விவரங்களை உறுதிபடுத்திக் கொண்டேன்.

**சுட்ட மண்—**

முதல் அத்தியாயம்—யமுனா—

நான் எழுதத் துவங்கினேன்—

# 2

**யமுனா**

'ஸினிமாக்குப் போகலாமா?'

அவள் கேட்டது காதில் விழாத தினுசில் ராணி கையில் இருந்த நாவல் ஒன்றில் ஆழ்ந்திருக்க அவளருகில் அமர்ந்திருந்த வசுந்தரா தலையைத் திருப்பி வாசற்பக்கம் நின்றிருந்த யாரிடமோ தன் கவனத்தை இழந்து தனக்குத் தானே சிரிக்க,

மேஜைக்கடியில் காலை நீட்டி, வசுந்தராவின் கால்களில் லேசாக யமுனா உதைத்தாள்.

'ஆ!'

'என்ன 'ஆ!' மனுஷி தொண்டைத் தண்ணி வத்த கேக்கறதுக்குப் பதில் சொல்லக்கூட முடியாம, அங்க யாரை அப்படி வேடிக்கை பார்த்து சிரிச்சுட்டு இருக்கே!'

வசுந்தரா சற்றே முன் சாய்ந்து, கண்களைச் சிமிட்டினாள்.

'இல்ல யமுனா—ரூம் வாசல்ல 'வேளை வரலை' சுந்தரம்' தனியா நின்னுகிட்டு ஏதோ யோசனை பண்ணிட்டு இருந்தார் 'ஹிஹி ரங்கன்' அவரண்ட வந்து என்னமோ சொன்னதும் அவசரமா சுந்தரம் திரும்பிப் போனார். அவர் என்ன யோசிச்சிட்டு இருந்தார், இவர் என்ன சொன்னார், அவர் ஏன் அவசரமா திரும்பிப் போனார்னு கற்பனைப் பண்ணிப் பார்த்தேன், சிரிப்பு வந்திடுச்சி...'

'உங்க சிந்தனா சக்தியின் விளைச்சல எங்ககிட்டயும் பகிர்ந்துகிட்டு எங்களையும் சிரிக்க வைக்கறது.'

'வேளை வரலை' சுந்தரம்—சாப்பிடலாமா, இல்ல அரைமணி வேலை பார்க்கலாமா-னு தயங்கியிருந்திருப்பார் 'ஹிஹி'ரங்கன்—சாப்பிடலாமா' இப்பவா?ஹி...... ஹி......அதுக்கு இன்னும் வேளை வரலியே ஸார்...ஹி... ஹி—னு தன் யூஷுவல் அவுட்டுச் சிரிப்போட ஞாபகப் படுத்தியிருப்பார். வேளை வராதப்ப சாப்பிடறது தப்பூனு சுந்தரம் அலறி அடிச்சிக்கிட்டு ஓடியிருப்பார்... வேற என்ன?

யமுனா சிரித்தாள்.

'வேளை வரலை சுந்தரம்'—

'ஹிஹி ரங்கன்'—

'முகமது அலி' நாயர்—

அங்கு வேலைக்குச் சேர்ந்து ஒரு மாசம் போவதற்குள் இப்படி அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒவ்வொருவருக்கும் பட்டப்பெயர் சூட்டின பெருமை யமுனாவையே சாரும்.



எதற்கெடுத்தாலும் 'வேளை வரலை' என்று கூறித் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொள்ளும் சுந்தரம் சரியான சாம்பிராணி சாது 'டேய்' என்று கண்களைச் சுழற்றிக் கொண்டு குரலை உயர்த்தி யாரையும் அதட்டக்கூடத் தெரியாதவர். தான் உண்டு தன் வேலை உண்டு என்பதோடு, 'சுந்தரம் ஸார்—இந்த லெட்டரைக் கொஞ்சம் படிச்சு பதில் எழுதித் தரீங்களா? இந்த ஸ்டேட்மெண்டை சரிபார்க்க முடியுமா? சாயங்காலமா வீடு திரும்பறப்போ இந்த புஸ்தகத்த என் மாமா ஆபீஸ்ல குடுத்திடறீங்களா? போற வழிதானே'—என்று ஆளாளுக்கு வேலை வாங்கினாலும் வாயைத் திறந்து முணுகாமல், முகம் சுளிக்காமல் செய்வது ஒரு பக்கம் என்றால், 'பஸ்ஸுல ஏன் அல்லாடறீங்க! வசதியிருக்கு. பேசாம ஒரு ஸ்கூட்டர் வாங்கிக்க வேண்டியது தானே?' என்றோ, 'நேத்து கச்சேரிக்கு போயிருந்திங்களா, எப்படி இருந்துச்சு?' என்றோ, 'பாண்ட் துணி மலிவா வாங்கினீங்களே, தைச்சிட்டீங்களா?' என்றோ எது குறித்து யார் கேட்டாலும், 'ஸ்கூட்டரா? அதெல்லாம் வாங்கறதுக்கு வேளை வரலை ஸார்' என்றும், கச்சேரிக்குப் போக முடியலை ஸார் திடும்னு விருந்தாளிங்க வந்துட்டாங்க. எல்லாத்துக்கும் வேளை வர வேணாமா என்றும், 'கடைக்குப் போன ரெண்டு தரமும் டெய்லர் இல்ல, காஜா அடிக்கிற பையன் மட்டும் இருந்தான்! சரி—வேளை வரலை-னு திரும்பி வந்துட்டேன்'—என்றும் கொஞ்சம்கூட யோசிக்காமல், தயங்காமல் பதில் சொல்வது இன்னொரு பக்கம், இதனாலேயே வி. வி. சுந்தரம்—'வேளை வரலை' சுந்தரம் என்று யமுனா அவரை குறிப்பிட, மற்றவர் நடுவிலும் இதுவே பிரபலமானது.

ஹிஹி ரங்கன்—சரியான 'கேஸ்' பத்து நிமிஷம் சேர்ந்த மாதிரி பேசுவதற்குள் ஹிஹி—என்ன சௌக்கியமா?—பாத்து நாளாச்சு...ஹிஹி—அன்னிக்கு மார்க்கெட்ல சந்திச்சது தானே? கொஞ்சம் இளைச்ச மாதிரி தெரியுது... உடம்புக்கு ஒண்ணுமில்லையே...ஹி...ஹி... என்று தேவையில்லாமல் சிரித்து வெறுப்பேற்றி விடுவதில் மன்னன். „அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறீர்களாமே?' என்றாலும் ஹிஹி—'தக்காளி கிலோ என்ன விலை தெரியுமா? எட்டு!' ரூபா என்றாலும் ஹிஹி, இந்த வருஷம் ஆனாலும் தண்ணி கஷ்டம் ரொம்ப அதிகம் தான்—தினம் ராத்திரி இரண்டு மணிக்கும், மூணு மணிக்கும் எழுந்து லாரி வருதானு பக்கெட்டும் கையுமா காத்திருக்கறதுல, சரியா தூங்கி வாரக் கணக்காச்சு' என்றாலும் ஹிஹி, துவங்க வார்த்தையாகவோ, அல்லது முத்தாய்ப்பாகவோ இருக்கத் தப்பாது. அது என்ன அடுத்தவர் மன நிலை புரியாமல் இப்படி ஒரு சிரிப்பு என்று அறிமுகமான புதுசில் யமுனா எரிச்சலடைந்தது உண்டுதான். ஆனால், அது அவர் ஸ்வபாவம். வழக்கமாய் மற்றவர் சிரிக்கும் நோக்கத்தில் சிரிக்கவில்லை என்பது புரிந்த பிறகு, ஹிஹி ரங்கன்' என்று செல்லமாகப் பேர் வைத்து• சம்பந்தா சம்பந்தமில்லாமல் அவர் சிரிப்பதை ரசித்து இவன்' ஜோக்' அடிப்பது வாடிக்கையாயிற்று.

'முகமது அலி' நாயரும் அந்த அலுவலகத்தில் வேலை பார்க்கும் இன்னொரு ஸ்வாரஸ்யமான காரெக்டர்!

வாயைத் திறந்தாலேயே பாதி மலையாளம், பாதி தமிழ் கலந்த மணிப்பிரவாளத்தில், 'ஓ; அது யான்கழிச்சு இது செய்தது ஞானாக்கும்!'என்று தன் வீரதீர பிரதாபங்களை மனுஷர் அலுக்காமல் சலிக்காமல் அள்ளி வீசுவார் என்பதால் 'ஐம் தி கிரேடஸ்ட்' என்று பறை சாற்றிச் கொண்ட முகமது அலியின் பெயர் இவருக்கு அடைமொழியாயிற்று.



வசுந்தரா குறிப்பிட்ட சுந்தரம், ரங்கனைத் தொடர்ந்து நாயரின் நினைப்பு எழ, முதல் நாள் மாலை நடந்த சம்பவம் ஒன்று ஞாபகத்தில் முட்டி, குபீரென்று சிரிக்க வைத்தது.

மேஜைமேல் இருந்த வசுந்தராவின் கையைப்பிடித்துக் கொண்டவள், 'ஹேய் வசு—நேத்து நம்ம முகமது அலி—ஓஹ்ஹோ...ஓ...என்னாச்சு நினைவிருக்கா...ஹோஹ்... வேஷ்டி மாட்டி, 'டார்'னு கிழிஞ்சு. பின்னாட 'ட'மாதிரி அ.. ஹ...ஓ...ஹ்.' சொல்ல வந்ததை முடிக்க முடியாமல் வயிற்றைப் பிடித்துக்கொண்டு, முன்னால் கவிழ்ந்து யமுனா உரக்கச் சிரிக்க,வசுந்தராவும் அவளோடு சேர்ந்து கொண்டாள்.

அரை நிமிஷம் போலச் சிரித்து மகிழ்ந்து கண்களில் ததும்பிய நீரைத் துடைத்து நிமிர்ந்தபோது,இந்த அமர்க்களங்களால் பாதிக்கப்படாமல் ராணி தன் போக்கில் புத்தகம் படித்துக் கொண்டிருப்பது புரிய, எட்டிப் புத்தகத்தைப் பிடித்துத் தழைத்தாள்.

ராணி திடுக்கிட்ட மாதிரி விழித்தாள்.

'என்னப்பா...! எதுக்குப்பா 'புக்'க இழுக்கறே. விடுப்பா...கதை ரொம்ப ஸ்வாரஸ்யமா இருக்கு...பாதி அத்தியாயத்துல நிறுத்த வச்சிடாதப்பா...'

இந்த ராணிக்கு யமுனா கொடுத்திருக்கும் பட்டப்பெயர் 'அப்பா ராணி' நாலு அப்பா போடாமல் முழுசாய் ராணிக்கு ஒரு வரி பேசத் தெரியாது. மைசூரில் பிறந்து, திருமணம் ஆகும் வரை பங்களூரில் வளர்ந்தவள் என்பதால் எதற்கெடுத்தாலும் ஒரு 'அப்பா' தான். சக பெண் ஊழியர்களிடம் 'இந்த ஸாரி நல்லா இருக்குப்பா; ப்யூன் முருகனிடம் 'ஒரு காபி வேணும்பா'; தெரு முனையில் நின்று மாமூலாய் பிச்சைக் கேட்கும் ஒற்றைக்கை ஆசாமியிடம் கூட 'இன்னிக்கு சில்லறை இல்லப்பா...'தான்,

யமுனா சிரித்தாள்.

'இருப்பா...பதறாதப்பா...நாங்க விழுந்து விழுந்து சிரிக்கிறது கூட காதுல விழாம அப்படி என்னப்பா புஸ்தகத்துல ஸ்வாரஸ்யம்? யார் எழுதினதுப்பா?

கேள்விகளைக் கேட்டவாறு புஸ்தகத்திற்குப் போடப்பட்டிருந்த ப்ரவுன் பேப்பர் அட்டையை—அலுவலகத்தில் படிக்கும்போது மற்றவர்கள் கதை புஸ்தகம் என்பதை உணர்ந்துவிடக் கூடாது என்பதற்காகப் போடப்பட்டிருந்ததைப் பிரித்தாள்.

'அட! கப்பல் பறவை' சந்திரசேகரன் அங்கிள் எழுதினது!'

ராணி சடக்கென்று நிமிர்ந்தாள்.

'அங்கிளா! அப்படீன்னா எழுத்தாளர் சந்திரசேகரனை உனக்குத் தெரியுமா யமுனா?'

கண்கள் வியப்பில் விரிய, ராணி அவசரமாய் வினவ, யமுனா டேபிளைத் தட்டிச் சிரித்தாள்.

'என்ன? தெரியுமா-வா? என்ன வார்த்தை சொல்லிவிட்டாய் அப்பாராணி? என்னை ஈன்றவரும் அங்கிளும் ஆதி நாட்களில் ஒன்றாய் படித்தவர்களாம்—தெரியுமா? அவருடைய ஆரம்பநாட்கள் கதைகளைஎழுதுவதற்குமுன் என் அப்பாவிடம் அவர் விவாதிப்பாராம்—தெரியுமா? என் தந்தை 'இது நன்றாக இல்லை' என்று சொல்லிவிட்டால், கருவையே மாற்றிவிடுவாராம்—தெரியுமா?—அவ்வளவு நெருக்கம் அப்பா ராணிப்பெண்ணே—புரிகிறதா?'

அவள் கேட்ட ஒரு தெரியுமாவுக்குப் பதிலாக மூன்று தெரியுமாக்களைக் கேட்டு, ஒருவித வெற்றிப் பார்வையுடன் யமுனா தலையைச்சாய்க்க, ராணி கேட்டதைநம்ப முடியாமல் விழித்தாள்.



'இத நீ ஏன் இத்தனை நாளா சொல்லவேயில்லப்பா! நாமளும் கிட்டதட்ட ஆறு மாசமா ஒண்ணா வேலை பாக்கறோமேப்பா?'

'ஆறுமாசம் இல்லப்பா—இன்னியோட சரியா—அஞ்சு மாசம்? ஏன் சொல்லலைனா! சந்தர்ப்பம் வரலை... அதான்...?'

'என்னப்பா...தினம் தினம் நா நாவல்களைப் படிக்கிறத நீ பாக்கறதானே!

'அதுக்காக!எனக்கு இன்னார் தெரிஞ்சவங்கஇன்னார் தெரியாதவங்கனு பட்டியலா போட முடியும்? சந்தர்ப்பம் வரலைனா விடுவியா?...' பேசின யமுனா நினைப்புக்கு வந்த மாதிரி, 'வேளை வரலைபா' என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு கூற, மூவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

'எனக்கு சந்திரசேகரனை ஒருதரம் சந்திக்கணும்பா-அழைச்சிட்டுப் போவியா?'

'போனா போச்சு—'கப்பல் பறவை அங்கிளோட புது நாவல்: போனவாரம் சந்திச்சப்ப ஆட்டோகிராப் போட்டு தந்தார் க்ரேட் புக் ஒரே மூச்சுல அன்னிக்கே படிச்சிட்டேன்—கதை என்னான்னா—சுஜானு ஒரு பெண் பாரதி கனவு கண்ட புதுமைப் பெண்ணோட உயிர் வடிவம். இவளுக்கும் வாசுதேவன்ற கல்யாணமான பிஸினெஸ் மேனுக்கும்...'

அவள் தொடர முடியாமல் முன்னால் சாய்ந்து, வாயை பொத்திய ராணி, 'ப்ளீஸ்பா. ப்ளீஸ். சொல்லாத கதை தெரிஞ்சுட்டா ஸ்வாரஸ்யம் போயிடும்—வேணாம்பா—' என்று அவசரத்துடன் கெஞ்ச, யமுனா அவள் கையை விலக்கிவிட்டுக் குறும்பாக ஏறிட்டாள்.

'ஸ்வாரஸ்யமா? போயிடுமா? எப்படி?எப்பவுமே நா கடைசி பக்கத்த படிச்சிட்டுதான் எந்த நாவலையுமே முதலேந்து படிப்பேன்—ஆனாலும் முழு கதையும் எனக்கு த்ரில் லிங்காதானே இருக்கு...'

ராணி தோளைக் குலுக்கி உதட்டைப் பிதுக்கினாள்—

'நீ அலாதி பிறவிப்பா...உன்னை யாரால புரிஞ்சிக்க முடியுது! புஸ்தகம் வாங்கினா முதல்லேந்து படிப்பாங்க, அத விட்டுட்டு...'

'ஏன் கடைசி பக்கத்த முதல்ல படிக்கறதுல என்ன தப்பு? ஒருவேளை நாளைக்கே நா அகாலமா செத்துடறேன்னு வச்சிக்க. அப்ப, ஐயோ அந்த கதைக்கு முடிவு என்னனு என் ஆவி துடிக்கும். இல்ல? எதுக்கு அந்தக் குறைனு தான்...'

வசுந்தரா சிரித்தவாறு எழுந்து நின்று சோம்பல் முறித்தாள்.

'மணி ஆச்சு—ஒரு மணி நேரத்துக்கு மேல லஞ்ச் சாப்பிட எடுத்துகிட்டா, 'வணங்காமுடி' மூறைக்கும்—போலாமா?'

வணங்காமுடி என்று அவள் குறிப்பிட்டது அவர்களின் செக்ஷன் இன்சார்ஜ் மிஸ்டர் பத்ரிநாராயணனை-செர்வைகல் ஸ்பாண்டிலைஸிங்! வலியைக் குறைக்க உதவும் வகையில் கழுத்தில் என்னேரமும் அகலமாய் பட்டை இருக்கும். குனிய முடியாது. எப்போதும் ராஜ பார்வை. 'வணங்கா முடி.' என்பது நூற்றுக்கு நூறு பொருத்தமான பேர்!

'இன்னும் அஞ்சு நிமிஷம் இருக்கு வசு— ரிலாக்ஸ் சரி,; நா கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லப் போறிங்களா இல்லியா?'



'என்ன கேட்ட?'

'ஸினிமாக்குப் போலாமா—னு'

'எப்ப?'

'ஈவ்னிங் ஷோ'

'நாளைக்குப் போலாமே யமுனா-இன்னும் கொஞ்சம் நிதானமா பிளான் பண்ணிட்டு...'

'முடியாது வசு— நாளைக்கு எனக்கு—ஹோம்ஃபார் ப்ளைண்ட்க்குப் போகணும்—வாரம் ரெண்டு நாள் 'ஸ்க்ரைப்' வேலை பண்றேன்னு ஒத்துகிட்டு இருக்கேன்.'

'ஸ்க்ரைப்—னா?'

'பார்வை இல்லாதவங்களுக்குப் படிக்கவும், எழுதவும் உதவி செஞ்சு அவங்களுக்கு நாம 'ஸ்க்ரைப்'—பா இருக்கறது'

'ஓ! இதெல்லாம் கூட நீ பண்ணறியாப்பா? உன்னை லேசுல புரிஞ்சுக்க முடியலைப்பா.'

யமுனா சிரித்தாள்.

'அதான் ஏற்கனவே சொன்னபடியே—ஸினிமாவுககுப் போலாமா? இதுக்கு முதல்ல பதில் சொல்லுங்க'

'நா வரலைபா'

'ஏன் வரலை?'

'இன்னிக்கு 'சம்பள நாள். வீட்டுல மாமியார் காத்திட்டு இருப்பாங்கபா.'

'ஆறு மணிக்குக் கொடுக்கற சம்பளப் பணத்த இந்தாங்க மாமியாரேனு ராத்திரி பத்து மணிக்குக் கொடுத்தா வாங்கிக்க மாட்டாரா?'

'அது இல்ல யமுனா—முதல் தேதினா நாங்க குடும்பமா கோவிலுக்குப் போறது வழக்கம்—பா,

யமுனா பதில் பேசாது நிற்க, வசுந்தரா 'நா வரேன்-எந்த படத்துக்குப் போலாம்?' என்றாள் ஆர்வத்துடன்.

படத்தையும், போவதற்கு முன் 'ட்ரைவ் இன்' க்குச் சென்று மூக்குப் பிடிக்க சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டுப் போவது என்பதையும் தீர்மானம் செய்த பிறகு எழுந்தார்கள்.

திட்டமிட்டபடி ஐந்தேகாலுக்குக் கிளம்பினார்கள்.

யமுனா தன் மோபெட்டை வேகமாய் உதைத்துக் கிளப்ப, வசுந்தரா' பிலியனில் உட்கார்ந்தாள். ட்ரைவின் ரெஸ்ட்ராண்டுக்குச் சென்றார்கள்.

சன்னா, பட்டூரா

மங்களூர் போளி.

காபி.

டிபனை ருசித்து, சாப்பிட்டு, பில்லுக்குப் பணத்தைச் செலுத்திவிட்டு புறப்பட்டபோது மணி ஆறரை,

'நாழியாயிடுச்சு! நாம போறதுக்குள்ள மெயின்படம் ஆரம்பிச்சிருப்பான் இன்னொரு நாள் வேணா...அவளை முடிக்கவிடாமல் யமுனா குறுக்கிட்டாள்.

''பத்து நிமிஷம் படம் ஓடிட்டா என்ன? குடியா முழுகிடும்? ஒண்ணும் இல்ல? லெட்ஸ் கோ—'

குட்டையாய் வெட்டிவிடப்பட்ட முடியும், கழுத்தை அணைத்தபடி கிடந்த துப்பட்டாவும் காற்றில் பறக்க மோபெட்டில் பயணித்து, தியேட்டரை அடைந்து, கவுண்டர் மூடிவிட்ட காரணத்தால் மானேஜரைச் சந்தித்து.



லேசாகக் கெஞ்சி, இரண்டு பால்கனி டிக்கெட்டுகளைப் பெற்று படம் பார்க்கும்போது தின்னவென, பாப்கார்ன் சிப்ஸ் பொட்டலங்கள் வாங்கிக் கொண்டு. 'அரை மணி போயிருந்தாலும் கதையபுரிஞ்சுக்கலாம் நீ கவலைப் படாதே' என்று உரக்கப் பேசியவண்ணம் இருட்டாய் இருந்த தியேட்டருக்குள் நுழைந்து, தடுமாறி, உட்கார்ந்திருந்தவர் பாதங்களை மிதித்து 'ஸாரி' என்று சொல்லி, ஒரு வழியாய் இருக்கையில் அமர்ந்தார்கள்,

கதை இன்னதாய் இருக்கும் என்று ஊகித்து, அதை வசுந்தராவிடம் விளக்க முற்பட்டபோது பக்கத்து ஸீட்டிலிருந்து 'ஷ்ஷ்' என்கிற அதட்டல் எழுந்தது.

சிப்ஸ் பொட்டலத்தைத் திறந்து நறுக் நறுக்கென்று சாப்பிட்டபோதும் அதே 'ஷ்ஷ்' எரிச்சல்.

தொடர்ந்து, தாள முடியாது போனது போல 'கலாட்டா செஞ்சுகிட்டு படம் பார்க்க விரும்பறவங்க டெக்குல வீட்டுலயே பார்க்கணும்' என்று ஓர் ஆண் குரல் முணுமுணுப்பாய் கண்டித்ததும், சர்ரென்று கோபம் தலை தூக்கியது.

'தியேட்டர் பொது இடம். நாலு வகையான மனுஷங்களும்தான் வருவாங்க...நிம்மதியா படம் பார்க்க நினைச்சா வீட்டுல, தனி அறைல விஸிஆர்ல பார்க்கணும், பொது இடத்துக்கு வந்துட்டு குறை சொல்லக் கூடாது' என்று பதிலைச் சற்று உரக்கவே கூறின யமுனா திரையில் வெளிச்சம் அதிகமான நிமிஷத்தில் பக்கத்து ஸீட்டு ஆசாமியைத் தலையைத் திருப்பி ஏறிட்டாள்.

அட!

பரவாயில்லையே—முகத்தில் காணப்படும் கடுகடுப்பை அழித்துவிட்டால் ஆள் பார்க்க ஜோராகத்தான் இருக்கிறான்!

# 3

**ரமணன்**

அலாரம் அடிப்பதற்கு முன்னரே விழிப்பு கண்டு விட்டது.

அரை நிமிஷம் அப்படியே சவாசனத்தில் படுத்து, உறக்கத்தை நன்றாகக் கலைத்துக்கொண்டே பிறகு ரமணன் எழுந்து உட்கார்ந்தான், தலைகாணிக்கு அருகில் வைத்திருந்த டைம்பீஸை எடுத்து, அலாரத்தை அணைத்தான்.

தினமும் இப்படித்தான்.

நாலரைக்கு எழுப்ப அலாரத்தை வைத்துவிட்டுப் படுத்தாலும், இன்றுவரை ஒரு தரம்கூட இவன் தூங்கி கடிகாரம் குரல் கொடுத்து எழுப்பியது கிடையாது. மண்டைக்குள் ஸ்விட்ச் ஒன்று தட்டப்பட்ட மாதிரி ஐந்து அல்லது ஆறு நிமிஷங்கள் முன்னால் அவனாகவே விழித்துக்கொண்டு விடுவதுதான் வழக்கமாய் நடப்பது. அப்புறம் எதற்காக இந்த அலாரம் வைக்கும் பழக்கம் என்றால்—ரமணனிடம் பதில் தயாராக இருக்கும்.

'எல்லாத்துலேயும் ஒரு ஒழுங்கு வேணும். சுயகட்டுப்பாடு இருக்கணும். ராத்திரி படுக்கறத்துக்கு முன்னால எனக்கு நானே;'நாலரைக்கு எழுந்துக்கணும்'னு கட்டளையிட்டுக்கிறேன். அதாவது 'ஆட்டோ ஸஜஷன்.' என் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு உள்ளுணர்வு நடந்துக்கறதுல 'டான்'னு தானா விழிப்பு வந்துடுது. என்னிக்காவது அசதியாலோ, இல்ல அலட்சியத்தாலோ என் 'ஸப்சான்ஷியஸ் மைண்ட்' கால வாரி விட்டுடுச்சுன்னா, அதை, அந்த நழுவலை, சுட்டிக்காட்டத்தான் அலாரம் வைக்கிறேன். நா ஒழுங்கா இல்லைனா இது காட்டிக் கொடுத்துடும்ன்ற பயம் எனக்குள்ள இருக்கு. இன்னும் சரியா சொல்லணும்னா அலாரம் என்ன கண்காணிக்கிற மேஸ்திரி மாதிரினு வச்சுக்கங்களேன்!''



சிரிக்காமல், தன் கருத்தில் உள்ள அழுத்தத்தைத் தெரிவிக்கும் பாவனையோடு நீளமாய் அவன் கூறுவதைக் கேட்டுவிட்டு 'இதெல்லாம் நடக்கற காரியமா?' என்பது போல யாராவது உதட்டைப் பிதுக்கி, தோள்களைக் குலுக்கினால், அது குறித்து ரமணன் அலட்டிக் கொள்ளவே மாட்டான். நம்புவதும் நம்பாததும் உங்கள் இஷ்டம்,அதனால் எனக்கொண்ணும் நஷ்டம் இல்லையென்கிற மாதிரி ஒரு பார்வை பார்த்துவிட்டு நகர்ந்துவிடுவான் அப்படியொரு ஸ்வபாவம்.

படுக்கையைச் சுற்றி, சுவரோரமாய் வைத்தவன் ஓசைப்படாமல் நகர்ந்து குளியல் அறைக்குச் சென்றான். பல் தேய்த்து, முகம் கழுவின பிறகு வெளியே வந்தான்.

ராத்திரி பூராவும் வரட்டு இருமலின் தொந்தரவில் அம்மா சரியாகத் தூங்காமல் புரண்டு படுத்தது நினைவுக்கு வர மெல்ல சமையலறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான்.

துளி சத்தம் போடாமல் காஸ் அடுப்பில் தண்ணீரைக் கொதிக்க வைத்து, ஃபில்டரில் பொடி போட்டு, கவனமாய் அதன் மேல் நீரைச் சுழற்றி ஊற்றி, மூடினான்.

வாக் போய்விட்டு வரும் வழியில் 'பூத்'தில் பால் பாக்கெட்டுகளை வாங்கிக் கொண்டு வந்து, பால் காயும் நாழிகையில் முதல் டிகாக்ஷனை எடுத்து விட்டு இரண்டாவதற்கு நீர் விட்டால், ஐந்தரை மணிக்கு அம்மா எழுந்திருக்கும் போது காபி தயாராக இருக்கும்!

பிள்ளை தனக்காகச் செய்து வைத்திருக்கும் காரியங் களைக் கண்டுவிட்டு அம்மா கட்டாயம் அங்கலாய்ப்பார்

'ஆம்பிளை, உனக்கு எதுக்குத் தம்பீ. இந்தக் கஷ்ட மெல்லாம்?' என்பார் நிஜமான கரிசனத்துடன்.

'ஏன்? ஆம்பிளைனா சமையல்,வீட்டு வேலைலஉதவக் கூடாதா?'செய்யாதே, ஒதுங்கு'னு சொல்லிச் சொல்லியே வீட்டு வேலைகளைச் செய்ய முன் வர்றஆம்பிளைங்களை யும் உக்கார வச்சிடறீங்கம்மா...இப்படி கட்டம் கட்டி இது உசத்தி, இது மட்டம்னு வேலைகளைப் பிரிக்கா தீங்க. யாருக்கு எது முடியுதோ அத செய்யறதுல எந்த அவமானமும் இல்லை.'

ஒவ்வொரு முறை அவன் வாதிக்கும் போதும்குறுக்கே ஒற்றை வார்த்தைபேசாமல்புன்னகையுடன் முத்துலட்சுமி கேட்பார். பிறகு அந்த முறுவல் மாறாமல். அப்பாவுக்கு தப்பாத பிள்ளை' என்பார் முணுமுணுப்பாய். இல்லாவிட் டால் 'உனக்கு வரப் போறவ கொடுத்து வச்சிருக்காடா தம்பீ' என்பார் பெருமிதத்துடன்...

முத்துலட்சுமிக்கும், நாராயணசாமிக்கும் பிறந்ததே இரண்டுதான். அளவாய். அழகாய் ஆண் ஒன்று பெண் ஒன்று. பெண், கௌரி, மூத்தவள். டிகிரி படிப்பு முடிந்த கையோடு, தங்கள் சக்திக்கு ஏற்ப மாப்பிள்ளை தேடி, மண முடித்துக் கொடுத்துவிட்டதில் கணவர், குழந்தை யுடன் திருச்சியில் குடும்பம் நடந்துகிறாள்.

ஆதி நாட்களிலிருந்தே நாராயணசாமிக்கு ரமணமக ரிஷியிடம் ஈடுபாடு அதிகம். அவர் அப்பாவுக்கு திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள வேட்டவலம் சொந்த ஊர் நாராயணசாமி படித்து வளர்ந்தது எல்லாம் திருவண்ணாமலை என்பதால், அருணாசலேஸ் வரிடம் எத்தனை பக்தி உண்டோ அத்தனை, மனிதர் களில் மாணிக்கமாய் திகழ்ந்த ஸ்ரீ ரமணரிடமும் உண்டு:



படிப்பு முடிந்து வேலை நிமித்தம் சென்னைக்குக் குடி பெயர்ந்து, திருமணம் செய்து கொண்ட பிறகும், இரண்டு நாள் சேர்ந்த மாதிரி விடுமுறை கிடைத்தால் ரமணாஸ்ர மத்துக்குச் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டவர். கௌரியை அடுத்துப் பிறந்த மகனுக்குத் தன் ஞான குருவான ரமணரின் பெயரையே நாமகரணம் செய்ததில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை.

ஆனால். குருவின் பெயரைச் சொல்லி வாடா, போடா என்று அதட்டுவதில் நாராயணசாமிக்கும் முத்து லட்சுமிக்கும் சுத்தமாய் சம்மதமில்லை! ( ஆக ஒரு வயசில், ஒட்டிக் கொண்ட' தம்பி.' ரமணனுக்கு இருபத்தியாறு வயசு நடக்கும் இப்போதும் தொடருகிறது.

கூடத்தில் படுத்திருந்தவர்களைக் கடந்து மீண்டும் தன் அறைக்கு வந்த ரமணன், வேஷ்டியைக் களைந்து விட்டு அரை நிக்கர், டிஷர்ட்டை உடுத்தி, கால்களில் 'வாக்கிங் ஷூக்களை' மாட்டிக் கொண்டான்.

வெளியே வந்து. கதவை அதிக ஓசை எழுப்பாமல் இழுத்துச் சாற்றி. தன்னிடமிருந்த சாவியால் பூட்டினான் கதவை உள், வெளி பக்கங்களிலிருந்து பூட்ட முடிவது, இந்த மாதிரி ஒருவர் உள்ளே இருக்க, அவரைத் தொந் தரவு செய்யாமல் மற்றவர் வெளியே போக, வர ரொம்ப சௌகர்யம்.

காலை வீசிப் போட்டு நடந்தான்,

விடியாத காலைப் பொழுது ஆளை மயக்கியது.

காரணமேயில்லாமல் ஆண்டாள் பாடிய பாசுரங்கள் மனசினுள் வரி வரியாய் ஓடின.

'புள்ளும் சிலம்பினகாண்: புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம்
கேட்டிலையோ?...

'கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின் பேச்சரவம் கேட்டிலையோ?
பேய்ப்பெண்ணே?

காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்''
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?...'
''கீழ்வானம் வெள்ளென்று' எருமை சிறுவீடு
மேல்வான் பரந்தனகாண்...;

சின்ன வயதில் அப்பாவோடு மார்கழி மாச பஜனைக்குச் சென்றதும், திருப்பாவை பாடல்களை உரக்கப் பாடியவாறு நடந்ததும் சடும் என்று ஞாபகத்தில் முட்டின,

பஜனை முடிந்து வீட்டுக்கு வந்ததும் வாசத் திண்ணையில் உட்கார வைத்துக்கொண்டு அப்பா பாசுரங்களை விளக்குவார்.

'விடியப் போகும் அறிகுறியில் பறவை இனங்கள் குரல் கொடுக்கின்றன. இத்னூடே கருடன் எழுப்பும் தொனி சங்கு நாதம் போல ஒலிக்கிறது...ஆனைச்சாத்தம் குருவிகள் போடும் சத்தம் ஒரு பக்கம் என்றால், தயிர் கடையும் இடைப்பெண்கள் போட்டிருக்கும் காசு மாலைகளும், அச்சுத் தாலிகளும் ஒன்றோடு ஒன்று உரசி கலகல வென்று ஒலி எழுப்புவதும், கீழ்வானம் வெளுக்கத் துவங்கியதும் சிறுவீட்டுக்கு' அதாவது பனிப்புல் மேய்ச்சலுக்கு எருமை மாடுகள் புறப்படும் ஓசைகளும் இன்னொரு பக்கம்...'

ரமணன் நடையின் வேகத்தைக் குறைக்காமல் தலையை அண்ணாந்து வானத்தை ஏறிட்டான். வெட்டிப் போட்ட நகத்துண்டு மாதிரி நிலா ஒரு ஓரமாய் வானத்தில் மின்னியது.



உறக்கம் கலைந்துவிட்ட காக்கைகள் இங்கொன்றும் அங்கொன்றுமாய் பறக்க, கறவைக்கு இட்டுச் செல்லப் பட்ட எருமை மாடுகள் அடிவயிற்றிலிருந்து 'ங்மொய்' என்று ஸ்வரம் பிடி, யார் வீட்டிலோ குழந்தை ஒன்று வீறிட, தெருமுனைக் கடையில் லாரியிலிருந்து பேப்பர் கட்டுகள் தொப் தொப்பென்று இறக்கப்பட...

எட்டாவது நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள் அனுபவித்த விடியலுக்கும், இப்போது நாம் பார்க்கும் வைகறைபொழுதுக்கும் ஒற்றுமைகள் அதிகமா? இல்லை வித்தியாசங்கள் அதிகமா?

இரண்டாவது மெயின் ரோடில் நீள நடந்து, நந்தனம் சந்திப்பு வரை சென்று, ரமணன் திரும்பினான்.

இவனைத் தாண்டிக் கொண்டு சுமார் முப்பது வயசு மதிக்கத்தக்க நபர் ஒருவர் 'ஜாகிங்' செய்து கொண்டு போனார். அந்த உயரம் பருமன், ஓட்டம் எல்லாம் சுரேஷை நினைவு படுத்த, ரமணன் அடி உதட்டைக் கடித்துக் கொண்டான்.

எல்லாருக்கும் தலையில் மட்டும்தான் மூளை இருக்கும் ஆனால், சுரேகஷுக்கு உடம்பு பூராவும் மூளை. அத்தனை கெட்டிக்காரன், திறமைசாலி! பின்னே முப்பத்தியாறு வயசில் இந்தியாவின் புகழ் பெற்ற கம்பெனி ஒன்றின் ஜெனரல் மேனேஜர் ஆவது என்பது சாமான்யனுக்கு சாத்தியமா?

இதோடு, நகிபோன்ற மனைவி, லட்டுருண்டையாய் குழந்தைகள், வசதியான வாழ்க்கை—எல்லாம் இருந்தும் கடைசியில் எதுக்குமே அர்த்தம் இல்லாமல் போனது தானே நடந்தது!

இப்படித்தான்—ஆறுமாசங்களுக்கு முன் ஒருநாள் காலை, உறங்கிக் கொண்டிருந்த மனைவிக்கு முத்தம்

கொடுத்துவிட்டு'ஜாகிங் செய்யப்போனான்.மரினா கடற்கரையில் ஓடிக் கொண்டிருந்தவனை மாஸிவ் ஹார்ட் அட்டாக்' நினைத்த நினைப்பில்லாமல் இரு கைகளையும் நீட்டி அணைக்க...அப்புறம் என்ன? ஐந்தே முக்காலுக்கு தாலி காட்டினவளுக்கு முத்தம் தந்து' விட்டுப் போனவனை' பிணமாக நாலு பேர் சுமந்து வீட்டில் கிடத்தியபோது மணி ஏழே முக்கால்!

கேட்பதற்குக் கதை மாதிரிதான் இருக்கும் ஆனால் நிஜம். கற்பனையைவிட கொடுமையானது. அன்று அந்த இளம் மனைவி முட்டிக்கொண்டு 'ஏன் இப்படி ஆயிற்று? ஐயோ—ஏன்?' என்று கதறிய போது யாருக்கும் சமாதானம் சொல்லத் தெரியாமல் போனது. என்ன சொல்லிச் சமாதானப்படுத்துவது? எல்லாம் விதி, அவரவர் பூர்வஜன்ம வினை. வேறு என்ன சொல்ல இருக்கிறது.

சுரேஷின் நினைவால் பாதிக்கப்பட்டு மெதுவாக நடப்பதை உரை முடிய, ரமணன் ஒருதரம் தலையை உலுக்கி, நடையைத் துரிதப்படுத்தினான்.

திட்டமிட்டபடி வழி பூத்தில் பால் பாக்கெட்டுகளை வாங்கி, வீட்டை அடைந்து பாலைக் காய்ச்சி, அது பொங்கி வந்த நிமிஷத்தில் விழித்துக் கொண்டு உள்ளே வந்த முத்துலட்சுமி அவன் எதிர்பார்த்தது போலவே 'அட கடவுளே' உனக்கு ஏன் தம்பி இந்தக் கஷ்டமெல்லாம்!' என்று புலம்ப, ஒரு புன்னகையைப் பதிலாகத் தந்துவிட்டு மாடிக்குப் போனான்.

மொட்டை மாடித் தரையில் பாயை விரித்து, சூர்ய நமஸ்காரம், பிராணாயாமம் போன்ற யோகாசனப் பயிற்சிகளைச் செய்தான்.



கீழே வந்து அம்மா தந்த காபியுடன் பேப்பரை எடுத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்று உட்கார்ந்து தினசரியை முழுமையாய் படித்தான்.

ஷேவ் செய்து, குளித்து, அலுவலகத்துக்குச் செல்ல தயாரானதும் சாப்பாட்டு அறைக்குள் வந்தமர்ந்தான்.

'எங்க தம்பி டிபன் சாப்பிட உட்கார்ந்துச்சுன்னா மணி எட்டரை-னு அர்த்தம்-னு சொன்னேனே, மணிய பார்த்திங்களா?''

அன்றாடம் காலை நேரத்தில் மட்டும் வந்து சமையலில் உதவி செய்யவெனப் புதுசாய் அமர்த்தப்பட்ட நாகமணியிடம் சொல்லிக் கொண்டே முத்துலட்சுமி மகனுக்குப் பரிமாற முற்பட்டார்.

முதலில் இரண்டு இட்லிகள்.

ஒவ்வொன்றின் தலையிலும் மிளகாய்த்தூள், அவற்றை குழைக்க அரை ஸ்பூன் நல்லெண்ணெய்.

இதைச் சாப்பிட்டு முடிந்ததும் இன்னும் ஒரு இட்லி தொட்டுக் கொள்ள சாம்பார்.

ரமணனுக்கு சாம்பார், சட்னி, பொடி எல்லாவற்றையும் ஒண்ணடி மண்ணடியாகக் கலந்து சாப்பிடுவது பிடிக்காத சமாச்சாரம், சாப்பிடுவது அளவோடுதான். சட்னி இருந்தால் அதோடு ஒன்று, மற்றதோடு இன்னும் இரண்டு. முக்கால் டம்ளர் காபி, சர்க்கரை கம்மியாய் ஸ்ட்ராங்காய் முக்கியமாய் சூடாய்...

'பேச்சு, சிந்தனைல ஒழுங்கு வரணும்னா முதல்ல நாக்க கட்டுப்படுத்தணும்மா...அதை செஞ்சிட்டா அப்புறம் பாக்கி எல்லாமே ஈஸி!' என்பான்,,அம்மா 'இட்லி பூவாட்டம் இருக்குத் தம்பீ, இன்னும் ஒண்ணு வச்சிக்க' என்று கெஞ்சும் போதெல்லாம்.

எழுந்து கைகழுவி 'பேர்யிட்டு வரேன்' என்று பொதுவாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

எட்டு ஐம்பது பஸ் அன்றைக்குப் பார்த்து கிட்டத்தட்ட பத்து நிமிஷங்கள் தாமதமாய் வந்தது.

பத்துமணிக்கு செக்ஷன் மீட்டிங் இருக்கிறது. முக்கியமான இளைய அதிகாரிகளோடு வாரம் ஒருமுறை எம டி. நடத்தும் கருத்துப் பரிமாறல் கூட்டம். கொஞ்சம் முன்னால் போனால்தான் தேவையான ஃபைல்களை எடுத்துக் கொண்டு கான்பரன்ஸ் ஹாலுக்குப் போக வசதியாய் இருக்கும். முடியுமா?

குடித்து விட்டுத் தடுமாறிச் செல்லும் நபரைப் போல இவர் லோடில் ஒரு பக்கமாய் சாய்ந்த பஸ், யாருடனோ யாருக்கோ ஏற்பட்ட சண்டையைத் தீர்க்க ஒரு ஸ்டாப்பில் தேவைக்கு மீறி நிற்க...ரமணன் இருப்புக் கொள்ளாமல் தவித்தான்.

ஒரு வழியாய் அண்ணா சாலையில் இறங்கி, வானத்தைத் தொட்டுவிடுவது போல நின்றிருந்த அந்தக் கட்டடத்தை அடைந்து, கால்களை அகல அகலமாய் வைத்து. லிஃப்டை நெருங்கிப் பொத்தானை அழுத்தி, காத்திருந்து அது வந்து வாயைத் திறந்ததும் புகுந்து கொண்டு ஒன்பது என்கிற பொத்தானை அமுக்கினான்.

மெதுவாக மூட ஆரம்பித்த கதவுகள், திடுமென மீண்டும் திறந்து கொள்ள, லிஃப்டுக்கு வெளியே பட்டனை அழுத்தியபடி நின்றிருந்த அவள் ரமணனின் பார்வையில் விழுந்தாள்.

'ஹேய் - சுருக்க ஓடி வா... ஐம் ஹோல்டிங் தி லிஃப்ட்' - அவள் கத்திய பத்து நொடிகளில் இன்னொரு பெண் வந்து சேர்ந்து கொண்டதும் இருவரும் உள்ளே நுழைந்தனர்.



ஓடி வந்திருக்க வேண்டும். மூச்சு இரைத்தது.

'முதல் மாடிதானே ராணி?'

கேள்வி கேட்டுவிட்டு, பதிலுக்காகக் காத்திருக்காமல் முதல் மாடி பட்டனை பேசியவள் அழுத்த, ரமணனுள் கோபம் மண்டியது.

முதல் மாடி என்றால் படிக்கட்டுகளில் ஏறிப் போகக் கூடாதா? அத்தனை சோம்பேறித்தனமா?

சட்...

'வேணாம்பா—ராம்ஜிய அப்புறமா பார்த்துக்கலாம். முதல்ல வீணாகிட்ட, அவ கேட்ட லைப்ரரி புக்க கொடுத்திடலாம். அர்ஜண்டா வேணும்னாபா.'

'ஓ. கே.' என்று பதில் கூறின முதல் பெண் போர்த் ஃப்ளோர் இல்லை?' என்று கேட்டவாறு பட்டனை தட்ட ராணி என்று அழைக்கப்பட்ட பெண் 'ஐயையோ இல்லப்பா...அஞ்சு' என்றாள்.

முதல் மாடி பட்டன் ஏற்கனவே அழுத்தப்பட்டு விட்டதில் அங்கு நின்று, வாயைத் திறந்து, பயணிகளுக்காக காத்திருந்து. வாயை மூடின லிஃப்ட் மீண்டும் புறப்பட்ட போது ரமணனின் ஆத்திரம் கட்டுக்கடங்காமல் தவித்தது.

தவறாக அழுத்தப்பட்ட நாலாவது மாடியிலும் லிஃப்ட் நின்றுவிட்டு, ஐந்தாவதுக்குச் சென்று கதவுகள் திறந்ததும் 'என்னப்ப...தப்பான ஃப்ளோருக்கு வந்திட்டமா? வீணா ஆபீஸ் இருக்கிற மாடில க்ரோடன்ஸ் செடி தொட்டிங்க ஏராளமா இருக்குமே! இங்க ஒண்ணையுமே காணோமே! ஆறாவதா இருக்குமா?' என்று ராணி வினவ, 'அதனால் என்ன ஆறாவதுக்குப் போயி பார்த்துட்டா போறது' என்றவாறு மற்றவள் மறுபடியும் பட்டனை அழுத்த, ரமணன் வெடித்தான்.

'எக்ஸ்க்யூஸ் மீ—உங்க மனசுல என்னதான் நினைச்சுகிட்டு இருக்கிங்க? ஒவ்வொரு மாடியா நிறுத்தி வேடிக்கை பார்த்துகிட்டு போக இது என்ன எக்ஸிபிஷனா? எந்த மாடிக்குப் போகணும்னுகூட தெரியாதவங்க எல்லாம் ஏன் பப்ளிக் லிஃப்டுல ஏறி, அவசரமா போற மத்தவங்க வேலைகளையும் கெடுக்கறிங்க?' அவள் திரும்பி, அவனை அழுத்தமாக ஏறிட்டாள்.

'மிஸ்டர்! நீங்களே ஒத்துகிட்ட மாதிரி இது பப்ளிக் லிஃப்ட்—நாங்க எங்க வேணா எத்தனை தரம் வேணா நிறுத்துவோம். அத கேக்க நீங்க யாரு? எங்க தொந்தரவு வேணாம்னா தாராளமா மாடிப்படிலே ஏறிப் போங்க—யார் தடுக்கறாங்க? உடம்புக்கு நல்லது. வேலையும் கெடாது—'

இடுப்பில் ஒரு கை வைத்து, வெகு அலட்சியமாக அவள் வாதம் செய்ய, ரமணன் ஆளைப் புரிந்து கொண்டு திகைத்தான்.

ஓ! மை காட்! நேற்று தியேட்டரில் கலாட்டா பண்ணிய பெண்தானே இவள்!

# 4

யமுனா

வலித்தது.

நீண்ட நேரமாய்க் குனிந்து உட்கார்ந்து வேலை செய்ததில் கழுத்து வலித்தது.

உள்ளங்கையைப் பிடரியில் அழுத்தி, ஒருதரம் தலையைப் பின்னால் சாய்த்தபோது இதமாக இருந்தது.



கையிலிருந்த பேனாவைக் கீழே போட்டுவிட்டு யமுனா இருக்கையில் சாய்ந்து அமர்ந்தாள்.

இரண்டு கைகளையும் முன்னால் உதறி, ஒவ்வொரு விரலாகச் சொடுக்கினாள்.

மூன்று மணிக்குள் செக்ஷன் இன்சார்ஜுக்கு, ஸ்டேட்மெண்டை அனுப்பவேண்டும். இன்னும் பத்து நிமிஷங்கள் போல குறிப்புகளை எழுதிவிட்டு, பிறகு மொத்தமாக சரி பார்த்து விட்டால் ஸ்டேட்மெண்ட் தயாராகிவிடும்.

பேனாவைக் கையில் எடுத்தவளுக்கு சுயிங்கம் மெல்ல விருப்பம் எழ, மேஜை இழுப்பறையைத் திறந்தாள், அதில் எப்பொழுதும் வைத்திருக்கும் 'சிக்லெட்' டப்பாவை எடுத்து, இரண்டு வில்லைகளை வாயில் போட்டு மெதுவாக அசை போட்டாள்.

மீண்டும் 'சிக்லெட்' அட்டைப் பெட்டியை அலட்சியமாக உள்ளே வீசியபோது, ஒன்றின் மேல் ஒன்றாக உட்கார்ந்திருந்த புத்தகங்களின் மேல் பார்வை விழுந்தது.

காலையில் புத்தகக் கடைப் பையன், 'நீங்க ஆர்டர் பண்ணியிருந்த புக்ஸ் வந்திடுச்சு-முதலாளி கொடுத்திட்டு வரச் சொன்னார்' என்று சொல்லித் தந்து சென்ற புதுப் புத்தகங்கள்.

அவள் வேலை பார்க்கும் அந்த பல மாடிக் கட்டடத்தில் அது ஒரு உபரி வசதி. தரை தளத்தில் புத்தகம், பூ, மருந்து, பேக்கரி-என்று பலவகைக் கடைகள் வரிசையாய் இருந்ததில், அவசரமாய்த் தேவைப்படும் எந்த ஒரு அத்தியாவசியமான பொருளையும் அதிக அலைச்சல் இல்லாமல் அலுவலகத்துக்கு வரும்போதோ, வீட்டுக்குப்போகும் போதோ வாங்கிவிட முடிகிறது. நண்பர்களுக்குப் பிறந்தநாள், கல்யாண தினம் என்று முக்கியமான நாட்கள் வருகையில் ஏதோ நினைப்பில் அதைச் சுத்தமாக

மறந்துவிட்டுக் கடைசி நிமிஷத்தில் என்ன செய்வேன் என்று கையைப் பிசைய வேண்டாம்; லிஃப்டில் ஏறி கீழ் தளத்துக்குப் போனால் பட்ஜெட்டுக்குத் தகுந்தவாறு ஐந்து நிமிஷத்தில் வாழ்த்து அட்டையோ, சாக்லெட் டப்பாவோ, புத்தகமோ, பூங்கொத்தோ வாங்கி 'ஜம்' மென்று தந்துவிடலாம். அப்படியொரு சௌகர்யம்.

இது தவிர, யமுனா மாதிரி புத்தகப் பிரியர்களுக்கும் போகும், வரும் வழியிலேயே ஒரு தரமான 'புக் ஸ்டால்' இருப்பது ஏக குஷி! வாரத்துக்கு இரண்டு முறையாவது அந்தக் கடைக்குச் சென்று சமீபத்திய புகழ் பெற்ற வெளி நாட்டு நாவல்களிலிருந்து, அந்த வார 'டைம்', நியூஸ்வீக்' பத்திரிகைகள் வரை காசு செலவழிக்காமல் புரட்டிப் பார்க்க முடிவது எத்தனை சந்தோஷத்தைத் தரும் சமாசாரம்? மாசாமாசம் இருநூறு, முன்னூறுக்குக் குறையாமல் புத்தகங்கள் வாங்கும் வாடிக்கையாளர் என்பதால் காலையில் அலுவலகத்துக்கு வரும்போது பல சந்தர்ப்பங்களில் புது பத்திரிகைகளை எடுத்து வந்து மதிய உணவு இடைவேளையின் போது படித்துவிட்டு, மாலையில் திருப்பிக்கொடுத்து விடுவது கூட சாத்தியமாகிறது என்றால் சும்மாவா!

'தயங்காம எடுத்திட்டுப்போங்க மேடம்—உங்களுக்கு இல்லாததா?' என்று நிஜமான அன்போடு கூறி, கடைக்காரர் பத்திரிகைகளை நீட்டுவது நினைவுக்கு வர, புன்னகையுடன் யமுனா இழுப்பறையில் இருந்தபுத்தகங்களை கையில் எடுத்தாள்.

'நண்பர்களைச் சம்பாதிப்பதும், தக்கவைத்துக்கொள்வதும் எப்படி?' எழுதியவர் புகழ்பெற்ற 'டேல் கார்னகி.'

ஐம்பது வருஷங்களுக்கு முன் பிரசுரிக்கப்பட்டு, ஐந்து கோடி பிரதிகளுக்கு மேல் விற்கப்பட்டு, இன்றைக்கு பரபரப்பாக மக்களால் வாங்கப்பட்டு, பேசப்பட்டு, ஏன் கடைப்பிடிக்கப்பட்டும் வரும் ஓர் அற்புதமான புத்தகம்!



'டேல் கார்னகியின்' மற்ற புத்தகங்கள் யமுனாவிடம் உள்ளன. இது ஒன்றுதான் இல்லை. ஒரு மாசத்துக்கு முன் சொல்லி வைத்திருந்ததில் இன்று கைக்கு வந்திருக்கிறது.

மனதில் சந்தோஷம் அலாதியாய் முளைவிட, புத்தகத்தை வாஞ்சையுடன் முகத்தருகில் நொணர்ந்து கட்டை விரலால் பக்கங்களை விசிறி விட, புதுத்தாள்களுக்கே உரிய மணம் கமகமத்தது.

சாப்பிடும் போதும், உறங்கச் செல்லும் முன்னரும் ஏனோ தானோ என்று படிக்கக்கூடிய புத்தகம் அல்ல அது; நின்று நிதானமாய் வரி, வரியாய் வாசித்து, முக்கியமான கருத்துகளைக் கலர் பென்சிலால் கோடிட்டு, மனசில் பதிய வைத்துக் கொள்ள வேண்டியது.

அதைக் கீழே வைத்துவிட்டு அடுத்ததைக் கையில் எடுத்தபோது மகிழ்ச்சி கூடுதலாகி சலசலப்பதை உணர முடிந்தது.

நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் ஜான் ஸ்டென்பெக், காரில் தன் நாய்-சகிதம் அமெரிக்கா முழுதும் சுற்றியதை வித்தியாசமாய் வர்ணிக்கும் பயணக் கட்டுரை- ட்ராவல்ஸ் வித் சார்லி.

இந்தப் புத்தகத்திற்காக எத்தனை கடைகளில் எத்தனை முறைகள் யமுனா ஏறி இறங்கி இருக்கிறாள்? சில வருஷங்களுக்கு முன் இதைப்பற்றின விமர்சனத்தைப் படித்த நாளிலிருந்து, தானும் ஒரு நாள் இப்படி நாயை அழைத்துக் கொண்டு இந்தியா பூராவும் வலம் வர வேண்டும் என்கிற ஆசை தலைதூக்கியதிலிருந்து—அவளும் அப்புத்தகத்தைத் தேடுகிறாள்...ம்ஹூம், கிடைக்கவில்லை. நாலைந்து வருஷங்களாய் கண்ணாமூச்சி ஆடிவிட்டு இன்றைக்குக் கிட்டியிருக்கிறது!

'வேளைவரலை' சுந்தரத்திடம் சொன்னால் 'அதுக்கு என்ன பண்றது யமுனா! இன்னிக்குதானே வேளை வந்திருக்கும்!' என்பார் தீவிரமாய்-இல்லை!

சிரிப்புடன், தன் வழக்கப்படி கடைசிப் பக்கத்தைப் புரட்டி அதைப் படிக்க அவள் முற்பட்டபோது 'ஹேய்' என்று குரல் கொடுத்தவாறு அவள் கையிலிருந்ததை ராணி பறித்தாள்.

'என்னப்பா? புதுசா? எப்பவும் செய்யற மாதிரி கடைசிப் பக்கத்துலேர்ந்து ஆரம்பிக்கிறியா? ஐயோ, கடவுளே—'ஸஸ்பென்ஸ்'ன்றதே தேவை இல்லாம இப்படி ஒரு மனுஷிய ஏன்தான் படைச்சியோப்பா!'

அங்கலாய்ப்புடன் புத்தகத்தை வாங்கியவள் தலைப்பை உரக்கப் படித்தாள்.

'ட்ராவல்ஸ் வித் சார்லி!'—'அட! கடைசில கிடைச்சிடுத்தாபா? காத்திருந்து வாங்கினதைக் கூடவா முதல் பக்கத்துலேர்ந்து படிக்க உனக்குப் பொறுமை இல்லே?'

யமுனா தலையைப் பின்னுக்கு சாய்த்துச் சிரித்தாள்.

'இது திடீர் திருப்பங்கள் கொண்ட நாவல் இல்ல ராணி. பயணக் கட்டுரை. அதனால கடைசி பக்கத்த படிச்சிட்டே, ஆரம்பிக்கலாம், தப்பில்ல...'

'வேணாம்பா...எதையாவது சொல்லிச் சமாளிக்காதே...அது...'ராணியைத் தொடர விடாமல் வசுந்தரா குறுக்கிட்டாள்.

'உங்க வாக்குவாதத்த டைனிங் ஹால்ல வச்சுக்கக் கூடாதா? எனக்குப் பசிக்குது...ரெண்டு பேரும் வரப் போறீங்களா, இல்லையா?'

யமுனா இல்லை என்று தலை அசைத்தாள்.

'வரலையா! ஏன்? பசிக்கலியா?'



'அதில்ல வசு...'வணங்காமுடி' ஸ்டேட்மெண்டுக்காக காத்துகிட்டு இருக்கார். இன்னும் கொஞ்சதான் பாக்கி. முடிச்சு அனுப்பிட்டா நிம்மதி.'

'அப்ப, கால்மணி நேரம் எங்களையும் காத்திருக்கச் சொல்லறியா?'

'வேணாம். நீங்க போங்க...இன்னிக்கு நா கையில டிபன் கொண்டுட்டு வரல...'

'ஏம்பா?...புறப்படறப்போ நாழி ஆயிடுச்சா?'

'ம்ஹூம்-அம்மாவும், நானும் இன்னிக்கு சமைக்க வேணாம்னு தீர்மானம் செய்தோம். தினம் தினம் சமைக்க அலுத்துப் போயிட்டதால, ஒரு 'சேன்ஜூக்கு' இந்த முடிவு...'

ராணி கண்ணகல விழித்தாள்.

எனக்குக் கூடத்தான் தூங்கி எழுந்து சமைக்கறதும், ராத்திரிக்கு என்ன டிபன்னு யோசிக்கறதும் மஹாசலிப்பா இருக்கு. அதுக்காக சமைக்காம இருந்திட முடியுமா?'

யமுனா டேபிளைத் தட்டி, கண்களைச் சிமிட்டினாள்.

'நிறைய பேர் வீட்டுல இல்ல, ஒத்துக்கறேன். ஆனா, எங்க வீட்டுல எதுவும் முடியும். ஏன்னா, எங்கம்மா, நா ரெண்டு பேருமே வித்தியாசமா சிந்திக்கிறவங்க அடுத்தவங்களுக்காக இல்லாம எங்களுக்காக வாழறவங்க...இன்னிக்கு சமைக்கப்பிடிக்கல...ஸோ நோ சமையல் டிபனுக்கு காலைல ஒரு ஆப்பிள் தின்னு, ஒரு கிளாஸ் ஜூஸ் குடிச்சிட்டு வந்தேன். இப்ப சுமாராய் பசிக்குது. ஸ்டேட்மெண்டைத் தயாரிச்சு அனுப்பினதும் காண்டீனுக்குப் போய் லைட்'டா சாப்பிடப் போறேன். ஏன்னா, ராத்திரி

டின்னருக்கு 'ஸவேரா, ஹோட்டலுக்குப் போய் ஒரு வெட்டுவெட்ட அம்மாவும் நானும் பிளான் போட்டிருக் கோம். எப்படி?'

வசுந்தரா பாராட்டும் விதமாய் உதட்டைச் சுழித்து, புருவங்களை உயர்த்தினாள்.

'ஜமாயுங்க...கேக்கவே பிரமாதமா இருக்கு. சரியா சொல்லணும்னா உங்கம்மா மாதிரி எங்கம்மா இல்லை யேனு எனக்குப் பொறாமையாகூட இருக்கு...அதுசரி— அம்மாவப் பத்தி எப்பப் பாரு இப்படி ஏதாவது வித்தியா சமா பேசி எங்க ஆர்வத்தக் கிண்டறயே தவிர, இன்னும் ஒரு தரம் கூட அவங்கள கண்ணுல காட்ட மாட்டேங் கறியே! இது என்ன நியாயம்?'

யமுனா அவன் கையைப் பற்றி அருகில் இழுத்தாள்.

'ரிலாக்ஸ் வசு... இதுக்கெல்லாம் கோச்சுகிட்டா எப்படி?ம்? நானா உங்கள சந்திக்க விடாமதடுக்கிறேன்? வாரநாட்கள்ல எங்கம்மா பள்ளிக்கூடம்விட்டுவர்றப்போ ஏழுமணி ஆயிடுது. அதுக்கு மேல எங்க வீட்டுக்கு வந் துட்டு போறது உங்களுக்குச் சரிப்பட்டு வரலை. நீ திரு வான்மியூர். இவ அண்ணாநகர், ஆளுக்கொரு மூலை. சரி, ஞாயித்துக் கிழமை வாங்கனா 'அவர் வீட்டுல இருப் பார்; சொந்தக்காரங்க வீட்டுல விசேஷம், பண்டிகை வருது, பலகாரம் பண்ணணும்'—இப்படி ஏதாவது சாக்கு சொல்லிடறீங்க. அப்புறம் என்னைக் குறை சொல்றது மட்டும் எதுக்கு? இன்னிக்குக் கூட சரினு சொல்லுங்க... எங்களோட உங்களையும் ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் டின்னருக்கு அழைச்சிட்டுப் போக நா ரெடி...என்ன? வர்றீங்களா?'

கையைச் சொடுக்குப் போட்டுக்கொண்டு யமுனா வினவ, ரஜ்ணி அவளை நெருங்கிக் குனிந்து ஒருதரம் தலை யில் முட்டினாள்.



'தாங்ஸ்-பா...உங்ககிட்ட பேசி ஜெயிக்க எங்களால முடியாது...ஆளை விடு...இப்ப நீ சாப்பிட வரப்போற தில்லியா?'

'ம்ஹூம்...நீங்க போங்க.'

விடை கொடுத்தவள் பேனாவைக் கையில் எடுத்துக் கொண்டு ஸ்டேட்மெண்டில் கவனத்தைச் செலுத்த முற் பட, மற்ற இருவரும் டிபன் டப்பாக்களோடு சாப்பாட்டு கூடத்தை நோக்கிச் சென்றார்கள்.

அரைமணியில் வேலையை முடித்த பிறகு, மேஜை இழுப்பறையைப் பூட்டிவிட்டு, பையைத் தோளில் மாட் டிக் கொண்டு யமுனா எழுந்தாள்.

அவள் அலுவலகம் இருந்தது மூன்றாவது மாடியில், காண்டீன் முதல் தளத்தில்...

லிஃப்டுக்குக் காத்திருப்பதை விட, படிகளில் இறங்கிச் செல்வது மேல் என்று தோன்ற, இறங்கினாள்.

காண்டீன் நுழைவாயிலில் நின்று பார்வையைச் சுழற்றினாள். கூட்டம் அவ்வளவாக இல்லாதது ஆச்சர் யமாக இருந்தது, கூடவே நிம்மதியாகவும் இருந்தது.

சாதாரண ரெஸ்ட்ராண்டுகளைப் போல அல்லாமல் மேலைநாடுகளில் காணப்படும் 'மெக்டானால்ட்' உணவு விடுதிகளின் சாயலில் நடத்தப்பட்டு வந்த அந்த காண்டீ னில் பதார்த்தங்கள் வெகு ருசியாக இருப்பதோடு, சுத்தம், வித்தியாசமான அலங்காரம், விரைவான சப்ளை என்று பல சமாசாரங்களும் சிறப்பாக இருப்பதனாலும் அந்த ஒன்பது மாடி கட்டிடத்தில் இருக்கும் மூன்று காண்டீன் களில் இதில் மட்டும் சற்றுக் கூடுதலான விலையைக்கூட

பொருட்படுத்தாமல் எந்நேரமும் கூட்டம் நிறைந்து முட்டுவது சர்வ சகஜமான காட்சி.

என்ன காரணத்தாலோ இன்று அதிசயமாய் ஜனசந்தடி கம்மியாய் இருக்க, உற்சாகமாய் கூடத்தில் நுழைந்து இரு பக்கங்களிலும் இருந்த மேஜை நாற்காலிகளைக் கடந்து, யமுனா கவுண்டரை நோக்கி நடந்தாள்.

வளைந்து நீளமாய் இருந்த கவுண்டரில் குறிப்பிட்ட இடைவெளியில் இருந்து நாலு 'காஷ்மெஷின்' களில் மூன்று கூட்டம் இல்லாத காரணத்தால் மூடப்பட்டிருக்க, திறந்திருந்த கவுண்டர் முன் சென்று நின்றாள். சுவரில் விலைகளோடு தொங்கியமெனு அட்டவணையை 'என்ன சாப்பிடலாம்' என்ற யோசனையுடன் அவள் படிக்க, கவுண்டரில் அமர்ந்திருந்த சிப்பந்தி பொறுமையுடன் காத்திருந்தார்.

'ம்ப்ம்?...ஒரு தயிர்வடை...அப்புறம் ஒரு ஸோன் பப்டி...ம்ம்... ஹாட்சாக்லெட்—'

பட்டியலிலிருந்து கண்களை அகற்றாமல் யமுனா உரக்கக் கூறியதும் அவற்றின் விலைகளைச் சிப்பந்தி காஷ் மெஷினில் டைப் செய்தார்.

பதார்த்தங்களின் விலைகளைக் கூட்டி மொத்தம் அவள் கொடுக்க வேண்டிய பணத்தை மெஷின் காட்ட, பர்ஸைத் திறந்த யமுனா ஏதோ நினைத்துக் கொண்டவளாய் சிப்பந்தியைக் கேட்டாள்.

'தயிர் வடைனா, அதில் காராபூந்தி போட்டிருப்பீங்க இல்ல? போன தடவை சாப்பிட்டப்போ பூந்தி காரல் வாசனை வந்து நல்லாவே இல்ல—அதனால் தயிர் வடை வேணாம்...மைசூர் போண்டாக்கு மாத்திடறீங்களா?'



சிப்பந்தி வாய் பேசாமல் மெஷின் காகிதத்தில் தயிர் வடையைக் கழித்து, போண்டாவின் விலையைக் கூட்டி டைப் செய்தார்.

'யோசிச்சு பாக்கறப்போ 'ஸ்வீட்' அதிகம்னு தோணுது—கான்சல் பண்ணிடறீங்களா?'

சிப்பந்தியின் தாடை ஒருதரம் இறுகி, தளர்ந்தது. ஆனாலும் வாயால் ஏதும் பேசாமல் அவள் விருப்பத்தை நிறைவேற்றி பில்லைக் கிழித்து நீட்டிவிட்டு, அடுத்து வந்து நின்றிருந்த நபரை 'உங்களுக்கு என்ன வேண்டும்?' என்கிற ரீதியில் ஏறிட்டான்.

பணத்தைக் கொடுத்த யமுனா ஓரடி பக்கவாட்டில் நகர்ந்து கொள்ள, பின்னால் நின்ற ஆண் முன்னுக்கு வந்தான்.

தனக்கு வேண்டியதை சிப்பந்தியிடம் கூறும் முன் சில நொடிகள் கண்கள் இடுங்க யமுனாவை வெறித்துவிட்டு அவன் திரும்பியபோது அந்த முகம் ஏற்கனவே பரிச்சயமானதாக யமுனாவுக்குத் தோன்றியது.

'வெஜிடபிள் சமுஸா. சட்னி வேணாம். 'தக்காளி ஸாஸ்' தனியா ஒரு கிண்ணத்துல கொடுங்க...காபி... சூடா...ஸ்ட்ராங்கா...சர்க்கரை கம்...

நிதானமாக ரமணன் தன் தேவைகளைக் கூறிமுடிக்கும் முன்னர் யமுனா பரபரப்புடன் குறுக்கிட்டாள்.

'ஓ! மை குட்னஸ்! அன்னிக்கு தியேட்டர்ல, அப்புறம் லிஃப்டுல சந்திச்சவர் நீங்கதானே!'

ரமணன் ஒருபக்கமாய் உதடு விரிய புன்னகைத்தான்

''பரவாயில்லையே! கண்டு பிடிச்சிட்டீங்களே... அன்னிக்கு இல்ல... தியேட்டர்ல சந்திச்சது முந்தா நாள்' லிஃப்டுல நேத்து...எஸ்...அது நானேதான்...

யமுனா கவுண்டரைத் தட்டிச் சிரித்தாள்.

'மூதல்ல நீங்கதானானு சந்தேகமாக இருந்தது, ஆனா, மிலிட்டிரில ஆர்டர் கொடுக்கற மாதிரி காபி, சூடா ஸ்ட்ராங்கா, சர்க்கரை கம்மியா...னு சொன்னதும் ஆஹா இவர் நமக்குத் தெரிஞ்சவர்தான்னு உடனே தெளிவா புரிஞ்சு போச்சு...ஹலோ மிஸ்டர்...நா ஒரு ஜோஸ்யம் சொல்லட்டுமா? தப்பா எடுத்துக்க மாட்டீங்களே! நீங்க ஆர்மில வேலல பாக்கறீங்க...என்ன சரி தானே?'

கிண்டலாகப் பேசிவிட்டு, யமுனா சிரிப்பை அடக்க முயற்சிக்க, ரமணன் 'பளிச்' சென்று தயங்காமல் பதில் கூறினான்.

உங்க ஜோஸ்யம் சுத்தமா தப்பு...அது இருக்கட்டும்... எனக்கும் மூதல்ல நீங்கதானானு தயக்கமா இருந்தது. ஆனா, சொன்னதை உடனே மாத்தி, மாத்தி ஆர்டர் பண்ணுவே 'அடடே...இவங்களா-னு' டக்குனு புரிஞ்சு போச்சு—ஏன், மிஸ். ஒன்னு கேக்கட்டுமா. கோச்சுக்க மாட்டீங்களே-நீங்க எப்பவுமே இப்படித்தான் எல்லாத்தையும் மாத்தி, எல்லாரையும் குழப்பி, சங்கடப்படுத்திகிட்டேதான் இருப்பீங்களா?

# 5

**ரமணன்**

**இந்த ரீதியில் அவளிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்க்காததில் அவள் ஸ்தம்பித்துப் போனதை ரமணனால் புரிந்து கொள்ள முடிந்தது.**



பேசி விட்டானே ஒழிய-என்னடா, முன்பின் தெரியாத பெண்ணிடம் இப்படி கடுமையாகக் கேட்டு விட்டோம். ஏற்கனவே இரண்டு முறை சந்தித்ததிலிருந்து வலுச்சண்டைக்குப் போகும் ரகமாகத் தெரிந்தாளே! அவள்தான் தெரியாத்தனத்தில் துடுக்குத்தனமாகப் பேசினாலும் கடந்த இரண்டு தடவைகள் போகட்டும் என்று விட்டு விட்ட தினுசில், இப்போதும் இந்தக் காதால் வாங்கி அந்தக் காதால் வெளியே தள்ளிவிட்டு, என் போக்குக்கு நகர்ந்திருக்காமல் என்ன அசட்டுத்தனம் இது! 'என்னை இந்த ஆள் வலிய வம்புக்கு இழுக்கிறான்! என்று உரக்கக் கத்தி' மறறவர்களிடம் புகார் பண்ணினால் என்ன செய்வது?' என்ற கேள்விகள் எழ, மேற்கொண்டு என்ன பண்ண வேண்டும் என்று ரமணன் அவசரமாய் யோசித்தான்.

காதலுக்கும் சண்டைக்கும் பயப்படுகிற ஆசாமி அவன் இல்லை தான் என்றாலும், வேலை பார்க்கும் கட்டடத்தில், அதுவும் தினம் வந்து போய் நாலு பேருடன் நட்புடன் பழகும் காண்டீனில் அனாவசிய ரகளை எதற்கு!

'ஸாரி' என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டு சென்று விடலாம் என்கிற தீர்மானத்துக்கு அவன் வந்த அதே தொடியில், எதிரில் நின்றவள் தலையை ஒருதரம் உலுக்கி, உரக்கச் சிரிக்க. ரமணன் விழித்தான்.

'ஸோ? பதிலுக்குப் பதிலா! டிட்ஃபார் டாட்—ம்ம்... பரவாயில்லையே மிஸ்டர்...என்னை மடக்கிட்டீங்களே!'

பேசியவள், நிஜமான சந்தோஷத்துடன் மீண்டும் சிரிக்க ரமணன் இறுகிவிட்ட தாடையைத் தளர்த்திக் கொண்டு, அப்பாடா என்கிற நிம்மதி வெளிப்பட புன்னகைத்தான்.

'அட! உங்களுக்குச் சிரிக்கக் கூட வருமா? ரெண்டு நாளா பார்த்ததுல சிரிப்புன்னா வீசை, ஸாரி, கிலோ என்ன விலைனு கேப்பீங்கன்னு நினைச்சேன்.?'

குழந்தைத்தனமான வெகுளிப் பேச்சுடன் அவள் தொடர்ந்து சிரிக்க, இப்போது வாய்விட்டு ரமணன் சிரித்தான்.

'என்ன அப்படி ஒரு முடிவுக்கு வந்திட்டீங்க! முகம் சுளித்துக் கோபிக்க எத்தனை தசைகள் தேவைப்படுதோ, அதுல பாதிதான் சிரிக்க உபயோகப்படுதுனு வைத்தியர்கள் சொல்லியிருக்கறது எனக்கும் தெரியுமே! எங்க வீட்டுலேயே நாதான் சிக்கனமானவன்ற பேரு— அப்படியிருக்கப்போ, கொஞ்சமா எனர்ஜிய செலவழிச்சு சிரிக்கறத அடிக்கடி செய்யாட்டி, என் வீட்டுல எனக்குக் கொடுத்திருக்கிற பட்டப் பெயருக்கு அர்த்தம் இல்லாமப் போயிடாதா!'

யமுனா வலது கையால் கௌண்டர் மேல் தட்டினாள்.

'திஸ் ஈஸ் ரியலி கிரேட்! வாஸ்தவமா நீங்க இத்தனை தமாஷா பேசக் கூடியவர்னு நா எதிர்பார்கவேயில்லை!'

'குட்! அப்ப, நமக்குள்ள சண்டை எல்லாம் முடிஞ்சி போயி இந்த நிமிஷத்துலேந்து நாம ஸ்னேகிதர்களாயிட்டோம்-னு வச்சிக்கலாமா?'

'வச்சிக்கலாம்!'

சிப்பந்தி அவர்கள் ஆர்டர் செய்த உணவு வகைகளை இரண்டு தட்டுகளில் கொணர்ந்து வைக்க, 'தனியா தானே வந்திருக்கிங்க? நாம நண்பர்களாயிட்டதால உங்களோட உட்கார்ந்து நா டிபன் சாப்பிடறதுல உங்களுக்கு ஆட்சேபணை ஒண்ணும் இல்லியே!' என்றான் ரமணன்.



'ஆட்சேபணையா? இட்ஸ் எ ப்ளெஷர்—நா ஒண்ணு சொன்னேன், நீங்க பதில் கொடுத்தீங்க...ஸோ-அதுக்கும் இதுக்கும் சரியா போச்சு...நீங்க சொன்ன மாதிரி நாம தப்பு...'

சிற்றுண்டி, தண்ணீர் அடங்கிய இரண்டு தட்டுக்களையும் ரமணன் தூக்கி வர, நடந்து ஜன்னல் ஓரமாய் இருந்தமேஜையிடம் சென்றார்கள்.

'இங்க உட்காரலாமா?'

எதிரும் புதிருமாய் அமர்ந்தார்கள்.

'ஸ்னேகிதர்கள்னு சொல்றோம், மூணு நாளா தொடர்ந்து சந்திக்கிறோம்-ஆனா, இன்னும் முறையா அறிமுகப்படுத்திக்கவே யில்லையே! நான் யமுனா...'

'ஹலோ யமுனா...ஐ'ம் ரமணன்!'

'ஹாய் ரமணன்!'

இருவரும் ஏதோ துணுக்கு கேட்டுவிட்ட மாதிரி சேர்ந்து சிரித்தார்கள்.

மைசூர் போண்டாவைக் கையில் எடுத்த யமுனா புரட்டி மேலும் கீழும் பார்த்துவிட்டு, பரிதாபமாக அவனை ஏறிட, ரமணன் ஒரு ஸமூஸாவை ஸாஸில் தோய்த்து ஒரு கடி கடித்தான்...

'எப்படி இருக்கு?'

'ம்ம்...வெரிகுட்...சாப்பிட்டுப் பார்க்கறீங்களா?'

'அப்பாடீ...ஒரு வழியா கேட்டீங்களே! எங்க உபசாரம் பண்ணாம நீங்களே இரண்டையும் தின்னு முடிச்சிடுவீங்களோன்னு பயந்திட்டேன்! ஸமூஸா பார்க்கவே நல்லா இருக்கு...இந்த போண்டாவைப் பிழிஞ்சா பாட்டில் எண்ணெய் எடுக்கலாம்...'

பேசியவள் போண்டாவைக் கீழே போட்டுவிட்டு ஸ்வாதீனத்துடன் அவன் தட்டிலிருந்த இன்னொரு ஸமூஸாவை எடுத்துச் சுவைத்தாள்.

நிழமாவே ழொம்ப நழ்ழா இழுக்கு...' என்று தொடங்கியவளை 'எக்ஸ்க்யூஸ் மீ. என்ன பாஷை பேச றீங்கனு தெரிஞ்சுக்கலாமா?' என்று குறுக்கே புகுந்த ரமணன் வினவ, பதார்த்தம் நிறைந்த வாயுடன் யமுனா சிரித்தாள்.

சிரிப்பு அடங்கியதும் வாயில் உள்ளதை விழுங்கி, கொஞ்சம் தண்ணீர் குடித்து ஆஸ்வாசப்படுத்திக்கொண்டு பேசினாள்.

'நிஜமாவே ரொம்ப நல்லா இருக்கு...உங்களுத எனக்குக் கொடுத்துட்டா, நீங்க என்ன செய்வீங்கனு கேட்க வந்தேன்.'

'ப்ழைச்சேன்—வாயில் ஸமூசாவை வச்சிகிட்டு இத்தனை நீளமா 'ழழ'னு எதுவும் புரியாம பேசியிருந்தீங்கன்னா. 'சரி,தெரியாத மொழியில நம்பள கெட்ட வார்த்தைய சொல்லித் திட்றாங்க'னு எழுந்து ஒரே ஓட்டமா ஓடியிருப்பேன்.'

பேசிவிட்டு ரமணன் சிரிக்க, யமுனா சேர்ந்து கொண்டாள்.

சிரிப்பு மாறாமல் ஆளுக்கு ஒரு ஸமூஸா தின்று, போண்டாவையும் விட்டு வைக்காமல் பகிர்ந்து கொண்டு சாப்பிட முனைந்தபோது யமுனா சொன்னாள்.

'இப்படி சிரிச்சுகிட்டே இருந்தா என்ன அர்த்தம்! கொஞ்சம் ஸீரியஸா பேசலாமா?'

'எஸ் மேடம்—என்ன பேசணும் சொல்லுங்க.'



சட்டென்று முகத்தைத் தீவிரமாக்கிக் கொண்டுஅவன் வினவ, 'வேணாம் மறுபடி சிரிக்க வைக்காதீங்க...ஐம் ஸீரியஸ்...எல்லா இடத்தையும் விட்டு இந்த காண்டீனுக்கு ஏன் வந்தீங்க?' என்றாள் யமுனா.

பேப்பர் நாப்கினால் வாயை ரமணன் துடைத்துக் கொண்டான்.

'நீங்க ஏன் இங்க வந்தீங்க—அதுக்குப் பதில் சொல்லுங்க முதல்ல...'

'ரொம்ப நல்லாயிருக்கே உங்க கேள்வி! எங்க கட்டடத்துலேயே இருக்கற காண்டீனுக்கு வராம, நா வேற எங்க சாப்பிடப் போவேன்?'

'அட ராமா!'

'இப்ப அவரை எதுக்கு இங்க கூப்பிடறீங்க!'

'சரி கூப்பிடலை...உங்க கட்டடமா? அப்படீன்னா நீங்க இந்த பில்டிங்ல வேலை பார்க்கறீங்கன்னா,என்ன?'

ரமணனின் வியப்பு கண்களில் வெளிச்சம் போட்டது.

'இதுல ஆச்சர்யப்பட என்ன இருக்கு ரமணன்!'

'நானும் இந்த கட்டடத்துலதான் வேலை பாக்கறேன்—அதான்.'

'வாட்!'

'இப்ப புரியுதா என் வியப்புக்குக் காரணம்!'

'எத்தனை நாளா?'

'கிட்டத்தட்ட ஒண்ணரை வருஷமா...நீங்க?'

'அஞ்சு மாசமா...'

'கடவுளே! அஞ்சு மாசத்துக்கும் மேலா ஒரே கட்டடத்துல வேலை பார்த்தும், மூணு நாளாதான் சேர்ந்த

மாதிரி சந்திக்கிறோம்! இதுக்கு முன்னால ஒருதரம் பார்த்துக்கக் கூட இல்லைனா கேக்கறவங்க நம்ப மாட்டாங்க...'

'உங்க ஆபீஸ் எது? எந்த ஃப்ளோர்ல?'

'ஒன்பதாவது மாடில...நீங்க?'

'மூணாவது...'

'ஆச்சர்யமா இல்லே! அஞ்சு மாசமா ஒரே கட்டடத்துல வேலை பார்க்கறோம்...ஆனாலும் ஒருதரம் கூட சந்திக்காதவங்க, அடுத்தடுத்து மூணு நாள்ல மோதிகிட்டப்புறம் அறிமுகம் ஆயிருக்கோம்! கேட்டா, கதையில வர்ற சம்பவம் மாதிரி இருக்குனு சொல்லுவாங்க...'

யமுனா பலமாய் தலையை ஆட்டி ஆமோதித்தாள்.

ரமணனே தொடர்ந்தான்.

'எங்க அம்மா கேட்டாங்கன்னா, 'வாழ்க்கைல நடக்கறததாண்டா தம்பி கதையா எழுதறாங்க...இப்படி எதிர்பாராம நடக்கறதுக்குப்பேர்தான் விதி'னு சொல்லுவாங்க.

யமுனா போலியாய் திடுக்கிட்டு இரண்டு கைகளையும் கூப்பினாள்.

'நல்ல வேளை! அம்மா சொல்லுவாங்கன்னு சொன்னீங்க. அப்படி இல்லாம, நீங்களும் விதி, அது, இதுனு நியாயப்படுத்த ஆரம்பிச்சிருந்தீங்கன்னா, இப்ப எழுந்து ஓட வேண்டியது என் முறையா இருந்திருக்கும்.'

ரமணன் கண்கள் இடுங்க அவளைப் பார்த்தான்,

'இந்த விதி, அது, இதுவெல்லாம் உங்களுக்கு நம்பிக்கை கிடையாதா?'

'ம்ஹூம்.'



'அப்ப, அஞ்சு மாசமா குட்டியா கூட பார்த்துக்காதவங்க, இப்படி அடுத்தடுத்து சந்திக்க நேர்ந்ததுக்கு உங்க விளக்கம் என்ன? நா தெரிஞ்சுக்கலாமா?'

'தாராளமா...உங்க ஆபீஸ் ஒன்பதாவதுல; என்னுது மூணாவதுல...இந்த கட்டடத்துல இருபதுக்கும் மேற்பட்ட அலுவலகங்கள் இருக்கு...ஒண்ணொண்ணுலேயும் நூத்துக்கணக்கானவங்க வேலை பார்க்கறாங்க...எல்லாரும் உபயோகிக்க நாலு லிஃப்ட் இருக்கு...ஸோ, நீங்க உள்ளே வர்ற, வெளியே போறசமயங்கள்ல நாவரலைனா சந்திக்கறது இம்பாஸிபிள். நா தினம் காண்டீனுக்கு வர்றவ இல்லை. அதிசயமா இன்னிக்கு மாதிரி சாப்பாடு கொண்டு வராத நாட்கள்லதான் வருவேன். பல சந்தர்ப்பங்கள்ல மூணாவது மாடிலேர்ந்து படிகள்லியே எறங்கிப் போயிடுவேன். விஷயங்கள் இப்படி இருக்கறப்போ அஞ்சு மாசம் என்ன, அஞ்சு வருஷங்கள் கூட சந்திக்காமலேயே இருந்திருக்கக்கூட சான்ஸ் இருக்கு!'

'சரி, ஒத்துக்கறேன். ஆனா, இத்தனை நாளா நடக்காம, ஏன் தொடர்ச்சியா மூணு நாளா சந்திக்கணும்! இது 'விதி' இல்லாம வேற என்ன?'

யமுனா அவன் பேச்சை நம்ப மாட்டாத மாதிரி கண்ணகல அவனைப் பார்த்துவிட்டு, பின்னர் தலையை பின்னுக்குத் தள்ளிச் சிரித்தாள்.

'ஷியர் கோ—இன்ஸிடன்ஸ்...காக்கா உக்கார பனம் பழம் விழுந்த கதைதான்...வேற என்ன! கேள்விப்பட்டதில்ல?'

ரமணன் உதட்டைப் பிதுக்கித் தோளைக் குலுக்கி, மறுத்தான்.

'நா ஒப்புக்க மாட்டேன். எங்கம்மாவுக்கு மட்டுமில்ல எனக்கும் 'விதி' ல நம்பிக்கை உண்டு.'

'ஓகே—ஒரு வாதத்துக்காக உங்க வழிக்கே வரேன்—நாம சந்திச்சது விதி. ரைட்—எதைச் சாதிக்க இந்த விதி இப்படி பிளான் பண்ணி நம்பள சந்திக்க விடாம இத்தனை மாசமா தடுத்தது? இல்ல இப்ப 'மீட்' பண்ண வச்சிருக்கு? கான் யூ டெல் மீ?'

ரமணன் மறுபடி தோளைக் குலுக்கி, தெரியாது என்கிற பாவனையில் தலையை அசைத்தான்.

'அதெல்லாம் போகப் போகத் தெரியலாம். இல்ல, நமக்குப் புரியாம கூட இருக்கலாம்...'

'புல்ஷிட் ... இருபதாம் நூற்றாண்டுல, படிச்ச இளைஞர் இப்படி மூட நம்பிக்கையோட பேசறது எனக்கு கோபத்த உண்டாக்குது.'

மேஜையை ஒரு கையால் தட்டி காட்டமாக யமுனா தன் கருத்தைக் கூறியதும் அவளுக்குப் பதில் கூறப் பிடிக்காதது போல ரமணன் மௌனித்தான்.

ஓரிரு நிமிஷங்கள் ஓசையில்லாமல் நகர்ந்தன.

அவன் காபியையும், அவள் ஹாட் சாக்லெட்டையும் குடித்தார்கள்.

காலி டம்ளரைக் கீழே வைத்த யமுனா எழுந்து நின்றாள்,

'எனக்கு இப்ப ஸ்வீட் சாப்பிடணும்போல இருக்கு. நா வாங்கிட்டு வரப் போறேன். உங்களுக்கு ஏதாவது வேணுமா?'

'ம்ஹூம்—காபி சாப்பிட்டப்புறம் நா எதுவும் சாப்பிடமாட்டேன். தாங்க்ஸ்.'

சென்றவள், திரும்பி வந்தபோது அவள் தட்டில் ஸ்வீட்டுக்குப் பதிலாய் 'கட்லெட்' இருந்தது.



'ஸ்வீட் வாங்கப் போறதா சொன்னீங்க!'

'எஸ்—ஆனா, அங்க போனதும் எனக்கு முன்னால நின்னுட்டிருந்தவர் 'கட்லெட்' வாங்கிட்டிருந்தார். பார்க்க நல்லா இருந்தது; அதையே நானும் வாங்கிட்டேன்.'

சற்றுமுன் உண்டாயிருந்த எரிச்சலை மறந்து ரமணன் சிரித்தான்.

'ஆக, இப்படி நொடிக்கு நொடி உங்க எண்ணங்கள மாத்திக்கறது உங்க வழக்கம்னு சொல்லுங்க...'

உட்கார்ந்து சாப்பிடத் துவங்கிய யமுனா கேட்டாள்.

'ஏன், நீங்க ஒருதரம் தீர்மானம் பண்ணதை மாத்திக்கவே மாட்டீங்களா?

'ம்ஹூம்—நா ரொம்ப ஸிஸ்டமாடிக் பர்ஸன் எல்லாத்துலேயும் எனக்கு ஒரு ஒழுங்கு வேணும்.'

'எனக்கு ஜாலியா இருக்கத்தான் பிடிக்கும். தேவையில்லாம கட்டுப்பாடா இருக்கறது பிடிக்கவே பிடிக்காது.'

ரமணன் கேலியாய் உதட்டைச் சுழித்தான்.

'நீங்க சொல்றத பார்த்தா நாம ரொம்ப எதிர் எதிர் குணங்களைக் கொண்டவங்கனு தோணுது.'

இப்பத்தான் தோணுதா? எனக்கு முதல் நாளே—நா லேட்டா படத்துக்கு வந்ததும், நீங்க அந்த ரகளை பண்ணப்பவே புரிஞ்சிருச்சே!'

'பின்னே—படம்னா முதல் ஸீன்லேந்து, என் டைடில்லேர்ந்து பார்த்தாதான் திருப்தியா இருக்கும்'!

'யாருக்கு? உங்களுக்கு— ஆனா, நா அப்படி இல்லப்பா...புஸ்தகத்தக்கூட, கடைசி பக்கத்த படிச்சிட்டுத்தான் முதல்லேருந்து படிப்பேன்'

'அட ராமா!,

'திரும்பத் திரும்ப அவர ஏன் கூப்பிட்டுத் தொந்தரவு பண்ணறீங்க?'

'அது என் பழக்கம்.'

'அட கட்டபொம்மா!'

'என்னது! என்ன சொன்னீங்க!'

'அட, கட்டபொம்மானு.'

'அது யார் கட்டபொம்மன்! வீரபாண்டிய கட்டபொம்மனா!'

அப்படித்தான் வச்சிக்கங்களேன்—நீங்க ராமானு சொன்னதும் அதுக்கு 'ரைம்' பண்ற மாதிரி கட்டபொம்மானு சொன்னேன். இதுக்கெல்லாம் அர்த்தம் இருக்கானு யோசிட்டு நா பேசல...'

விளக்கம் கொடுத்ததோடு நிற்காமல் தன் இயல்புப்படி தலையைப் பின்னுக்குத் தள்ளி யமுனா சிரிக்க—

தொத்து நோய் போல அந்தச் சிரிப்பு தீண்டுவதைக் காட்டிக் கொள்ளாமல் உதடுகளை அழுத்தி சிரிப்பை ரமணன் அடக்க முயற்சித்தபோது, முகமூடி அணியாமல் ஒருவித தனித்தன்மையோடு இருக்கும் அவனது முரண்படும் குணம் தன்னை லேசாக ஈர்ப்பதை அவனால் உணர முடிந்தது'



# 6

**யமுனா**

புரண்டு படுத்தாள்.

நழுவிவிட்ட போர்வையை இழுத்து கழுத்து வரையில் போர்த்திக் கொண்டாள்.

இரண்டு முழங்கால்களையும் மடித்து, கைகளை அவற்றின் இடையில் கொடுத்து உடம்பை சுருட்டி, கர்ப்பத்தில் இருக்கும் சிசுவின் உருவில் படுத்தபோது சுகமாக இருந்தது.

என்ன இருந்தாலும் காலை வேளை உறக்கத்திற்கு ஈடு இணை இல்லைதான்.

இந்த இன்பத்தை அனுபவிக்காமல் சேவல் மாதிரி விடிகாலையில் விழித்துக் கொண்டு, நடக்கிறேன், எக்ஸைஸ் பண்ணுகிறேன்—என்று தானும் உறங்காமல், மற்றவர்களையும் நிம்மதியாய்த் தூங்கவிடாமல் ஏன் தான் சிலர் கிடந்து அல்லாடுகிறார்களோ!

யமுனா மறுபடியும் புரண்டு படுத்தாள்.

கன்னத்தை ஸ்பர்சித்த தலைகாணியின் குளிர்ச்சி இதமாக இருந்தது.

அது என்னமோ காலைத் தூக்கத்தை விட்டுவிட்டு எழுந்திருப்பது என்றால் வெட்டிப் போடுகிற மாதிரி உடம்பு முரண்டுகிறது.

இரவு ஒருமணி, இரண்டுமணி—எத்தனை நாழி வேண்டுமானாலும் விழித்துக் கொண்டு சுறுசுறுப்பாய் படித்து, எழுதி, எல்லா வேலைகளையும் கவனிக்க முடி

கிறது. ஆனால் ஏழு, ஏழரைக்கு முன்னால் எழுந்திரு-என்றால் மட்டும் முடியாத காரியமாய் மலைக்க வைக்கிறது.

ஊரே உறங்கிவிட்ட நிலையில், அந்த அமைதியான சூழ்நிலையை உணராமல் ஒன்பது, ஒன்பதரைக்குள் கண்கள் செருகிக் கொள்ள, கொட்டாவி விட்டுக்கொண்டு படுக்கச் சென்று விடுபவர்களை நினைத்தால் என்றைக்குமே அவளுக்குள் நமநமவென்று எரிச்சல் மண்டும். இந்த நிசப்தத்தை, இனிமையை அனுபவிக்கத் தெரியாமல் அப்படி என்ன தூங்குமூஞ்சித்தனம், சின்னக் குழந்தைகள் போல...

யாமுனா சரியான ராப்பிசாசு, இல்லை, இல்லை ராப்பறவைதான். அவள் மட்டும் என்றில்லை, அவள் அம்மா மங்கையர்க்கரசி, அப்பா பாண்டியன் எவருமே, ராக்கண் விழிக்க அஞ்சியவர்கள் இல்லை.

அப்பா இருந்தவரையில் வேலைகளை முடித்துவிட்டு அவர் வீடு திரும்பவே ஒன்பது மணி ஆகிவிடும். வந்த பிறகு நிதானமாய்க் குளிப்பார். பத்து மணி அளவில் அம்மா, அப்பா, யமுனா மூவரும் ஒன்றாய் அமர்ந்து அன்றைய நடப்புகளைப் பேசியபடி சாப்பிட ஆரம்பிப்பார்கள். பதினொரு மணிக்கு மேல் சங்கீதம் கேட்பார்கள், படித்த புத்தகத்தை விவாதிப்பார்கள். தெருவும், மற்றவர்களும் தூங்கி வழிகையில் வண்டி எடுத்துக் கொண்டு புகாரிக்குச் சென்று இவர்கள் ஐஸ்க்ரீம் சாப்பிட்டு, காந்தி சிலை அருகே காரை நிறுத்திவிட்டுக் கதைகள் பேசின நாட்கள் ஏராளம்.

அது என்னமோ சின்ன வயசு முதற்கொண்டே அப்படியொரு வழக்கம் அந்தக் குடும்பத்தில்.

பாண்டியன் அகாலமாய் மரித்த பின்னர், வண்டி எடுத்துக் கொண்டு வெளியே போய் வருவது வேண்டுமானால் குறைந்து போனது என்று சொல்லலாமே தவிர



வும், அம்மாவும் பெண்ணுமாய் கூட்டாக ஒருமணி வரையில் பேசுவதுமோ, வி.ஸி ஆரில் படம் பார்ப்பதுமோ, அல்லது அப்படிச் செய்யப் பிடிக்காவிட்டாலும் அவரவர் அறையில் விளக்கைப் போட்டுக் கொண்டு புஸ்தகம் படிப்பதுமோ, இன்னமும் மாறவில்லைதான்.

உறக்கம் சுத்தமாய்க் கலைந்து விட, யமுனா ஒரு கண்ணை மட்டும் திறந்து லைட் டேபிள் மேல் இருந்த கடிகாரத்தை ஏறிட்டாள்.

ஏழே முக்கால்.

சோம்பலைப் பார்க்காமல் எழுந்தால், ஷாம்பூ போட்டு தலைக்குக் குளித்துவிட்டு, நிதானமாய் அலுவலகத்துக்குப் புறப்பட சரியாக இருக்கும்.

எழுந்திருக்கலாமா?

போர்வையை உதறிவிட்டு எழுந்தாள்:

பல் விளக்கி, முகம் கழுவிக் கொண்டு வெளியே வந்தபோது ராஜு எதிர்ப்பட்டான்.

''அம்மா எழுந்திட்டாங்களா ராஜு?''

'அவங்க எப்பவோ எழுந்து. தயாராகி, பள்ளிக்கூடத்துக்குக் கூட போயிட்டாங்களேம்மா''

அதற்குள்ளாகவா?

நாலாக மடித்த ஒரு வெள்ளைத்தாளை அவன் நீட்ட வாங்கி, பிரித்துப் படித்தாள்.

'குட்மார்னிங் யம்மு. ராத்திரி நன்றாகத் தூங்கினியா? பள்ளிக்கூட தோட்டத்தைப் பார்க்க ஒரு ஹார்டிகல்சரிஸ்ட் வருகிறார். ஸோ. நான் சீக்கிரம் போகிறேன். ராத்திரி ரொம்ப நேரத்துக்கு உன் அறையில்

விளக்கு எரிந்து கொண்டிருந்ததே! புது புத்தகமா? லேட்டாகத் தூங்கினதால், உன்னை எழுப்ப மனசு வரவில்லை—ஸியு இன் த ஈவ்னிங்-லவ்-அம்மா.'

புன்சிரிப்போடு தாளை மடித்தவள் 'ராஜு¬ எனக்கு காபி கொண்டா' என்று பணித்துவிட்டு பேப்பருடன் வாச வாரந்தாவில் வந்து அமர்ந்து கொண்டாள்.

அம்மாவுக்குப் பள்ளிதான் உலகமே யமுனா கூட இரண்டாவதுதான். அப்பா இருந்தபோதே ஆரம்பிக்கப் பட்ட பள்ளி. ரொம்ப வித்யாசமாக ஒரு பள்ளியை நடத்துகிறோம் என்பதில் அம்மாவுக்குக் கர்வம் அதிகம்—நியாயமான, ஆரோக்கியமான கர்வம்.

பின்னே?

பணம் பண்ணுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு காளான்களைப் போல ஊர் முழுக்க பள்ளிகள் தோன்றிவிட்ட இந்நாளில், குழந்தைகளின் வளமான எதிர்காலத்துக்கு அழுத்தமான அஸ்திவாரமாக அவர்கள் முதல் ஆறு பள்ளி ஆண்டுகள் இருக்கவேண்டும், என்று நினைத்து,அதைத் தீவிரமாய் செயலிலும் காட்டி வருவது சாதாரண காரியமா என்ன?

மங்கையர்க்கரசி நடத்தும் பள்ளியின் பெயர் 'பாடசாலை' இதில் ப்ரி ஸ்கூல்' ஒரு வருஷம். பிறகு முதலாவதிலிருந்து ஐந்தாவது வரை மொத்த வகுப்புகள் அவ்வளவே அதுவும் வகுப்புக்கு அதிக பட்சம் முப்பது குழந்தைகள் மட்டுமே!

'இதற்கும் மேல் சேர்த்துக் கொண்டால் பள்ளிக்கு வருமானம் கிடைக்கலாம். ஆனால் ஆசிரியர்க்கு ஒவ்வொரு குழந்தையிடமும் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்துவது இயலாமல் போய்விடும்' என்பது அம்மாவின் வாதம். நம்பிக்கை.



ப்ரி ஸ்கூலில் சேர ஒரு குழந்தைக்குக் கட்டாயம் ஐந்து வயசு பூர்த்தி ஆகியிருக்க வேண்டும்.

எல்லா பள்ளிகளிலும் சொல்லித்தரும் 'பாபா ப்ளாக் ஷீப்', 'ஹம்டி, டம்டி' போன்ற நர்ஸரி ரைம்ஸ் பாடல்களை அங்கே கேட்பது சாத்தியமில்லை.

'ஹம்டி டம்டி சுவரில் உட்கார்ந்திருந்தான். கீழே விழுந்து உடைந்தான். அரசரின் படையால்கூட உடைந்தவனை ஒட்ட வைக்க முடியவில்லை'-என்கிற பாட்டாலோ, 'வடையை நரி ஏமாற்றித் தூக்கிக் கொண்டு போன கதையாலோ' குழந்தைகள் எதைக் கற்றுக் கொள்கிறார்கள்? ஒன்றுமில்லை, மாறாக நெகடிவ் திங்கிங்தான் அந்த பிஞ்சு மனசுகளில் வேர் விடுகிறது. இது தவறு. ஐந்து வயசிலேயே ஒரு குழந்தைக்கு நம்மால் முடியும்' என்கிற நம்பிக்கையை பாஸிடிவ் திங்கிங்கை, கொடுக்க வேண்டும். ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையாது. ஸோ, 'பாடசாலை'யில் அந்த மாதிரி அர்த்தம் இல்லாத படிப்புகளுக்கெல்லாம் இடமே இல்லை' என்று உறுதியாகச் சொல்வதோடு நிற்காமல், சின்ன விஷயத்தில் கூட மங்கையர்க்கரசி அலாதி கவனம் செலுத்தி; 'பாடசாலை'யை நடத்தி வருவதில் பள்ளி நிஜமாகவே ரொம்ப வித்தியாசமானதாகத் தான் இருக்கிறது.

'திராட்சைபழக் கொத்தை எட்டிப் பறிக்க முயன்று தோற்று, 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்று நரி திரும்பிப் போன கதை அங்கு படிக்கும் குழந்தைகளுக்குத் தெரியாது மாறாக, 'எம்பிக் குதித்துப் பார்த்த நரி, ஒரு முக்காலியைக் கொண்டு போட்டு, அதன் மீது ஏறி, பழங்களைப் பறித்துத் தின்றது' என்றும், வடைக்கு ஆசைப் பட்ட நரி' 'காக்கா ஒரு பாட்டு பாடு' என்று கேட்கும் போது முன் யோசனையுடன் வடையைக் காலடியில் அழுத்திப் பிடித்துக் கொண்டு பாடி, நரியை காக்கா

ஏமாற்றியது' என்றும் 'பாடசாலை' மாணவர்கள் படிக்கிறார்கள்.

இவற்றோடு-'ப்ரி ஸ்கூல் வகுப்பில் பாட்டு, தேகப் பயிற்சி சகல விளையாட்டுகள், சுத்தம், தாய்மொழி, நாட்டுப்பற்று போன்ற விஷயங்களுக்கு முக்கியத்துவம் தந்து அவைகளைக் கதைகளாக, பாடல்களாகச் சொல்லித் தருவதும் விசேஷம்.

பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்கு ஸாலட் போன்ற அயிட்டங்களுடன் விசேஷமாய் சத்துணவு சாப்பாடு அங்கேயே தயாரித்து அளிக்கப்படுவதில், யாரும் வீட்டிலிருந்து எதையும் கொண்டு வரக்கூடாது என்பது பள்ளி விதிமுறைகளில் ஒன்று.

ஒன்றாய் வகுப்பிலிருந்து பாடசாலை குழந்தைகளுக்கு கற்றுத்தரப்படும் பாடங்களே ரொம்ப வித்தியாசமானவைதாம். ஆங்கிலம், வேற்று மொழிகள், கணக்கு அது, இது என்று தேவையில்லாமல் திணிப்பதெல்லாம் 'பாடசாலை'யில் கிடையாது. ஸ்வாரஸ்யமாக, குழந்தைகளின் இயல்புக்கேற்ப, பாடங்களைச் சொல்லித்தருவதற்காகவே ஜெர்மனி இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று மங்கையர்க்கரசி விசேஷ பயிற்சி பெற்று வந்திருப்பதில் சுமக்க மாட்டாமல் புத்தகங்களை வாங்க வைப்பதோ, பாடங்களில் வெறுப்பு வரும் தினுசில் 'வீட்டுப் பாடங்களை'க் கொடுப்பதோ கிடையவே கிடையாது.

'பாடசாலை'யில் ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு நகம் வெட்டி விடுகிறார்கள். தத்தம் உடைமைகளை அக்குழந்தைகளே அழகாகப் பொறுப்புணர்ந்து பாதுகாக்கச் சொல்லித் தருகிறார்கள். அந்த சின்ன வயசிலேயே சுயமரியாதை, தன்னம்பிக்கையுடன் இருப்பதுடன் அடுத்தவர்களிடம் முக்கியமாய் சமுதாயத்தின், நாட்டின்பால் அக்கறையுடன் இருப்பது முக்கியம் என்றும் கற்றுத் தருகிறார்கள்.



'பாடசாலை'யில் குழந்தைகள் உபயோகிக்கவென தனி சமையல் அறை உண்டு. இதில் அந்தந்த வகுப்புக்கேற்ப பிஸ்கேட், கேக் வகையறாக்களை குழந்தைகளே பொழுது போக்காகச் செய்து வீட்டுக்கு எடுத்துப் போவார்கள். சிற்ப, ஓவியச் சாலைகள் உண்டு—சின்னக் குழந்தைகளுக்கு ஓவியம், சிற்பங்கள் பற்றி என்ன தெரியும்? என்று கேட்டு நமுட்டாகச் சிரிப்பவர்கள், அந்தக் கூடங்களில் சின்னஞ் சிறுசுகள். உருவாக்கும் கலைப் பொருட்களைப் பார்க்க வேண்டும்! பிறகு வாயைத் திறக்க மாட்டார்கள். இவை தவிர குழந்தைகளே ஆர்வத்துடன் பராமரிக்கும் தோட்டம் உண்டு; ஜிம்னாஸியம் உண்டு.

மொத்தத்தில் பாடசாலையில் ஐந்தாவது வரை படித்து வெளியேறும் குழந்தைக்கு மின்சாரத்தை நிறுத்தி விட்டு, கவனமாக ப்ளக்கில் ஒயர் கனெக்ஷன் கொடுப்பது, ஃப்யூஸ் போனால் கம்பியை மாற்றுவது ஸ்க்ரூட்ரைவரை உபயோகித்து சின்னச்சின்ன ரிப்பேர்களைக் கவனிப்பது, புத்தகத்தை பைண்ட் பண்ணுவது, சைக்கிள் ஓட்டுவது, சாலை விதிகளை அறிவது, வண்டி ஓட்டிக் காட்டும் ஸிக்னல்களை விளக்குவது போன்ற பல அத்தியாவசியமான விஷயங்கள் அத்துப்படி...

மற்ற பள்ளிகளில் எக்ஸ்கர்ஷன் என்கிற பெயரில் ஜூவுக்கும்; மஹாபலிபுரத்துக்கும் கூட்டிப் போகையில், இங்கு அவற்றோடு சோழ மண்டலம் கலைஞர் முகாமிலிருந்து, மியூஸியம், கோட்டை, பெரிய நூலகங்களுக்கும் அழைத்துப் போய் வருவதில் 'என் குழந்தை வீட்டில் இருந்தால், தான் எத்தனை பொறுப்பாக. உபயோகமாக இருக்கிறான் தெரியுமா?' என்றும், 'ஒரு நாள் பள்ளி இல்லை என்றால் என் பெண் அழத் தொடங்கி விடுகிறாள்!' என்றும் பெருமையோடு பெற்றவர்கள் கூறுவது அங்கு சகஜமான சமாசாரம்.

இன்னும்—

பேப்பரில் கவனம் போகாமல் அம்மா, 'பாடசாலை' பற்றின எண்ணங்களில் மூழ்கிப்போன யமுனா, காபியை குடித்து விட்டு எழுந்தாள்

குளித்துத் தயாரானாள்.

இரண்டு ஸ்லைஸ் ரொட்டி, ஒரு கிளாஸ் மோர் சாப்பிட்டுவிட்டு, பேசுவதற்கு அம்மா இல்லாத காரணத்தால் நினைத்ததைவிட சீக்கிரமே கிளம்பினாள்,

மோபெட்டை அலுவலகத்து அடித்தளத்தில் நிறுத்தி, படிகள் வழியாக ஏறி மேலே சென்றாள்.

இன்னும் கால் மணி போல அவகாசம் இருக்க, முதல் நாள் கடைக்காரர் அனுப்பின புத்தகங்களுக்குப் பணம் கொடுத்துவிடும் உத்தேசத்தோடு புஸ்தகக் கடையில் நுழைந்தாள்.

கவுண்டருக்குச் செல்ல முனைந்தவளின் பார்வையில் சற்று தள்ளி, முதுகைக் காட்டிக் கொண்டு நின்றவாறு அலமாரியில் இருந்த புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்த நபர் விழ, புன்சிரிப்புடன் அருகில் சென்றாள்.

ஹலோ! குட்மார்னிங்...மறுபடியும் விதி சதி செய்யுது பாத்திங்களா?'

தூக்கிவாரிப்போட திரும்பிய ரமணன் அவளை அங்கு எதிர்பார்க்காமல் திகைத்தான். பிறகு அந்த வியப்பு மாறாமலேயே சிரித்தான்.

'அட ராமா! வாட் எ ஸர்ப்ரைஸ்! நீங்க எங்க இங்க!'

'போச்சுடா.. துணைக்கு ஆளைக் கூப்பிட்டுட்டீங்களா? அஞ்சு நிமிஷத்துக்கொருதரம் அவரைக் கூப்பிடாம இருக்க முடியாதா? என்னோடு தனியா நின்னு பேச அவ்னோ பயமா?'



வாய்விட்டுச் சிரித்த யமுனா தொடர்ந்தாள்.

'என்ன இங்க?-னு கேட்டா என்ன அர்த்தம்! நானும் இதே பில்டிங்கிலே வேலை பார்க்கிறேன்னு சொன்னது அதுக்குள்ள மறந்து போச்சா?'

'மறக்கல யமுனா...ஆனா, ஒன்னரை வருஷமா ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒம்பதுலேந்து ஒம்பதரை மணி வரையிலும் இந்த புக் ஸ்டாலுக்குக் கட்டாயம் வர்றவன், இத்தனை மாசங்களா உங்களச் சந்திக்காம இருந்திட்டு, இன்னிக்கு திடீர்னு பார்த்ததும் அசந்திட்டேன். வந்து...ஒண்ணு கேக்கட்டுமா? தப்பா எடுத்துக்க மாட்டீங்களே! நாலு நாளா விடாம சந்திக்கறோமே, எதாவது பிளான் கிளான் போட்டு தொடர்ந்து 'மீட்' பண்றிங்களா. என்ன? ப்ளீஸ் சொல்லிடுங்க... ஸஸ்பென்ஸ்ல நிஜம்மாவே தலை வெடிச்சிடும் போல இருக்கு.'

சின்னப் பையனின் முக ஆர்வத்தோடு அவன் வினவ யமுனாவுக்கு அவனைச் சீண்ட ஆர்வம் எழுந்தது.

வேண்டுமென்றே வெட்கப்படுகிற மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு சின்னக் குரலில் பேசினாள்.

'கண்டு பிடிச்சிட்டீங்களே! ஆனாலும் ரொம்ப புத்திசாலிதான் போங்க...நாலு நாள் முன்னால உங்களை எதேச்சையா காரிடார்ல பார்த்தேன் யார்ரா இதுனு விசாரிச்சு தெரிஞ்சுகிட்டேன். நேரடியா வந்து அறிமுகப்படுத்திக்க வெட்கம்...உண்மையைச் சொல்லட்டுமா? உங்களைப் பார்த்த நாள்லேந்து தூங்க முடியல...சாப்பிடப் பிடிக்கல...அதான் இப்படி அங்...ஒஹ்...அங்க ஒஹ்ஹ...அங்கங்க...ஹா...ஹ...'

சொல்ல வந்ததை முடியாமல் சிரிப்புப் பொத்துக் கொண்டு எழ, அவள் கேலி பண்ணுவது புரிந்த ரமணன் அசடு வழிந்தான்.

கடையில் நின்றிருந்தவர்கள் 'என்ன விஷயம்?' என்கிற தினுசில் அவர்களை வெறித்ததும் ரமணனின் சங்கடம் அதிகமாயிற்று. அதை மறைக்க அவனும் அவளோடு சேர்ந்து சிரித்தான்.

கண்களில் ததும்பிவிட்ட நீரைத் துடைத்துக்கொண்ட யமுனா, 'உரிமை எடுத்துக்கிட்டு கலாட்டா பண்ணிட்டேன்—ஸாரி...பின்னே? அப்படி கேட்டா இப்படி பதில் சொல்லாம வேற என்ன செய்யறதாம்?' என்று கேட்டு மறுபடியும் சிரித்தாள்.

சிரிப்பு அடங்கியதும் அவளே பேசினாள்.

'ஓகே—சிரிச்சது போதும்—ஸீரியஸா பதில் சொல்லட்டுமா? ஒவ்வொரு சனிக்கிழமையும் ஆபீஸ் அரை நாள்தான்றதால வீட்டுக்குப் போறத்துக்கு முன்னால கண்டிப்பா இங்க வந்திட்டுப் போறது என் வழக்கம். இன்னிக்கு காலைல சீக்கிரமே வந்துட்டேன். கடைக்காரருக்குப் பணம் கொடுக்க வேண்டியிருந்தது. அதான் வந்தேன். இப்ப உங்க சந்தேகம் தீர்ந்துச்சா?'

'அட ராமா!'

'அட, கட்டபொம்மா!'

ரமணன் அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டு பொய்யாகப் பதறினான்.

'வேணாம்...வேணாம்...மறுபடியும் சிரிக்க ஆரம்பிச்சிடாதிங்க...தாங்காது...ப்ளீஸ்...'

'சரி, ஆரம்பிக்கல... கையில என்ன புஸ்தகம்...'

'கப்பல் பறவை—எழுத்தாளர் சந்திரசேகரன் எழுதியது.'

இப்போது நிஜமாகவே யமுனா திகைத்தாள்.

'அட, கட்டபொம்மா!'



'சகிக்கல...என்ன விளையாட்டு இது! ஒருதரம் சொன்னா சிரிக்கலாம்...அதவிட்டுட்டு சும்மா சொன்னா எரிச்சல்தான் வருது...'

'சத்தியமா விளையாடலை ரமணன்—ட்ரூலி ஸர்ப்ரைஸ்ட்!சந்திரசேகரன் அங்கிள் புஸ்தகம்னா உங்களுக்குப் பிடிக்குமா?'

'அங்கிளா?', 'உங்களுக்கும்'—மா? அப்படீன்னா உங்களுக்கு அவரைத் தெரியுமா? அவர் எழுத்துக்கள் உங்களுக்கும் பிடிக்குமா?'

யமுனா தலையை ஒருபக்கமாய் சாய்த்து அலட்சியமாய் பதில் கூறினாள்.

''ரெண்டு கேள்விக்கும் பதில்...'யா''

'அட, ரா—இல்லையில்ல. தவறிப்போய் சொல்லிட்டேன். அதிசயமா, நாம ரெண்டு பேரும் ஒரு விஷயத்துல ஒத்துப் போயிட்டமே! அது, இருக்கட்டும்-சந்திரசேகரனை எப்படி உங்களுக்குத் தெரியும்?'

'அங்கிளும் எங்கப்பாவும் அந்த நாளைய ஸ்னேகிதர்கள், நினைவு தெரிஞ்ச நாளா அவர் எனக்கு 'அங்கிள்'தான் அவர் புஸ்தகம்'விழுதுகளு'க்கு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பரிசு இன்னிக்குக் கொடுக்கறாங்க தெரியுமா! அதுக்குகூட நா போப்...'

அவளை முடிக்கவிடாமல் ரமணன் அவசரமாய் குறுக்கிட்டான்.

'மழை கொட்டு கொட்டுனு கொட்டப் போவுது. ரெண்டாவது தடவையா ஒரே மாதிரி நினைக்கிறோம்! நானும் அந்த விழாவுக்குப் போப் போறேன்...எப்படி! கேட்க ஆச்சர்யமா இல்ல?'

யமுனா கைகளைத் தட்டி 'ஹிப் ஹிப் ஹுரே...' என்றாள். பின்னர் தொடர்ந்து 'இந்த மாபெரும் விஷயத்த கொண்டாடாம விடக்கூடாது. மறுபடியும் அடுத்து மோதல் வர்றத்துக்கு முன்னால ரெண்டு பேரும்சேர்ந்தே விழாவுக்குப் போறதுனு தீர்மானம் பண்ணிடலாமா?' என.

துளி தயக்கம் இல்லாமல் 'உங்கள் முன் மொழிதலை நான் வழிமொழிகிறேன். தீர்மானம் ஏகமானதாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது' என்றான் ரமணன் சந்தோஷத்தோடு.

# 7

## நான்

அவர்கள் இருவரையும் சேர்ந்த மாதிரி நான் சந்தித்தது இப்படித்தான்.

அண்ணாமலை மன்றத்தின் வரவேற்புக் கூடத்தில் நிர்வாகிகளுடன் நின்று கொண்டிருந்தவன் டாக்ஸியிருந்து இறங்கி 'ஹாய் அங்கிள்' என்று அழைத்தவாறு படிகளை இரண்டிரண்டாகக் கடந்து வந்து யமுனாவைத்தான் முதலில் பார்த்தேன்.

'ஹலோ யமுனா...என்ன இன்னும் ஆளைக் காணலியேனு நினைச்சுகிட்டே இருந்தேன்! அம்மா வரலியா?'

'வர முடியல அங்கிள்...வழக்கம் போல ஸ்கூல் நந்தி மாதிரி குறுக்க வந்திடுச்சு...ஏதோ அவசர வேலையாம்... உடனே கவனிக்கணுமாம், 'நாளைக்கு செஞ்சா குடிமுழுகிடாது வாம்மா' னு கட்டாயப்படுத்திப் பார்த்தேன். ம்ஹூம், நோ லக். போற போக்க பாத்தா என் கல்யாணத் தன்னிக்குகூட 'ஸ்கூல்ல முக்கியமான வேலை இருக்கு. நா போறேன். அப்புறமா வந்து ஆசிர்வாதம் பண்ணிகிட்டா போச்சு'னு சொல்லிடுவாங்களோனு பயமா இருக்கு!'

கூட யார் நிற்கிறார்கள், எவர் தங்கள் பேச்சை கவனிக்கிறார்கள் என்கிற ஸ்மரணை இல்லாமல் மூச்சு விடாமல் பேசி நிறுத்தி, தலையைப் பின்னுக்குத் தள்ளி யமுனா உரக்க சிரிக்க, நான் புன்னகைத்தேன்.

'கல்யாணமா! அப்ப, சீக்கிரமே எனக்கு ஒரு விருந்து சாப்பாடு இருக்குனு சொல்லு,'

யமுனா சிரிப்பினூடே தலை அசைத்தாள்.

'ஒரு பேச்சுக்கு சொன்னா. உடனே பிடிச்சிப் பீங்களே! இன்னிக்கு 'அவார்ட்' வாங்கறது நீங்க; அதனால உடனடியா எனக்குத்தான் விருந்து காத்துகிட்டு இருக்கு... இப்பவே சொல்லிட்டேன் அங்கிள்... ஊர்லயே 'காஸ்ட்லி' ஹோட்டலுக்கு அழைச்சிட்டுப் போயி, உங்க கணக்குல மூக்குப் பிடிக்கத் தின்னப் போறேன்: 'வெயிட்' போடறதப்பத்தியோ. அஜீரணத்தையோ நினைச்சு கவலைப்படாம... அதுவும் ஒரு பாட்டில் 'ஷாம்பெய்னோட!' எப்படி என் திட்டம்?'

அருகில் நின்றிருந்த முக்கியஸ்தர்களில் ஓரிருவர் அந்த குழந்தைத் தனமான பேச்சைக் கேட்டு சிரிப்பதைப் பற்றி கவலைப்படாமல் கண்களில் குதூகலம் வெளிச்சம் போட பேசியவளின் புறங்கையில் செல்லமாய் தட்டிக் கொடுத்தேன்.

'அவ்வளவுதானே! ஜமாச்சிடலாம்—ஆமா என்ன இன்னிக்கு புது வழக்கமா டாக்ஸில வந்து எறங்கினே! பஞ்ச கல்யாணி குதிரை மேல ஆரோகணிச்சுகிட்டு வர்ற இளவரசி யாட்டம் எல்லாரையும் பய முறுத்தறமாதிரி

உன் வாகனத்த விரட்டிகிட்டு வருவியே! என்ன விஷயம்? ஏதாவது ஆக்ஸிடெண்டா? வண்டி ரிப்பேரா? பயப்படாம ஒத்துக்க... அம்மாகிட்ட நா சொல்ல மாட்டேன்.'

அவன் பேசிய ரீதியிலேயே நானும் சீண்ட, யமுனா அலட்சியமாய் 'ஹ!' என்றாள்.

'ஆக்ஸிடெண்ட்? எனக்கு? அது இந்த ஜென்மத்துல நடக்காது அங்கிள். சோழவரம் ரேஸுக்குப் போனா முதல் பரிசு வாங்கற அளவுக்கு அம்மா 'மோபைக்' ஓட்டறதுல எக்ஸ்பர்ட்ன்றத மறந்துட்டுப் பேசினா எப்படி? இவரும் நானும் சேர்ந்து வர்றதாப்ளான் பண்ணோம் இவர் என் பிலியன்ல உக்கார பயப் பட்டாரோ. இல்ல 'ச்சே-பொம்பளை ஓட்ட, நா பின் ஸீட்ல உட்கார்றதா!'னு சங்கடப்பட்டாரோ தெரியாது 'டாக்ஸியிலேயே போயிடலாம்னார்'-தர்க்கம் பண்ண நேரம் இல்ல... சமர்த்தா ஒத்துகிட்டு வந்துட்டேன்.'

அவள் சொன்ன 'இவர்' எனக்குச் சற்றே பின்னால் நிற்கத் திரும்பிப் பார்த்தேன்.

'ரமணன்.'

'நீ எப்ப வந்தே! நா கவனிக் கவே யில்லையே!'

ரமணன் அடக்கமாய் புன்னகைத்தான்.

'குட் ஈவ்னிங் ஸர்-யமுனாவோட தான் நானும் வந் தேன். ஆனா மத்தவங்கள கவனிக்க உங்கள விட்டா தானே? மூச்சுக்கு முன்னூறு வார்த்தை ஸ்பீட்ல இவங்க பேசறப்போ யாருக்குதான் புகுந்து பேச எடம் கிடைக்குது?'

யமுனா கைகளை லேசாகத் தட்டினாள்.

'சிரிச்சிடுங்க அங்கிள்- பாவம் கஷ்டப்பட்டு 'ஜோக்' அடிக்கிறார்!' என்றவள், சற்றே வேகமாய் ரமணனை முறைத்தாள்.



'உங்களோட இயலாமைக்கு அடுத்தவங்களை குறை சொல்லாதீங்க...நா வந்த உடனே பேசின மாதிரி நீங்க ளும் 'ஹலோ ஸர்'னு ஆரம்பிக்க வேண்டியது தானே! அங்கிளா பார்த்து, முதல்ல பேசி உங்களுக்கு முக்கியத் துவம் கொடுக்கணும்னு காத்துகிட்டு இருந்திட்டு என் மேல பழிய போட்டா ஆச்சா? இந்த பூச்சி காட்ற தெல்லாம் நம்மகிட்ட நடக்காதுப்பா.'

இப்போது ரமணன் கைகளைப் பாராட்டும் விதத்தில் ஆனால் ஓசையில்லாமல் தட்டினான்.

'அட! முக்கியத்துவம் வேணும்னு நா ஆசைப்பட்டது கண்டுபிடிச்சிட்டாங்களே! ஆனாலும் நீங்க ரொம்ப புத்தி சாலிதான் யமுனா! ஒத்துக்கறேன்.'

'பின்னே ஒத்துக்காம வேற வழி?'

கூட, இருப்பவர்களை மறந்து அவர்கள் தங்களுக் குள்ளேயே சம்பாஷித்துக் கொள்ள, நான் வியப்புடன் குறுக்கிட்டேன்.

'இருங்க...இருங்க இது நியாயமே இல்ல... உங்க ரெண்டு பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் தெரியும்னு எங்கிட்ட சொல்லவேயில்லையே!'

'எங்களுக்கே இப்பத்தானே ஒருத்தரை ஒருத்தர் தெரியும்!'

யமுனாவின் கூற்று புரியாமல் நான் திகைக்க, அவள் சிரிப்புடன் தொடர்ந்தாள்.

'ஆச்சர்யமா இருக்கா, அங்கிள்! எங்களுக்கே ஒண்ணும் புரியாமத்தான் இருக்கு! அப்படித்தானே ரமணன்? என்ன விஷயம்னா, சரியா தானு நாள் முன்னா...'

அவள் தொடங்க, ரமணன் அவசரமாய் கையை முன்னால் நீட்டித் தடுத்தான்.

'அந்த ராமாயணமெல்லாம் இப்ப வேணாமே... ப்ளீஸ்... ஸாரோட பேச நிறைய பேர் காத்துகிட்டு இருக்காங்க... தவிர... பங்ஷனுக்கும் நேரமாச்சு...'

'அதுவும் சரிதான்...அந்தக் கதைய தனியா இன்னொரு நாள் சொல்றேன்...அதுவரைக்கும் ட...ட...டான்...ஸஸ்பென்ஸ்—ஆனா, சுருக்கமா உங்க கேள்விக்குப் பதில் சொல்லணும்னா எல்லாம் 'விதி' அங்கிள்?—'

ரமணனைப் பார்த்து கண்களைச் சிமிட்டியவாறு 'விதி' என்று குறிப்பிட்டவள் தலையைப் பின்னுக்குத் தள்ளி உரக்க சிரித்தாள்.

மேற்கொண்டு பேசுவதற்குள் நிர்வாகி அருகில் வந்தார்.

'முதலமைச்சர் கிளம்பிட்டாராம்,அஞ்சு நிமிஷத்துல வந்திடுவார்னு வயர்லெஸ் செய்தி கிடைச்சிருக்கு...'

நான் யமுனா ரமணனிடம் கூறினேன்—

'நீங்க போய் உள்ள உட்காருங்க...விழா முடிஞ்சதும் ஸஸ்பென்ஸ், 'விதி' பத்தி எல்லாம் சாவகாசமா பேசிக்கலாம்...'

இரண்டடி வைத்த யமுனா திரும்பினாள்.

'அங்கிள்...விழா முடிஞ்சப்புறம் நீங்க என்ன செய்யப் போறீங்க?'

இது என்ன கேள்வி என்கிற ரீதியில் நான் புருவங்களை உயர்த்தினேன்.

'நாடகம் இருக்கு...பார்க்க உத்தேசம்'



'அப்புறம்?'

'அப்புறம் என்ன? வீட்டுக்குத்தான் போகணும்...ஏன், உனக்கு ஏதாவது வேணுமா! வீட்டுல கொண்டு விடணுமா? செஞ்சிட்டா போச்சு—'

'அதில்ல அங்கிள்—ஒரு ப்ரெயின் வேவ்—விழா முடிஞ்சதும் நாம மூணு பேரும் மத்ஸயா ஹோட்டலுக்குப் போய் சுடச்சுட ரஸ வடை, பகாளாபாத் சாப்டுகிட்டே கொஞ்ச நாழி பேசிட்டிருந்தா நல்லா இருக்குமேனு நினைச்சேன். நீங்க என்ன சொல்றீங்க ரமணன்' பிரமாதமான ஐடியா இல்ல? என்ன இருந்தாலும் நம்பள இதுலெல்லாம் யாரும் 'பீட்' பண்ணிக்க முடியாதுப்பா.'

நான் ரமணனைப் பார்த்தேன்.

அவன் 'நீங்கள் எது முடிவு செய்தாலும் எனக்குச் சம்மதம்' என்பது போன்ற முக பாவனையுடன் இருந்தான்.

'ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்குப் போகணும்ற கண்டிஷன் அதுக்குள்ள மாறிட்டதா? ரஸ வடை போதுமா?'

யமுனா பதிலளிக்கும் முன்னர் ரமணன் முணுமுணுத்தான்.

'இப்படி மாத்திப் பேசறது இவங்களுக்கே உரிய விசேஷ குணமாச்சே ஸர்!'

அவன் பேசியது தெளிவாகாமல் 'என்ன? என்றேன்.

'ஒண்ணுமில்ல அங்கிள்... ரமணன் மறுபடி ஜோக் அடிக்கிறார்...ஒண்ணு செய்யுங்க ரமணன்; இனிமே ஜோக் சொல்றதுனா முன்னாலியே சொல்லிடுங்க... நாங்க சிரிக்க தயார் பண்ணிக்க வசதியா இருக்கும்! என்ன கேட்டீங்க அங்கிள்? ரஸ வடை போதுமா-னு

தானே!போதும்...ஏன்னா இது உங்க ட்ரீட் இல்ல...எங்க ...ஸாரி என்னுது...உங்க தலைல வைக்கறது இன்னொரு நாள் முன்னேற்பாடா தடபுடலா பிளான் பண்ணினப் புறம்—'

நான் சிரித்தேன்.

'உன் இஷ்டம் போலவே செய்யலாம்...இப்ப உள்ள போயி நல்ல இடமா பாத்து உக்காருங்க...'

அவர்கள் திரும்பி நடந்தார்கள்.

முதலமைச்சர் வந்து விட்ளார்.

நட்போடு கை கூப்பினார். பேசிகொண்டே மேடைக்குச் சென்றோம்.

வரவேற்புரையின் போது மேடையிலிருந்து, யமுனாவும், ரமணனும் எங்கே அமர்ந்திருக்கிறார்கள் என்று பார்வையால் தேடினேன்.

அதோ— இரண்டாவது வரிசையில், இடது பக்க ஓரமாய்...

நான் கவனிப்பதைப் பார்த்துவிட்டு, 'நாங்க இங்கே இருக்கிறோம்' என்பது போல யமுனா அங்கிருந்து விரல்களை அசைத்தாள்.

யமுனாவும் ரமணனும் சற்றுமுன் ஒருவரை ஒருவர் உரிமையுடன் சீண்டும் வகையில் பேசிய பேச்சுக்களை மறுபடி நினைவில் ஓட விட்டபோது ஒருவித ஸ்வாரஸ்யம் தலை தூக்குவதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

பல வருஷங்களாகப் பழகும் நண்பர்கள் போலப் பேசிக் கொள்கிறார்கள்; ஆனால் அறிமுகம் ஆகி நாலு நாட்களே ஆனமாதிரி தானே யமுனா குறிப்பிட்டாள்!

நாலு நாட்களில் இப்படி ஒரு நெருக்கமா?



நம்ப முடியாமல் இருக்கிறதே!

விழா நடக்கையில் அவ்வப்போது அவர்கள் தலையை சேர்தது வைத்துக்கொண்டு ஏதோ பேசுவதையும் சிரிபபை அடக்க முயறசிப்பதையும் காண முடிய என் ஆர்வம் அதிகமாயிற்று.

விழா சிறப்பாய் நடந்து, நாடகம் முடிந்த பிறகு பெரிய மனிதர்களும், வாசகப் பெருமக்களும் வாசல்வரை வந்து வழி அனுப்ப, பரிசாக வந்த வெள்ளித்தட்டு, மாலை, காசோலை உறையை மகா பெருமிதத்துடன் சுமந்தபடி யமுனாவும், ரமணனும் உடன்வர ஒருவழியாய் நாங்கள் புறப்பட்டு, எக்மோரில் இருந்த 'மதஸ்யா' ஹோட்டலை அடையும் போது மணி கிட்டத்தட்ட பத்து...

வண்டியை நிறுத்தி, சாமான்களை அதனுள்ளேயே வைத்துப் பூட்டிவிட்டு, உள்ளே சென்று அமர்ந்தோம்.

மெனு கார்டை நீட்டி. ஆர்டருக்காக சிப்பந்தி காத்திருக்க, நிதானமாய்ப் பக்கங்களைப் புரட்டிய யமுனாவைக் குறும்புடன் ரமணன் வினவினான்.

'என்ன பாக்கறீங்க யமுனா.!

'மெனு கார்டுல என்ன பாப்பாங்க? இது என்ன பஞ்சாங்கமா? ராகு காலம், யமகண்டம் எப்பனு தெரிஞ்சுக்க!'

'அடேயப்பா! ஒத்தை கேள்விக்கு என்னமா கோவம் வருது உங்களுக்கு?'

'பின்னே? அர்த்தம் இல்லாம கேள்வி கேட்டா?'

'இப்படி எடக்கா கேக்குறதுக்கு முன்னால ராஜா அண்ணாமலை மன்றத்துல ஸர் கிட்ட மத்ஸ்யாவுக்குப் போகலாமானு கேட்டப்ப என்ன சொன்னீங்கங்கறத கொஞ்சம் நினைச்சுப் பாத்தா தேவலை...'

'என்ன சொன்னேன்?'

'ரஸ வடையும், பகாளாபாத்தும் சாப்பிடலாம்-னு தானே? அத மறந்துட்டு இப்ப மெனு கார்டைப் புரட் டிநீங்களேனு அப்படிக் கேட்டேன்.'

'ஸோ வாட்! அப்ப அது சாப்பிடணும் போல இருந் தது. இப்ப இல்ல...அதனால மெனு கார்ட்லேந்து பிடிச் சதா ஆர்டர் பண்ணப் போறேன். ஸிம்பிள்.'

'உன்னைத் திருத்தவே முடியாது' என்பது போல அவளை ஏறிட்ட ரமணன் என் பக்கம் திரும்பி 'ஸ்திர புத்தி இல்லாதவங்களுக்குள்ள ஒரு போட்டி வச்சா யமுனாவுக்குதான் முதல் பரிசு கிடைக்கும்-என்ன சொல் றீங்க ஸர்?' என, நான் பதில் கூறாது மௌனித்தேன்.

இப்படி சீண்டி, சிரித்து கேலி செய்யும் ரமணன் இத் தனை வருஷங்களாக நான் அறிந்திருந்தவனிலிருந்து மாறுபட்டு இருந்தது ஆச்சரியத்தைத் தந்தது.

'என்ன ஸர், என் ஸப்போர்ட்டுக்கு வருவீங்கனு நினைச்சா சும்மா இருக்கீங்க?'

'உன்னை நா ஸப்போர்ட் பண்றது இருக்கட்டும், முதல்ல என் கேள்விக்கு பதில் சொல்லு—இத்தனை நாளா இந்த முகத்த எங்க மறச்சி வச்சிருந்தே?'

ரமணன் விழித்தான்.

'எந்த முகத்த ஸார்?'

'உனக்கு இப்படி 'டீஸ்' பண்ண, தமாஷா பேச, வரும்னு நிஜமா நா நெனைச்சதே இல்ல ரமணன்.'



யமுனா மேஜையில் தட்டி தன் சந்தோஷத்த வெளி யிட்டாள்.

'அப்படிச் சொல்லுங்க அங்கிள்—நா கூட இவர முத முதலா பார்த்தப்ப 'உங்களுக்குச் சிரிக்க வருமா?'னு கேட்டேன்தான்—'

நாங்கள் இருவரும் சிரிக்க, ரமணன் மட்டும் சட் டென்று இறுகிப் போனான்.

'நா வந்து...ஸர்...தப்பா ஏதாவது பேசியிருந்தா— வந்து...'

சொல்ல வந்ததை அவன் முடிக்க விடாமல் யமுனா குறுக்கிட்டாள்.

'ஆமா ரமணன், எக்கச்சக்கமா தப்பா பேசிட்டீங்க... அங்கிள் ஏகத்துக்கு 'அப்ஸெட்' ஆயிட்டது இன்னுமா உங்களுக்குப் புரியல?'

விரலைச் சொடுக்குப் போட்டுக்கொண்டு யமுனா பேச, நான் ரமணனை ஏறிட்டு அனுசரணையுடன் புன்னகைத்தேன்.

'அவ பேச்ச காதுல வாங்காதே ரமணன். யமுனா எப்பவுமே இப்படித்தான். தான் வாய் மூடாம பேசற தோட அடுத்தவங்களையும் பேச வச்சிடுவா. அவ காத்து உன் மேல அடிச்சிருக்கு, அதான் நீயும் மாறிட்ட. அத னால என்ன? இந்த மாற்றமும் ரஸிக்கிற மாதிரிதான் இருக்கு—சட்டி போடற வயசுலேந்து யமுனாவை எனக்குத் தெரியும். அப்பவே சரியான லொட லொட... இப்ப.'

சட்டென்று எட்டி என் கையை யமுனா பற்றிக் கொண்டாள்.

'ஸ்டாப்—என்ன சொன்னீங்க அங்கிள்? சட்டி போடற வயசுனா, போடாத வயசுன்னா?'

'ரெண்டு ஆம்பளைங்களோட இருக்கறப்போ என்ன கேள்வி இது யமுனா?'

'இல்ல அங்கிள்...'சட்டி போடற வயசுனு நீங்க சொன்னதும் சமீபத்துல ஒரு நாடகத்துல கேட்ட ஜோக் நினைவுக்கு வந்திடுத்து—அதான், அப்படிக் கேட்டேன்—அது என்னன்னா, ஒரு பெரியவர் ஒரு வீட்டுக்கு வரார். அந்த வீட்டுல ஒரு அப்பா, ஒரு மகன் பெரியவர்கிட்ட அப்பா 'இதுதான் கண்ணன், என் பிள்ளை'னு அறிமுகப் படுத்த பெரியவர் 'அட! அவனா! இத்தனை பெரியவனா வளர்ந்திட்டானே! போன தரம் நா பார்த்தப்ப சட்டி கூட போட்டுக்காம இருந்தானே!'னு ஆச்சர்யப்பட்டுட்டு பையன்கிட்ட 'இப்ப என்னடா பண்றே'னு கேட்டதும், கொஞ்சம் கூட யோசிக்காம, அந்த இருபது வயசு பிள்ளை... ஹஹ்... ஹஹ்ஹோ... 'இப்ப போட்டுகிட்டு இருக்கேன் மாமா-னு...ஹோஹ்...ஓ...ஹ்...'

பீரிட்டுக் கொண்டு எழுந்த சிரிப்பை அடக்கத் தெரியாமல் குலுங்கியவளைத் தொடர்ந்து ரமணனும் நாளும் உரக்க சிரிக்க முற்பட,

ரொம்ப நேரமாய் அருகில் நின்று கொண்டிருந்த சிப்பந்தி, 'ஸார்-ஆர்டர் கொடுக்கறீங்களா?' என்றார் மூன்றாவது முறையாக-பொறுமை இழந்து...

# 8

**நான்**

**மொட்டை** மாடி.

சாயங்கால வேளை.



ராட்சஸக் குடையாய் வீட்டின் மேல் கவிழ்ந்திருந்த தூங்குமூஞ்சி மரத்தினூடே நீலமும் இல்லாத, கருமையும் படராத இரண்டுங் கெட்டான் சாம்பல் நிற வானம் திப்பித் திப்பியாய்த் தெரிந்தது.

இப்போது சாதுவாய், அடக்கமாய், அப்பாவியாய் காட்சி தரும் மொட்டை மாடியை உச்சி வேளையில் பார்க்க வேண்டும்! இலைகள் வழியாக வெளிப்படும் சூரிய வெளிச்சம் தரை பூராவும், இண்டு இடுக்கு விடாமல் வட்ட வட்டமான வெள்ளிக் காசுகளாக வாறி இறைந்திருக்க, நீல நிற வானப் பின்னணியைத் தன் பங்குக்கு பசுமை பூசி மாற்ற மரங்கள் முயற்சிக்க விசேஷமாய் சிங்காரித்துக் கொண்டிருக்கும் வயசுப் பெண் மாதிரி தடபுடல்படும்!

இந்த மொட்டை மாடியும், என் வீட்டை அடுத்து இயற்கையாய் அமைந்துள்ள காட்டுத்தனமான நந்தவனமும் நிஜமாகவே எனக்குக் கிடைத்திருக்கும் ப்ளஸ் பாயிண்டுகள்தாம்!

வீட்டை ஒட்டின குளம், சுற்றிலும் அதன் மெய்க் காப்பாளர்களால் ஓங்கி வளர்ந்திருக்கும் தூங்குமூஞ்சி மரங்கள்.

ஒரு காலத்தில் திருவனந்தபுர மகாராஜாவின் அரண்மனையின் அந்தப்புரத்தைச் சார்ந்த இடமாக அந்தக் குளமும், வனமும் இருந்தனவாம்! மகாராணி அன்றாடம் 'மூங்கிக் குளித்து மகிழ்வதற்கென இந்தக் குளம் பராமரிக்கப்பட்டு வந்ததாம்!' இதற்குச் சாட்சியாய் குளத்தின் மேற்குக் கரை ஓரமாய் சிதிலமடைந்து காணப்படும் சின்ன மதகு!

வீட்டைக் கட்டும் முன் நிலத்தைப் பார்வையிட நான் வந்தபோது கதை போல நீளமாய் தரகர் மேற்சொன்ன விவரங்களைக் கூற, அது நிஜமோ, பொய்யோ அது

பற்றி எனக்குக் கவலை இல்லை ஆனால் இன்றைக்கும், எப்போது இந்த மொட்டை மாடியில் நின்று கொண்டு குளத்தையும், வனத்தையும் நோக்கினாலும், சேடியர் புடை சூழ மகாராணி வருகிற மாதிரியும், அல்லிப்பூக்கள் மலர்ந்திருக்கும் குளத்தில் ஒய்யாரமாய் நீச்சலடிப்பது போலவும், பிறகு அகில், சாம்பிராணி போன்ற வாசனைத் திரவியங்களிலிருந்து மணமிக்க புகை மூட்டம் எழ, தலைமுடியை உலர்த்திக் கொள்கிற மாதிரியும், சற்றுத் தள்ளி அமர்ந்திருக்கும் பணிப் பெண்கள் வீணை, புல்லாங்குழல், யாழ் போன்ற கருவிகளை வாசித்துப் பாடல்களைப் பாடி, குளிக்கும் ராணியை மகிழ்விப்பது போலவும் கற்பனை எழுவதில் வார்த்தைகளால் விவரிக்கத் தெரியாத ஒரு சுகமான அனுபவத்தை நான் பெறுவது உண்மை!

இந்த சந்தோஷத்துக்காகவே மொட்டை மாடியில் கடப்பைக் கல்லினால் ஆன ஒரு மேஜை, பெஞ்ச் செய்து போட்டு தூங்குமூஞ்சி மரம் இயற்கையாய் குடை பிடிக்க, காலை, மதியம், மாலை என்று நேரம் பார்க்காமல் எழுதுகிறேன், படிக்கிறேன் என்று எதையாவது அங்கே செய்து கொண்டிருப்பது என் பழக்கம்!

இரண்டு நாட்கள் சேர்ந்த மாதிரி ஊரில் இல்லாமல் போகும்போது அந்த மரங்கள், செடிகள், குளம், வனத்தின் இதர ஜீவராசிகளைப் பிரிந்திருப்பதில் நான் சோர்ந்து போய்விடுகிறேனோ என்கிற பிரமைகூட எழும் என்றால் அந்த இடத்தின்பால் எனக்குள்ள ஈடுபாட்டைப் புரிந்து கொள்வது சுலபம்.

இன்றும் அப்படித்தான்.

டெல்லியில் நடந்த ஒரு கருத்தரங்கில் பங்கெடுக்கவென சென்று, நாலு நாட்கள் கழித்து கொஞ்சம் முன்னர்தான் ஊர் திரும்பியிருந்தேன்.



காலை பத்தரைக்கு வரவேண்டிய விமானம் தாமதமாகி ஒரு வழியாய் புறப்பட்டுச் சென்னைக்கு வந்து சேர்ந்த போது மணி மாலை நான்கு!

வீட்டுக்கு வந்து, குளித்து, நாலு நாட்கள் தபாலைப் பார்த்து, உடம்பு மனசு இரண்டுமே அலுப்பில் சிணுங்க, மாணிக்கத்திடம் காபி கொண்டு வரச் சொல்லிவிட்டு, மொட்டை மாடிக்கு வந்தேன்.

தலைக்கு மேலே வியூகம் அமைத்துக் கொண்டு நாரைகள் கிழக்கிலிருந்து மேற்காகப் பறந்து சென்றன.

காலையில் மேற்கிலிருந்து கிழக்கே போகும்; மாலையில் அங்கிருந்து இங்கு—

எங்கிருந்து எங்கு? அன்றாடம் யாரோ அலாரம் வைத்து எழுப்பி 'ம்ம், ஒழுங்காய்ப் போங்கள்' என்று அதட்டுகிற மாதிரி சரியாய் காலை ஐந்தே முக்காலிலிருந்து ஆறே கால் வரை, பின்னர் மாலையில் ஆறிலிருந்து ஆறரைக்குள்...வரிசை, வரிசையாய்...வானத்தில் புள்ளிக் கோலங்கள் பறந்து போகும் தினுசில்...

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னாலோ, பிறகோ ஒரு நாரையைக் கூட பார்க்க முடியாது!

என்றாவது ஒருநாள், எப்படியாவது இந்த நாரைக் கூட்டத்தைத் தொடர்ந்து போய் அவை எங்கே போகின்றன, நாள் முழுவதும் என்ன செய்கின்றன பகலின் முடிவில் எங்கே வருகின்றன...என்றெல்லாம் அறிந்து கொள்ள வேண்டும் போல் துடிப்பாய் உள்ளது.

பறவைகளைக் கண்காணிக்கும் நிபுணர்களைக் கேட்டால், 'மைக்ரேஷன்' சீதோஷ்ண நிலைக் கேற்ப நாடு விட்டு நாடு செல்லும் பறவைகளைப் பற்றிக் கதை கதையாய் சொல்வார்கள் தாம், ஆனால், என் நாரைக்

கூட்டங்கள் வருஷம் முழுவதும் இங்கே சமீபத்திலிருந்து கிளம்பி, வேறு எங்கோ தினமும் சென்று வருபவைகளைப் பற்றின விவரங்கள் அல்லவா எனக்குத் தேவை!

'ஐயா—காபி—'

ஓசைப்படாமல் கையிலிருந்த தட்டை கடப்பைக்கல் மேஜை மேல் வைத்துவிட்டு மாணிக்கம் சென்றான்.

காபி டம்ளர், மசாலா கடலை, நாலு நாள் 'ஹிண்டு' பேப்பர்!

இது ஒரு பழக்கம்.

எந்த ஊருக்கு, எத்தனை நாள் ஹிண்டு பேப்பரையும் கொண்டு வரச் சொல்லி, தலைப்புச் செய்தியிலிருந்து, 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதி வரை மேலோட்டமாகவாவது பார்த்தே திரவேண்டும். இல்லாவிட்டால் தலை வெடித்து விடும்போல ஓர் அவஸ்தை!

புன்னகையுடன் மேலாக இருந்த பேப்பரைப் பிரித்துக்கொண்டு காபியை உறிஞ்சினேன்.

கீழே இறங்கிப் போய்விட்ட மாணிக்கம் திரும்பிவந்து 'ஐயா' என்றான்!

'என்னப்பா?'

'யமுனா அம்மாவும், ரமணன் ஸாரும் வந்திருக்காங்க.'

திடீரென்று தென்றல் காற்று வீசி புழுக்கத்தைக் குறைந்துவிட்ட மாதிரி, மனது 'ஹை' என்றது உற்சாகமாய்.

'வரச்சொல்லுப்பா...அப்படியே அவங்களுக்கு காபி கலந்து எடுத்துட்டு வந்துடு...'



அவர்கள் படி ஏறி வருவதற்குள் என் அறைக்குச் சென்று அவர்களுக்காக நான் டெல்லியிலிருந்து வாங்கி வந்திருந்த புத்தகங்களை எடுத்துக் கொண்டு வந்தேன்.

'ஹாய் அங்கிள்.'

'குட் ஈவ்னிங் ஸர்.'

'ஹலோ...குட்ஈவ்னிங்...வாங்க... நல்ல சமயத்துக்குத்தான் வந்தீங்க ...'போர்' அடிச்சுகிட்டு உட்கார்ந்திருந்தேன்... என் தனிமை புரிஞ்சமாதிரி நீங்களாகவே வந்திட்டீங்க...'

யமுனா தோளில் தொங்கிக் கொண்டிருந்த பையை மேஜை மேல் வைத்தாள்.

'இதானே வேணாங்கறது அங்கிள்! மொட்டை மாடில உங்க ப்ரிய ஜீவராசிகளோட 'ஏகாந்த' சந்தோஷத்துல இருக்கறத கெடுக்க யார் வந்தாலும் உங்களுக்குப் பிடிக்காதே! பூஜை வேளைல கரடி மாதிரி சொல்லாம கொள்ளாம வந்திட்டோம்! தவிர்க்க முடியல...போனாப் போறதனு எங்களைத் திருப்தி பண்ண சும்மாவானும் சொல்றீங்க... அதானே... கண்டுபிடிச்சிட்டேன் பாத்தீங்களா? உண்மைய ஒத்துக்கங்க... பரவாயில்ல... வந்தது வந்துட்டோம். கொஞ்ச நாழி இருந்துட்டு போயிடறோம்...ஸோ ஹவ் வாஸ் யுவர் ட்ரிப்?'

'ஏக்தம், ஃபர்ஸ்ட் க்ளாஸ்.'

ரமணனை ஏறிட்டு யமுனா கண்ணடித்தாள்,

'அங்கிள் டெல்லிக்குப் போயிட்டு வந்திருக்கறது நமக்குத் தெரியணுமாம். அதான் ஹிந்தி வார்த்தையெல்லாம் சொல்லி நம்பள பயமுறுத்தறார்!'

நான் சிரித்தேன்.

'அப்படியில்ல யமுனா! விமானத்துல என் கூட எம்.எல்.ஏ. சரவணன் வந்திருந்தார். பிளேன் லேசுல புறப்படாம

அலுப்பா இருந்தப்ப அவர் 'நம்ப கைய மீறின விஷயங்களுக்காக எரிச்சல் படறதுல அர்த்தம் இல்லே...தினமும் தூங்கி எழுந்ததும் எனக்கு நானே 'இன்னி பொழுது ஏக்தம் ஃபர்ஸ்ட் கிளாஸா இருக்கும்'னு சொல்லிப்பேன். அப்புறம் நிஜமாவே எந்த விஷயமும் என்ன அவ்வளவா பாதிக்காது'னு சொன்னார். அவர் குறிப்பிட்ட மாதிரியே வீட்டுக்கு வந்து குளிச்சப்புறம் இங்க வந்து நின்னுகிட்டு 'எல்லாம் பிரமாதமா இருக்கு — ஏக்தம் ஃபர்ஸ்ட் கிளாஸ்'னு ரெண்டு தரம் எனக்கு நானே சொல்லிகிட்டதும், வாஸ்தவமாகவே சலிப்பு குறைஞ்ச மாதிரி தான் இருந்தது அதான் நீ கேட்டதும் அதையே சொல்லிட்டேன்.'

ரமணன் ஆமோதிப்புடன் தலையை அசைக்க,யமுனா சிரித்தாள்.

'நீங்க ஹிந்தி வார்த்தை சொன்னதும் எனக்கு எங்க பக்கத்து வீட்டுக்காரம்மாவோட நினைப்பு வந்திடுச்சு அங்கிள்; மொத மொதல்ல டெல்லிக்குப் பத்து நாள் போயிட்டு வந்தவங்க எதுக்கெடுத்தாலும் 'அச்சா, அச்சா!'னு சொல்லி, தாம் டெல்லிக்குப் போயிட்டு வந்திருக்கறத ஓயாம எங்களுக்கு ஞாபகப்படுத்தி ரொம்ப வெறுப்பேத்திட்டாங்க!'

எங்க ஆபீஸ்ல கூட இதோ மாதிரி காரெக்டர் யமுனா! ஒரு வருஷம் அமெரிக்காவுக்கு ட்ரெய்னிங் போயிட்டு வந்து எதுக்கெடுத்தாலும் 'யா, யா' தான்! அதுவாவது தேவலையே! ஒருநாள் காண்டீனுக்குப் போயிருந்தோம். பஜ்ஜிய பாத்துட்டு 'வாட் ஈஸ் திஸ்? பஜ்ஜி? ஓ, பஜ்ஜி' லெட்ஸ் ஹாவ் பஜ்ஜி ஃபௌ சேன்ஜ்'னு சொன்னாரே பார்க்கலாம்!'

'இந்த மாதிரி ஆளுங்களையெல்லாம் நாம அவங்க பேர் சொல்லி கூப்பிடக் கூடாது—'ஹேய் அல்டி,- அதாவது அலட்டிக்கிறவர்னு கூப்பிட்டாதான்! புத்தி வரும்!



நல்ல வேளை அங்கிள்—இன்னிக்கு நீங்க எங்ககிட்டே வசமா மாட்டிக்க இருந்தீங்க...மிஸ்டர் சரவணன் தயவுல தப்பிச்சிங்க—'

மாணிக்கம் காபியுடன் வர, சிரிப்பு மாறாமல் உட்கார்ந்தோம்.

காபி டம்ளரைக் கையில் எடுத்த யமுனா என் அருகில் இருந்த புத்தகங்களைப் பார்த்துவிட்டு 'ஹை...புதுசா அங்கிள்?' என்றாள், கையை நீட்டியவாறு.

'ம்ம்...இது உனக்கு...இது உனக்கு ரமணன்;'

அவளிடம் நீட்டிய புத்தகத்தை வாங்கின யமுனா தலைப்பை உரக்க படித்தாள்.

'ரூட்ஸ்.'

தொடர்ந்து முதல் பக்கத்தைப் புரட்டியவளின் கண்கள் வியப்பில் மலர்ந்தன.

'டு யமுனா —வித் லவ்— அலெக்ஸ் ஹெய்லி'. அதையும் இரக்கப் படித்தவள் சந்தோஷம் மிகுதியாக, சரேலென்று எழுந்து என்னை நெருங்கி, அணைத்து. கன்னத்தில் முத்தமிட்டு 'தாங்ஸ் அங்கிள்! எனக்கு ரொம்ப பிடிச்ச எழுத்தாளர் அலெக்ஸ் ஹெய்லிகிட்டேயிருந்து என்பேர் போட்டோ கையெழுத்து வாங்கிட்டு வந்திருக்கிங்களே!' என்றாள். பின், 'உனக்கு என்ன?' என்று கேட்டாள் ரமணனிடம்...

அவளிடம் கொடுத்த புத்தகத்தின் தலைப்பை ரமணன் படித்தான். 'டீடெய்ன்ய்ட்'—எழுதியவர் நிகூகி.

நான் புன்னகைத்தேன்,

'நிகூகி இல்ல ரமணன். அவர் பேர்லமுதல் எழுத்து 'என்' மௌனம் 'கூகி'னு தான் சொல்லணும். உனக்கு என்ன எழுதிக் கையெழுத்து போட்டிருக்கார்னு படியேன். யமுனாவும் கேக்கட்டும்.'

படித்தான்,

'சிறை, சிறைவாழ்வு இல்லாத புது உலகம் அமைய பிராத்தனைகளுடன்—கூகி.'

யமுனா வியந்தாள்:

'என்ன அங்கிள் இப்படி எழுதிக் கையெழுத்து போட்டிருக்கார்!'

'டீடெய்ன்ட்'ங்க இந்த புஸ்தகம் அவருடைய சிறை வாழ்க்கைல எழுதப்பட்டது யமுனா... கூகி. ஒரு அற்புதமான எழுத்தாளர். கென்யா நாட்டைச் சேர்ந்தவர். இந்த புஸ்தகத்த அவர் சிறைல எழுதினது கூட பெரிய விஷயமில்ல, எப்படிப்பட்ட ஞானோதயம் வந்து எழுதினார்ங்கறதுதான் முக்கியம். கூகி, எழுத ஆரம்பிச்சப்ப ஆங்கிலத்துலதான் எழுதினார். அவர் எழுத்துக்கள் புரட்சிகரமா இருந்து வெளிநாட்டுல பிரபலம் ஆனதும், கென்யா நாட்டு ராணுவ அரசாங்கம் வெளில விட்டு வைக்கறது சரியில்லே'னு அவரைப் புரட்சிக்காரர்னு கைது பண்ணி சிறைல வச்சது. சிறைல இருக்கறப்போ கூகி சிந்திச்சார். 'எந்த நாட்டை பற்றின பிரச்னைகளை நான் எழுதறேனோ அது அந்த மக்களுக்கு ஆங்கிலம் தெரியாததால போய்ச் சேரலியே! அரசாங்கத்துக்கும், மத்த நாட்டுக்கும் புரியறத்துக்கு முன்னால பிரச்னைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலைமை புரிய வேண்டாமா? இது தவறான கண்ணோட்டம் அல்லவா! அதனால், இனிமே தாய் மொழியில் தான் எழுதுவேன். என் மக்களுக்குப் புரிகிற மொழியில் தான் எழுதுவேன்ங்கற வைராக்கியம் பிறக்க, பேப்பர் கிடைக்காத சூழ்நிலையில், டாய்லட் பேப்பர்ல இந்த புத்தகத்த கென்ய மொழில எழுதினார். அப்புறமா இது ஆங்கிலம் பிறமொழியில் மொழி பெயர்ப்பாச்சு...'

ரமணன் எழுந்து நின்று கைகளைத் தட்டி எங்கோ இருக்கும் மாபெரும் எழுத்தாளன் கூகிக்குத் தன்



பாராட்டுக்களைத் தெரிவிக்க, யமுனாவும் உணர்ச்சிவயப்பட்டு 'பிரமாதம்' என்றாள்.

'அலெக்ஸ் ஹெய்லி, கூகி, இவங்களை எல்லாம் இந்த முறை டெல்லிலே சந்திச்சிங்களா அங்கிள்?'

நான் தலை அசைத்தேன்.

'கறுப்பர்களின் இலக்கியம்' பற்றி டெல்லில ஒரு கருத்தரங்கு ஏற்பாடாகி இருந்தது... அதுல கலந்துக்க என்னைக் கூப்பிட்டிருந்தாங்க...பெரிய பெரிய எழுத்தாளர்களைச் சந்தித்து உரையாடினது ஒரு பக்கம்னா, அவங்களப் பத்தி மனித நேய கண்ணோட்டத்தோட பல விஷயங்கள உணர முடிஞ்சது இன்னொரு பக்கம்...ப்பா என்ன மாதிரி அனுபவம் தெரியுமா?'

யமுனா முன்னால் சாய்ந்து என் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

'ப்ளீஸ் அங்கிள்-அது பத்தி கொஞ்சம் சொல்லுங்க...'

நான் எழுந்து இப்படியும் அப்படியும் நடந்தேன். இருட்டில் மசமசத்த குளத்தை வெறித்தேன். சின்ன குரலில் பேசினேன்.

'பத்து நிமிஷத்துல பகிர்ந்துக்கற விஷயம் இல்ல அது யமுனா! கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளா அற்புதமான எழுத்துக்கள 'கறுப்பர்கள்' தந்தும், அந்த எழுத்துக்களுக்கு பெரிய அளவுல அங்கீகாரம் உலகத்துல கிடைக்காதது ரொம்ப வருத்தப்பட வேண்டிய சமாசாரம். முதமுதலா எழுதின 'சார்லஸ் டபிள்யூ செஸ்னெட்'-போன்ற எழுத்தாளர்களெல்லாம் தான் கறுப்பர்னு தெரிஞ்சா மக்கள் தன் எழுத்துக்களை ஏத்துக்க மாட்டாங்கன்ற பயத்துல 'புனை' பெயர்லியே எழுதிட்டு வந்திருக்காங்க...தெரியுமா? ஆப்ரிக்காலேந்து கடத்தப்பட்டு வந்து, அமெரிக்கால பல தலை முறைகள்

அடிமைகளா இருந்தப்போ, மிருகங்களை விட அவங்க கேவலமா நடத்தப்பட்டிருக்காங்க...குடும்பமா வாழ்ந்தா அவங்க ஒண்ணாகி, எப்பவாவது பிரச்னை எழுப்ப லாம்னு. அப்பாவ ஒருத்தருக்கு, அம்மாவ ஒருத்தருக் குனு அடிமைகளா ஏலம் போட்டு வித்து, குடும்பங் களையே உடைச்சிருக்காங்க...பல ஆப்ரிக்க அடிமை வம்சத்து குழந்தைங்க தன் அப்பா, தாத்தா யாருனு தெரி யாம கூட வளர்ந்திருக்காங்க... 'ரூட்ஸ்–அதாவது வேர் கள்-ங்கற நாவலை எழுத, என் மூதாதையர்களே தேடிப் போக, இந்த அவலம் கூட ஒரு காரணமா இருந்தது' —அலெக்ஆஹெய்லி சொன்னப்போ நா விக்கிச் சுப் போயிட்டேன்.''

கருத்தரங்கில் கறுப்பர் இன எழுத்தாளர்கள் வெளி யிட்ட உண்மைகள் மீண்டும் மனசுள் எதிரொலிக்க, நான் உணர்ச்சி வயப்பட்டேன். அவ்வளவுதான் இப்போதைக் குச் சொல்ல முடியும் என்பது போல நாற்காலியில் அமர்ந்து, முகத்தைத் துண்டால் துடைத்துக் கொண் டேன்.

என் வேதனை புரிந்த தினுசில் யமுனாவும், ரமண னும் மௌனமானார்கள்.

கூட்டுக்குத் திரும்பிவிட்ட பறவை ஒன்று ஏனோ, பரி தாபமாய் குரல் கொடுத்தது.

நான் அண்ணாந்து வானத்தைப் பார்த்தேன்.

நிலா இல்லாத தைரியத்தில் இங்கும் அங்குமாய் நட்சத்திரங்கள் மின்னத் துவங்கி இருந்தன.

ரமணன் ஒருதரம் செருமினான்.

'இன்னிக்கு உங்கள இதுமேல தொந்தரவு பண்றது சரியில்ல ஸர்...அற்புதமான புஸ்தகத்த எங்களுக்காக வாங்கிட்டு வந்ததுக்கு ரொம்ப நன்றி. நா கிளம்பட் டுமா?'



அவன் எழுந்து நிற்க, யமுனாவும் எழுந்தாள்.

'நானும் புறப்படறேன். அங்கிள். தாங்க்ஸ் அகெய்ன்.' என்றவள், மறுபடி என் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

மனசு இருந்த நிலையில் அவர்களைத் தங்கச் சொல் லப் பிடிக்காமல், நானும் எழுந்து கீழே வந்து அவர்களை அனுப்பிவிட்டு மீண்டும் மொட்டை மாடிக்கு வந்து எனக்குப் பிடித்தமான சாய்வு நாற்காலியில் அமர்ந்தேன்.

கொஞ்ச நேரத்தில் எண்ணங்கள் 'கறுப்பர்' இயக் கத்திலிருந்து விடுபட்டு யமுனா, ரமணனைச் சுற்றிச் சென்றன.

ராஜா அண்ணாமலை மன்றத்தில் முதல் முறையாக அவர்களைச் சேர்ந்து பார்த்து சரியாக இரண்டு மாசங் களே கடந்திருந்தன: ஆனால் இதற்குள் நாங்கள் ஏழு, எட்டு முறைகளாவது சந்தித்துக் கொண்டிருப்போம்.

இந்த இரண்டு மாச அவகாசத்தில் யமுனாவும், ரமணனும் எக்கச்சக்கத்துக்கு ஒருவரிடம் மற்றவர் நெருங்கியிருந்தார்கள். ஒன்றாகச் சேர்ந்து வெளியே போவதும், அன்றாடம் காலையிலோ, வேலை முடிந்த பிறகோ சந்தித்து மணிக்கணக்கில் உரையாடுவதும் சகஜ மாகிவிட்டது. முக்கியமாய் 'நீங்கள்' போய் 'நீ' என்று உரிமையுடன் கூப்பிடும் வரை நட்பு வளர்ந்து விட்டது!

நட்பு!

இது வெறும் நட்புதானா?

பின்னே?

வேறு எப்படி அழைப்பதற்கும் தயக்கமாய் இருந்தது.

இரண்டு பேரும் அடிப்படையில் சுத்தமாய் வேறு பட்ட குணங்களை உடையவர்கள், இவள் வடக்கு என் றால் அவன் தெற்கு.

நான் அறிந்தவரையில் அவர்கள் ஒத்துப்போகும் ஒரே விஷயம் நான், என் எழுத்துக்கள். இதன் காரணமாகவே அவர்கள் என்னை அடிக்கடி சந்திப்பதும், தங்கள் கருத்து பரிமாற்றங்களை எனக்கு எதிரே செய்வதும் நடக்கின்றன. இதை வைத்துக் கொண்டு நட்பு உறவாக மலருமோ என்று நான் கணக்கிடுவது நியாயமான செய்கையாக இருக்குமா? ஆனாலும், அவர்களிடையே காணப்படும் ஈர்ப்பு அலாதியானதாக இருப்பதையும் உணர முடிகிறதே!

அப்புறம்?

ஒருவர்பால் மற்றவர் கொண்டுவிட்ட உணர்ச்சிகளை வெளிவிடத் தயங்குகிறார்களோ? அவர்களை நன்கு அறிந்தவன் என்கிறரீதியில் சின்னதாக ஒரு உந்துதலை நான் தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களோ?

குழப்பமாக இருந்தது.

கண்களை மூடிக்கொண்டு, சாய்ந்து அமர்ந்து நாற்காலியை அசைத்தேன்.

முரண்பட்ட குணங்களை உடையவர்களால் அமைதியான, இனிமையான தாம்பத்தியத்தில் ஈடுபட முடியுமா?

பாஸிடிவ், நெகடிவ் சேர்ந்தால்தானே மின்சாரம் பிறக்கிறது!

அதுபோல இதுவும் சாத்தியம் என்று ஏன் கருதக் கூடாது?

சட்டென்று புத்தி ஆதாரத்துடன் குறுக்குக் கேள்வி கேட்டதும், குழப்பம் குறைந்த மாதிரி தோன்றியது.

என்னையும் அறியாமல் குட்டியாய் புன்னகை ஒன்று உதடுகளை ஆக்ரமிக்க, ஒருவித புது ஸ்வாரஸ்யத்துடன் அவர்களது அடுத்த சந்திப்புக்காகக் காத்திருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது



# 9

**யமுனா**

வாசலில் கார் ஹார்ன் கேட்டது.

லிப்ஸ்டிக்கைத் தடவி, இரண்டு உதடுகளையும் ஒரு தரம் அழுத்தி, பூசிய சாயத்தை ஒத்தாற்போல் பரவச் செய்த யமுனா அரை நொடி 'நம் வீட்டுக்கா?' என்று யோசித்தாள்.

இந்த மூன்று மணி தருவாயில் யார் வருகிறார்கள்? அப்படி வருவதாக ரமணனைத் தவிர யாரும் சொல்லி இருக்கவில்லையே! ரமணன் கண்டிப்பாய் வண்டியில் வர மாட்டார். அப்புறம்? இருக்காது. சாலையோடு போன வண்டி வீட்டருகே ஒலி எழுப்பி இருக்க வேண்டும்.

குட்டியாய் எழுந்த சந்தேகத்துக்கு உடனடியாய் பதில் கிடைத்துவிட, பிரஷை எடுத்து: தலைமுடியை நாலு தரம் வாரி விட்டாள். கண்ணாடிக்கு அருகில் குனிந்து முக ஒப்பனை அதிகமாய் இல்லாமல், கச்சிதமாய் அமைந்திருக்கிறதா என்று சரி பார்த்தாள்.

அன்றைய மாலைப் பொழுதை அவளும் ரமணனும் ஸ்வாரஸ்யமான விதத்தில் கழிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

சரியாகச் சொல்ல வேண்டும்என்றால், ஐடியா அவர்களுடையது அல்ல, சந்திரசேகரன் சொன்னதுதான்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் சந்தித்த போது 'இந்த ஞாயித்துக்கிழமை உங்க ரெண்டு பேருக்கும் முக்கியமான வேலை ஏதாவது இருக்கா?' என்று அவர் கேட்க ரமணன் உதட்டைப் பிதுக்கி தோளைக் குலுக்

கினான், யமுனா 'பிளைண்ட் ஸ்கூலுக்குப் போய் ஒரு ஸ்டூடண்டுக்குப் பாடம் படிச்சுக் காட்டணும். ஆனா. அது கார்த்தால பத்துலேந்து பன்னண்டுவரைக்கும் தான், அதுக்கப்புறம் பெரிசா சொல்லும்படி ஒண்ணும் இல்ல... ஏன் கேக்கறீங்க அங்கிள்?' என்று எதிர் கேள்வி போட்டாள்.

'இதுவரைக்கும் செய்யாததா, வித்தியாசமானதா, ஒரு காரியத்த செய்யலாமேனுதான்!'

யமுனாவின் கண்கள் வியப்பில் பனிச்சிட்டன.

'ரிலீஸ் ஆகாத புது படத்தோட ப்ரொஜக்ஷனா அங்கிள்?'

'அது இது வரைக்கும் நாம் செய்யாததா?'

'இலக்கியக் கூட்டம் எதுக்கா...' இதுவும் தாங்கள் ஏற்கனவே செய்ததுதான் என்கிற ஞானோதயம் வந்ததினுசில் சொல்ல வந்ததைப் பாதியிலேயே நிறுத்தி விட்டு 'என்ன விளையாட்டு அங்கிள்? சொல்லப் போறீங்களா இல்லையா?' என்றாள் சலிப்புடன்.

சந்திரசேகரன் புன்னகைத்தார்.

'எதுக்கெடுத்தாலும் அடுத்தவங்ககிட்ட நீ விளையாடலாம். எந்த ஒரு சமாசாரத்தையும் உடனே சொல்லாம 'டட்டடாண்— ஸஸ்பென்ஸ்'னு சொல்லி சீண்டலாம்! ஆனா, நாங்க உன்னை சின்னதா கூட ஊங்க்க வைக்கக் கூடாது. செஞ்சா கோவம் வந்திடும். அப்படித்தானே யமுனா' பேசியவர் ரமணனைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டி இது என்ன நியாயம் ரமணன்?' என, அவனும் 'அதானே?' என்று பலமாக ஆமோதிக்க, வேலிக்கு ஓணான் சாட்சி' என்று யமுனா முணுமுணுக்க.

மூவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

யமுனா எட்டி சந்திரசேகரனின் கையைப் பற்றிக் கொண்டாள்,



இதுக்கு மேல என்னால் தாங்க முடியாது. சொல்லப் போறீங்களா இல்லியா? அப்படி என்ன வித்தியாசமா ஒரு காரியம் பண்ண பிளான் செஞ்சிருக்கீங்க?'

'மஹாபலிபுரம் போற வழில, கடற்கரைய ஒட்டி 'பீச்ஹவுஸ்' கட்ட ஒரு இடத்த நா வாங்கியிருக்கறது உனக்குத் தெரியும் இல்லியா?'

'தெரியாம என்ன அங்கிள்? போன வருஷமே சொன்னீங்களே! ஆனா அழைச்சிட்டுப் போய் காட்டதான் மாட்டேன்னுட்டீங்க'

வீட்ட கட்டி, எல்லாத்தையும் ஒழுங்கு பண்ணப் புறமா மந்தவங்கள அங்க கூட்டிட்டுப் போறதா இருந்தேன்.

'இப்ப?'

'வீடு தயாராகி பத்து, பதினைஞ்சு நாள் ஆச்சு... போன வாரம் சனி, ஞாயிறு அங்க போயி தங்கிட்டு வந்தேன். இந்த சனிக்கிழமை போக முடியாது. வேலை இருக்கு.ஞாயித்துக்கிழமைகூட மூணுமணி வரை ஒரு கருத்தரங்குல பங்கெடுக்கணும் ஆனா, நல்ல வேளையா அந்த கருத்தரங்கும்பிஷர் மென்ஸ் கோவ் ஹோட்டல்ல தான் அங்கிருந்து நம்ம பீச் ஹவுஸ் ரொம்ப கிட்டக்க...நீங்க ரெண்டு பேரும் மெட்ராஸ்லேந்து மூணு மணிக்குப் புறப்பட்டு, பீச் ஹவுஸுக்கு வந்திட்டீங்கன்னா, நா அங்கேயிருந்து அப்படியே வந்திடுவேன். சாயங்காலம், ராத்திரி என் கூட இருந்துட்டு காலைல அங்கேயே தயாராகி நீங்க வேலைக்கு நேரா போயிடலாம். நா ரெண்டு நாள் தங்கி கொஞ்சம் எழுதிட்டு வர உத்தேசம். எப்படி பிளான்?'

யமுனா கைகளைத் தட்டி 'பென்டாஸ்டிக்!' என்றாள்.

ரமணனின் தயக்கம் வெளிப்படையாகத் தெரிந்தது.

'என்ன ரமணன்?'

'பிரமாதமான பிளான்தான் ஸார். ஆனாலும்...'

யமுனா குறுக்கிட்டாள்.

'என்னோட தனியா வர, தங்க ரமணனுக்குப் பயம் அங்கிள்!'

'தனியா எங்க? நா ஒருத்தன்தான் குத்துகல்தான் கூடவே இருப்பேனே!'

'அதானே!'

'என்ன அதானே? அப்ப, நா குத்துக்கல்லாட்டம் சொல்றியா?'

இடக்காக சந்திரசேகரன் மடக்க, தலையைப் பின்னுக்குத் தள்ளி யமுனா சிரித்தாள்.

வாசலில் மீண்டும் ஹார்ன் ஒலித்தது. இந்த முறை நீளமாய்...

நம் வீட்டிற்குத்தானா?

யமுனா எழுந்து ஜன்னல் வழியா எட்டிப்பார்த்தாள்.

வெள்ளை முயல் மாதிரி அடக்கமாய் வாசலில் நின்றிருந்த வண்டியைப் பார்த்ததும் மனசு அட! நம்ம வீட்டுக்குத்தான்! அதுவும் மாருதி 800ல்! என்று உற்சாகமாய் வியந்தது.

பல வருஷங்களாய் இதோ வருகிறேன், அதோ வருகிறேன் என்று ஏராளமான எதிர்பார்ப்பை மக்களிடையே உண்டு பண்ணிவிட்டு, சமீபத்தில் இந்தியாவின் தெருக்களை ஸ்பர்சித்திருக்கும் மாருதி 800!

அவசரமாய் அறையைவிட்டு வெளியேறி வாசல் வராந்தாவுக்கு வந்தாள்.

படிகளில் இறங்க முற்படும் முன்னர், வண்டியின் கண்ணாடி அரை அடி இறக்கப்பட்டு, சிரிக்கும் ரமண



னின் முகம் தென்பட, திகைப்பை அடக்கமுடியாமல், 'அட!' என்றாள் யமுனா உரக்க!

'ஹலோ யமுனா! டட்டடாண்...ஸர்ப்ரைஸ்!'

அவன் வண்டியிலிருந்து இறங்குவதற்குள் நாலே எட்டில் யமுனா அவனை நெருங்கினாள்.

'ரமணன்! நீ! மாருதி 800! குட்னஸ்! நம்பவே முடியலையே! கார் யாரோடது! புதுசா? ஆமா, அப்படித்தான் தெரியறது மாலை - சிகப்பு ரிஜிஸ்ட்ரேஷன் ப்ளேட்! ஹேய்! என்னப்பா ஒரே மூடுமந்திரமா இருக்கு! உனக்கு வேண்டியவங்களுக்காக வண்டிய டெலிவரி எடுத்துகிட்டு போறியா? அவங்களுக்காக நீ ஏன் எடுக்கணும்? வெளியூர்ல இருக்காங்களா? அதெல்லாம் இருக்கட்டும். உனக்கு வண்டி ஓட்டத் தெரியும்னு நீ என்கிட்ட சொல்லவேயில்லையே!'

சங்கிலித் தொடராய் யமுனா கேள்விகள் கேட்க 'மூச்சு... மூச்... அது ஒண்ணு இருக்கற நினைவு இல்லாம கேள்வி மேல கேள்வியா கேட்டுக்கிட்டே போனா எப்படி? ம்? முதல்ல மூச்சு விட்டுக்க...ரிலாக்ஸ்...என்று ரமணன் கேலி பண்ணியதை லட்சியம் சொல்லப்போறியா இல்லியா?' என்று நிஜமான கோபத்துடன் யமுனா கேட்டாள்.

'சொல்றேன். சொல்லத்தானே வந்திருக்கேன். ஆனா, இப்ப இல்ல. மணி என்ன தெரியுமா? மூணு! இப்பக்கிளம்பினாதான் இடத்தை விசாரிச்சுகிட்டு நாலு மணிக்குள்ள பீச் ஹவுஸுக்குப் போக சரியா இருக்கும். புறப்படறியா?'

யமுனா நம்பமாட்டாமல் விழித்தாள்.

'இதுலியா? இந்த மாருதிலயா?'

'ஆமாம்...ஆமாம்...ஆமாம்...'

'இது யாரோடது?'

'போச்சுடா—மறுபடியும் கேள்விகளா? ஓ. கே. பதில் சொல்விடறேன்...ஐயா துதான்.'

'உ...உன்னுதா? எப்ப வாங்கனே? எங்கிட்ட வாங்கப் போறதா சொல்லவேயில்லையே.'

'நேத்துதான் டெலிவரி எடுத்தேன்.'பர்ஸனல் வேலை இருக்கு'னு ஆபீஸுக்கு லீவு போட்டுட்டுப் போனது இதுக்காகத்தான். உனக்கு ஸர்ப்ரைஸா இருக்கட்டு மேனு சொல்லலை...எப்படி? டட்டடாண்...'

யமுனா கண்களை இடுக்கிக் கொண்டாள்.

'மாருதி கிடைக்குமானு ஆனானப்பட்ட கொம்பன்'களெல்லாம் காத்திட்டு இருக்காங்க...உனக்கு எப்படி அத்தனை சுலபமா கிடைச்சது?'

'போச்சுடா...இன்னும் சந்தேகமா? கம்ப்யூட்டர் மூலமா இருபத்தையாயிரம் நபர்களைப் பொறுக்கினதுல அடியேனும் ஒருத்தன். என் நம்பர் எட்டு. அதனால அறிமுகமான ஒரு மாசத்துல வண்டி கிடைச்சிடுத்து. விளக்கம் போதுமா? நம்பிக்கை வந்துதா, இல்ல, ஆர் ஸி. புக்க எடுத்துக் காட்டட்டுமா?'

'உனக்கு கார் ஓட்டத் தெரியும்னு நீ ஏன் என்கிட்ட சொல்லவேயில்ல?'

ரமணன் விளையாட்டாய் இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டான்.

'வண்டி வந்ததும் நானே ஓட்டிகிட்டு வந்து உன்னை ஆச்சர்யக் கடலில் மூழ்க வைக்கணும்னு திட்டம் போட்டு சொல்லாம இருந்தது தப்புத்தான் தாயே...இப்ப மன்னிச்சு ஆளை விடறீங்களா?'

சுத்தமாய் சந்தேகம் தீர்ந்துவிட, யமுனா எதுவும் பேசாமல் வண்டியை நெருங்கி, ஒரு குழந்தையை வருடுவது போல தடவிக் கொடுத்தாள்.



இரண்டு தரம் சுற்றி வந்தாள்.முன் கதவைத் திறந்து உட்பக்கத்தை ஊன்றிப் பார்த்தாள். பானெட் மேல் விரல்களால் தாளம் போட்டவாறு மஹா பெருமிதத்துடன் 'திஸ் ஈஸ் ரியலி கிரேட்!' என்றாள் பாராட்டும் விதமாய்.

அப்புறம் சட்டென்று நினைவுக்கு வந்த மாதிரி கேட்டாள் 'ஹேய் ரமணன், நா ஓட்டட்டுமா? ப்ளீஸ். ப்ளீஸ்'

ரமணன் புன்னகைத்தான்.

'இந்த வண்டிக்கு மட்டும் வாய் இருந்தா என் பிறவிக்கு அர்த்தம் கிடைச்சிடுச்சு—நான் தன்யனானே'னு கண்ணீர் மல்க டயலாக் பேசும்'

யமுனா சந்தோஷத்தோடு அவன் கையைப்பற்றி ஒரு தரம் அழுத்தினாள். 'தாங்க்ஸ் ரமணன்' என்றவள் உள்ளே வேகமாய் சென்று உடைகள் அடங்கின சின்ன பையுடன் திரும்பினாள்.

புறப்பட்டார்கள்.

ஓட்டுனர் இருக்கையில் உட்கார்ந்து உடனேயே வண்டிய கிளப்பாமல், ஒரு நிமிஷம் தாமதித்து, கியர் எப்படி, எது எதற்கு போன்ற விவரங்களைப் புரிந்து கொண்ட பின் சாவியைத் திருப்பினாள்.

அடையாறு தாண்டி, லாடிஸ் பிரிட்ஜ் சாலையில் சென்று, மருந்தீஸ்வரர் கோவிலை அடையும் வரை கவனத்துடன் பொறுமையாய் செலுத்தியவள், திருவான்மியூரை தாண்டிய பிறகு வேகத்தை அதிகப்படுத்த, மாருதி பறந்தது. தொடர்ந்து மிதந்தது.

திறந்திருந்த கண்ணாடி வழியாக வீசிய காற்று வேகமாக முகத்தில் மோதிய போது லேசான மிகச்சுளிப்புடன் ரமணன் சொன்னான்.

'கண்ணாடிய மேல ஏத்திடேன்-இத்தனை காத்து அடிச்சா கஷ்டமா இல்ல?'

கலைந்து பறந்த முடிக் கற்றை நேற்றி, கண்கள் மேல் விளையாட, யமுனா இல்லை என்று தலை அசைத்தான்,

'ஹூம்—இந்த முரட்டுத்தனம் கூட சுகமா இருக்கு. உன் கண்ணாடியையும் இறக்கிட்டு, நீயும் அனுபவிச்சுப் பாரேன்'

எனக்கு அந்த சுகம் வேணாம்மா...காற்று வேகமா வீசினா மூக்கு அடைச்சுக்கும்...தவிர, தலை முடி கலையறது எனக்குப் பிடிக்காது...

'எனக்குப் பிடிக்கும்...'

ரமணன் தோளைக் குலுக்கினான்,

'இதுல ஆச்சர்யப்பட என்ன இருக்கு! பல விஷயங்கள்ல எனக்குப் பிடிச்சது உனக்கும், உனக்குப்ரியமானது எனக்கும் பிடிக்காதுன்றது நமக்கு எற்கனவே தெரிஞ்ச விஷயம் தானே?'

யமுனா தலையைத் திருப்பி அவனை ஏறிட்டு நீ சொல்வது சரிதான் என்பது போல புன்னகைத்தாள்.

'நீலங்கரை'என்றது சாலையில் காணப்பட்ட பலகை.

இரண்டு நிமிஷங்கள் கழித்து யமுனா பேசினான்.

'மறக்காம சாயங்காலம் சூரிய அஸ்தமனத்தைப் பார்க்கணும். அக்னி பிழம்பு ஒண்ணு துளித்துளியா அடங்கற காட்சி அற்புதமா இருககும்னு அங்கிள் சொல்லி இருக்கார்.

'அதைவிட சூரிய உதயம் இன்னும் பிரமாதமா இருக்கும் யமுனா... காலைல அஞ்சரைக்கெல்லாம் பீச்சுக்குப் போயிடணும்.'



'அஞ்சரைக்கா! நம்பளால முடியாதுப்பா... காலைல எழுந்திருக்கறது இம்பாஸிபிள்!'

'அடராமா!'

'அட கட்டபொம்மா!'

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

'நிறைய விஷயங்கல்ல நாம வேறு பட்டாலும் நல்ல ஸ்நேகிதர்களா இருக்கிறது ஆச்சர்யமா இல்ல?'

'வெறும் ஆச்சர்யம் மட்டும் இல்ல யமுனா-ஆயிரத்துல ரெண்டு பேருக்குத்தான இப்படிப்பட்ட அபூர்வ நட்பு அமையும்னு நா மனப்பூர்வமா நினைக்கறேன்.'

'ஸோ? நாம ரெண்டு பேரும் ஆயிரத்தில் இருவரா?'

'நிச்சயமா-'

யமுனா தலையை பின்னுக்குத் தள்ளி சிரித்தாள்.

'நம்ப ஃப்ரெண்ட் ஷிப் விநோதமானதோ, அபூர்வமானதோட—அதப்பத்தி நா தீவிரமா ஆராய்ச்சி பண்ணல்ல. ஆனா' உன்ன பார்க்காம, உன்னோட பேசாம ஒரு நாள் கூட என்னால இருக்க முடியல... இதுதான் நிஜம்...'

'ரொம்ப மாறுபட்டாலும், திடும்னு ஒண்ணாயிடறது தான் சரியான வேடிக்கை, இப்ப மாதிரி—நா சொல்ல நினைச்சேன் நீ சொல்லிட்ட... இது பத்தி யோசிக்கலேனு சொன்னே...ஆனா, நா கொஞ்ச நாளா நிறைய சிந்திக்கறேன். நாம சந்திச்சு நாலு மாசம் தான் ஆறது. ஆனாலும் ரொம்ப வருஷங்களா அறிமுகமான உணர்வு... யோசிக்கறப்போ என்னடா இது!னு ஒண்ணும் புரியாம கூட இருக்கு... இன் ஃபாக்ட், இந்த

எண்ணங்கள் பத்தி உன்கிட்ட நானே பேசணும்னுதான் இருந்தேன்...

இது நாழிகை காணப்பட்ட விளையாட்டுத்தனம் நீங்கித் தீவிரமாக ரமணன் பேசியதும், மேற்கொண்டு என்ன பேசுவது என்கிற குழப்பம் இருவருக்குமே இருந்த தினுசில் மௌனமாகப் பயணித்தார்கள்.

ஈஞ்சம்பாக்கம்.

உத்தண்டி... என்று வரிசையாக கடந்து சந்திர சேகரன் சொல்லி இருந்த வழியைப் பின்பற்றிச் சென்று குறிப்பிட்ட இடம் வந்ததும் ''இங்கதான்'' என்று ரமணன் சொல்லி, யமுனா வேகத்தைக் குறைத்து இடது பக்கம் வண்டியைத் திருப்பினாள்.

செம்மண் சாலை.

'இரண்டு பக்கமும் சவுக்குத் தோப்புகள்' உள் அடங்கி காணப்பட்ட பண்ணை வீடுகள்.

கொஞ்சம் சென்று சாலையின் கடைசிப் பகுதியை அடைந்தார்கள்.

''மானஸரோவர்''

''இதுதான் ரமணன்! அங்கிளுக்கு மானஸரோவர் ஏ மேல் அலாதி காதல் உண்டு. அதனால மெட்ராஸ் வீட்டுக்கும் சரி இங்க பீச் ஹவுஸுக்கும் சரி இதே பேர்தான்''

ரமணன் இறங்கி, கேட்டைத் திறக்க, யமுனா வண்டியை உள்ளே செலுத்தினாள்.

சவுக்கு, மா, தென்னை மரங்கள்.

ஆகாயம் தெரியாதபடி பசுமை கூடாரம் அமைத்திருக்க, கிராமத்தில் பார்க்கிற மாதிரி தாழ்வாரம், 



தூண்கள், ஓடு வேய்ந்த கூரை, ஊஞ்சல் என்று கையடக்கமான வீடு ரொம்ப வித்தியாசமாக இருந்தது.

இறங்கியவர்களை மாணிக்கம் வரவேற்றான்.

''ஐயா அஞ்சு மணிக்குள்ள வந்திடறேன்னு சொல்லி இருக்கார், நீங்க உள்ள வாங்க...''

வீட்டுக்குள் சென்று அவன் தந்த காபியை அருந்திவிட்டு, இருவரும் வெளியில் வந்து வீட்டை ஒட்டியிருந்த சவுக்குத் தோப்பில் நடந்து, கடற்கரைக்குச் சென்றார்கள்.

மேகமில்லாத நீல வானம். பச்சை நிறம் கலந்த தெளிவான கடல் நீர். இளம் பழுப்பு நிறத்தில் காலடியில் விரிந்திருந்த சுத்தமான மணற்பரப்பு—

ஓஷ்...ஷ்...ஸ் என்கிற அலைகளின் ஓசையைத் தவிர, வேறு சத்தங்களே இல்லாத சுற்றுப்புறம்...

வானமும், கடலும், மொத்த சூழ்நிலையும் மனசை பிரமிக்கச் செய்ய, செருப்பைக் கழற்றிவிட்டு யமுனா பத்தடி நடந்த அலைகள் அடித்து ஓயும் மேட்டை நெருங்கினாள்.

அங்கேயே உட்கார்ந்து நீளமாய் ஒருதரம் மூச்சை இழுத்து வெளியிட்டாள்,

பிறகு, அருகில் நின்ற ரமணனை ஏறிட்டு, விவரிக்க இயலாத உணர்வுகளின் கலவை முகத்தில் படர, சின்ன குரலில் கேட்டாள்:

''காதலைப்பத்தி நீ என்ன நினைக்கறே ரமணன்?''

# 10

## ரமணன்

''ஹே—உன்கிட்டதான் கேக்கறேன்—வாட் டு யு திங்க் ஆஃப் லவ்?''

இரண்டாவது முறையாக யமுனா வினவ. ரமணன் தயங்கினான்.

மனதில் உள்ள கருத்தைச் சரியான வார்த்தைகளில் வெளியிடுவோமா என்கிற சங்கடத்துடன் மௌனித்தான்.

சில நொடிகளுக்கு நீலக் கடலில் மச்சங்களாகத் தெரிந்த கட்டுமரங்களை வெறித்தான்.

பின்னர் மெதுவாகத் தலையைத் திருப்பி, சற்றுத் தள்ளி அமர்ந்திருந்தவளை ஏறிட்டான்.

காற்றில் அலைந்த முடிக்கற்றை...சன்னமான ஒலியை எழுப்பியவாறு படபடத்த ஷிபான் துப்பட்டா...கேள்வியைக் கேட்விட்டு, இவன் பதிலுக்காக ஆர்வத்துடன் காத்திருந்த புத்திசாலித்தனம் நிறைந்த முகம். அதில் அலாதி அழகுடன் மலராத சிவப்பு ரோஜா மொட்டை நினைவு படுத்திய உதடுகள்—

அவளை ஒரே எட்டில் நெருங்கி, அந்த புத்திசாலி முகத்தைக் கையில் ஏந்தி, சிகப்பு இதழ்களில் முத்தமிட வேண்டும் போலத் திடுமென ஒரு தவிப்பு பிறக்க, மனசு உதறியது, கூடவே சிலிர்த்தது.

ரமணன் அவசரமாய் பார்வையை மீண்டும் கடலிடமே வீசினான்.

என்ன வினோத எண்ணம் இது!



இத்தனை மாசங்களாய் உண்டாகாத இந்த இச்சை, இப்போது மட்டும் மின்னலாகத் தோன்றக் காரணம் என்ன?

மனசை சுண்டி இழுக்கும் இந்த ஏகாந்த சூழ்நிலையா? சற்று முன் யமுனா கேட்ட கேள்வியா?

அல்லது, மெதுவாக, துளித்துளியாக அவள்பால் உண்டாகிவிட்ட அன்பின் வெளிப்பாடா?

எதுவும் பேசாமல், சிந்தனையில் சிக்கி அவன் நிற்கையில், யமுனா ''மிஸ்டர் ரமணன்'' என்று கூப்பிட்டு அவனைக் கலைத்தாள்.

'ம்?'

'நா கேட்டது காதுல விழல?'

'விழுந்தது... ஆனா, என்ன சொல்றதுனுதான் யோசிச்சுட்டு இருக்கேன்.'

'இதுல யோசிக்க என்ன இருக்கு? இது என்ன இது வரைக்கும் நாம கேள்விப்படாத, படிக்காத, இல்ல பார்க்காத சமாசாரமா?'

'அப்படி இல்ல யமுனா...படிக்கறதும், பாக்கறதும் வேற...நம்ம கருத்த சொல்றதும், அனுபவிக்கறதும் வேற இல்லையா?'

யமுனா சீண்டலாய்க் கண்களைச் சிமிட்டினாள்.

'ஓ! அனுபவிக்கறதா' அப்படீன்னா அந்த அனுபவம் உனக்கு இருக்குனு சொல்லு!'

ரமணன் எரிச்சலுடன் 'ப்ச்' என்றான்.

'ஸீரியஸா ஒரு கேள்விய கேட்டுட்டு, நா அதுக்கு அதைவிட ஸீரியஸா பதில் சொல்ல முனையறப்போ, என்ன விளையாட்டு இது யமுனா?'

'ஸாரி—விளையாடல...சொல்லு'

'நீ முதல்ல 'காதல்'னு சொன்னே, அப்புறம் 'லவ்' னு கேட்டே...அதனாலத்தான் எந்த வார்த்தைக்கு நீ விளக்கம் கேக்கறேனு புரியாமல் தயங்கினேன்.'

பேசிக்கொண்டு போன ரமணன் நிறுத்தினான்.

உடனே தொடராது அவளை அழுந்தப் பார்த்தான் பின்னர் கைகளைப் பின்பக்கமாய் கட்டியபடி இப்படியும் அப்படியும் உலாத்தினான் நின்றான் இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்து அவள் எதிரில் நின்று தீவிர முக பாவத்துடன் பேசினான்.

'ஆங்கிலத்துல 'லவ்'னு சொல்றப்போ எப்படிவேணா அர்த்தம் பண்ணிக்கலாம். அன்பு, காதல் நேசம்-ன்கற அத்தனை உணர்வுகளையும் 'லவ்' ன்ற ஒரே வார்த்தைல அடக்கிடலாம். 'ஐ லவ் மை மதர்'னு சொன்னா, அங்க அன்பைச் சொல்றோம். 'ஐ லவ் மை வுமன்'னு குறிப்பிடறப்போ மனைவி மேல உள்ள காதல வெளிப்படுத்தறோம். 'ஐ லவ் மை ப்ரெண்ட்'ன்னா—அதன் மூலம் நட்பு, நேசத்த சொல்றோம் ஸோ. இங்கிலிஷ்ல 'லவ்'ங்கறது பொதுப்படை வார்த்தை ஆனா, தமிழ்ல 'காதல்'னு குறிப்பிட்டா. அது ஆண், பெண் நடுவுல இருக்கற உணர்ச்சிய மட்டும்தான் சுட்டிக்காட்...'

அவனை முடிக்கவிடாமல் யமுனா குறும்புடன் குறுக்கிட்டாள்.

'ஆண். பெண் நடுவுலதான் காதல் வரும்னு சொல்லி மாட்டிக்காத ரமணன்— ஹோமோ செக்ஷுவல், லெஸ்பியன் பிரிவைச் சேர்ந்தவங்க 'ஆஹா—எங்க காதல் உங்களுக்கு ஒரு பொருட்டா படலியா?'னு சண்டைக்கு வருவாங்க...'

கேலி மாறாமல் பேசியவள் அவனைப் பாராட்டும் விதமாகக் கைகளைத் தட்டினாள்.



'எனிவே—நீ கொடுத்த விளக்க உரை அற்புதம். என்னிக்காவது இப்ப பார்க்கற வேலை போயிட்டா, அதுக்காக நீ வருத்தப்படவே வேணாம். ஒரு காலேஜ்ல லெக்சரரா சேர்ந்திடலாம். இல்லாட்டா, ஏதாவது ஒரு அரசியல் கட்சில சேர்ந்து மேடைப் பேச்சாளரா ஜமாய்சு தள்ளலாம். கை வசம் ஒரு தொழில் இருக்கு. கவலையே படாதே...'

ரமணன் 'கடவுளே!' என்று நிஜமாக அலுத்துக் கொண்டான்.

'சில சமயங்கள்ல உன்னை என்னால புரிஞ்சிக்கவே முடியல யமுனா! தீவிரமா ஒரு விஷயத்தைப்பத்தி பேசறப்போ தடக்குனு விளையாட ஆரம்பிச்சிடறே; யு ஆர் எ ஸ்ட்ரேஞ்ஜ் கேர்ல்!'

'எந்த நேரத்துலேயும் நகைச்சுவை வேணும் ரமணன்! அது இல்லேன்னா எல்லாரும் சிடுமூஞ்சியா மாறி, மத்தவங்க வாழ்க்கையைக் கூட நரகமாக்கிடுவோம். இப்ப நா திடும்னு செத்துட்டேன்னு வச்சுக்கோ—அதுக்கப்புறம் என்னைப்பத்தி ஞாபகம் வர்றப்போ எல்லாம் 'தானும் சிரிச்சு, மத்தவங்களையும் தன் நகைச்சுவை உணர்வால சந்தோஷப்படுத்திகிட்டே இருந்தாளே? னு என்னைப்பத்தி எவ்ளோ உயர்வா நீ நினைச்சுப்போ?'

'அட ராமா! நல்ல விஷயம் பத்தி பேசறப்ப எதுக்கு சாவ இழுக்கறே?'

யமுனா தலையைப் பின்னுக்குத் தள்ளி உரக்க சிரித்தாள்.

'என்னடா, கிட்டத்தட்ட கால்மணியா பேசறோம், இன்னும் உன் ஆளை நீ துணைக்குக் கூப்பிடலியேனு ஆச்சர்யப்பட்டுகிட்டே இருந்தேன்! கூப்பிட்டுட்டே! என்ன, வந்து பக்கத்துல உக்காந்துகிட்டாரா? ஹலோ—மிஸ்டர் ராமர்! நல்லா இருக்கீங்களா?'

தலையைத் திருப்பி, வெற்று இடத்தைப் பார்த்து கேட்ட யமுனா, மீண்டும் சிரித்தாள்.

ஆமா, நிஜமாத்தான் கேக்கறேன், இன்னென்ன நேரத்துல தான் இததபத்திப் பேசணும்னு ஒரு விதி இருக்கா ரமணன்? சாவப்பத்தி பேசினா என்ன? அதுக்காக நாளைக்கே நா மண்டைய போட்டுடுவேன்னு அர்த்தமா? ஸில்லி...தீனு சொன்னா நாக்கு வெந்துடாது-தெரியும்.

'தெரியும்...தெரியும்...ஆனாலும் அச்சான்யமா எது பேசினாலும் எனக்குப் பிடிக்காது.'

'ஏன்?'

'என்னமோ அப்படி ஒரு பழக்கம்னு வச்சுக்கயேன்!'

'நா பேசுவேன்பா...இன் ஃபாக்ட் சாவ பத்தி எக்கச் சக்கத்துக்கு யோசிச்சிருக்கேன். ஒருத்தர் பிறந்த உடனேயே எது நிச்சயமோ இல்லையோ, அவர் ஒருநாள் சாகறது உறுதி...அப்படி இருக்கறப்போ எப்ப இறப்பு வந்தா என்ன, அது எப்படி வந்தா என்ன? ம்ஹூம்— நிஜம்மா எனக்கு கவலையும் இல்ல... பயமும் இல்ல... நீ அப்படி இல்லையா ரமணன்? செத்துப் போறத நினைச்சு நீ மிரள்றது உண்டா என்ன?'

விளையாட்டு மறந்து மறுபடியும் மிகத் தீவிரமான முகபாவனையுடன் யமுனா பேச, அந்த ரீதியிலான சம்பாஷணை தனக்கு அலுப்பைத் தருகிறதை உணர்த்தும் தினுசில் ரமணன் இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி சோம்பல் முறித்தான்.

'பீச் ஹவுஸுக்குப் போலாமா? மணி அஞ்சாகப் போகுது...ஸர் வந்துட்டாரோ என்னமோ!'

'அங்கிள் வந்தா மாணிக்கம் நம்பள கூப்பிடுவான்... ரிலாக்ஸ்...ஆமா, ஸ்வாரஸ்யமா பேசிட்டு இருக்கறப்போ பாதில பேச்ச மாத்தினா என்ன அர்த்தம்? ம்?'



'எதையோ கேட்டுட்டு, அது பேசி முடிக்கறத்துக்கு முன்னால பேச்ச மாத்தினது, நீயா, நானா?'

யமுனா கண்களை இடுக்கி, புருவங்களை உயர்த்தி ஒரு நொடி சிந்தித்தாள்.

'ஓ! காதலைப் பத்தி கேள்வி கேட்டுட்டு, சாவுக்கு போயிட்டேன்ற கோவமா உனக்கு? ஸாரிபா-இப்படி திடுக்திடுக்னு 'டாபிக்' மாறி பேசறது என் குணம்னு உனக்குத் தெரியாதா? ஓகே- இப்ப நா கேக்க ரெடி-சொல்லு'

'ம் உஹூம்! நீ சொல்லு— காதலைப்பத்தி, மைண்ட் யூ, நாட் லவ்-நீ என்ன நினைக்கறே?'

யமுனாவின் கண்கள் ஏதோ ஏதோ நினைவுக்கு வந்த மாதிரி பளிச்சிட்டன.

'நா நினைக்கறது இருக்கட்டும். டேல் கார்னகி-புகழ் பெற்ற சைகாலஜிஸ்ட் என்ன சொல்றார் தெரியுமா? 'காதல்ன்றது நாய் காட்ற அன்பு போல இருக்கணும்-பிரதி பலன் எதிர்பார்க்காம அன்பைக் கொடுக்கற அதோட குணம்தான் உண்மையான காதல்'-னு!விளக்கம் எப்படி! ஜோரா இல்ல? நினைச்சுப் பார்த்தா அந்த மாதிரி காதலைக் கொடுக்கறதும், பெறுவதும் ரொம்ப உசத்தியானதுனுதான் எனக்கும் தோணுது!'

ரமணன் உதட்டைப் பிதுக்கி, நான் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிற பொருளில் தலை அசைத்தான்.

நாய்க்கு வேணா நீ சொல்ற விளக்கம் பொருந்தலாம் பட், நாட்ஃபார் ஹ்யூமன்பீயிங்ஸ்...ஆசைப்படறது வேற, நடைமுறைக்கு ஏத்தது வேற...அதை ஞாபகம் வச்சுகிட்டு உன் கருத்தை சொல்லு...'

'மறுபடியும் நாம முரண்படறோம்... பரவாயில்ல... லெட் மீ திங்க்...ம்ம்...'

யமுனா கால்களைக் குத்திட்டு, முழங்கால்களில் கன்னத்தைப் பதித்து அவனைப் பார்த்து மென்மையாய் புன்னகைத்தாள். கொஞ்சம் யோதிக்கிற மாதிரி. விழிகளை மணற்பரப்பில் படரவிட்டு, ஆள்காட்டி விரலால் 'காதல் என்று எழுதி, அதைச் சுற்றிலும் கட்டம் கட்டினாள்.

நிமிர்ந்து, அவனையும் தாண்டி எங்கோ பார்வையை அலையவிட்டபடி பேசினாள்.

'காதல்? சரி, சொல்றேன், பசி, உறக்கம் மாதிரி காதலும் ஒரு இயற்கையான உணர்வு, இது எல்லார்கிட்டயும், நினைச்ச சமயத்துல உண்டாகற விஷயம் இல்ல... ம்ம்ம்? நாம ரொம்ப மதிப்பு வச்சிருக்கிற நபர்கிட்டதான் காதல் உருவாகும்னு நா நம்பறேன். ஒரு புஸ்தகத்துல அங்கிள் எழுதியிருக்கிற மாதிரி 'பரஸ்பர மரியாதை. பாராட்டு, அன்பு இருக்கலதுதான் நிரந்தர உறவைக் கொடுக்கும்'னு நானும் நம்பறேன். நாம் பலர்கிட்ட இந்த மூணு குணங்கள் ஜனிக்க நெருங்கிப் பழகினாலும். அது காதல் ஆயிடாது அதெல்லாம் நல்ல நட்புக்கள், உறவுகள்...ஆன இந்த மூணையும் அடிப்படையா கொண்டு அந்த உறவு இன்னும் வளர்றப்போ உண்டாற உணர்வு தான் காதல். இது எல்லார்கிட்டேயும் தோணாது...'

ரமணன் ஆமோதித்தான்.

'ஒத்துக்கறேன்-ஆனா யமுனா, ஒருத்தர்கிட்ட நமக்கு உருவாயியிருக்கிறது காதல்தானான்னு எப்படி இனம் கண்டுபிடிக்கிறது? இதுக்குப் பதில் சொல்லேன்?'

'முதல்ம உன்கிட்ட கேட்டது நான். இப்ப என்னையே பேச வச்சா?'



'ப்ளீஸ்.'

யமுனா உதடுகளை நாவால் ஈரம் பண்ணிக் கொண்டாள்.

'ஒருத்தரைப் பாக்கறதும், பேசுறதும், அவரைப் பத்தி நினைக்கிறதும் மனசுக்கு சந்தோஷத்தையும், உடம்புக்கு ஒரு பரபரப்பையும் கொடுத்ததுன்னா, இதெல்லாம் காதலுக்கு அறிகுறிகள்னு புரிஞ்சுக்கலாமா?'

'பிடிச்சவரை சந்திக்காம இருக்கறதும், எண்ணங்கள நினைக்கறப்போ பகிர்ந்துக்க முடியாம போறதும் ஒரு தவிப்ப உண்டு பண்ணினா அதகூடக் காதல்னு எடுத்துக்கலாமா?'

அவன் என்ன சொல்ல வருகிறான் என்பது புரிகிற தினுசில் யமுனா மௌனமாக அவனை அழுந்தப் பார்த்தாள்.

ரமணன் ஓரடி நகர்ந்து கிட்டத்தில் வந்து, அவளை ஒட்டி அமர்ந்தான். கிசுகிசுப்பாய்க் கேட்டான்.

'ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துப்பியா யமுனா?'

இது என்ன புதுரகப் பீடிகை என்று கேட்கும் கேள்வியுடன் யமுனா புருவங்களை உயர்த்தினாள்.

'நா சொல்றதக் கேட்டதும் உனக்குக் கோபம் கூட வரலாம்...ஆனா, சொல்லாம இருந்தா அது பொய்யா இருக்கிற மாதிரி என் மனசுக்குப் படறது. உன்னோடு அறிமுகம் ஆன நாள்லேர்ந்து நீயோ, நானோ ஒருத்தர் கிட்ட இன்னொருத்தர் கண்டிப்பா வேஷம் போடறதேயில்ல... அதனால, நா இதயும் சொல்றது நியாயம் தான்னு நினைக்கிறேன். சொல்லட்டுமா?'

ரமணனின் முகம் வெகு அருகாமையில் இருக்க, யமுனா 'சொல்லு' என்றாள் அதே தாழ்ந்த தவனியில்.

'மனசுல மட்டு மில்லாம உடம்புலயும் ஒரு பரபரப்பு வரும்னு கொஞ்சம் முன்னால சொன்னியே, அது நிஜம் யமுனா...எனக்கு அப்படித்தான் இருந்தது...இருக்கு...'

மணலில் கிடந்த அவன் கையை ரமணன் பற்றிக் கொண்டான்.

'நீயும் நானும் பர் விஷயங்கள்ல மாறுபடலாம்... ஆனாலும், முதல் நாள் உன்னைய பார்த்ததுமே சொல்லத் தெரியரத ஒரு 'அட்ரெக்ஷன்' உன் மேல உண்டச்சு... என்னடாதுனு யோசிச்சப்போ உன் புத்திசாலித்தனம், துணிச்சலான பேச்சு, தனித்தன்மையோட இருக்கற சிந்தனைகள்தான் காரணம்னு புரிஞ்சுது. நாலைஞ்சு நாள் முன்னால கூட இந்த உணர்வை வேறு விதமா சிந்திச்சுப் பார்க்க முனையல...நல்ல ஃப்ரெண்ட்ஷிப்னுதான் இருந்தேன், ஆனா, நேத்திலேத்து அப்படி சும்மா இருக்க முடியல...மாருதிய எடுத்துக்கிட்டு வந்த உன் முன்னால நிறுத்தப் போற காட்சிய உன் திகைப்ப, கற்பனை பண்ணி பார்த்தப்ப, சந்தோஷத்தோட, புது மாதிரியான தவிப்பும் கலந்து தாக்கறத உணர முடிஞ்சது. 'மாருதிய ஓட்டட்டுமா?'னு என் கைய பிடிச்சு கேட்டியே, அப்ப முதல் முறையா 'ஷாக்' அடிச்சது போல ஒரு உணர்ச்சி, இங்க வந்து உட்கார்ந்து 'காதலைப்பத்தி என்ன நினைக்கிறே?'னு கேட்ட நிமிஷத்துல...வந்து... யமுனா... நா... உன்னை...ஐ ஃபெல்ட் லைக் கிஸ்ஸிங் யூ... இது தப்புனா, ஐம் ஸாரி...ஆனா, அப்படி நா ஃபீல் பண்ணத உன்கிட்ட மறைக்க விரும்பலை...'

யமுனா பரவசமாகப் புன்னகைத்தாள்.

'கிட்டத்தட்ட உன் அவஸ்தைதான் எனக்கும்... ஆனா, தெளிவா எதுவும் புரியல...அதான் உண்மை... ரமணன், இதுவரைக்கும் நீ 'யாரையாவது காதலிச்சிருக்கியா?'



'ம்ஹிம்ம்-நீ?:

'ம்ஹூ...ஏன் காதலிக்கல?'

'தோணலை...நீ?'

'மரியாதை, அன்பு, பாராட்டு எல்லாம் முழுமையா கொடுக்கற மாதிரி எவனும் கண்ணுல படலியே.'

ரமணன் குனிந்து அவள் தலையில் செல்லமாக முட்டினான்.

'இப்ப பட்டிருக்கானா?'

'உறுதியா தெரியல—'

'ஹேய்...'

போலியாக ரமணன் அதட்ட, யமுனா புன்னகைத்தாள்.

'நினைச்சா வேடிக்கையா இல்ல ரமணன்?'

'எதை?'

'ரெண்டு பேருமே ஒரே மாதிரி ஃபீல் பண்ணி இருக்கோம்—ஆனாலும் ஏனோ அதை வெளியிடாம இருந்தத நினைச்சா? எதனால சும்மா இருந்தோம்? தயக்கம் வெட்கம் ஒரு தலைப்பட்சமா இருக்குமோன்ற பயம்?'

'எதுவுமே இல்ல...நாம ரெண்டு பேருமே ஸ்ட்ராங் மைண்டட் இன்டிவிஜிவல்ஸ்...தீர்மானமாப் புரிஞ்சுக்காம அவசரப்பட விரும்பல... அவ்ளோதான்...'

'அப்படீன்னா இப்ப உறுதியா தெரிஞ்சுகிட்டோம்னு சொல்லவறியா?'

சிரிப்புடன் யமுனா வினவ, அதே சிரிப்புடன் ரமணன் அப்படித்தான் நினைக்கிறேன்' என, யமுனா தலையை பின்னுக்குத் தள்ளி உரக்க சிரித்தாள்.

பின்—'ஐ லவ் யூ'னு ஒரு வரில ஸிம்பிளா சொல்ல வேண்டியத நீயும் நானும் எப்படி மூக்கை சுத்தி தொட்டு ஒத்துக்கறோம்—பாத்தியா?' என, ரமணன் சட்டென்று முன்னால் குனிந்தான். சிரிப்பில் மலர்ந்திருந்த அவளது ஆதரங்களை மென்மையாக முத்தமிட்டு 'ஐ லவ் யூ யமுனா' என்றான்.

'ஐ லவ் யூ ரமணன்' என்று கூறி அவன் தோளில் யமுனா தலை சாய்த்துக் கொண்ட போது, பீச் ஹவுஸின் பின் வேலி கதவைத் திறந்துகொண்டு மாணிக்கம் வெளிப் படுவதை அவளால் பார்க்க முடிநதது.

# 11

## நான்

ஒரே பார்வை.

புரிந்து விட்டது.

மாற்றம்.

விதை முளை விடுவதும்,மலர் சூல் கொள்வதும், காய் கனிவதும், சிறுமி குமரியாவதும் ஒருநிலையிலிருந்து வேறு நிலைக்குச் செல்வதும் வளர்ச்சியைச சுட்டிக் காட்டும் மாற்றங்கள்.

இதுவும் அப்படித்தானா?

கடற்கரையிலிருந்து வீட்டை நோக்கி வந்து கொண் டிருந்தவர்களை இங்கிருந்து ஏறிடுகையிலேயே அந்த வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள மனசு ஓஹோ! என்றது சந்தோஷமாய்.



கிட்டத்தில் நெருங்கி 'ஹாய் அங்கிள்', 'ஹலோ ஸர்' என்று வாழ்த்திவிட்டு வேறு எதுவுமே பேசாமல், நான் ஒருவன் இருப்பதை மறந்த தினுசில் தேவைக்கு அதிகமான பரவசம், துறுதுறுப்பு, எறிடல்கள் சிரிப்பு என்று அவர் கள் நிற்க, என்ன நடந்திருக்கக்கூடும் என்பதை ஓரளவு துல்லியமாகவே ஊகிக்க முடிந்தது.

'என்ன விஷயம்? ரெண்டுபேரும் தேன் குடிச்ச நரி மாதிரி இருக்கீங்க?' என்றோ, நல்ல சேதி சொல்லப் போறீங்களா? வாழ்த்துக்கள் 'அட்வான்ஸா' தெரிவிச் சுட்டுமா?' என்றோ கேட்க நினைத்து, வாய் வரை வந்து விட்ட கேள்விகளைக் கஷ்டப்பட்டு நிறுத்தினேன்

அவர்களாகவே சொல்லட்டுமே! என்ன அவசரம்? 'ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்கவில்லை என் கிற கதையாய் இந்த முந்திரிக் கொட்டைத்தனம் எதற் காக? நோ. லெட் மீ வெய்ட்...'

தீர்மானித்ததும் எதிரில் நின்றவர்களை ஏறிட்டுப் புன்னகைத்தேன்.

'ஸோ? பீச் ஹவுஸும், கடற்கரையும் எப்படி இருக்கு? பாஸ் மார்க்காவது வாங்குவதா? இன்னும் ஏதாவது இம்ப்ரூப் பண்ணமுடியுமா?' புன்னகை மாறாமல் கேட் டவன் யமுனாவை நோக்கித் திரும்பி, கைகளைக் கூப்பி வணங்கி 'நிபுணரின் கருத்துக்களுக்காக காத்திருக்கிறேன்' என்று பவ்யமாய் கூற, அவன் தலையை பின்னுக்குத் தள்ளி உரக்க சிரித்தாள்.

அதுநாழிகை பீடித்திருந்த மயக்கம் தெளிந்து விட்ட மாதிரி எட்டி என் கையைப் பற்றிக்கொண்டு, வழக்கம் போல உற்சாகம் கண்களில் பிரதிபலிக்கப் பேசினாள்,

'துஸ் ஈஸ் ஃபெண்டாஸ்டிக் அங்கிள்! வீடு, கடற்கரை யோட அழகுல சொக்கி போயிட்டோம், இத்தனை உயர்வா, வித்யாசமா, சரியா சொல்லணும்னா 'மண்

வாசனை'யோட— 'எத்னிக்'கா நீங்க இந்த பண்ணை வீட்டை உருவாக்கத் திட்டமிட்டிருந்தது தெரியாததால், பார்த்ததும் அசந்துட்டோம்! இன்னும் அந்த பிரமிப்பு லேந்து நாங்க மீளல...என்ன ரமணன், நா சொல்றது சரிதானே!'

'நிஜமாவே இந்த இடம் அற்புதமா இருக்கு ஸர். பாராட்டுக்கள். நீங்க செய்யற எந்தக் காரியமுமே அலாதி சிந்தனை, தனித்தன்மையோ விளங்கும்ன்றது. தெரிஞ்ச விஷயம்தான். ஆனாலும் 'பீச்ஹவுஸ்' நாங்க கற்பனை செஞ்சதைவிட, பிரமாதமா. யமுனா சொன்னாப்பல 'எத்னிக்' அழகோட, இருக்கு. ரொம்ப வருஷங்களாகவே எனக்கு ஒரு குறை ஸர். இந்தியால 6000கிலோ மீட்டருக்கும் அதிகமான நீளத்துக்குக் கடற்கரை இருக்கு. ஆனாலும் மேலை நாடு போல கடற்கரையோட அழகை ரசிக்க இன்னும் நம்மெல்லாம் கத்துக்கவேயில்ல. முக்கியமான விசேஷ நாட்கள்ல ஆயிரக்கணக்கானவங்க நடுவுல, கணுக்கால் ஜலத்துல ஓரமா நின்னுக்கிட்டு ராமா, க்ருஷ்ணானு சொல்லி முங்கி எழுந்துக்கறதத்தவிர முக்கால்வாசி இந்தியர்களுக்கு இயற்கையைச் சரியான முறைல அனுபவிக்கணும்ன்ற பிரக்ஞை கூட இல்லையே-னு ரொம்ப ஆதங்கப்படுவேன். ஆனா, அந்த நிலை இப்ப துளித்துளியா மாறிகிட்டு வர்றமாதிரி தோணுது. உங்கள மாதிரி சிலராவது இயற்கையை ரசிக்க முன்வந்திருக்றது ஆறுதலான சமாசாரம்.'

யமுனா ஆச்சர்யத்துடன் 'அடங்கப்பா? என்றாள் உரக்க, தொடர்ந்து என்னைப் பார்த்து என்னமா நா தான் வாய் ஓயாம பேசுவேன்னு சொல்வீங்களே இப்ப என்ன சொல்றீங்க? ஒரு சின்ன கேள்வி. பிடிச்சிருக்கா பதிலை சின்னதா 'பிடிச்சிருக்கு'னு சொல்லி நிறுத்தாமா, மூச்சு விடாம லெக்சர் அடிக்கிற ரமணன் முன்னால, இனி என் அரட்டை வாலைச் சுருட்டிகிட்டு இருக்கற எடம் தெரியாம போயிடும் போல இருக்கே!' என, நான் சிரித்தேன். ரமணன் சீண்டினான்.



'வளவளனு வாயாடறது வேற...அர்த்தத்தோட பேசறது வேற...என்ன ஸர், சரிதானே.'

யமுனா உதட்டைச் சுழித்தாள்.

'பெரியய்ய அர்த்தம்! மேலை நாடுகள்ல கடற்கரையை உபயோகிக்கிற அளவுக்கு நம்ம நாட்டுல அருமை புரிஞ்சு அனுபவிக்கலைன்றது மஹா பெரிய புது விஷயமா? ஏற்கனவே தெரிஞ்சது தானே?'

அவ்வளவோ சாமாசாரங்கள் எல்லோருக்கும் தெரியும்தான். ஆனா. ஏன் இப்படி இருக்கு-னு அடிப்படை காரணங்களை எத்தனை பேர் சிந்திக்கிறாங்க.'

யமுனா பொறுமையின்றி தோள்களைக் குலுகினாள்.

'இது என்ன ப்ரும்ம ரஹஸியமா? ஆராய்ச்சி பண்ணி தெரிஞ்சிக்கறத்துக்கு? பல மேலைநாடுகள்ல வருஷத்துக்கு ஆறு மாசத்துக்கும் மேலேயே குளிர்காலம் நீடிக்கும். வெயில் ரொம்ப கம்மி. அதனால கிடைக்கற வெயில நல்ல விதமா அனுபவிக்க வேண்டி அவங்க கடற்கரைகளைப் பலவிதமாகவும் உபயோகிக்கறாங்க... இந்தியால வெயிலின் கடுமை அதிகம். அவங்கள மாதிரி 'ஸன்பாத்' எடுக்கறேன் பேர்வழினு ஆரம்பிச்சா 'ஸன் ஸ்ட்ரோக்'ல தான் போய் முடியும். இதனாலயே அந்த அளவுக்கு நாள பூராவும் கடற்கரைகளை உபயோகிக்கற பழக்கம் நமக்கு இல்லை...என்ன அங்கிள் சொன்ன விளக்கம் சரிதானே?'

நான் அவளுக்கும் பதில் கூறும் முன் ரமணன் குறுக்கிட்டான்.

'நீ குறிப்பிட்டது ஒரு காரணம் தான், நா மறுக்கல... ஆனா, இதவிட முக்கியமானது இன்னொண்ணு இருக்கு அதுதான் இந்திய கலாசாரம், பண்பு, பாரம்பரிய பழக்கம்! கடல்ல குளிக்க புடவை வசதியான உடை இல்ல. நீச்சல் உடை போட்டுகிட்டு பெண்கள் அன்னிய ஆண்கள்

நடுவுல குளிக்கறது பண்பாட்டுக்குச் சரிபடாதுனு சமுதாயம் நினைச்சது. இதனாலயே குடும்பமா போய் மேல் நாட்டுக்காரங்க அனுபவிக்கற மாதிரியான ஒரு பழக்கம் இங்க வளரல—'

அவனை மேற்கொண்டு பேசவிடாமல் யமுனா கைதட்டினாள்.

'ஆஹா...ஹா...என்ன ஆழமான சிந்தனை! என்ன அபூர்வ கருத்து! எப்பேர்ப்பட்ட கண்டுபிடிப்பு! பெரிய கொலம்பஸ்தான் போங்க...புகழ்ந்தாச்சு— போதுமா?' பேசியவள் என்னிடம் கேட்டாள். 'அங்கிள் நீங்களே சொல்லுங்க...எங்க ரெண்டு பேரோட விளக்கத்துல எது பொருத்தமானது? அர்த்தம் உள்ளது?'

நான் அவள் தோளைத் தட்டிக் கொடுத்தேன்.

'அடடா? இதுல வாதம் பண்ண என்ன இருக்கு; ரெண்டு விளக்கமுமே சரியான காரணங்கள் தான். ஒண்ணு ப்ராக்டிகல், இன்னொண்ணு கல்சுரல்—அது இருக்கட்டும் இத கேளு. அர்த்தமுள்ள பேச்சுனு சொல்றப்போ எனக்கு ஒரு 'ஜோக்' நினைப்புக்கு வருது...சொல்லவா? ஒரு அரசியல்வாதி. தேர்தல்ல நின்னு ஜெயிச்சு மந்திரியாய் கூட ஆயிடறார். ஒருதரம், விஞ்ஞானிகள் நிறைந்த முக்கியமான கூட்டத்துல பத்து நிமிஷத்துல பேசவேண்டிய நிர்பந்தம். உதவியாளர்கள் பேச்சைத் தயார் பண்ணித்தர, குறிப்பிட்ட நாள்ல மேடைக்குப் போயி, உணர்ச்சிகரமா அமைச்சர் உரையை படிக்க ஆரம்பிச்சார், படிக்கிறார்... படிக்கிறார்... கிட்டத்தட்ட அரைமணி ஆகப்போகுது. சபையோர் நெளியறாங்க... ஏதோ தப்புனு புரிஞ்ச அமைச்சர் 'தண்ணி வேணும்'னு கேட்டு உதவியாளரை கிட்ட அழைச்சு என்னப்பா பத்து நிமிஷம்னு சொல்லி முப்பது நிமிஷம் படிக்க வைக்கறே. ஆடியன்ஸ் அலுத்துக்கறாங்க பாரு னு அடிகுரல்ல முறைச்சுப்போ. உதவியாளர் பத்து நிமிஷ பேச்சுதான்.



ஆனா உரையை நீங்க மூணாவது முறையா படிக்கறீங்க ஸார்'னு கிசுகிசுப்பா பதில் சொன்னாராம். எப்படி? பேசறது அர்த்தத்தோட இருக்கணும்னு சொல்றப்பெல்லாம் எனக்கு இந்த துணுக்கு தான் நினைவுக்கு வரும்.'

மூவரும் சேர்ந்து சிரித்தோம்.

நினைவுக்கு வந்த தினுசில் நான் ரமணனைக் கேட்டேன்.

'ஆமா-வாசல்ல நிக்கறதுதான் உன் புது மாருதியா?'

'ரமணன் மாருதி வாங்கப் போறது உங்களுக்கு முன்னாலியே தெரியுமா அங்கிள்?'

யமுனாவின் குரலில் என்னால் நிஜமான கோபத்தை உணர முடிந்தது.

இப்போது சீண்டினால் வெடிப்பாள்,

கண்களைச் சிமிட்டி, சமாதானம் செய்யும் வகையில் புன்னகைத்து சாமர்த்தியமாய் அவள் உணராத மாதிரி பேச்சை மாற்றினேன்.

'நா ஒரு மடையன்! வந்தவங்களை காபி, டீ சாப்பிட றீங்களானு கூட கேக்காம நின்னுகிட்டே பேசிட்டிருக்கேன். நீ மாடிக்குப் போய் பாத்தியா யமுனா? லைப்ரரி-பால்கனி - தூரத்தில நமக்காகப் பொறுமையா காத்திருக்கிற கடல்...பாத்தியா?'

உற்சாகமாய் நான் கேள்வி கேட்டதும் யமுனா மாருதியை மறந்தாள். வீட்டின் அலங்கரிப்பில் துவங்கி ஒவ்வொரு மூலை முடுக்காக விமர்சிக்கத் தொடங்க, பொழுது எந்த வம்பும் இல்லாமல் நகர முற்பட்டது.

மாணிக்கம் கொணர்ந்து நீட்டிய எலுமிச்சை ரஸ பானத்தைக் கையில் எடுத்துச் கொண்டு மாடிக்குச் சென்று சூரிய அஸ்தமத்தை கண்டு களித்தோம்.

சன்னமான நிலவொளியில் லைப்ரரியிலிருந்து அம்ஜத் அலிகானின் ஸரோட் இசை தவழ்ந்து வந்து ஆளை இதமாக வருடிக் கொடுக்க, இரவு உணவை மொட்டை மாடியில் அமர்ந்தபடி உண்டோம், எது எது குறித்தோ பேசினோம். அலசினோம், விவாதித்தோம். நிறைய சிரித்தோம்.

இரவு பத்து மணி அளவில் 'நா குளிச்சிட்டு வந்துடறேன், ஹேய், ரமணன்-இதுதான் சாக்குனு தூங்க ஓடிடாதே' என்று கூறியவாறு யமுனா எழுந்த போது 'ஓ.கே. உனக்கா நா கண் விழிக்க ரெடி. ஆனா, பதிலுக்கு காலை அஞ்சரைக்கு எழுந்து சூரியன் உதயமாறத பார்க்க நீ வரணும்-சரியா?' என்று ரமணன் எதிர் கண்டிஷன் போட, யமுனா உதட்டைக் கடித்து சில நொடிகள் தீவிரமாய் சிந்தித்தாள். பின்னர் 'வேணாம்பா படுத்துக்கப் போறதுன்னா போ-காலைல எழுந்துக்கறது நம்மால ஆகாது...குட் நைட்' என்று அவனிடமும் 'அங்கிள், நா கால் மணில வந்திடறேன்-நீங்க வெயிட் பண்ணுங்க' என்று என்னிடமும் சொல்லி உள்ளே சென்றாள்,

சில நிமிஷங்கள் மௌனமாய் நகர்ந்தன. சூழ்நிலையில் அமானுஷ்ய நிசப்தத்தில் எங்கோ எழுந்த தவளையின் ஜோடிக்கான அழைப்பும், ராக்கோழியின் கத்தலும் பெரிசாய் கேட்டன

ரமணன் எழுந்து கைப்பிடிச்சுவரின் மேல் அமர்ந்து கொண்டான்.

'பீச்ல உட்கார்ந்துகிட்டு இருக்கறப்போ 'டேல் கார்னகி' உண்மையான காதல் நாயோட அன்பைப் போல இருக்கணும்'னு எழுதி இருக்கறதப் பத்தி பேச்சு எழுந்தது. யமுனா அந்த மாதிரி அன்பு சாத்தியம்னு நினைக்கறா-நா இல்லேனு நம்பறேன்-உங்க அபிப்ராயம் என்ன ஸார்?'



தங்களைப் பற்றி எதுவும் குறிப்பிடாமல் ஆனால் நாசூக்காய் காதலைப் பற்றின பேச்சை எடுத்துவிட்ட ரமணனின் சமார்த்தியத்தை பாராட்டும் விதமாய் புன்னகைத்தேன்.

'இயற்கையாய் எழும் உணர்வுகள் மனுஷனுக்குத் தகுந்த மாதிரி மாறுபடும்—அதனால, தீர்மானிக்கப்பட்ட அளவு கோலை உபயோகிச்சு, இது இப்படி, அது அப்படி-னு கட்டம் கட்டறதுல எனக்கு உடன்பாடு இல்லை. தன் தேவைக்கு ஏற்ப ஒருத்தர் நிறைய சாப்பிடறார், எட்டு மணி நேரம் தூங்கறார். இன்னொருத்தர் கொஞ்சம் சாப்பிடறார். நாலு மணிநேரம் மட்டும் தூங்கி எழுந்து ஆனாலும் திடமா மஹா சுறு சுறுப்பா இருக்கார். இதுல எது சரி, எது தப்பு? இரண்டுமே சரி தான். அவரவர் தேவைக்கு எந்த மாதிரியோ, இல்ல சக்திக்கு உடன்பட்டோ இது முடியும், இது முடியாதுன்றதெல்லாம் நிர்ணயம் ஆறது. நாய் காட்ற அன்பை-லவ் வித் அவுட் எனி கண்டிஷன்-அதாவது எந்த பிரதிபலனும் எதிர்பார்க்காத அன்பைக் கொடுக்க-சிலரால் கட்டாயம் முடியும், சிலரால் முடியாது. இது அவரவர் ஸ்வபாவத்தைப் பொறுத்திருக்கு. நா சொல்றது புரியறதா?

விளங்குகிறது என்ற ரமணன் தலை அசைக்க, நான் தொடர்ந்தேன்.

'நா எழுதியிருக்கிற 'இதுவும் ஒரு தாஜ்மகால் தான்'ன்ற நாவலைப் படிச்சிருக்கியா?'

ரமணன் எழுந்து நின்று வியப்புடன் கேட்டான்.

'இல்லையே ஸர்-எந்த பத்திரிகைல தொடர வந்தது? எந்த வருஷம்? எப்படி நா படிக்காம இருந்தேன்?'

'அந்த விவரமெல்லாம் இருக்கட்டும்-முதல்ல அந்தக் கதை சுருக்கத்தைச் சொல்றேன் கேளு-லட்சுமணன்னு

ஒருத்தர். வயசு ஐம்பதுக்கும் மேலேயே. முப்பத்தைஞ்சு வருஷத்துக்கு முன்னால் பிரஸிடென்ஸி காலேஜ்ல படிக்கறப்போ ஒரு சக மாணவிய மனசார விரும்பினார். அவங்க நெருங்கிப் பழக ஆரம்பிக்கறதுக்கு முன்னால, அப்பா செத்துப் போனதுல லட்சுமணன் கிராமத்துக்கு வந்து பண்ணைப் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலை. அந்தப் பெண் மாலதியோட அப்பாக்கு ட்ரான்ஸ்பர் ஆகி, எங்கோ போயிட்டா. லட்சுமணனால மாலதியை மறக்க முடியல, தம்பி. தங்கைகளுக்குக் கல்யாணம் செஞ்சு வைச்சு கடமைகளை முடிச்ச பிறகு, ஊருக்கு ஒதுக்குப்புறமா ஆத்தங்கரை ஓரத்துல ஒரு அழகான வீட்டைக்கட்டி அதுக்கு 'மாலதி'னு பேர் வச்சார். வீட்டு பாத்திரங்கள்ல 'மாலதி லட்சுமணன்'னு அர்த்தம் கொடுக்கற மாதிரி 'எம். எல்'னு வார்த்தைகளைச் செதுக்கினார். இன்னிக்கும் ரொம்ப நிம்மதியா, மனசுகமா அவளோட குடும்பம் நடத்தறார்-அவருக்கு...'

நான் முடிக்கும் முன் ரமணன் 'ப்ச்' என்று சூள் கொட்டி குறுக்கிட்டான்.

'நம்ப முடியாம இருக்கு ஸர்...'

நான் சிரித்தேன்.

'கதைனு எடுத்துகிட்டா வேணா நம்ப வேணாம்... ஆனா. இது உண்மையா நடந்த நடந்துகிட்டு இருக்கற விஷயம் ரமணன், லட்சுமணன் என் ஸ்னேகிதர். இப்ப என்ன சொல்றே?

ரமணன் தோளைக் குலுக்கி, பதில் சொல்லத் தெரியவில்லை என்பது போலக்கைகளை விரித்தான்.

மெள்ள நடந்து அவனருகில் சென்று கைப்பிடிச் சுவரில் உட்கார்ந்தேன். 'காதலைப் பத்தி உன் விளக்கம் என்ன ரமணன்?'



'நாம நேசிக்கிற ஒருத்தரை சந்தோஷப்படுத்தறது தான் காதலோட அர்த்தம்னு நினைக்கறேன் ஸர்.'

'சரி-ஏன் ஒருத்தரை சந்தோஷப்படுத்தணும்? அது பத்தி யோசிச்சியா?'

ரமணன் புருவங்களை உயர்த்தினான்,

'ஏன்னா, அவரை நான் காதலிக்கறேன்-இல்லாட்டா நேசிக்கறே—'

நான் பக்கத்தில் தட்டி அவனை அருகில் உட்காரும் படி சைகை செய்தேன்.

அமர்ந்தான்.

'நா கேக்கறத நீ புரிஞ்சுக்கலை...ஒருத்தரை நேசிக்கறதால, அவரை சந்தோஷப்படுத்த நினைக்கறே-சரி, பட், வொய்?'

'புரியல ஸார்.'

'எனக்குப் புரியல அங்கிள்' என்றவாறு யமுனா எங்களை நோக்கி வர, 'நீ எப்ப வந்தே?' என்றேன்.

'நீங்க லட்சுமணன் கதை சொல்றப்பவே—' என்று பதில் கூறியவள் எனக்கு இந்தப் பக்கமாய் கைப்பிடிச் சுவர் மேல் ஏறி அமர்ந்து கொண்டாள்.

வெள்ளை நைட் ட்ரெஸ். ப்ரஷ் செய்யப்பட்டுப் பறந்த முடி, 'ஷானல்-5' சென்டின் மணம்.

உன் பக்கத்துல நா ரொம்ப அழுக்கா இருக்கற மாதிரி ஃபீல் பண்ணறேன், போய் ஒரு காக்காய் குளியல் குளிச்சிட்டு வந்திடட்டுமா?'

'ம்ஹூம்-அப்புறமா குளிச்சுக்கலாம். முதல்ல உங்க புதிர் கேள்விக்குப் பதில் சொல்லுங்க அங்கிள்.'

அவள் புறங்கையில் செல்லமாகத் தட்டினேன்.

'இதுல புதிர் ஒண்ணும் இல்ல, கொஞ்சம் யோசிச்சா உங்களுக்கே புரிஞ்சிடும். நேசிக்கறவரை சந்தோஷப்படுத்தறது ஆக்ஷன்-அவரது சந்தோஷம் நம்மை சந்தோஷப்படுத்துவது ரியாக்ஷன். அதாவது நமக்கு மகிழ்ச்சி தர்றதனாலயேதான் பலருக்கு மகிழ்ச்சி தர்ற பல காரியங்களை நாம செய்யறோம்—அதப் புரிஞ்சுக்கணும்.'

'அப்ப, காதலிக்கறதும்கூட சுயநலத்துக்காகத்தானா அங்கிள்?'

நான் சப்தமில்லாமல் சிரித்தேன்.

'எல்லாத்துக்குமே சுயநலம்தான் காரணம் யமுனா. கொடையாளியா, ஊருக்கு உபகாரியா, பொதுநலத் தொண்டு செய்யறவரா வாழறது கூட ஒருவித சுயநல அடிப்படைலதான். 'நான் உயர்ந்த மனுஷனா இருக்கேன்—நல்லவனா வாழறேன்'ன்ற நிறைவு கூட சுயநலமானதுதானே! ஆனா, இது ஆரோக்யமான சுயநலம். இதனால் சமுதாயத்துக்கு நல்லதுதான் நடக்குது. இதுக்கு மாறா 'தான் தன் சுகம்' மட்டும் பிரதானமா இருக்கறப்போதான் பிரச்சனைகளே உருவாகுது. என்ன நா சொல்றது புரியுதா இல்லையா!'

'அப்படீன்னா, லட்சுமணனோட காதல், எதை, யார் கிட்ட நிரூபிக்கறது?'

'தனக்குத்தானே தான் நிரூபிச்சுக்கறார், ரமணன் தன்னோடது தெய்வீகக்காதல்-ன்ற நிறைவு-என்னிக்கோ காதலிச்ச பெண்ணுக்காக இத்தனை தியாகம் பண்ணி வாழற சந்தோஷம் அவருக்குள்ள நிறையவே இருக்கு. ஆனா, லட்சுமணன் விஷயம் ரொம்ப அபூர்வம். நூத்துக்குத் தொண்ணுத்தி ஒன்பது பேர் இப்படி இருக்க மாட்டாங்க. அடிப்படை பாதுகாப்புகளுக்கு கேடு விளையும்



போது காதலும், அன்பும் ஓட்டமாய் ஓடிமறையறத நா பல சமயங்கள்ல பார்த்திருக்கேன்.'

'அடிப்படை பாதுகாப்பு-னா?'

'சாப்பாடு, துக்கம், நிம்மதி—எல்லாமே அடிப்படைத் தேவைகள், இத ஒருத்தருக்காக மத்தவங்க செய்ய முடியாது. 'உன் மேல எனக்கு உயிர். அதனால உனக்குப் பசிக்கறப்போ நா சாப்பிடறேன், இல்ல தூக்கம் வர்றப்போ தூங்கறேன்'னு ஒருத்தர் சொன்னா, போனாப் போறதுனு ஒரு நாள், ரெண்டு நாள் பொறுத்துப்போம். அப்புறம் 'உன் அன்பும் வேண்டாம். உனக்கு நா உயிராகவும் இருக்கவேண்டாம். என்னைச் சாப்பிட, தூங்க விடு'னு சொல்லிடுவோம். ஆக, லவ் ஈஸ் கண்டிஷனல். அதாவது தன் நிம்மதி, அடிப்படை தேவைகளுக்குக் குந்தகம் வராத வரையில் காதலிப்பதும், அன்பு கொடுப்பதும் யாருக்கும் சாத்தியம். அந்த பேஸிக் செக்யூரிட்டிகள் ஆட்டம் காணறப்போ—பல சந்தர்ப்பங்கள்ல காதலும் மறஞ்சு நா பார்த்திருக்கேன்.'

யமுனா இறுக்கத்துடன் எழுந்து நின்னு 'ரொம்ப குதர்க்கமான விளக்கமா தெரியுது அங்கிள், என்று முணுமுணுத்தாள். மேற்கொண்டு எதுவும் பேசாமல் மொட்டைமாடியைச் சுற்றி வந்தாள் ரமணன் அருகில் நின்றாள்.

'லவ் பத்தி புது கண்ணோட்டத்துல சிந்திக்க வைச்சிருக்கீங்க அங்கிள். தனியா உட்கார்ந்து யோசிச்சா தான் நீங்க சொல்ற கருத்துக்களைப் புரிஞ்சுக்க முடியும்...'

பேசியவள் திடுமென இளகியதுபோல கண்களைச் சிமிட்டினாள்.

'அது இருக்கட்டும்—குணத்துல முரண்படற ரெண்டு பேர் காதலிக்க முடியுமா அங்கிள்?'

'ஓ! விஷயத்துக்கு வருகிறானா?

நான் பதிலுக்குக் கண்களைச் சிமிட்டினேன்.

'ஏன் முடியாது? பாஸிடிவ், நெகடிவ் சேர்ந்தா மின்சாரம் உண்டாறதை மறக்கலாமா?'

யமுனா தலைய பின்னுக்குத் தள்ளி சிரித்தாள்.

ஸ்வாதீனமாய் ரமணனின் கையைப் பற்றிக்கொண்டு சந்தோஷத்தோடு அவனிடம் வினவினாள்.

'மின்சாரம் உற்பத்தி பண்ண நாம தீர்மானிச்சிருக்கறத அங்கிள்கிட்ட இப்பவே சொல்லிடலாமா, ரமணன்?'

# 12

**ரமணன்**

ப்ளப்...

ஓசையைத் தொடர்ந்து நீரின் மேல் மட்டத்தில் சின்னச் சின்ன வட்டங்கள் தோன்றி, விரிந்து, நகர்ந்து மறைந்தன.

தண்ணீரில் கல் விழுந்த அதிர்ச்சியில் சடும்மென்று தாவி ஓடிய மீன்கள், ஒரு சில நொடிகளில் ஆபத்து ஏதும் இல்லை என்பதைப் புரிந்து கொண்டு, கல் பயணித்துச் சென்ற பாதையை ஆர்வத்துடன் மொய்த்துக் கொள்ள, ரமணன் புன்னகைத்துக் கொண்டான்.

அந்தக் குளம் அப்படியொன்றும் பெரியதோ இல்லை ஆழமானதோ இல்லை. மிஞ்சிப் போனால் இருபதடி வட்டம், ஒண்ணரை அல்லது இரண்டு அடிகள் ஆழம் இருக்கும். அவ்வளவுதான்.



குளத்தின் நடு மத்தியில் கிட்டத்தட்ட இரண்டு ஆள் உயரத்திற்கு வளர்ந்திருந்த நீர்த் தென்னை மரங்கள். அவற்றில், செயற்கையோ—என்று புருவங்களை உயர வைக்கும் நூதன பூக்கள். ஆழமில்லாத தண்ணீரில் குறுக்கும் நெடுக்கும் ஓடிய கறுப்பு மீன்கள். தரை தெரியாமல் இங்கும் அங்கும் படர்ந்திருந்த பாசிக் கொடிகள்!

குளத்தின் குட்டைச் சுவரில் ஒரு காலை வைத்து நீரில் அப்பாவிகளாய் விளையாடி மீன்களைக் கவனித்த ரமணனுக்கு மீண்டும் அவைகளைச் சீண்ட ஆசை எழுந்தது!

ஓரடி தள்ளிக் கிடந்த பொடி கூழாங்கல்லை எடுத்து நீருக்குள் வீசினான்.

'ப்ளப்'...நெளிந்து பரந்து, கரைந்த நீர் வட்டங்கள் தாவி மறைந்து, உடனேயே துறுதுறுப்போடு பழைய இடத்துக்கு வந்து 'என்ன சமாச்சாரம்?' என்று மூக்கை நீட்டும் மீன்கள்...

ஆள்காட்டி விரல் நீளத்துக்கு கறுப்பு வண்ணத்தில் துள்ளிய மீன்களை ஏறிடுகையில் சின்ன வயசில் கேட்ட 'தங்க நிலவில் கெண்டை இரண்டு துள்ளித் திரிவதுண்டோ?' என்கிற படப்பாட்டு நினைவுக்கு வந்து, இந்த மீன்கள் கெண்டைகளா?

கெண்டை மீன்கள், பெண்களின் கண்கள் போல இருக்கும் என்பார்களே, இவை அப்படியா தோற்றமளிக்கின்றன?

முழங்கால் மேல் கைகளை ஊன்றிக் கொண்டே ரமணன் குனிந்து மீன்களைக் கவனித்தான்.

குறுகி, விரிந்து, மறுபடியும் கூம்பி...

மேலேயும், கீழேயும் மானசீகமாக இமைகளை வரைந்து விட்டால், அட, பெண்ணின் கண் மாதிரிதான் இருக்கிறது!

அடுத்த நொடி ரமணனின் எண்ணம் மாறியது.

யமுனாவின் கண்கள் எப்படி இருக்கும்?

நினைவுக்குக் கொண்டு வரப் பார்த்தான்.

துல்யமாய் கற்பனை பண்ணுவது சிரமமாக இருந்தது.

நாலு மாசங்களுக்கும் மேலாய் தினமும் சந்தித்தும், கிட்டத்தில் பார்த்தும், முத்தம் கொடுக்கும் அளவுக்கு நெருங்கிப் பழகியிருந்தாலும் என்ன முயன்றும் மனசுக்குள் அவள் அங்கங்களைக் கச்சிதமாய் வரைய முடியாதது அவனுக்கு ஆச்சர்யத்தை உண்டு பண்ணியது.

அடி உதட்டைக் கடித்துக் கொண்டு, மீண்டும் முயற்சித்தான்.

சுருட்டை இல்லாத கழுத்தோடு வெட்டப்பட்ட 'ஸ்ட்ரெய்ட் ஹேர்'—சரி. வகிடு உண்டா கிடையாதா? சில நாட்களுக்கு உண்டு. சில சமயங்களில் தூக்கி வாரிவிடுவது தான் வழக்கமோ? காற்றில் முடிக்கற்றை பறந்து, நெற்றியில் விளையாடுவது நினைவுக்கு வந்ததே தவிர, மற்ற விவரங்களைப் புள்ளி குத்த முடியவில்லை. நெற்றி புருவங்கள், அவை எப்படி வளைந்திருக்கும்? புருவத்தை ஒட்டி ஒருவடு இருக்குமே! 'சின்ன வயசுல மாடிலேந்து விழுந்தப்ப தையல் போட்ட காயம்!' எந்தப் பக்கம் அது? வலது? அப்புறம் அந்த மூக்கு...சற்றே தூக்கலாய் தெரியும் மூக்கு நுனியில் முத்தமிடுவது அலாதி சுகம் சிறகுகளை விரித்துக் கொண்டு பறக்கும் பறவை மாதிரியான மேல் உத...

வயதான இரு வெளிநாட்டுப் பெண்மணிகள் தழைந்த குரலில் பேசியவண்ணம் எதிர்ப்பக்கத்திலிருந்து நடந்து வந்து, இவனைத் தாண்டி குளத்தைச் சுற்றிக் கொண்டு வெளியே போகும் பாதையில் செல்ல, அது நாழிகை



பரவ சத்தோடு சிந்தனையில் ஆழ்ந்திருந்த ரமணன் சட்டென்று தன்னை உலுக்கிக் கொண்டான்.

இந்த ரீதியில் தான் கற்பனை பண்ணுவது யமுனாவுக்குத் தெரிந்தால் என்ன நினைப்பாள் என்கிற கேள்வி எழுந்து ஒருவித குற்ற உணர்வை தூண்ட, என்ன அசட்டுத்தனம் என்று தனக்குத்தானே கடிந்து கொண்டான்.

நிமிர்ந்தான்.

கொஞ்சம் நடந்து தொலைவில் தெரிந்த வெளிவாயிலை ஒட்டி இருந்த லைப்ரரி கட்டடத்திலிருந்து யமுனா வெளிப்படுகிறாளா என்று பார்த்தான்.

ம்ஹூம், இல்லை.

அவன் நின்றிருந்த இடத்திலிருந்து வெளியே செல்லும் 'கேட்'டும், லைப்ரரி கட்டடமும் கிட்டத்தட்ட ஒரு பர்லாங் இருக்கும் என்றாலும் சாலை சுத்தமாய் ஜனநடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் கிடந்ததில் இங்கிருந்து அங்கு நன்றாய்ப் பார்க்க முடிந்தது.

'தியாசபிகல் சொஸைடி லைப்ரரில சில புஸ்தகங்கள திருப்பிக் கொடுக்கணும். நா கொஞ்சம் முன்னால கிளம்பி வீட்டுக்குப் போயிட்டு, குளிச்சு, ட்ரெஸ் மாத்திகிட்டு, புஸ்தகங்களோட லைப்ரரிக்குப் போயிடறேன். நீ அஞ்சரை மணிக்கு சொஸைடிக்கு வந்து ஆலமரத்துக்குப் பக்கத்துல இருக்கற குளத்துகிட்ட காத்துகிட்டு இரு. ஐம் கம் அண்ட் ஜாயின் யூ...அங்கேயிருந்து சேர்ந்து போயிடலாம். என்ன சொல்றே?'

அன்றைக்கு அவர்கள் திருமண அழைப்பிதழ் அச்சடிக்கக் கொடுக்கச் செல்வதாக இருக்கிறார்கள். என்ன செய்யலாம், எப்போது போகலாம் என்று காலையிலிருந்தே ஒன்று மாற்றி ஒன்றாக பிளான் போடுவது தடபுடல்

பட்டாலும்; ஏனோ நினைத்ததை உடனே செய்துவிட முடியாதபடி ஏதேதோ இடைஞ்சல்கள்.

முதலில் காலையில் அலுவலகத்திற்கு வரும் வழியில் அச்சகத்துக்குப் போவது என்று தீர்மானித்தார்கள். ஆனால், ப்ரெஸ் உரிமையாளர் தனக்குச் சொந்த வேலை இருப்பதால் பதினொரு மணிக்குமேல்தான் வரமுடியும் என்று கூறிவிட்டார். மதிய உணவு இடைவேளையில் போய் வரலாம் என்று நினைத்ததையும் செய்யமுடியாமல் ரமணனுக்கு வெளியே போகும் வேலை எதிர்பாராமல் வந்து விட்டது. கடைசியாய் மாலையில் செல்வதாக முடிவு செய்தபின்னர், தியசாபிகல் சொஸைடியில் சந்திக்கலாம் என்று யமுனா சொல்ல, ஆபீஸிலிருந்து ஒன்றாகவே போக விரும்பிய ரமணன் ஏமாற்றத்துடன் வினவினான்.

'புஸ்தகங்கள் இன்னிக்கேதான் திருப்பித் தரணுமா யமுனா? 'இன்விடேஷன்' அச்சடிக்க கொடுக்கறத செஞ்சிட்டு, மத்தது இன்னொரு நாள் கவனிக்கக் கூடாதா?'

யமுனா முடியாது என்று தலை அசைத்தாள்.

'திருப்பிக்கொடுக்கறதுகூட முக்கியம் இல்ல ரமணன். அம்மா கேட்டிருந்த சிலபுக்ஸ் இன்னிக்குதர்றதா சொல்லி இருக்காங்க...ஸ்கூல்ல லெக்சர் கொடுக்க, அம்மாவுக்கு அந்த புஸ்தகங்கள் உடனடியாக தேவைப்படுது...ஆறு மணிக்கு தானே ப்ரெஸ்ஸுக்கு வரோம்னு சொல்லி இருக்கே...நா பர்மிஷன் போட்டுட்டுக் கிளம்பப் போறதால, சொன்ன நேரத்துக்குப் போயிடலாம்...டோண்ட் ஒர்ரி...'

'உன் வண்டிய என்ன பண்ணறது?'

'எங்க வீட்டுலேந்து சொஸைட்டி காலை வீசிபோட்டு நடந்தா பத்து நிமிஷ நடை. பொடி நடையாவே வந்திடறேன் என்ன, ஆச்சர்யமா இருக்கா? என்னடா இவகூட



நடக்கறேன்னு சொல்றாளே - னு! எனக்கே கவலையாதான் இருக்கு! என் காத்து உன்மேல அடிச்சு நீ மாறாட்டாலும், உன் ரசனை எனக்கு வந்து நா மாறிட்டு வரேனோனு.'

பொய் கலவரத்துடன் பேசிவிட்டு, யமுனா கண்களைச் சிமிட்ட, விளையாட்டுக்காக அவள் அப்படி கூறுவது கூட அந்த நிமிஷம் ஏகத்துக்கு சந்தோஷத்தைத் தந்தது இப்போது ஞாபகத்துக்கு வந்து குட்டியாய் புன்னகை செய்தது

ரமணன் மெள்ள நடந்து ஆலமரத்தைச் சுற்றி போட்டிருந்த வேலிக்கருகில் சென்று நின்றான்.

பிரும்மாண்டமாய், விழுதுகளைத் தரையில் ஊன்றி ஏராளமான கிளைகளோடு ராட்சஸத்தனமாய் வளர்ந்திருந்த உலகப் புகழ்பெற்ற அந்த அடையாறு ஆலமரத்தை ஊன்றிப்பார்க்கையில் முதன் முதலாய் ராமக்ருஷ்ணா மிஷின் பள்ளியில் ஐந்தாவதோ, ஆறாவதோ படிக்கும்போது கும்பலாய் வந்து போனது நினைவில் எட்டிப் பார்த்தது.

அப்புறம் எத்தனை தடவைகள்? கணக்கே இல்லை. அதுவும் விடுமுறை நாட்களில் காலார நடக்க வேண்டும் என்கிற ஆசை பிறந்துவிட்டால், ராஜா அண்ணாமலை புரத்திலிருந்து அடையாறுக்கு வந்து, தியசாபிகல் சொஸைடியில் நுழைந்து, அசல் காடாகவே பராமரிக்கப்பட்டு வரும் அந்தப் பகுதியில் அடையாறு நதி கடலில் சங்கமமாகும் இடம் வரை சென்று, முழுசுமாய் சுற்றி ஓய்ந்து, களைத்து, ஆனால் மிகுந்த உற்சாகத்துடன் திரும்பிய நாட்கள்தான் எத்தனை.

சென்னையில் பிறந்து, வளர்ந்து, முழுக்க முழுக்க சென்னைவாசிகளாகவே வாழும் நபர்களில் எத்தனை பேர்களுக்கு இப்படி ஒரு இடம் இங்கு இருப்பதோ,

அல்லது விண்ணைத் தொட்டு விடுகிறமாதிரி உயர உயர மாய், சரம் சரமாய் தொங்கும் பூக்களோடு, மெலிதாய் மணம் பரப்பும் நாகலிங்க, சரக்கொன்றை, தேக்கு, மா, தென்னை மரங்களும் வானத்தை மறைத்துக் கொண்டு வளர்ந்து நானாவித பறவைகள் கூடுகட்டி வாழும் பலரக மரங்களும் கொண்ட நந்தவனத்தை ஒரு முறை சுற்றி வந்தால் மனசுக்குள் நிம்மதி தானாய் ஏறி உட்கார்ந்து விடும் என்பதோ தெரியும்?

இவைகளைத் தவிர, இந்த சொஸைடியினுள்...

மேற்கொண்டு சிந்திக்க விடாமல் கண்கள் 'ஹேய்' என்று குரல் கொடுத்து, கடிவாளம் போட்டன.

தூரத்து லைப்ரரி படிகளில் யமுனா!

இவனையும், இவன் மாருதியையும் அங்கிருந்தே பார்த்துவிட்ட குஷியில் அவள் கையை வீச, பதிலுக்கு ரமணனும் உற்சாகத்துடன் கை அசைத்தான்.

கால்களை அகல அகலமாய் வைத்து வண்டியை நெருங்கினவன், உள்ளே உட்கார்ந்து, கிளப்பினான்.

பத்து நாட்கள்.

எண்ணி பத்தே நாட்கள்.

அந்த ஞாயிறு தங்கள், காதலை வெளிப்படுத்திக் கொண்ட பிறகு, இன்னும் ஒரு ஞாயிறு இப்போது மேற் கொண்டு மூன்று நாட்கள். ஆக மொத்தம் பத்தே நாட் கள். அதற்குள் இவன் அவள் தாயைச் சந்தித்து, அவள் இவன் வீட்டுக்கு வந்து, இரண்டு பக்க பெரியவர்களும் திருமணத்திற்கு மனப்பூர்வமாய் சம்மதம் தந்துவிட்டதில் எந்தவித பிரச்னையும் இன்றி அழைப்பிதழ் அச்சடிக்கக் கொடுக்கும் வரை விஷயம் வளர்ந்துவிட்டது என்பதை நினைக்கும் போது கொஞ்சம் நம்ப முடியாமல் கூட இருந் தது.



கல்யாணமா? எனக்கா? யமுனாவுடனா? அதுவும் வருகிற இருபத்தி நான்காம் தேதியா?

எகிறி குதித்து வாய் விட்டுச் சிரிக்க வேண்டும் போல இருக்க, ரமணன் வண்டியின் வேகத்தை அதிகப் படுத்தி னான்.

தூரத்தில் தெரிந்த யமுனா கிட்டத்தில் வர வர, மனசு ஹா ஹா என்று கட்டுக்கடங்காமல் பரபரத்தது.

திருமணத்திற்கு எந்தவிதத் தடையும் இருக்காது என்று அவர்கள் எதிர்பார்த்தது போல இருபக்க வீட்டாரும் உடனடியாய் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்து விட்டார் கள்தான்!

யமுனாவின் தாய் மங்கையர்கரசியை அவருடைய பாடசாலையில்தான் ரமணன் முதல் முறையாய் சந்தித் துப் பேசினான். யமுனாவிடம் ரசிக்கும் விசேஷ தனித் தன்மையை அவள் அம்மாவிடம் மட்டுமல்லாது அவர் நிர் வகிக்கும் பள்ளிக் கூடத்திலும் உணர்ந்த குதூகலத்தில் எந்தவித தயக்கமும் இன்றி ரொம்ப நாள் பழக்கம் போல நீண்டநேரம் பள்ளியில் தங்கி பல விஷயங்கள் குறித்து வருங்கால மாமியாரோடு பேசி முடிய, மறுநாள் யமுனா கூட இது குறித்து அவனைக் கேலி செய்தாள்.

'என்ன-பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் போல ஸ்வாரஸ் யத்தோட அத்தனை கேள்விகள் கேட்டியாமே! எங்கம்மா வுக்கு வாயெல்லாம் பல்! மாமியாருக்கு சரியா ஐஸ் வைச்சுட்டே! கெட்டிகாரன்பா நீ! ஆமா-அத்தனை அரட்டை அடிச்சிருக்கே, ஆனா, மேடம், மேடம்னு தான் கூப்பிட்டியாமே' ஏன் ரமணன்! 'ஆண்ட்டினு உரிமையோட சொல்லியிருக்கலமே-னு அம்மாவோட ஆச்சர்யப் பட்டாங்க!'

'மேடம்னு கூப்டா தப்பா யமுனா?'

'தப்பு ஒண்ணுமில்ல...ஆண்ட்டினு சொன்னா உறவு மாதிரி இருக்கும். அவ்ளோதான்...இப்ப உங்க அப்பா, அம்மாவ நா அங்கிள், ஆண்ட்டினுதானே கூப்பிடறேன்.'

'அது உன் இஷ்டம்...எனக்கு உங்கம்மாவ மேடம்னு கூப்பிடதான் விருப்பம்...'

'இது உன் இஷ்டம்'—அவனைப் போலவே சொல்ல தலையை பின்னுக்குத் தள்ளி யமுனா சிரித்தது நினைவுக்கு வர, ரமணன் ப்ரேக் போட்டு வண்டியை நிறுத்தினான்.

'ஹாய்'

'ஹாய்-நீ வர்ற வேகத்த பார்த்து, எங்க நா நிக்கறது கூட தெரியாம தாண்டிப் போயிடுவியோனு பயந்திட்டேன்!'

ஏறி அருகில் உட்கார்ந்த யமுனா அவன் தொடையில் செல்லமாய் கிள்ளினாள்.

'என்னப்பா அவ்ளோ வேகம்!'

ரமணன் இரண்டு பக்கமும் பார்வையை அலைய விட்டான். யாரும் அருகில் இல்லை என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு குனிந்து அவளை முத்தமிட்டான்.

'இதுக்குதான்!'

யமுனா வலக்கையால் அவன் தலைமுடியைக் கோதி, நிஜமான வியப்புடன் பேசினாள்.

'ஆனாலும் நீ ரொம்பத்தான் மாறிட்ட ரமணன்! நாலு மாசம் முன்னால பார்த்தப்ப சாதுவா, பூனைகுட்டியாட்டம் இருந்த ஆளா இதுனு எனக்கே சந்தேகமா இருக்கு!'



'எல்லாம் உன் சகவாசதோஷம்தான்!'

யமுனா சிரித்தாள்.

'அப்படியா? வெரிகுட்! அடுத்தவங்ககிட்ட இருக்கற நல்ல குணங்கள் கத்துக்கணும்ற புத்தி இப்பவாவது வந்ததே பக்தா, உன் பக்தியை மெச்சினோம்? என்ன வரம் வேண்டும் கேள்!'

'புத்தி ரொம்பவே வந்து விட்டது தேவி—ஏழைக்கு தற்சமயம் ஒரு 'கிஸ்' வேண்டும்—அப்படித் தள்ளி உட்கார்ந்து ஏனோ தானோ என்று கொடுக்காமல், கிட்ட வந்து, கட்டிக் கொண்டு, உதட்டில், அழுத்தமாய்...'

ரமணன் விவரித்துக் கொண்டே குனிய, அவன் மார்பில் இரு கைகளையும் வைத்து பின்னுக்குத் தள்ளி 'வாட்ச்மேன் பார்த்துகிட்டே இருக்கார்! விளையாடம வண்டிய எடு' என்று சொல்லி, தலையை பின்னுக்குத் தள்ளி உரக்க யமுனா சிரிக்க, அந்தச் சிரிப்பில் பங்கெடுத்தவாறே நகர்ந்து உட்கார்ந்த ரமணன் வண்டியைக் கிளப்பினான்.

# 13

**யமுனா**

'மிஸ்டர் அண்ட் மிஸஸ் சுந்தரம், நம்பர் 7 பாரதியார் காலனி...

யமுனா உரக்க விலாசங்களைப் படிக்க, ஒவ்வொன்றாக அமைப்பிதழ் உறையின் மீது எழுதின ரமணன், செய்து கொண்டிருந்த காரியத்தை நிறுத்தாமலேயே கேட்டான்.

'எந்த சுந்தரம் யமுனா? 'வேளை வரலை' யா?

யமுனா சிரித்தாள்.

'இல்லப்பா...இது வேற...'பாடசாலை' மேனேஜர்...'

விலாசத்'தை எழுதி முடித்த ரமணன் தொடர்ந்தான்.

'ஓ! முன்னாலியே கேட்கணும்னு நினைச்சேன். மறந்திடுச்சு...உங்க ஆபீஸ்ல நேத்துதான் விஷயத்தைச் சொல்லப் போறேன்னு சொன்னியே! ரியாக்ஷன் என்ன? முக்கியமா 'வேளை வரலை' என்ன சொல்கிறார்?'

'என்ன சொல்வார்? ஒரு வருஷமா ஓரே கட்டடத்துல வேலை பண்ணியும் வேளை வராததால நீங்க ஒருத்தரை ஒருத்தர் சந்திக்கலை, இப்ப வேளை வந்திடுச்சு...அதான், தடதடனு நினைச்ச நினைப்பில்லாம எல்லாம் நடக்குது'னு அடிச்சுச் சொல்கிறார்! நேத்து லஞ்ச் அவர்ல மனுஷன் அறு அறுனு அறுத்துட்டார். ஆமா ஸார். நீங்க சொல்றது நாத்துக்கு நூறு சரி-னு சொல்லி பேச்சை முடிச்சேன், இல்லாட்டி பின்னாலியே வந்து செவுத்துக் கோழி மாதிரி விடாம தான் சொல்றதையே சொல்லிவிட்டு இருப்பார், மத்தபடி ஆபீஸ்ல எல்லாருக்கும் ஏக சந்தோஷம்- ஒண்ணு ரெண்டு பேர், நாம நாலு மாசமா பழகினதை வச்சுகிட்டு 'அ', எங்களுக்குத் தெரியும் இது கல்யாணத்துலதான் கொண்டு விடும்-னு அதான் மாசக் கணக்கா காதலிக்கறீங்களே!'னு ரொம்ப தெரிஞ்ச மாதிரி அலட்டி கிட்டாங்க, அவங்க சந்தோஷத்தைக் கெடுப்பானேன்னு நானும் எந்த விவரமும் சொல்லாம சிரிச்சுக்கிட்டே இருந்துட்டேன்.'

கையிலிருந்த விலாச புத்தகத்தை யமுனா கீழே வைத்தாள். இரண்டு கைகளையும் முதுகுக்குப் பின்னால் கொண்டு போய் சோம்பல் முறித்தாள், எழுந்து நின்றாள்.

'எங்கே கிளம்பிட்டே? இன்னும் கால்வாசி விலாசங்கள் கூட எழுதி முடிக்கல!'



'போய் தீனி ஏதாவது எடுத்துகிட்டு வரேன்! கொறிச்சுகிட்டே வேலை செஞ்சா ஸ்வாரஸ்யமா இருக்கும்,

ரமணன் 'ட்ச்' என்று சூள்கொட்டினான். எனக்கு வேண்டாம் என்கிற அர்த்தத்தில் தலை அசைத்தான்,

'கைமுறுக்கு, சிப்ஸ், கேக்? எதுவுமே வேணாமா! சரி சூடா காபி?'

இதற்கும் வேண்டாம் என்று ரமணன் மறுக்க, ஏம்பா என்றாள் யமுனா.

'மணி என்ன? நாலு கூட ஆகலை! இரண்டு மணிக்கு தான் மூக்கு முட்ட சாப்பிட்டிருக்கோம்! அதுக்குள்ள 'நொறுக்கு தீனியா! ஆளைவிடு... சாப்பாட்டுக்கு இடையில கண்டது தின்றதெல்லாம் எனக்குப் பிடிக்காது.'

'எனக்குப் பிடிக்குமே!'

'அப்ப, நீ சாப்பிடு...எனக்கு வேணாம்.'

கராறாய் பேசியவனை யமுனா கண்கள் இடுங்க ஏறிட்டாள்.

'நீ ஏம்பா இப்படி இருக்கே?'

'எப்படி?'

'கொஞ்சம் கூட 'ரிலாக்ஸ்' பண்ணாம ஏகப்பட்ட கட்டுப்பாட்டோட!'

ரமணன் புன்னகைத்தான்.

'நீ என் இப்படி இருக்கே யமுனா, துளிகூட கட்டுப்பாடு இல்லாம—னு பதிலுக்கு நா கேட்கட்டுமா?'

யமுனா தலையைப் பின்னுக்குத் தள்ளி உரக்க சிரித்தாள்.

'டிட் பார் டாட்... பதிலுக்குப் பதில்! இந்த குணம் தான் உன்கிட்ட எனக்கு ரொம்ப பிடிக்குது ரமணன். நீ,

நீயா இருக்கே. என்னையும் என் இஷ்டத்துக்கு இருக்க, விடறே—குட். சரி. நா போய் எனக்கு மட்டும் ஏதாவது 'தினி' எடுத்துட்டு வரேன்...'

சென்றவன் இரண்டு நிமிஷங்களில் திரும்பி வந்த போது ஒரு கையில் உருளைக்கிழங்கு வறுவல் பொட்டலம் மற்றதில், தம்ஸ் அப் பாட்டில்...

'நெறுக்கு, முறுக்'கென்று சிப்ஸைத் தின்றுகொண்டே அவன் மறுபடி விலாசங்களை படிக்க முற்பட, வாய் நிறைய வறுவல் இருந்த காரணத்தால் உச்சரிப்பு தெளிவாக இல்லாமல் 'ர'வெல்லாம் 'ழ'வாக மாறி ஒலிக்க, ரமணன் செல்லமாக அவள் காதைப் பிடித்துத் திருகினான்.

'ஒண்ணு விலாசங்கள தெளிவா படி, இல்ல, அக்கடானு உக்காந்துகிட்டு சிப்ஸை தின்னு முடி... ரெண்டையும் சேர்ந்த மாதிரி செஞ்சு,விலாசங்கள தப்புத் தப்பாக எழுதி வைக்க, 'உன்னாலதான் யாருக்குமே இன்விடேஷன் போய்ச் சேரலை'-னு கடைசில என் மேல பழி வரும்படி பண்ணாத...'

'இதுவும் நல்ல ஐடியாதான்...' என்ற யமுனா, புத்தகத்தை மூடி, தரையில் பரவி இருந்த இன்விடேஷன்களை ஒரு பக்கமாய் ஒதுக்கி, சப்பணம் இட்டு அமர்ந்திருந்த ரமணனின் தொடையில் தலை வைத்து மல்லாந்து படுத்தாள். மார்பின் மேல் சிப்ஸ் பொட்டலத்தை வைத்துக் கொண்டு, ஒவ்வொன்றாக எடுத்துத் தின்றாள். 'ம்ம்... இப்படி படுத்துக்கிட்டுத் தின்னா, சிப்ஸ் இன்னும் ருசியாதான் இருக்கு' என, ரமணன் குனிந்து அவள் அதரங்களில் முத்தமிட்டான்.

'ஐய்யையோ... 'கிஸ்' பண்ணிட்டியே ரமணன்! தப்பித்தவறி என் வாய்ல இருக்கற சிப்ஸ் உன் வாய்ல போயிட்டா! சாப்பாட்டுக்கு இடையிலே கொறிக்கக் கூடாதுன்ற வைராக்கியம் என்ன ஆறது!'



ரமணன் ஆள்காட்டி விரலால் அவள் புருவங்கள்மேல் கோடு இழுத்தான். மூக்கு உதட்டின் விளிம்புகளிலும் தடவி, முகவாயை கையில் ஏந்திக் கொண்டான்.

'குறும்பு! எப்பப்பாரு எட்டு வயசு பொண் மாதிரி கேலிப் பேச்சு, சிரிப்பு! இப்படி படுத்துகிட்டா என்னா அர்த்தம்! யார் வந்து விலாசங்கள எழுதி இன்விடேஷன்கள 'போஸ்ட்' பண்ணப் போறாங்க! கல்யாணத்துக்கு சரியா எட்டு நாள் கூட இல்லன்றது மகாராணிக்கு நினைப்பு இருக்கா, இல்லையா?'

'இருக்கறது மகாராஜா—ஆனால், கேவலம் நூறு அழைப்பிதழ்களில் விலாசம் எழுதி அனுப்ப இத்தனை அமர்க்களம், கெடுபிடி அவசியமா?'

பேசிய யமுனா வறுவல் பொட்டலத்தைத் தரையில் வைத்தாள். தம்ஸ் அப் பானத்தை எழுந்து ஒரு வாய் குடித்தாள்.

ஒருக்களித்து படுத்து, இடக்கையை ரமணனின் துடைக்கு அடியில் கொடுத்து முழங்காலை அணைத்துக் கொண்டாள்.

'ம்ம்ம்... இது இன்னும் சுகமா இருக்கு... கொஞ்ச நாழி இப்படியே படுத்துக்க விடுப்பா... தயவு பண்ணி எழுந்திரு, அட்ரஸ் படினு தொந்தரவு பண்ணாத...'

கண்களை மூடிக்கொண்டு ஒருவித பரவசத்துடன் யமுனா பேச, ரமணன் அவள் முடியைக் கோதி விட்டான், மிகுந்த பிரேமையுடன் கன்னத்தை வருடிக் கொடுத்தான்- குனிந்து காது, நெற்றி, கன்னம் என்று மென்மையாக முத்தமிட்டு 'ஹேய்' என்று சின்ன குரலில் அழைத்தான்.

'ம்?'

'கண்ண திறந்து பாரேன்'

'எதுக்குபா?'

'பார்த்தா தான்.'

'சரி-திறந்தாச்சு...என்ன சொல்லு?'

'நீ எவ்ளோ அழகா இருக்கே தெரியுமா?'

யமுனா தலையை உயர்த்தி, அவனை அழுத்தப் பார்த்தபோது கண்களில் வியப்பு பளிச்சிட்டது.

'மழை கொட்டப் போறது ரமணன்!'

'என்னாச்சு உனக்கு, நா எதுவோ சொன்னா, நீ சம்பந்தா சம்பந்தம் இல்லாம பதில் சொல்றயே!'

'நாம எத்தனை மாசமா பழகறோம்?'

'கிட்டத்தட்ட அஞ்சு'

'இத்தனை மாசங்கல்ல ஒருதரம் கூட சொல்லாத வார்த்தைய இன்னிக்கு நீ சொல்லியிருக்கறப்போ, மழை கொட்டாம வேற என்ன பண்ணுமாம்?'

'நீ எவ்ளோ அழகா இருக்கே தெரியுமா'னு சொன்னேனே, அத குறிப்பிடறியா?

யமுனா அவன் கையை எடுத்து கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

'இத்தனை நாள்ல ஒருதரம் கூட அப்படி நீ சொன்னதில்லையே, ஏன் ரமணன்? இது வரைக்கும் உன் கண்ணுக்கு நா அழகா தெரியலையா?'

அவள் குறும்பாகப் பேசுகிறாளா, அல்லது நிஜமாவே குற்றம் சாட்டுகிறாளா என்பது புரியாமல் ரமணன் சில நொடிகளுக்கு மௌனித்தான். பிறகு, அவள் கையில் அணிந்திருந்த பிரேஸ்லெட்டை முன்னும் பின்னும் தள்ளியவாறு கூறினான்.

'அப்படியெல்லாம பேசிக்கற ரகம் நாம இல்லையே யமுனா! சொன்னதானா? மனசுல இருக்கறது புரிஞ்சா



போறாதா? வி ஆர் டிப்ரெண்ட்-னு நீயே அடிக்கடி சொல்லியே!'

'ஆமாமா...மறந்துட்டேன்...நாமதான் அறிவு ஜீவிகளாச்சே. 'ஐ லவ் யூ'னு சொல்லக் கூட எத்தனை நாழி எடுத்துகிட்டோம்-என்னென்ன ஆராய்ச்சி பண்ணி இது காதல்தான்னு புரிஞ்சுகிட்டோம்...'

வெளியே இருந்த மாமரத்தில் மறைந்திருந்த் குயில் கூக்கூ என்றது.

ரமணன் புன்னகைத்தான்.

'ரெண்டு நாளாவே உன்கிட்ட கேட்கணும்னு இருக்கேன், கூட யார் யாரோ இருந்ததுல முடியல...ஹனிமூனுக்குப் போறதப் பத்தி நீ என்ன நினைக்கறே? யோசிச்ச வரைக்கும் ஒரு வாரம் எங்காவது நாம மட்டும் சுத்திட்டு வந்தா நல்லாதான் இருக்கும்னு தோணித்து, நீ என்ன சொல்றே?'

யமுனா கண்களை மலர்த்தினாள். கைகளை அவன் கழுத்தில் மாலையாக்கி, முகத்தை அருகில் இழுத்தாள்.

'எங்க போகலாம்?'

'நீ சொல்லு—எங்க வேணா...,

யமுனா கண்களைச் சிமிட்டினாள்.

'வேணாம்! அப்படிச் சொல்லி மாட்டிக்சாத...எங்கயாவது எக்கச்சக்கமா பணம் செலவழிச்சுகிட்டு போற இடமா பாத்து போலாமானு கேட்டுடுவேன்...'

'கேளேன்... எனக்கொண்ணும் கஷ்டம் இல்ல...எங்க போகணும்? கொடைக்கானல், கோவா? அதுவும் இல்லாட்டி காஷ்மீர்? எங்க போகணும்? ஐயாவுக்கு சக்தி இருக்கு, கவலைப்படாதே...,

யமுனா அவன் மீசையை நிமிண்டினாள்.

'ஹவாய் இல்ல வெனீஸ்-னு சொன்னா''

மீசையில் இருந்த அவள் விரலை வாய்க்குக் கொணர்ந்து ரமணன் மென்மையாய் கடித்தான்.

'பயந்திடுவேன்னு நினைச்சியா? என்ன' ஆளுக்கு ஐம்பதாயிரம் வச்சா போயிட்டு வந்துட முடியாதா? ஆனா, இந்த வருஷம் இந்தியாகுள்ளவே போகலாம் ரெண்டு வருஷம் கழிச்சு, வெனில் என்ன, யூரப் பூரா அழைச்சிட்டுப் போறேன்-சம்மதமா?'

'ரெண்டு வருஷமா? கஷ்டமாச்சே!'

'ஏன், அதுக்குள்ள என்ன நடந்திடப் போகுது?'

யமுனா அவன் முகத்தை இன்னும் அருகில் இழுத்து மூக்கோடு மூக்கை உரசினாள்.

'என்னவா? கைக்குழந்தையோட வெளிநாட்டுக்கு அதுவும் யூரப் டூருக்குப் போறது கஷ்டம் இல்லையா?'

ரமணன் சடக்கென்று நிமிர்ந்தான்.

'குழந்தையா? யாருக்கு?'

யமுனா சிரித்தாள்.

'அடுத்த வீட்டுக்காரருக்கு!'

'வெளையாடாத யமுனா-ஸீரியஸா ஒரு விஷயம் பேசறப்போ.'

'பின்னே? அபத்தமா கேள்வி கேட்டா?'

ரமணன் மௌனிக்க யமுனா தொடர்ந்தாள்.

'நிஜம்மாதான் சொல்றேன் ரமணன்-இப்ப என்ன 85-ஆ? போனாப்போறதனு ஒரு வருஷம் விட்டுடறேன். 87-துவக்கத்துலேயே கர்ப்பமாகி டிஸம்பர்குள்ள, குழந்தை, பிறந்துட்டா. ரொம்ப சந்தோஷப்படுவேன்.'



முகம் பூராவும் எதிர்பார்ப்பில் பளபளக்க யமுனா பேசப்பேச ரமணனின் தாடைகள் இறுகின.

'யமுனா ப்ளீப் பீ ஸீரியஸ்' என்ற போது குரல் அடித் தொண்டையிலிருந்து கிசுகிசுத்தது.

அந்த இறுக்கத்தையோ, கிசுகிசுப்பையோ துளி கூட கவனிக்காமல் யமுனா தானே பேசினாள்.

'படு ஸீரியஸா இருக்கேன்பா-சின்னவயசிலேந்தே எனக்கு குழநதைகள்னா உசிரு...பணம், உடம்புல தெம்பு ரெண்டும் இருந்துன்னா, பன்னண்டும் பெத்துக்கக் கூட நா ரெடி ஒத்தை பொண்ணா இருந்து நா பட்ட அவஸ்தை, அனுபவிச்ச தனிமை எனக்கு இல்ல தெரியும்?'

வாஸ்தவமான சந்தோஷத்தோடு தான் கூறியதற்கு எந்த பதிலும் வராது போக, அப்போதுதான் அவனுடைய மௌனம் புரிந்த திணுகில் யமுனா அவன் முகத்தை மறுபடி அருகில் இழுத்தாள்.

தழைந்து கொடுக்காமல் அப்படியே விரைப்பாக ரமணன் அமர்ந்திருந்ததைப் பார்த்ததும் எழுந்து உட்கார்ந்தாள்.

அவன் சட்டைப் பொத்தானைத் திருகினாள்.

'நிஜமாவே பன்னண்டு பெத்துக்கப் போறேனே-னு பயந்திட்டிய? ரிலாக்ஸ்—பா—சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். ம்ம்? நாலு பெத்துக்கலாமா? 87, 89, 91, 93-னு பிளான் பண்ணி; என்னவானாலும் முப்பது வயசுக்குள்ள பிரசவங்கள முடிச்சிடணும்—என்ன சொல்றே?'

இதற்கும் பதில் கூறாமல் ரமணன் உதடுகள் அழுந்த அமர்ந்திருக்க, யமுனா அவன் தோளில் தட்டி 'ஹேராய்' என்றாள்.

'என்னாச்சுப்பா உனக்கு? முக்கியமான சமாசாரம் பத்திப் பேசிட்டு இருக்கேன், பதிலே சொல்லாம இருக்கியே?'

'.........'

யமுனா அவன் கண்முன் கையை வீசி கவனத்தை ஈர்க்க முயன்றாள்.

'ஓகே...ஓகே...நாலு வேணாம்—காலம் இருக்கற இருப்புல நாலை பெத்து, நல்லபடியா வளக்கறத்துக்குள்ள திண்டாடுவோம்—ஒத்துக்கறேன், ஹவ் அபௌட் மூணு? ம்? போனாப் போறது...ரெண்டு...இது அதிகம்னா நா ஒத்துக்க மாட்டேன்.'

அவள் பேசிக் கொண்டிருக்கையிலேயே தோள் மீது இருந்த கையைத் தள்ளிவிட்டு ரமணன் எழுந்தான்.

நடந்து ஜன்னலருகில் சென்று அவளுக்கு முதுகு காட்டிக் கொண்டு நின்றான்.

'ர...ம...ணன்.'

இருந்த இடத்திலிருந்தே யமுனா உரக்க அழைத்ததும் திருப்பினான்.

'என்னாச்சு? ஏன் திடீர்னு எப்படியோ இருக்கே?'

ரமணன் நகங்களை ஆராய்ந்தான். கண்கள் இடுங்க நிதானமாய் பேசினான்.

'குழந்தை பெத்துக்கற பிளான் வேணாம் யமுனா.'

ரமணன் குரலில் இருந்த தீவிரம், அவன் கேலியாகப் பேசவில்லை என்பதை உணர்த்தியது.

'எத்தனை வருஷத்துக்கு?'

'எப்பவுமே...'

கேட்டதை நம்ப மாட்டாமல் யமுனா புருவங்களை உயர்த்தினாள்.



'என்ன சொல்றே நீ ரமணன்?'

'குழந்தைகள் பெத்துக்கறதுல எனக்கு இஷ்டம் இல்லேனு.'

'குழந்தைகள்—ளா? அப்படீன்னா, ஒண்ணு போதுங்கறியா?'

'ம்ஹூம்—ஒண்ணு கூட வேணாம்னு சொல்றேன்...'

'ஏ...ஏம்பா?'

'சின்ன வயசுலேந்தே எல்லாரையும் போல இல்லாம வித்தியாசமா வாழ்ந்து காட்டணும்ன்ற ஆசை எனக்கு உண்டு நாட்டுல எத்தனையோ குழந்தைங்க அனாதையா, சாப்பிட, உடுக்க கூட இல்லாம திண்டாடறப்போ, நம்பளைப் போல ஒரு சிலராவது குழந்தை பெத்துக்காம இருக்கறது நாட்டுக்கு நல்லது இல்லையா யமுனா?'

'அப்படீன்னா? நமக்குனு பெத்துக்காம தத்து எடுத்துக்கணுங்கறியா?'

'அதுகூட தேவைனு நா நினைக்கல—நாலு குழந்தைகளை வளர்க்க ஏதாவது ஹோமுக்குப் பண உதவி செய்யறது இன்னும் சிறப்பானதுனு நா நம்பறேன்'

யமுனாவின் அதிர்ச்சி வெளிப்படையாய் தெரிந்தது.

'உதவுறது இருக்கட்டும்...நமக்குனு குழந்தை வேணாமா?'

ரமணன் அவள் அருகில் வந்து அணைத்துக் கொண்டான்.

'பெத்துக்கறோமோ, இல்ல எடுத்துக்கறோமோ, நமக்குனு ஒரு குழந்தை சொந்தமாறப்போ, இருக்கற எல்லா சொத்தையும் அதுக்குனு சேர்த்து வைக்கத்தான்

மனசு வரும். ஒரு ரூபாய்ல நாலணா தர்மம் பண்ணிட்டு, மிச்சத குழந்தைக்காக சேமிச்சிடுவோம். இது மனித இயல்பு, இதுக்கு மாறா, நம்மகிட்ட இருக்கற பணத்துல நாலு பசங்கள படிக்க வைக்க, இன்னும் சில குழந்தைகளுக்கு வைத்தியம் பார்த்து, சமுதாயத்துக்கு நல்ல விதமா உதவ முடியும்னா அத செய்யறதுதானே உசத்தி யமுனா? நீயும் நானும் நினைச்சா, நமக்குனு ஒரு குழந்தை வேணும்ன்ற ஆசையை விடணும். அதுவும் தவிர, குழந்தைகளால பெரியவங்க நிம்மதி, கட்டுப்பாடு, சுத்தம் எல்லாம் போயிடறது எத்தனை வீடுகள்ல பார்க்கறேன். யோசிச்சா உனக்கே புரியும்'

அவன் அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட யமுனா உரக்க கத்தினாள்.

'மண்ணாங்கட்டி...எனக்குப் புரியவே வேணாம் இத ஏன் நீ இத்தனை நாளா சொல்லவே இல்ல?'

'அவசியமோ, பேச்சோ வரலை அதான்...'

அடுத்த அரைமணி போல பேசினதையே இரண்டு பேரும் பேசிவிட்டு, மஹா அதிர்ச்சி, குழப்பம், கோபத்துடன் பிரிந்தார்கள்.

மறுநாள் காலை மதியம் ட்ரைவின் ரெஸ்டாரண்டில், அலுவலகத்து காண்டீனில் சந்தித்த போதும் காரசாரமாய் பேசினதையே பேசி விவாதித்தார்கள்.

பிற்பகல் மூன்றுமணி அளவில் பொருந்தி உட்காருவது கூட கஷ்டமாக இருந்ததில், பர்மிஷன் பெற்று யமுனா வீட்டுக்கு வந்தாள்.

இப்படி அப்படி சிந்தனைகளை ஓட விடாமல் தீவிரமாய் சிந்தித்தாள், இனி, செய்ய வேண்டியது என்ன என்று துல்யமாய் புரிந்த பிறகு, ரமணனுக்கு போன் செய்து மாலை ஏழு மணி அளவுக்கு அவனைத் தன் வீட்டுக்கு வரச் சொன்னாள்.



வந்தவனை வழக்கம் போலத் தன் அறைக்கு அழைத்துச் செல்லாமல் கூடத்திலேயே உட்கார வைத்தாள்.

துளி தயக்கம் இல்லாமல் நிமிர்ந்து பார்த்து, சின்ன குரலில் ஆனால் உறுதியாய் சொன்னாள்.

'நா சொல்றத நீ சரியா புரிஞ்சிப்பேன்ற நம்பிக்கை எனக்கு இருக்கு... நல்லா யோசனை பண்ணிப் பார்த்தப்புறம் தான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன், கல்யாணத்த நிறுத்திட்டு, நல்ல நண்பர்களா பிரியறதுதான் நம்ம ரெண்டு பேருக்குமே நல்லதுனு தோண்றது. பதட்டப்படாம சிந்திச்சா, உனக்கு நா சொல்றது சரியானது தான்னு புரியும்.

# 14

**நான்**

ஒற்றை வரிதான். ஆனாலும்—
நம்ப முடியாமல் இருந்தது.
அதிர்ச்சியாக இருந்தது.
கோபம் தருவதாகவும் இருந்தது.

வார்த்தை வர்ணஜாலங்கள் எதுவுமின்றி, வேண்டாத கூச்சமோ, தயக்கமோ இல்லாமல், நிமிர்ந்து பார்த்து பதட்டமில்லாமல் யமுனா கூறிய அந்த ஒற்றை வரியைக் கேட்ட மாத்திரத்தில் எனக்குள் எழுந்த உணர்ச்சிகள் நானா விதமாய் இருந்தன.

'விளையாடுகிறீர்களா?' இல்லை, மூளையைக் கழற்றி வைத்துவிட்டுப் பேசுகிறீர்களா?' என்று படபடப்பாய் கேட்க நினைத்தவன் சிரமப்பட்டு நிதானப்படுத்திக் கொண்டேன்.

கண்ணாடியைக் கழற்றி மேஜை மேல் ; வைத்தேன்.

ஆள்காட்டி, கட்டை விரல்களால் கண்களை அழுந்த தேய்த்து விட்டேன்.

மேற்கொண்டு நீங்களே பேசுங்கள் என்கிற அர்த்தத்தில் மௌனித்தேன்.

ரமணன் ஒருவித விரைப்புடன் அமர்ந்திருப்பது புரிந்தது.

மேஜைமேல் நகங்களால் தாளம் போட்ட யமுனா தோள்களை உயர்த்தி, கைகளை விரித்தாள்.

'அவ்ளோ தான் அங்கிள். மேல சொல்றத்துக்கு ஒன்ணும் பெரிசா இல்ல. நாங்க காதலிக்கறத மொத மொதல்ல உங்க கிட்டதான் சொன்னோம். எங்க நட்பு, உறவை பத்தி ஆல்மோஸ்ட் எல்லாமே உங்களுக்குத் தெரியும். அதனால, கல்யாணத்த நிறுத்திடப் போறோம்ன்ற தீர்மானத்தையும் உங்ககிட்ட சொல்லிட்டுதான் மத்தவங்க கிட்ட தெரிவிக்கணும்னு நினைச்சோம் சொல்லிட்டோம். என்ன ரமணன். நா சொல்றது சரிதானே?'

என்னிடம் பேசியவள் ரமணன் பக்கமாய் திரும்பி கேள்வியைக் கேட்க, அவன் தன் ஆமோதிப்பைத் தெரிவிக்கும் ரீதியில், தலை அசைத்தான். இருவரிடமும் காணப்பட்ட நிதானம் என் திகைப்பைக் கூட்டியது.

என்ன ஆயிற்று இவர்களுக்கு!

துளி பதட்டம் இல்லாமல் யாரோ சம்பந்தப்பட்ட விஷயத்தைப் பேசுகிற மாதிரி விட்டேத்தியாக இவர்களால் எப்படி இருக்க முடிகிறது!

ஒருத்தர் இந்த முடிவுக்கு வந்து, அடுத்தவர் கலங்கிய கண்களோடு 'நியாயமா இது?' என்று முறையிட வந்திருந்தால் அதைகூட புரிந்து கொண்டுவிடலாம்.

ஆனால் இருவரும் மனம் ஒப்பி ஒரு முடிவுக்கு வந்துவிட்டது போலத்தானே தெரிகிறது!



திருமணத்தை நிறுத்த வேண்டுமா? ஏன்?

மூன்று நாட்களுக்கு முன் இவர்களை நான் சந்தித்திருக்கிறேன். அன்று கண்களில் காதல் வெளிச்சம் போட, மலர்ச்சியும், சிரிப்புமாக இருந்தவர்களுக்கு அதற்குள் என்ன ஆகிவிட்டது?

இருவர் முகங்களிலுமே ஓர் இறுக்கம், ஆனால், குழப்பம் இல்லாத தெளிவு! இது எப்படி சாத்தியம்?

எதுவுமே பேசாமல் இருவரையும் மாறி மாறி பார்த்த போது என் கோபம் அதிகரிப்பதை உணர முடிந்தது.

என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள் மனசில்? காதலிப்பதும், கல்யாணம் செய்து கொள்ள நாள் குறித்து பத்திரிகை கூட அச்சடிப்பதும், அப்புறம் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று கூறுவதும் அன்றாடம் நடக்கும் சாதாரண சமாசாரங்கள் என்று கருதி விட்டார்களா?

ரமணன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். என் கோபம் புரிந்த தினுசில் நிதானமாய் பேசினான்.

'யமுனா சொன்ன விவரம் உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கும். ஏன், கோபப்பட கூட வச்சிருக்கும். வி ஆர் வெரி ஸாரி ஸர். ஆனா...'

அவனைப் பேச விடாமல் கையை முன்னால் நீட்டி தடுத்தேன்

'நா கோவிக்கறதோ. அதிர்ச்சி அடையறதோ இருக்கட்டும். முதல்ல என் கேள்விக்குப் பதில் சொல்லு, கல்யாணத்த நிறுத்திட்டீங்களா, இல்ல, தள்ளி வச்சிருக்கீங்களா?'

'நிறுத்திட்டோம் ஸர்'

'ஏம்பா?'

அவன் கொஞ்சம் தயங்க, யமுனாவைப் பார்த்து 'என்னது இதெல்லாம் யமுனா! கல்யாணம்றது விளையாடற விஷயம் இல்லம்மா...நிறுத்தப் போறீங்களா ஏன்?' என்றேன் அதட்டலாய்...

யமுனா எழுந்து என் அருகில் வந்தாள். எனக்குப் பின்னால் நின்று என் தோள்களைப் பிடித்தபடி பேசினாள்.

'ப்ளீஸ் ரிலாக்ஸ் அங்கிள்...ரமணனோ, இல்ல நானோ யோசிக்காம எதையும் சொல்ல மாட்டோம்னு உங்களுக்கு நல்லாவேத் தெரியும். கல்யாணத்த நிறுத்திடலாம்ன்றதும் அப்படி தீவிரமா அலசி எடுத்த முடிவுதான் ஒத்து வராத விஷயத்த செய்ய ஆரம்பிச்சிட்டு நாளைக்குத் திண்டாடறத விட, இன்னிக்கே உண்மை புரிஞ்சு விலகிடறது நல்லது இல்லையா அங்கிள்?'

பேசியவளின் கையைப் பற்றி இழுத்து எனக்கு முன்னால் நிறுத்தினேன்.

'எது ஒத்து வராத விஷயம்? கல்யாணம் பண்ணிக்கறதா? நீங்க ரெண்டு பேரும் எதனால இப்படியொரு முடிவுக்கு வந்தீங்க...? முதல்ல அத விளக்கிட்டு, அப்புறமா ரிலாக்ஸ் அங்கிள்'னு எனக்கு புத்திமதி சொல்லு...'

யமுனா தலையைப் பின்னுக்குத் தள்ளி சிரித்தாள்,

'ப்பா...என்னமா கோவம் வருது உங்களுக்கு அங்கிள்! ஓகே...சொல்றேன்...ரமணனும் நானும் குணத்துல நேர் எதிர்—இதோ...'

நான் கோபத்துடன் குரலை உயர்த்தினேன்.

'ஸ்டாப் இட் யமுனா! இது ஏற்கனவே, இன்ஃபாக்ட் சரியா சொல்லணும்னா நீங்க சந்திச்ச முத நாளே தெரிஞ்சது தானே.'



ரைட்—ஒத்துக்கறேன் பாஸிடிவ் நெகடிவ் சேர்ந்தா மின்சாரம் வரும். 'ஆப்போஸிட் போல்ஸ் அட்ராக்ட் ஈச அதர்'னு நானே உங்ககிட்ட டயலாக் அடிச்சிருக்கேன், ஆனா அங்கிள் அது ஒரு கோணம்தான், இன்னொரு கோணத்துலேந்து பார்த்தப்போதானே எந்த நேர் எதிர் குணங்கள் தாம்பத்திய வாழ்க்கைக்கு ஒத்து வராதுனு புரிஞ்சுது! அதாவது, குட்டை நெட்டை மாடுகள ஒரு வண்டில பூட்டி ஓட்றதோ இல்ல ஏர்ல பூட்டி உழறதோ முடியுமா அங்கிள்? அந்த மாதிரிதான் நாங்க கல்யாணம் பண்ணிக்கறதும்—இப்ப புரியுதா?''

நான் எழுந்து சென்று ஜன்னலருகில் நின்று கொண்டேன் நித்தமும் எனக்காக காத்திருந்து, எனக்காக மலரும் அரளிப் பூக்கள் இன்றைக்கும் தலை அசைத்து சிரித்ததில் மனசு லயிக்க மறுத்தது

திரும்பி, நின்ற இடத்திலிருந்தே அவர்களைப் பார்த்து கிண்டலாய், ஆனால் கோபம் துளியும் அடங்காமலேயே கேட்டேன்.

'இந்த குட்டை, நெட்டை மாடு ஞானோதயம் எப்ப வந்தது? ஏன் வந்தது? காரணத்த நா தெரிஞ்சுக்கலாமா?'

'தாராளமா...பூரா விஷயத்தையும் சொல்லு. எங்க கண்ணோட்டத்த உங்கள புரிஞ்சிக்க வைக்கணும்னுதானே ஸார் நாங்களே வந்திருக்கோம். ப்ளீஸ் இப்படி வந்து உட்கார்ந்து கேளுங்க ஸர்...ப்ளீஸ்...'

ரமணன் பணிவுடன் கெஞ்ச, மீண்டும் வந்து அமர்ந்தேன்.

'மூணு நாள் முன்னால யமுனா வீட்டுல உட்கார்ந்து இன்விடேஷன்கள்ல விலாசங்கள எழுதிட்டு இருந்தப்ப ஹனிமூன் போறது பத்தி பேச்சு வந்தது ஸர்

'ம்'

'இந்த வருஷம் இந்தியாவிலே எங்கயாவது போகலாம். ரெண்டு வருஷம் கழிச்சு யூரப் டூர் போலாம்னு நா சொன்னேன்...'

'அது கஷ்டம்!—ஏன்னா ஒரு வருஷம் கழிச்சு குழந்தை பெத்துக்கறதுதான் என் பிளான்—னு நா மறுத்தேன் அங்கிள்'

என்னமோ சொல்லப் போகிறார்கள் என்று எதிர்பார்த்திருந்ததற்கு மாறாக, இருவரும் தங்களுக்குள் நடந்த அந்தரங்க பேச்சுக்களை கூட முற்பட, சங்கடப்பட்டேன்.

'நா கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாம்ம, எதுக்கு இந்த விவரமெல்லாம யமுனா?'

'இல்ல அங்கிள்—நீங்க அவசியம் தெரிஞ்சுக்கணும். முத முறையா குழந்தை பெத்துக்கறதப் பத்தி பேச்சு வந்தப்போ, எனக்கு குறைந்தபட்சம் ஆறாவது பெத்துக்க இஷ்டம். ஆனா, காலம் இருக்கற நிலைல ரெண்டு போதும்-னு சொன்னேன். அங்க தான் பிரச்னையே ஆரம்பிச்சது...'

'இதுல என்னம்மா பிரச்னை! ரெண்டு போதும்னு சென்ஸிபிளா தானே சொல்லி இருக்கே!'

யமுனா பதில் கூறாது நகர்ந்து, நாற்காலியில் அமர்ந்து நகங்களை ஆராய்ந்தாள்.

அரை நிமிஷ மௌனத்திற்குப் பின் ரமணன் சொன்னான்.

'குழந்தை வேணாங்கறது என் விருப்பம் ஸர்'

'எத்தனை வருஷங்களுக்கு?'

'எப்பவுமே...'

வாஸ்தவமாகவே எனக்கு ரொம்ப வியப்பாக இருந்தது.



'ஏன் ரமணன்?

சொன்னான்.

அப்படீன்னா பெத்துக்க வேணாம், ரெண்டு குழந்தைகளை தத்து எடுக்கலாம்னு சொல்றியா ரமணன்?'

'ம்ஹூம்...பணம். உழைப்பை முடிஞ்ச அளவு கொடுத்து பல அனாதைக் குழந்தைகளுக்கு உதவணும்னு றது தான் என் லட்சியம் ஸர்..'

நாட்டில் எத்தனையோ அனாதைக் குழந்தைகள் அடிப்படைத் தேவைகள் இன்றி தவிக்கையில், தங்களுக்கென்று குழந்தை பெற்றுக் கொள்வது சுயநலம். சமுதாயத்தின் பால் அக்கறை உள்ள ஒரு சிலராவது தங்களுக்கு குழந்தை வேண்டாம் என்று தீர்மானித்து ஆதரவற்ற குழந்தைகளை பேணிக் காக்க முன் வருவதன் மூலம் பத்து வருஷங்களில் இன்றைக்கு இந்தியாவில் இருக்கும் பல பிரச்னைகளில் சிலவற்றுக்காவது தீர்வு காணலாம் என்று அவன் விளக்கியது அவன்பால் நான் வைத்திருந்த மதிப்பை அதிகமாக்கியது ஆனால்? அதற்காகத் திருமணமே வேண்டாம் என்பது அபத்தம் அல்லவா?

'சரிப்பா...உன் லட்சியத்த பாராட்டறேன். ஆனா, அதுக்கும் கல்யாணம் வேணாங்கறதுக்கும் சம்பந்தம் என்ன?'

ரமணன் யமுனாவை ஏறிட்டவாறே பதில் கூறினான்.

'அது, யமுனாவோட யோசனை ஸர். யோசிச்சு பார்த்தப்போ அதுதான் சரியான தீர்மானம்னு எனக்கும் தோணுது...'

நான் உரக்க கத்தினேன்.

'நான்சென்ஸ்...ஷியர் நான்சென்ஸ்.

'என் பக்கத்த கொஞ்சம் கேக்கறீங்களா அங்கிள்? ரமணன் சொல்ற யோசனை பிரமாதமானதுதான்' இந்தியாவுக்கு நிச்சயம் தேவையான முயற்சிதான். அதுக்கு நா ஒத்துக்கறேன். ஆனா. அங்கிள் எனக்கு என் சாயல், என் குணங்களோட ஒரு குழந்தை வேணும்னு ஆசையா இருக்கே—அத என்னால விட முடியலையே!'

'யார் விடச் சொல்றாங்க? உன் விருப்பத்துக்கு ஒண்ணு பெத்துக்கங்க ரமணன் விருப்பப்படி அனாதைக் குழந்தைகளுக்கும் உதவி பண்ணுங்க...யார் வேணாங் கறாங்க?'

'இல்ல ஸர்-எனக்கு அதுல இஷ்டம் இல்ல-எனக்குனு குழந்தை வந்துட்டா, அதுக்கு சொத்துசேர்த்து வைக்கற துல தான் புத்திபோகும்-தவிர, குழந்தை பெத்து வளக் கறது நிம்மதியான வாழ்க்கைக்குப் பெரிய இடையூறுனு நா மனப்பூர்வமா நம்பறேன். குழந்தை பெத்துக்க என் னால ஒத்துக்கவே முடியாது ஐம் ஸாரி.'

அழுத்தம் திருத்தமாக ரமணன் சொல்ல, 'என்னால பெத்துக்காம இருக்க முடியாது. எனக்கு என் குழந்தை வேணும்' என்றாள் அதே அழுத்தம் சற்றும் குறையாத குரலில் யமுனா.

'உன் ஆசை உனக்கு நியாயம். என் கொள்கை எனக்கு சரி-இவ்வளவு முரண்பட்டப்புறம் இதுக்குத்தீர்வு 'நாம கல்யாணம் பண்ணிக்காம இருக்கறதுதான்'னு நீ சொன்னத தான் நா ஏத்துகிட்டேனே.'

'இப்ப நா ஏதோ குறை சொல்லிட்ட மாதிரி எதுக்கு அனாவசிய விளக்கம் தர்றே ரமணன்?'

நான் ஒருவன் இருப்பதை அடியோடு மறந்துவிட்டு தர்க்கத்தில் அவர்கள் இறங்க, அவசரமாய் குறுக்கிட் டேன்.



'யமுனா, ரமணன்! முதல்ல இப்படி வாதம் பண்ண றத நிறுத்துங்க...ஆக வேண்டியது என்னதுனு யோசிக் கறத விட்டுட்டு...

'அதான் யோசிச்சு முடிவுக்கு வந்தாச்சே அங்கிள்... இனி இந்த முடிவ நாங்க மாத்தறதா இல்ல...'

அவன் சொல்வதைக் காதில் வாங்காமல புருவங்கள் முடிச்சுப் போட நான் வினவினேன்.

'இப்படி செஞ்சா என்ன, கல்யாணமாகி அஞ்சு வருஷம் குழந்தை வேணாம் அப்புறம் அது பத்தி மறுபடி யோசிச்சு ஒரு முடிவுக்கு வரலாம்-னு வச்சுகிட்டா?'

யமுனா உதட்டைப் பிதுக்கி மறுத்தாள்.

ரமணன் என் முடிவில் மாற்றம் இல்லை என்பது போல தாடை இறுக மௌனித்தான்.

நான் ரமணனை வருத்தத்துடன் ஏறிட்டேன்.

'என்ன பிடிவாதம் இது ரமணன்! லட்சியங்கள் அவ சியம் தான். ஆனா ஐம்? அட் வாட்காஸ்ட்?

ரமணன் நிமிர்ந்து, என் கண்களைப் பார்த்து பதில் கூறினான்.

'ஒருதரம் 'நீங்க ஏன் ஸர் கல்யாணம் பண்ணிக் கலை' னு நா கேட்டப்போ 'மனுஷனா பிறந்தவன் கட்டாயம் கல்யாணம் செஞ்சிக்கணும்னு விதி, ஒண்ணும் இல்ல, அது இல்லாமலேயே அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ முடி யும்னு நா நம்பறேன்'னு சொன்னீங்களே! நினைப்பு இருக்கா ஸர்? உங்களுக்கு மட்டும் லட்சியம் இருக்கலாம் எனக்குக் கூடாதா? இது நியாயமா ஸர்?'

சிரித்துக் கொண்டே அவன் கேட்டாலும், அதில் விரவியிருந்த தீவிரம் என்னைத் தாக்கியது.

நிஜம்தானே?

அவன் தீர்மானம் தவறு என்று சொல்ல நான் யார்? தவிர, அவனுக்கொன்று, எனக்கொன்று என்று அளவு கோலை மாற்றுவது எந்தவிதத்தில் நியாயம்?

தலைமுடியைக் கோதிவிட்டுக் கொண்டேன்.

'உங்க ரெண்டு பேர் வீட்டுலேயும் சொல்லிட்டீங்களா?'

'உங்ககிட்ட சொல்லிட்டுதான்...'

'எப்படி எடுத்துப்பாங்க?'

'அதிர்ச்சியாத்தான் இருக்கும். விளக்கினா புரிஞ்சுப்பாங்கனு நம்பறோம்...'

நான் எழுந்து கைகளைப் பின்னுக்குக் கட்டியவாறு உலாத்தினேன்.

'கல்யாணத்துக்கு நாலு நாள்தான் இருக்கு-தடபுடலா இல்லாட்டியும் ரிஜிஸ்தர் மாரேஜ், அப்புறம் உட்லண்ட்ஸ்ல சின்னதா விருந்துனு எல்லாருக்கும் அழைபிதழ்கூட அனுப்பியாச்சு...இப்ப போயி...என்னம்மா இது...ரமணன்...மறுபடி யோசிப்பா...'

'விலாசங்கள எழுதறப்பவே கருத்து வேறுபாடு வந்திட்டதால, அழைப்பிதழ்கள 'போஸ்ட்' பண்ணலை ஸர்...அதனால, அந்த பிரச்னை இல்ல...என்ன, ஆபீஸ் மத்த இடத்துல சிலபேருக்குத் தெரியும்...அவங்ககிட்ட மட்டும் சொல்லிடணும்...அவ்ளோதான்...'

'ஆமா அங்கிள்-ஒரு வகைல பார்த்தா இப்ப நிறுத்தறது தேவலைனே தோணுது என் ப்ரெண்ட் அனுராதாவுக்கு ஹேமமாலினி மண்டபத்துல கல்யாணம் நடந்தது. வேளைக்கு ஆயிரம் பேர் சாப்பிட்டாங்க... ஆனா என்ன ஆச்சு? கல்யாணமான ஒரே மாசத்துல புருஷனை பிடிக்கலைனு வந்துட்டா... எக்கச்சக்கமா பணம் செலவழிச்சு, ஊரைக் கூட்டி கல்யாணம் பண்ணப்



புறம், மனசு பிடிக்காம விலகறதவிட, புத்திசாலித்தனமா உண்மைய புரிஞ்சுகிட்டு ஆரம்பத்துலியே நிறுத்திடறது நல்லது தானே?'

தங்கள் செய்கையை நியாயப்படுத்துவதோடு, உயர்வாகவும் அவர்கள் பேசப் பேச, இனியும் இவர்களோடு தர்க்கிப்பதில் பலன் இல்லை என்பது புரிந்தது. என்றாலும் விடாமல் கேட்டேன்.

'அப்போ-நீங்க ஒருத்தரை ஒருத்தர் விரும்பினதுக்கு அர்த்தம் இல்லையா?'

யமுனா வருத்தத்துடன் 'ப்ச்' என்றாள். ரமணனை நெருங்கி அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

'இந்த நிமிஷமும் கூட நாங்க நேசிக்கறது உண்மை அங்கிள்...ஆனா, கனவுவேற, யதார்த்தம் வேற-நாங்க காதலர்களா இருக்கலாமே தவிர, கணவன் மனைவியா வாழ முடியாதுனு புரிஞ்சு போச்சு அங்கிள்...'

யமுனாவின் தோளை அணைத்து ரமணன் அவளைத் தன்னிடம் இழுத்துக் கொண்டான்,

'எஸ்-வி ஸ்டில் லவ் ஈச் அதர். ஆனா ஸர், காதலுக்காக கொள்கைய விட்டு கொடுக்கறதுமுட்டாள்தனம்னுநாங்க ரெண்டு பேருமே உணர்ந்துட்டோம்-அதான் நல்ல ஸ்னேகிதர்களா பிரியறதுனும் முடிவு செஞ்சிட்டோம். ரொம்ப உணர்ச்சி வசப்பட்டிருக்குற இந்த சமயத்துல மறுபடி சந்திச்சுகிட்டா, மனசு மாறி தவறான முடிவு எடுக்க முனைஞ்சிடுவோமோனுகவலைபடறதால இப்பஉங்களுக்கெதிர்லயே நாங்க நல்ல, இனிய நண்பர்களா பிரியப் போறோம்-மனசு நிதானப்படற வரைக்கும்மறுபடி சந்திக்கக் கூடாதுனு கூட தீர்மானம் செஞ்சிட்டோம்...புத்திபூர்வமா சிந்திக்காம, ஹ்ருதயத்துக்கும் உணர்ச்சிகளுக்கும்

இடம் கொடுத்து கஷ்டப்படற காதலர்கள்மாதிரி இல்லாம புத்திசாலித்தனமா நாங்க நடந்துக்கறத நீங்க பாராட்டு வீங்கன்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கு...நாங்க வரோம் ஸர்...அப்புறமா சந்திக்கறேன். யமுனா...நீ ஒரு அற்புதமான பெண் - உன் ஸ்னேகிதம் கிடைச்சதுக்கு நா பெருமைப்படறேன்...பை...'

விடைபெற்றுக் கொண்டு திரும்பிப் பாராமல் ரமணன் போக, அரை நிமிஷத்துக்கெல்லாம் 'நா வரேன் அங்கிள்'-என்று சொல்லி யமுனாவும் புறப்பட்டுச் சென்றாள்.

காதலைக்கூட இரண்டும் இரண்டும் நாலு என்கிற ரீதியில் 'அறிவு ஜீவிகளாக' அணுகி, அதை நியாயப் படுத்தி, எந்தவித உறுத்தலும் இன்றி, சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் 'நாங்களாய் இருக்கக்கொண்டு இப்படி தெளிவாக இருக்கிறோம்' என்கிற கர்வம் அவர்கள் இருவருக்குள்ளும் நிறையவே இருப்பதை உணர முடிய, எது குறித்து எதுவும் செய்ய, சொல்ல இயலாத ஆயாஸத்துடன் ஜன்னல் கம்பிகளில் முகத்தைப் பதித்துக் கொண்டு, தூரத்து ஆகாயத்தை வெறிக்க முற்பட்டேன்.

# 15

**யமுனா**

பாடசாலை கேட்டுக்குள் யமுனா மோபெட்டை திருப்பியதும், வாசலில் நின்றிருந்த கூர்க்கா பவ்யமாய் சல்யூட் செய்தான்.

வேகத்தைக் குறைக்காமல் நீண்டு சென்ற பாதையில் பயணித்து, ஒரு பக்கம் விளையாட்டு மைதானமும், 



இன்னொரு பக்கம் அடர்ந்த பச்சை மரங்களடியில் குழந்தைகள் உட்கார,சாப்பிடவென கட்டப்பட்ட குட்டி குட்டி சிமெண்ட் மேஜை, நாற்காலிகளுமாய் இருந்த இடத்தைக் கடந்து. கடைசியாய் காணப்பட்ட கட்டடத்தின் முகப்புவரை சென்றாள், கொன்றை மரத்தடி நிழலில் மங்கையர்க்கரசியின் பியட் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதை ஒட்டி மோபெட்டை நிறுத்தி, வண்டியிலிருந்து இறங்கி, ஸ்டாண்டு போட்டாள்.

அம்மாவின் பியட்டைப் பார்த்ததும் மனசுக்குள் சின்னதாய் நிம்மதி படர்ந்ததை யமுனாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

மணிக்கட்டைப் புரட்டி கைக்கடியாரத்தை ஏறிட்டாள். அது மணி மூணரை என்றது.

சாதாரணமாய் பள்ளி நேரத்தில் இங்கு, அங்கு போகும் ரகம் அம்மா இல்லை, ஒன்று ஏதாவது வகுப்பில் பாடம் எடுத்துக் கொண்டிருப்பார். இல்லை என்றால் தன் அறையில் அமர்ந்து நிர்வாக வேலைகளைக் கவனிப்பார், அதுவும் இல்லாவிட்டால், கட்டடம், தோட்டம், கழிவறைகள் என்று பள்ளிக் கூடத்தைக் கழுகுப் பார்வையுடன் சுற்றி வந்து எங்காவது ஏதாவது கோளாறாக உள்ளதா என்று கண்காணிப்பார்.

இப்படி சதாசர்வகாலம் பள்ளியே உலகமாய் வாழ்பவர் அடிக்கடி வெளிநாடுகளிலும், உள்ளூரிலும் கருத்தரங்கு, ஆலோசனைக் கூட்டங்கள் போன்றவைகளில் பங்கெடுக்க மட்டும் தயங்கமாட்டார். இதற்குக் காரணம் இந்த விஷயங்கள் பாடசாலையின் தரத்தை இன்னும் உயர்த்துமே என்கிற நப்பாசை தானே தவிர, மற்றபடி தன் பேர் நாலு பேருக்குத் தெரியவேண்டும் என்பதோ சமுதாயத்தில் ஒரு வி.ஐ.பி.யாகத் திகழவேண்டும் என்பதோ நிச்சயமாய் இல்லை என்பது யமுனா மட்டுமல்ல மங்கையர்க்கரசியை அறிந்த அனைவருமே அறிந்ததுதான்.

பிரின்ஸிபல் என்று எழுதப்பட்டிருந்த பலகைக்கடியில் முக்காலியில் உட்கார்ந்திருந்த ஆறுமுகம் இவளைக் கண்டதும் அவசரமாய் எழுந்து நின்றான்.

'குட்மார்னிங் மேடம்.'

யமுனா புன்னகைத்தாள்.

'மணி என்ன தெரியுமா ஆறுமுகம்? மூணரை இப்ப போய் 'குட்மார்னிங்'னு சொல்லுவாங்களா? 'குட் ஆப்டர்னூன்'னு விஷ் பண்ணுப்பா...'

ஆறுமுகம் அசட்டுச் சிரிப்புடன் நெளிந்தான்.

'அம்மா உள்ள இருக்காங்களா?'

'எஸ் மேடம் - அக்கௌண்டன்ட் ஸாரோட பேசிட்டு இருக்காங்க...போய் சொல்லவா?'

'வேணாம் - அவர் போனப்புறமே நா பார்த்துக்கறேன். அவசரம் ஒண்ணும் இல்ல—'

பேசியவள் பிரின்ஸிபல் அறையை ஒட்டி இருந்த சின்ன வரவேற்பறைக்குள் சென்று பிரம்பு நாற்காலியில் அமர்ந்துகொண்டாள்.

மேஜைமீது கிடந்த அன்றைய 'எக்ஸ்பிரஸ்' தினசரியை கையில் எடுத்துப் புரட்டினாள், கீழே வைத்தாள். அருகில் இருந்த பள்ளி ஆண்டு புத்தகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு படிக்க முற்பட்டாள்.

ம்ஹூம். புத்தி எதிலும் செல்லமாட்டேன் என்று முரண்டியது.

காலையில் ரமணனுடன் பேசியபேச்சுக்களும், எடுத்த முடிவும். பின்னர் சந்திரசேகரனிடம் விவரத்தை தெரிவித்ததுமே மீண்டும் மீண்டும் மனசுள் வளையமிட்டன.

முதல் நாள் பேசி வைத்துக் கொண்டபடி அன்று அவர்கள் இருவருமே அலுவலகத்துக்குப் போகவில்லை,



விடுப்புக்குச் சொல்லிவிட்டு பதினோரு மணி சுமாருக்கு தியஸாபிகல் ஸொஸைட்டி லைப்ரரி வாசலில் சந்தித்தார்கள் வளைந்து வளைந்து சென்ற பாதையில் வெயில் தெரியாமல் மரங்கள் குடைபிடிக்க நடந்தவாறு, வீணாக தர்க்கம் பண்ணுவதில் இனி அர்த்தம் இல்லை. என்பது புரிந்தவர்களாய் கடைசி தரமாக தங்கள் கருத்துக்களை பரிமாறிக் கொண்டார்கள்.

செய்ய வேண்டியது என்ன என்பதைத் தெளிவாக இருவருமே ஒருமனசாக ஏற்றுக்கொண்டதும், அங்கிருந்து அவரவர் வண்டிகளில் தனியாய் பயணித்து சந்திரசேகரனின் வீட்டை அடைந்தபோது மணி பகல் சரியாய் பன்னிரண்டு.

முதலில் போய்ச் சேர்ந்துவிட்ட ரமணன், தெரு முனையில் காத்திருந்து, அவள் வந்த பிறகு, மீண்டும் கிளம்பி இருவரும் ஒன்றாகவே ஒருவர்பின் ஒருவராக காம்பௌண்ட்டுக்குள் நுழைய, வாச வராந்தாவில் நின்று 'யாரையோ வழியனுப்பிக் கொண்டிருந்த சந்திரசேகரன் அட!' என்றார் உரக்க, ஆச்சர்யத்துடன்.

'என்ன இந்த வேளை கெட்ட வேளைல ரெண்டு பேரும் ஊர்வலமா வந்திருக்கீங்க! அதுவும் தனித்தனியா? பவுர்ணமி நிலா காயுதுன்ற நினைப்பா?'

சின்ன சிரிப்புடன் வினவியவருக்கு இரண்டு பேரும் இறுகிய முகத்துடன் அருகில் வந்ததும் ஏதோ புரிந்திருக்க வேண்டும், கூட இருந்த நபரை உடனடியாப் அனுப்பி விட்டு இவர்களை உள்ளே அழைத்துப் போனார்.

அப்புறம் விஷயம் தெரிந்ததும் தான் அத்தனை அதிர்ச்சி. நம்பமாட்டாமல் கேள்விகள்!

முதலில் அப்படி பதறினாலும், கடைசியில் எடுத்த முடிவு எடுத்தது தான் என்பது புரிந்த பிறகு சந்திர

சேகரன் மௌனமாகி விட்டதை இப்போது யமுனா நினைத்துப் பார்த்தாள்.

யோசித்த வரையில் சந்திரசேகரின் அக்கறையையும் அதன் விளைவாக எழுந்த கேள்விகளையும் யமுனாவால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் பின்னர் தொடர்ந்த அந்த மௌனத்துக்குத்தான் அர்த்தம் என்ன என்பது விளங்கவில்லை.

அங்கிள் புரிந்து கொண்டிருப்பாரா? இல்லை, சாதாரணப்பட்டவர்கள் மாதிரி உணர்ச்சி பூர்வமாக மட்டும் சிந்தித்து கோபத்துக்கு இடம் கொடுத்திருப்பாரா;

கையிலிருந்த பள்ளி ஆண்டு புத்தகத்தை மேஜை மீது வைத்த நொடியில் ஆறுமுகம் எட்டிப் பார்த்தான்.

'காபி கொண்டு வரட்டுமா மேடம்?'

'வேணாம்.'

'ஏதாவது கூல் ட்ரிங்க்?'

யமுனா புன்னகைத்து மறுத்தாள்.

'இப்பத்தான் வயிறு முட்ட டிபன் சாப்டுட்டு வரேன் ஒண்ணும் வேணாம். அக்கௌண்டண்ட் போயிட்டா மட்டும் வந்து சொல்லு...'

அவன் நகர்ந்து, மறைந்தான்.

யமுனா இரண்டு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்தி சோம்பல் முறித்தாள்.

களைப்பாக இருந்தது.

சற்றும் எதிர்பாராத விதமாய் கடந்த மூன்று நாட்களில் அந்த உணர்ச்சி வயப்படல், பேச்சு. சிந்தனை முடிவு என்று வரிசையாய் என்னென்னமோ நடந்து விட்டதில் மனசு மட்டும் அல்ல, உடம்பும் ஓய்ந்து விட்டதை நன்றாகவே உணர முடிந்தது.



ஆனால் இத்தனை உணர்ச்சி பூர்வமான அனுபவங்கள் நடுவிலும், நிதானம், தெளிவு, பிராக்டிகல் சென்ஸ்- இவைகளை இழக்காமல் செயல்பட்டதை நினைக்கும் போது களைப்பையும் மீறிக் கொண்டு மனசு 'ஹ' என்றது லேசான கர்வத்துடன்.

ஒத்து வராது என்று புரிந்ததும், காச்மூச் சென்று கத்தாமல் சுமுக்கமாய்ப்பிரிய தீர்மானித்ததிலிருந்து, பசியை உணர்ந்து ட்ரைவ் இன் ரெஸ்ட்ராண்டுக்குச் சென்று சாப்பிட்டது வரை அனைத்தையுமே ஒரு முதிர்ச்சியுடன் செய்ததை ஞாபகப்படுத்திக் கொண்ட போது சற்று முன் உண்டான பெருமை அதிகமானது.

சந்திரசேகரனிடமும், இவனிடமும், விடை பெற்றுக் கொண்டு ரமணன் புறப்பட்டதும், பின்னாலேயே இவளும் கிளம்பி விட்டாள்.

தெருமுனைவரை சென்ற பிறகு வேகத்தை மட்டுப் படுத்தி அடுத்து என்ன செய்யவேண்டும் என்று சிந்தித்தாள்.

அம்மாவிடம் விஷயத்தைக் கூற வேண்டும். அப்புறம் ராணி, வசுந்தரா, மற்ற ஆபீஸ் நண்பர்களிடம் ஓரிரு உறவினர்களிடம்...

அம்மாவிடம் எப்போது கூறலாம்?

மாலையில் பள்ளியிலிருந்து திரும்பிய பின்னர்? இரவு சாப்பாடானதும்?

எதற்கு அத்தனை நேரம் தள்ளிப் போட வேண்டும்? முடிவோ எடுத்தாயிற்று; 'பை ரமணன்' என்று விடை பெற்றும் வந்தாயிற்று! அப்புறம்?

இப்போதே, நேராக பாடசாலைக்குச் சென்று சொல்லிட்டால் என்ன?

அம்மா வேலையாய் இருந்தால்? அரைமணி காத்திருந்து சொன்னால் ஆயிற்று!

அம்மாவிடம் தெரிவித்து, மாலையோ, அல்லது நாளைக்கு அலுவலகத்தில் சந்திக்கும் போதோ மற்றவர்களிடம் சுருக்கமாய் விளக்கி, அத்துடன் விஷயம் முடிந்தது என்று ஒதுக்கி வைத்துவிட்டு மற்ற வேலைகளில் கவனத்தை செலுத்தினால் இது புத்திசாலித்தனம்.

ஒதுக்கி வைப்பது... அதாவது ரமணன் பற்றின நினைவுகளுக்கு இடம் கொடுக்காமல் இருப்பது...அவனோடு பழகியதை, பேசியதை, அனுபவித்தவைகளை அசை போடாமல் இருப்பது. அவற்றுக்காக ஏங்காமல் இருப்பது...ஓ! இது சாத்தியமா? கஷ்டம்தான். ஆனால் ஒதுக்கப் பழகுவதைத் தவிர வேறு வழியில்லை.

அதுசரி, நான் முயற்சி பண்ணினாலும், மற்றவர்கள் சும்மா இருக்க வேண்டுமே! இருப்பார்களா?

யமுனாவுக்கு முதல் முறையாககுழப்பமாக இருந்தது.

ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியைத் தாண்டிய போது சூடாக ஒரு கப் காபி சாப்பிட்டால் குழப்பம் குறைந்து தெம்பு வரலாம் என்று தோன்ற. அடுத்து வந்த ட்ரைவின் ரெஸ்டாரண்டின் வாசலில் நுழைந்து. மரத்தடியில் வண்டியை நிறுத்திவிட்டு, உள்ளே சென்று சந்தடி இல்லாமல் ஓரமாய் இருந்த மேஜை முன் அமர்ந்தாள்.

என்ன வேண்டும்?-என்கிற பார்வையுடன் எதிரில் வந்து நின்ற சர்வரை நிமிர்ந்து பார்த்தாள். பரிச்சயமானவர்தாம்! ரமணனும் இவளும் எத்தனை முறைகள் வந்து இதே மூலையில் அமர்ந்து அரட்டை அடித்திருக்கிறார்கள்! ஏன் இவள் மட்டும் தனியாக வந்திருக்கிறாள் என்று நினைப்பாரோ? எங்களுக்குள் சண்டை கிண்டை என்று...

யமுனா ஒருதரம் கோபத்துடன் தலையை உலுக்கிக் கொண்டாள்.



இந்த ஆள் என்ன நினைத்துக் கொண்டால் எனக்கு என்ன என்று இல்லாமல் என்ன மடத்தனமாய் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்று தன்னைத்தானே அதட்டிக் கொண்டவள், சர்வரைப் பார்த்து புன்னகைத்தாள்.

'சூடா ஒரு கப் காபி...'

இதற்கு தான் என்னை இத்தனை நேரம் காக்க வைத்தாயா என்பது போல முறைத்து விட்டு அவர் நகர, யமுனா அவசரமாய் யோசனை செய்தாள்.

ஏன் வெறும் காபி மட்டும் ஆர்டர் செய்தேன்! பசிக்கிறதா? எஸ். அப்புறம் என்ன வெறும் காபி மட்டும்? துக்கம் கொண்டாடுகிறேனா? என்ன துக்கம், எதற்கு வேதனை? ஒத்து வராததற்கு முன்னெச்சரிக்கையுடன் முற்றுப்புள்ளி வைத்து விட்டோம் என்று சந்தோஷப்படாமல் என்ன அசட்டு காரியம் செய்கிறேன் சாதாரண சராசரி பெண்ணைப்போல! நோ-ஐம் டிபரண்ட்... என்னுடைய ரியாக்ஷன் வித்தியாசமாத் தான் இருக்க வேண்டும். இருக்கும். இதை எனக்கு நானே உணர்த்திக் கொள்ளுவது அவசியம்.

'சர்வர்...'

நாலு டேபிள்களைக் கடந்து சென்று விட்ட யமுனா உரக்க அழைத்தாள்.

அருகில் வந்ததும் சமாதானப்படுத்தும் தினுசில் சிரித்தாள்.

'ஏதோ ஞாபகத்துல வெறும் காபி-னு சொல்லிட்டேன். ஒரு மசால் தோசையும் கொண்டு வர்றீங்களா?'

திரும்பியவரை மறுபடியும் தடுத்து நிறுத்தினாள்.

'ஸாரி—ஸ்வீட் சாப்பிடணும் போல இருக்கு...ம்ம்... பாஸந்தி இருக்கா?'

பதில் கூறாமல் சென்று சில நிமிஷங்களில் அவள் ஆர்டர் பண்ணிய பதார்த்தங்களுடன் சர்வர் வர, எதை பற்றியும் சிந்திக்காமல் யமுனா சாப்பிட முற்பட்டாள்.

ரமணனும் அவளும் பிரிய தீர்மானித்து விட்ட சோகத்தை அளவு மீறி பெரிசு பண்ணி எதையும் சாப்பிட பிடிக்கவில்லை என்றோ, பாஸந்தியும், மசால் தோசையும் வாய்க்கு ருசிக்கவில்லை என்றோ மாய்மாலம் பண்ணாமல் இருப்பதை, இன்னும் சரியாகச் சொல்ல வேண்டும் என்றால், அடுத்தவருக்காக வேஷம் போடாமல் இருப்பதை, நினைக்கும் போது சந்தோஷத்தில் புன்னகை கூட தோன்றியது.

'மேடம் கூப்பிடறாங்கம்மா...'

ஆறுமுகம் வந்து அழைக்க, எழுந்து போனாள்

உள்ளே நுழைந்தவளை மங்கையர்க்கரசி 'ஹல்லோ—வாட் எ ஸர்பிரைஸ்! என்ன யம்மூ திடும்னு வந்திருக்கே, ரமணனும் வந்திருக்காரா?' என்று உற்சாகமாய் வரவேற்க—அம்மாவின் அருகில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு யமுனா அமர்ந்தாள்.

'முக்கியமான வேலை ஏதாவது இருக்காம்மா?'

'ஏன் கேக்கறே? வெளிய எங்காவது கல்யாண விஷயமா போகணுமா?'

யமுனா உதட்டை ஒருபக்கமாய் சுழித்தாள்.

'கல்யாண விஷயம்தாம். ஆனா வெளியில போக வேண்டாம். இங்கயே பேசிடலாம். அரைமணி நம்பள யாரும் தொந்தரவு பண்ணாம இருந்தா வசதியா இருக்கும்...'

மங்கையர்க்கரசி சில நொடிகளுக்கு மகளை ஊன்றி பார்த்தார். பிறகு என்ன, எது என்று அவசரப்படாமல் ஆறுமுகத்தை அழைத்து உள்ளே யாரையும் விட வேண்டாம் என்று உத்தரவிட்டார். டெலிபோன் ரிஸிவரை



எடுத்து கீழே வைத்தார். 'சொல்லு' என்பது போல யமுனாவை அழுத்தமாகப் பார்த்தார்.

யமுனா சொன்னாள்.

அம்மாவுக்கு என்னென்ன தெரிய வேண்டும் என்று நினைத்தாளோ அத்தனையும் மறைக்காமல் அதே சமயம் படபடக்காமல், கூறிவிட்டு 'அவ்வளோதான்' என்றாள் முத்தாய்ப்பாக...

மங்கையக்க்கரசி இந்த மாதிரியான ஒரு திருப்பத்தை எதிர் பார்க்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. என்றாலும் சில நொடிகளுக்கு சும்மா இருந்துவிட்டு பிறகு யோசனையுடன் நிதானம் தவறாமல் பேசினார்.

'ஐம் ஸாரி-கேக்கவே கஷ்டமா இருக்கு. ரமணனை எனக்கும் ரொம்ப பிடிச்சிருந்தது...ஆனா...வந்து... யம்மூ...இவ்ளோ அவசரமா இந்த முடிவுக்கு வரணுமா? ஒரு மாசம் ஆறப் போட்டுட்டு மறுபடி யோசிக்கறது நல்லது இல்லையா?'

யமுனா தோளைக் குலுக்கி இல்லை என்று மறுத்தாள்.

'உனக்கு என் ஸ்னேகிதி ராணியத் தெரியும் இல்லியாம்மா? அவளுக்கு மாம்பழம்னா உசிர். ஆனா அது அவளுக்கு அலர்ஜி. தின்னா உடம்பு பூரா தடிச்சு போயி, அரிப்பு எடுத்து, நான் கணக்குல ரொம்ப கஷ்டப்படுவா இருந்தும் என்ன பண்ணுவா தெரியுமா? ஒவ்வொரு ஸீஸன்லேயும் ஆசைய அடக்க முடியாம மாம்பழத்த தின்னுட்டு, அவஸ்தையான அவஸ்தை படுவா. அந்த மாதிரி என்னையும் இருக்கச் சொல்றயாம்மா? தாம்பத்தியத்த முழுமையாக்கறது குழந்தைனு நா நம்பறேன், எனக்கு குழந்தைவேணும் ரமணனுக்கு வேணாம். அடிப்

படையே முரண்படறப்போ, விலகிடறதுதானேம்மா புத்திசாலித்தனம்? அடுத்தவங்க என்ன சொல்லுவாங்களோனு கணக்கு பண்ணி வாழாம, நம்ப மன சாட்சிக்கு விரோதம் இல்லாம வாழணும்னு தானேம்மா சின்ன வயசுலேந்தே அப்பாவும், நீயும் எனக்கு கத்துத் தந்திருக்கீங்க? அத இப்ப மாத்திக்க முடியலையே!'

பேசிய யமுனா எழுந்து நின்றாள்.

'ஒரு அம்மா ஸ்தானத்துலேந்து பார்க்கறப்போ, பெண் கல்யாணம் நின்னு போனது உனக்கு ரொம்ப வருத்தத்தைத் தரும்-எனக்கு அது தெரியும். ஐம் ஸாரிம்மா...ஆனா யார் எது சொன்னாலும் நீ எங்க கண்ணோட்டத்தை புரிஞ்சுப்பேன்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. ஓகே-நா கிளம்பறேன். பிளைண்ட் ஸ்கூலுக்குப் போயி பசங்களுக்கு கொஞ்ச நேரம் பாடம் படிச்சுட்டு வரேன். வீட்டுக்கு வர லேட் ஆச்சுன்னா கவலைப் படாதே—'

இரண்டடி நடந்து அம்மாவை நெருங்கின யமுனா குனிந்து அவரை அணைத்து கன்னத்தில் மென்மையாய் முத்தமிட்டு 'ப்ளீஸ் புரிஞ்சிக்கம்மா' என்று முனகி மேஜை மேல் வைத்திருந்த பையைத் தோளில் மாட்டிக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள்.

## 16

**ரமணன்**

பிள்ளையார் கோவிலுக்கு அம்மாவோடு கிளம்பிக் கொண்டிருந்த அக்காவிடம், கொஞ்சம் உள்ளே வா என்கிற விதமாய் ரமணன் சைகை செய்ய, அவன் அழைப்பு புரிந்து அறைக்குள் வந்த கௌரி கண்களைக் குறும்பாக சிமிட்டினாள்.

'என்ன தம்பி-தனியா பேசணும்னு கூப்பிடறே! மத்தியானம் ஆபீஸ்லேந்து திடும்னு வந்தப்பவே என்னடா



இது புது பழக்கம்னு நினைச்சேன். அப்புறம் எந்த கேள்விக்கும் சரியா பதில் சொல்லாம உன் அறைக்கு வந்து படுத்துக்கிட்டதும் சரி. தம்பி ஏதோ யோசனைல இருக்கான்னு புரிஞ்சுகிட்டேன். இப்ப, என் ஊகம் சரியாயிடுச்சு...என்ன விஷயம்? ஹனிமூனுக்கு எங்க போலாம்னு மண்டைய உடைச்சிக்கறியா? ஏதாவது ஐடியா சொல்லுக்கா-னு கேக்கறதா இருந்தா, ஸாரி தம்பி-நா ஹனிமூனே போனதில்ல. கல்யாணமான மறு நாள் திருச்சிக்குப் போய் தனிக்குடித்தனம் வச்சிட்டு, ஸ்ரீரங்கத்துக்கும், மலைக்கோட்டைக்கும் நாலுக்கு ஒரு எடமா சாமி கும்பிடப் போனதுதான் எங்களுக்குத் தேன்நிலவா இருந்துச்சு...மத்தபடி முதலிரவு சமாசாரம் ஏதாவது பேசணும்னா? அதுக்கும் நா ஆள் இல்ல. உங்கத்தான் நாளைக் கால வண்டில வந்திடுவார் அப்புறம் உம் பாடு, அவர் பாடு...என்ன பாக்கறே! எப்படிடா நம்ப மனசில இருக்கறத இத்தனை தெளிவா புரிஞ்சுகிட்டு அக்கா பேசறாளேனா, அதுதான் நம்ப ஸ்பெஷாலிடியே...இப்பவாவது என் அருமை உனக்குப் புரிஞ்சா சரி...'

எப்படி விஷயத்தைச் சொல்லப் போகிறோம் என்கிற தயக்கத்தில் இருந்த ரமணன், அந்த சங்கடம் அக்காவின் கேலிப் பேச்சால் குறைய, வாய்விட்டுச் சிரித்தான்.

'ப்பா...'இங்க வா'-னு வாயால கூட கூப்பிடல... சின்னதா ஒரு ஜாடைதான். அதுக்கே இத்தன அர்த்தம் கொடுத்து, இவ்வளவு நீளமா பேசறியே, பாவமக்கா அத்தான். தினமும் அப்பப்ப சாப்பிடவாவது வாய்திறக்க அனுமதிப்பியா? இல்ல, அதுக்குக்கூட வழியில்லாம பண்ணிடுவாயா பேசாம, ஓய்வு நேரத்துல கதை எழுத ஆரம்பிச்சிடுக்கா-உன் கற்பனைக்கு முன்னால சந்திர சேகரன் ஸர் கூட பிச்சை வாங்கணும்...'

அவன் சீண்டலுக்குச் சற்றும் குறையாத கேலியுடன் ரமணன் பேசி, சிரிக்க கௌரி அவனோடு சேர்ந்து சிரித்தாள்.

'சரி-சொல்லு-எதுக்கு கூப்டே? அம்மா காத்துட்டு இருக்காங்க...கோயிலுக்குப் போக நேரமாச்சு...'

ரமணன் அவள் பின்னாடி வந்து தலைப்பைப் பிடித்து முகத்தை மறைத்து விளையாடிக் கொண்டிருந்த மூன்று வயசு விவேக்கை எட்டிப் பிடித்து தன்னிடம் இழுத்தான் அலாக்காக இரண்டு கைகளாலும் ஆட்டுக் குட்டி மாதிரி எடுத்து, உயரே தூக்கிப் போட்டுப் பிடித்தான்.

விவேக் உற்சாகத்துடன் கத்தினான்.

'என்ன தம்பி-இதுக்கா கூப்டே?'

இரண்டு தரம் குழந்தையைத் தூக்கிப் போட்டு பிடித்த ரமணன் செய்வதை நிறுத்தாமல் உன்கிட்ட கொஞ்சம் தனியா பேசணும்-கா' என்றான்.

'பேசேன்' இப்ப தனியாதானே இருக்கோம்.

ரமணன், குழந்தையை இறக்கினான்.

'போய் நேத்து நா வாங்கிட்டு வந்த மெக்கானோ செட்ட எடுத்திட்டுவா விவேக்...நீயும் நானும் ஒண்ணா உக்காந்துகிட்டு பெரிய்ய க்ரேன் பண்ணலாமா?'

விவேக் வெளியே ஓடியதும், ரமணன் தமக்கை பக்கம் திரும்பினான்.

'கோயிலுக்கு நீ போகாதக்கா-உன்கிட்ட முக்கிய மான சேதி ஒண்ணு சொல்லணும்.'

'அப்படி என்னப்பா தலைபோற விஷயம்? போயிட்டு வந்தும் பேசிக்கக் கூடாதா?'

அம்மா இல்லாதப்போ பேசினா தேவலைனு நினைக் கறேன்-கா.'

கௌரி குழப்பத்துடன் ஓரடி அவனை நெருங்கி வந்து 'என்ன விஷயம் தம்பி? யாருக்காச்சும் உடம்பு, கிடம்பு சரியில்லையா?' என்றாள்.



'அதெல்லாம் ஒண்ணும் இல்ல...வீணா மனச அலட்டிக்காத...நீ அம்மாவ ஏதாவது சாக்கு போக்கு சொல்லி அனுப்பிட்டு வா...அப்புறமா பேசலாம்...'

புருவங்கள் கேள்விக் குறியாய் முடிச்சுப் போட கூடத்துக்குச் சென்ற கௌரி, முகம் கழுவ பாத்ரூமுக்குப் போன போது வழுக்கி விழுந்ததில் கால் சுளுக்கிக் கொண்டு வலிப்பதால், கோவிலுக்கு தான் வரவில்லை என்று கூறி, 'அஞ்சு நிமிஷம் முன்னால வரைக்கும் நல்லா இருந்தே.—அதுக்குள் எப்ப விழுந்தே, எப்படி சுளுக்கிட்ட? எங்க காட்டு?...' என்று தொண தொணத்த அம்மாவை எப்படியோ சரிகட்டி அனுப்பின பின்னர், மீண்டும் அறைக்குள் சில நிமிஷங்களில் நுழைந்த போது எதுவுமே நடக்காத தினுசில் தரையில் அமர்ந்து மருமக னோடு மெக்கானோ செட்டில் கிரேன் பண்ணுவதில் ரமணன் ஈடுபட்டிருந்தான்.

கௌரி அவர்கள் அருகில் சென்று உட்கார்ந்தாள்.

எதுவும் பேசாமல் சின்னக் குழந்தைக்குச் சரியாய் மெக்கானோ செட்—கம்பிகளை எடுப்பதும், ஒன்றோடு ஒன்று இணைப்பதுமாக இருந்த ரமணனை அழுந்தப் பார்த்தாள்.

விஷயம் சாதாரணமானது இல்லைஎன்று எதனாலோ உள்மனசு பயமுறுத்தியது.

'ஏனோ,சின்ன வயசு முதற்கொண்டே தம்பி கல்யா ணம் செய்து கொள்ளாமல் இருந்துவிடுவானோ என்கிற எண்ணம் அவ்வப்போது அவளுக்குள் தலை நீட்டியிருக் கிறது. ஒவ்வொரு தரமும் சீ-என்ன பைத்தியக்காரத்தன மாய் சிந்திக்கறேன்' என்று உடனடியாய் அதை ஒதுக்கி விடுவாள்தான். என்றாலும் இது ஏன்—என்று அவளுக்கு இது நாள் வரை புரிந்ததில்லை. ரமண மகரிஷியை ஆராதித்து அந்தப் பேரை வைத்ததாலா; அல்லது இது வேண்டும், அது எனக்கு—என்கிற ஆசைகள் இல்லாமல் ரமணன் இருந்ததாலா, இல்லை, சமுதாயம், நாடு வளம்

பெற தனி நபர்தான்—தன் சுகம் சுயநலத்தை குறைத்துக் கொண்டு செய்ய வேண்டிய காரியங்கள் என்னென்ன, என்று சமயம் கிடைக்கும் போதெல்லாம் பேசுவதாலா, அதுவும் இல்லாது போனால், எதற்கெடுத்தாலும் கண்டிப்பு, கட்டுப்பாடு என்று யோகி, போல வாழ்கிறானே, இவனோடு அனுசரித்து வாழ எந்தப் பெண் முன் வருவாள்?—என்கிற கவலையா? ஏதோ ஒன்று—மொத்தத்தில் தம்பி ஒருத்தியை கல்யாணம் பண்ணிக் கொண்டு குடியும், குடித்தனமுமாய் இருப்பானா என்கிற நம்பிக்கை பூரணமாய் கௌரிக்கு இருந்ததில்லைதான்.

அதனால்தான் பத்து நாட்களுக்கு முன் தொலைபேசியில் அப்பா இவளிடம் ரமணன், யமுனாவை மணக்க தீர்மானித்திருப்பதைச் சொன்னதும் தலைகால் புரியாத சந்தோஷத்தில் போட்டது போட்டபடியாய் உடனே வர ஆசைபட்டாள்.

என்னதான் எளிமையாக நடக்கப் போகும் திருமணம் என்றாலும், ஊரிலிருந்து நாலு உறவினர்கள், வருவார்கள் பெண்ணுக்குப் புடவை, நகை வாங்க வேண்டும், கடைக்கும் கண்ணிக்கும் அலைய வேண்டி வரும்—இத்தனைக்கும் அம்மாவையும் அப்பாவையும் ஒண்டியாக அல்லாடவிடாமல் என்னால் முடிந்த பொறுப்புகளைக் கவனிக்க வேண்டாமா என்று புருஷனிடம் 'லெக்சர்' அடித்துவிட்டு பிள்ளையுடன் அவள் சென்னைக்கு வந்து எட்டு நாட்கள் ஆகிவிட்டன.

ஆனால், வந்து இறங்கியதும் தம்பியிடம் காணப்பட்ட குதூகலம், பரபரப்பு, கடந்த இரண்டு, மூன்று நாட்களாக இல்லாத மாதிரி ஓர் உறுத்தல்.

என்ன விஷயம் என்று தனக்குத் தானே கௌரி யோசிக்காமல் இல்லை.



யமுனா வழக்கமான பெண்களிலிருந்து மாறுபட்டவள் திருமணம் ஆனபிறகு பெற்றவர்களுடன் தங்குவது அவளுக்குச் சரிப்படுமா என்று தயங்குகிறானா? இல்லை சம்பாதிக்கும் பணம் போதுமா என்று கவலைப்படுகிறானா? சாதாரணமாய் எல்லா ஆண்களும் கல்யாணத்திற்கு முன்னால் அனுபவிக்கும் இருப்புக் கொள்ளாமையின் பிரதிபலிப்பா?

ஓரிரு சமயங்கள் கேட்டுவிடலாமா என்று நினைத்தவள் இல்லாததைப் பெரிசுபண்ணக் கூடாது என்று விட்டுவிட்டாள்.

ஆனால், ஒன்றும் இல்லாமல் இல்லை—ஏதோ இருக்கிறது சரி, இருக்கட்டும் அதற்காக அம்மாவைக் கூட அனுப்பி விட்டுத் தனியாகப் பேச வேண்டும் என்றால்;

எதையுமே ஊகிக்க முடியாத நிலையில் கௌரிக்கு படபடப்பாக இருந்தது.

கிரேன் பண்ணுவதில் ஆழ்ந்திருந்த தம்பியின் துடையில் கை வைத்து உலுக்கினாள்.

''என்னவோ சொல்லணும்னு கூப்டுட்டு நீ பாட்டுக்கு குழந்தையோட விளையாடிட்டு இருந்தா என்ன அர்த்தம்?''

ரமணன் விழிகளை உயர்த்தி அவளை ஏறிட்டான்.

'அப்பா எங்க?'

'வாசல்ல அடுத்த வீட்டுக்காரரோட பேசிட்டு இருக்கார்'

ரமணன் நாலு கம்பிகளையும், அவற்றை இணைக்கத் தேவையான 'போல்ட், நட்'களையும் குட்டி ஸ்பானரையும் விவேக்கிடம் தந்தான்.

'நீ இந்த கம்பியை நா ஏற்கனவே செஞ்சுவச்சிருக்கற மாதிரி இணைச்சு வைக்கறியா? மாமா கொஞ்சம் அம்மாலோட பேசிட்டு வந்துடறேன்!'

அவன் ஆர்வத்துடன் சம்மதித்தது, ரமணன் எழுந்து ஜன்னலருகில் சென்று நின்று கொண்டு அக்காவை கிட்டத்தில் அழைத்தான்.

'என்ன தம்பி?'

ரமணன் குரலைத் தழைத்துக் கொண்டு பேசினான்.

'யமுனாவும் நானும் கல்யாணத்த நிறுத்திடறதுனு தீர்மானிச்சிட்டோம்—கா'

'எ...என்னது?'

கௌரி எட்டி, ரமணனின் கையைப் பற்றினாள்.

'என்ன சொல்ற, தம்பி என்று அதட்டலாய் எதிர்க் கேள்வி கேட்டாள்.

ரமணன் தன் கையை விடுவித்துக் கொண்டான்.

பதட்டப்படாதக்கா—நா சொல்றத நிதானமா கேளு...நாங்க குழந்தைங்க இல்ல—நல்லது கெட்டது புரிஞ்சிக்காம ஒரு முடிவு வர்றத்துக்கு...'

அவனை முடிக்க விடாமல் கௌரி குறுக்கிட்டாள்.

'ஏன் நிறுத்திட்டிங்க? யமுனாவோட அம்மா ஏதாச்சும் தகராறு பண்றாங்களா?'

'சேச்சே—வீணா பழிய அவங்க மேல போடறது தப்புக்கா'



'பின்னே? கல்யாணத்த நிடும்னு ஏன் நிறுத்தணும்? நம்ப பக்கத்துலேந்து பிரச்னை ஒண்ணும் இல்ல? அப்புறம் காரணத்த சொல்லு தம்பி?'

'சொல்றேன்-அதுக்குதானே உன்னை மட்டும் தனியா வரச் சொல்லிப் பேசறேன்...நாலு நாள் முன்னால எங்களுக்குள்ள பெரிசா கருத்து வேறுபாடு வந்திடுச்சு-கா, என் கருத்த அவ ஒத்துக்கல, அவளுத நா ஏத்துக்கல... ஸோ-பிரியறததவிர வேறு வழி தெரியல...அதான் கல்யாணம் பண்ணிகிட்டு வேணான்றதவிட, செஞ்சுகறத்துக்கு முன்னாலியே விலகிடறது விவேகம்னு'

மறுபடி கௌரி அவசரமாய் வெட்டினாள்.

'மஹா பெரிய விவேகம். என்ன தம்பி உளர்ற... கல்யாணத்துக்கு இன்னும் நாலு நாள் இல்ல...இப்பப் போயி கருத்து வேறுபாடு, அதனால புத்திசாலித்தனமா நிறுத்திட்டோம்னு சொன்னா யாராவது நம்புவாங்களா?'

ரமணன் வருத்தத்துடன் புன்னகைத்தான்.

'இதான்-கா நம்ப சமுதாயத்துல இருக்கற மிகப் பெரிய கோளாறு-வேஷம் போடாம ப்ராக்டிகலா இருக்கறவங்களுக்கு என்னிக்குமே மதிப்பு கிடையாது. மனசு உறுத்தினாலும் பரவாயில்லேனு அடுத்தவங்களுக்காக வாழறதும், முகமூடி மாட்டிக்கறதும் எனக்குப் பிடிக்காது நல்லவேளையா யமுனாவுக்கும் பிடிக்காது. நாங்க ரெண்டு பேருமாவது ஒருத்தரை ஒருத்தர் சரியா புரிஞ்சுகிட்டு, எங்க கருத்துக்கள மதிக்கத் தீர்மானிச்சமேனு நா சந்தோஷப்படறேன்'

கௌரி அவன் விளக்கம் புரியாத ஆத்திரத்துடன் கோபமாக, அடிக் குரலில் கேட்டாள்.

'அப்ப, நீங்க இத்தனை மாசமா காதலிச்சது வேஷம், இப்ப விலகறதுதான்-உண்மைனு நம்பச் சொல்றியா?'

ரமணன் மறுத்தான்.

'நாங்க காதலிச்சது, ஏன் இன்னமும் காதலிக்கறது ரெண்டுமே சாத்தியமானது. ஆனா, கல்யாணம் பண்ணிக்கறது நடைமுறைக்கு ஒத்து வராதுன்றதாலதான், விலக தீர்மானிச்சிருக்கோம்'

'காதலிக்கறீங்க-ஆனா கல்யாணம் வேணாம், என்ன உளறல் இது தம்பி? இதுக்கு அவங்க அம்மா சம்மதிச்சிட்டாங்களா?'

'தெரியாது-ஆனா சம்மதிக்கறதத் தவிர ரெண்டு குடும்பத்துப் பெரியவங்களுக்குமே வேற வழி இல்ல'

கெளரி நெற்றியில் பட்டென்று அறைந்து கொண்டாள்.

'எனக்கு ஒண்ணுமே புரியல தம்பி...கல்யாணத்த நிறுத்தற அளவுக்கு என்ன கருத்து வேறுபாடு? அதையாவது சொல்லேன்?'

ரமணன் உதட்டைப் பிதுக்கி, கன்னத்தை சொறிந்து கொண்டான்.

'ஸாரி-கா-உன் மனசு இருக்கற நிலைல அத நா இப்ப சொன்னா நீ சரியா புரிஞ்சுக்க மாட்டே...கொஞ்ச நாள் போகட்டும்-நானே சொல்றேன்.'

கெளரி அவனை வெறித்தாள். அவள் மேல் உதட்டில் வியர்வை சின்னச் சின்ன கொப்பளங்களாக முளைக்க முற்பட்டன.

'கொஞ்ச நாளா? விளையாடறியா தம்பி? விடிஞ்சா அத்தானும், மத்த உறவுகாரங்களும் கல்யாணத்துக்காக வரப் போறாங்கன்றத மறந்துட்டு என்ன பேச்சு பேசற நீ!'



மறைக்கல-கா-எல்லாத்தையும் நினைச்சுப் பார்த்து எது செஞ்சா, எது சொன்னா எல்லாருக்கும் ரொம்ப வருத்தமோ, அதிர்ச்சியோ இல்லாம இருக்கும்னுயோசனை பண்ணிட்டுதான் பேசறேன்'

'அப்போ?'

'அத்தான் மட்டும் நாளைக்கு வரப்படி வரட்டும். மத்தவங்க நாள ராத்திரி, அதுக்கும் மேலதான் புறப்படவே போறாங்க...மிஞ்சி போனா வெளியூர்லேந்து வர்றதா தகவல் கொடுத்திருக்கிறவங்க நாலைஞ்சு உறவுக்காரங்க கூட இல்ல...நாளைக்கு காலைல எல்லாருக்கும் போன் மூலமாவோ, இல்ல தந்தி அடிச்சோ 'கல்யாணம் நின்னுபோச்சு வர வேணாம்'னு தகவல் சொல்லிட முடியாதா?'

நிதானம் இழக்காமல் அவன்பேசுவதை நம்பமாட்டாமல் கெளரி விழித்தாள்.

'நின்னு போறதுக்குக் காரணம் கேட்டா?'

'எதிர்பாராத விதமா ரமணனுக்கு ட்ரான்ஸ்பர் ஆர்டர் வந்திடுச்சு...வேற வழியில்லாம நிறுத்திட்டோம்னு சொல்லிடலாம்.'

'நம்புவாங்களா?'

ரமணன் அவள் தோளில் தட்டிக் கொடுத்தான்.

'அது அவங்கவங்க இஷ்டம்.'

'வெளியூர் மனுஷங்கள விடு-இங்கயே இருக்கற உறவுகாரங்க,ஸ்நேகிதங்க பத்துநாள் பொறுத்து யாராச்சும் நம்ம வீட்டுக்கு வந்து, நீ இங்கயே இருக்கறத பார்த்தா?'

'நா இருந்தாதானே!'

கெளரியின் திகைப்பும், குழப்பமும் அதிகமாயின.

'உனக்கு என்னவோ ஆயிடுச்சு தம்பி...'

ரமணன் ரிஸ்ட் வாட்சை ஒருதரம் கழற்றி வியர்வையைத் துடைத்துவிட்டு மறுபடி அணிந்து கொண்டான்.

'ஒண்ணும் ஆகலைக்கா-பயப்படாதே. நா தெளிவா இருக்கேன். உண்மைய சொல்லணும்னா, சரியான முடிவ எடுத்திட்டோம்னு சந்தோஷமா கூட இருக்கேன்! யமுனாவும் நானும் கல்யாணம் பண்ணிக்க தீர்மானிச்சது தெரியாம எங்க மேனேஜர் என்னைக் கூப்பிட்டு வெளியூர் பிராஞ்ச்ல பிரமோஷனோடு உதவி மேனேஜர் பதவி உடனடியா ஏத்துக்க உன்னை சிபாரிசு பண்ணட்டுமானு கேட்டார். யோசிச்சு சொல்றேன் ஸர்-னு சொன்னேன். போன வாரம் இப்போதைக்கு வேணாம்னு மறுத்துட்டேன் ஆனா கல்யாணத்த நிறுத்திட முடிவு பண்ணப்புறம் நானா நேத்து அவர்கிட்ட போயி அந்த வேலைக்கு இன்னும் வாய்ப்பு இருக்கா-னு கேட்டேன். இருக்கு-னு சொன்னார் ஸோ, பொய்யா இல்லாம நிஜமாலே ஒரே வாரத்துல நா வேற ஊருக்கு மாற்றலாகிப் போயிடுவேன் தான்-இப்போதைக்கு உன்கிட்ட மட்டும் சொல்லிட்டு ஊருக்குப் புறப்படறத்துக்கு முன்னால அம்மா, அப்பாவுக்கு விளக்கிடலாம்ன்றது என் திட்டம்'

சின்ன குரலில், வார்த்தையா பேசிய ரமணன் நிறுத்தினான்.

சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். நீ புரிந்து கொள்வதோடு, அடுத்தவர்களுக்குப் புரியவைக்கவும் உதவுவாய் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்கிற மாதிரி அவள் தோளை மீண்டும் தட்டிக்கொடுத்தவன் 'ரிலாக்ஸ்' என்று சொல்லும் விதமாய் அவளை ஏறிட்டு புன்னகைத்தான்.



பின், 'கம்பிகள்ள 'ஜாயின்' பண்ணிட்டியா விவேக்' என்று கேட்டவாறு திரும்பி, நடந்து, சற்று தள்ளி அமர்ந்திருந்த மருமகனை ஒட்டி தரையில் உட்கார்ந்து, கிரேன் செய்வதைவிட்ட இடத்திலிருந்து தொடர முற்பட்டான்.

# 17

நான்

நூற்றியிருபது, நூற்று முப்பது நபர்கள் இருந்தால் அதிகம் என்று தோன்றியது.

கூட்டம் என்று குறிப்பிடுகையில் இந்த எண்ணிக்கையைக் குறைவாகச் சிலர் நினைக்கலாம்.

ஆனால், என் மனசுக்கு நிறைவாகவே இருந்தது.

எழுத்து என்றால் கறுப்பா, சிவப்பா என்று கேட்கும் குப்பனும், சுப்பனுமாய், ஆயிரக்கணக்கில் நெளிவதைவிட விஷயம் அறிந்தவர் பத்துபேர்கள் நடுவில் உரக்க சிந்திப்பது எனக்குப் பிடித்தமான விஷயம்.

பார்வையை வீசி, கண்முன் அமர்ந்திருந்தவர்களை நிதானமாக ஏறிட்டபோது, எழுத்தை நேசிக்கும், தென் அமெரிக்க இலக்கியத்திலிருந்து, வங்காள எழுத்துக்கள் வரை அத்தனையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆர்வத்துடன் தேடித் தேடிப் படிக்கும் ரசனை கொண்ட தெரிந்த முகங்கள் ஆங்காங்கு பளிச்பளிசென்று தென்பட சந்தோஷம் அதிகமானது.

விஷய ஞானமுள்ள வாசகர்களுடன் கருத்துப் பரிமாறல் செய்வது ஒரு எழுத்தாளரின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கு கட்டாயம் உதவும் என்கிற நம்பிக்கைஎனக்கு உண்டு!

சாதாரணமாய் மாசத்துக்கு இருபது கூட்டங்கள் என்று யார், எங்கு அழைத்தாலும் ஒப்புக்கொள்ளும் பழக்கம் எனக்குக் கிடையாது. அப்படிச் செய்வது தவறு என்ற கருத்தால் இல்லை; எழுத்தாளரும். வாசகர்களும் அடிக்கடி சந்திக்க வேண்டிய அவசியம் கிடையாது என்று நான் நம்புவதும் எந்த சந்திப்பும் ஒருவழிப் பாதையாக இல்லாமல் அர்த்தமுள்ள பேச்சைக் கேட்பதனால் வாசகர்களும் தொடர்ந்து அவர்களின் கேள்விகளுக்காக சிந்திக்க முற்படுவதனால் நானும் பயன் பெறுவதாக, ம்யுசுவல் பெனிஃபிட் கொண்டதாக அமையவேண்டும் என்று நான் ஆசைப்படுவதாலும்தான்...

இல்லாவிட்டால்-நீங்கள் எப்போது எழுத ஆரம்பித்தீர்கள்? 'உங்கள் நாவல்கள் எல்லாம் சோகமாகவே முடிகிறதே' ஏன்? 'பெண்களை உங்களுக்குப் பிடிக்காதா, அதனால்தான் எல்லா நாவல்களிலும் அவர்களை மட்டமாகச் சித்தரிக்கிறீர்கள்?' என்று என் எழுத்தைப் பற்றி எதுவுமே தெரியாமல் கேட்கப்படும் சமயங்களிலும் பொறுமையை இழந்து, கோபமாகப் பேசிவிடுவேனோ என்கிற பயம் எனக்குள் ஜனித்ததுண்டு.

பின்னே? இதுவரை பதினெட்டு நாவல்கள் எழுதியிருக்கிறேன். அதில் எண்ணி மூன்று கதைகள் சோக முடிவுகள் கொண்டவை, இரண்டு புதினங்களில் அறியாமையுடன் வளையவரும் பெண்களைச் சித்தரித்திருக்கிறேன். மற்ற எத்தனையோ நாவல்களை மகிழ்ச்சியுடன் வாசகர்களை சிந்திக்கத் தூண்டும் கேள்விக் குறிகளுடனே முடித்திருப்பதையும், ஒரு சில கதைகளில் சமுதாயத்தின் கண்



மூடித்தனமான. ஏன், காட்டுமிராண்டித்தனமான பழக்கவழக்கங்களை எதிர்த்துக் குரல் கொடுத்து, பாரதி கண்ட புதுமைப் பெண்களாக கதாபாத்திரங்களைப் படைத்திருப்பதையும் புறக்கணித்துவிட்டு இப்படி கேள்வி கேட்டால் எரிச்சல் வராமல் என்ன செய்யும்?

'உங்கள் கேள்வி நியாயமானதாக எனக்குத் தோன்றவில்லை. என் ஓரிரு புத்தகங்களை மட்டும் படித்துவிட்டு வராமல், அனைத்து எழுத்துக்களைப் பரிச்சயம் பண்ணிக் கொண்டபிறகு விமர்சிப்பதுதானே முறையான செயல்? 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதெல்லாம் இலக்கியத்துக்கு சரிபட்டு வராது' என்று எத்தனையோ முறைகள் பொறுமையுடன் விளக்க முயற்சித்திருக்கிறேன்.

ஆக்கப்பூர்வமான விமர்சனங்கள். கேள்விகள், என் போன்ற எழுத்தாளனுக்கு அடி உரம் போன்றவை. கோணலாகச்செல்லும் சிந்தனையை ஒழுங்கு பண்ணவும், பேனா கையிலிருக்கிறது என்பதோடு நான் பிரபலமானவன் என்கிற தைரியத்திலும் எதையும் யோசிக்காமல், ஆராயாமல் நுனிப்புல் மேய்ந்து எழுதினால் விஷயம் தெரிந்தவர்கள் நார் நாராகக் கிழித்து விடுவார்கள்' என்கிற பயத்தையும் ஓர் எழுத்தாளனுக்குள் உண்டு பண்ணுவது மஞ்சள் கண்ணாடி மாட்டிக் கொள்ளாத விமர்சனங்களும், அழுத்தமான கேள்விகளும்தானே!

இந்த கருத்துக்களில் அதீத நம்பிக்கை கொண்டதாலேயே, சகட்டு மேனிக்கு வெறும் பிரபல்யத்துக்காக மட்டும் கூட்டங்களில் பங்கெடுக்க சம்மதிப்பது எனக்கு சாத்தியமாவதில்லை.

என்னைப் பொறுத்தவரை வாசகர்களோடு நான் செலவிடும் நேரம் நிச்சயமாய் இருவழி நடப்புப் பாதை,

டுவே ட்ராஃபிக்தான் - அப்படி இல்லாவிட்டால் எந்த மாபெரும் இலக்கியக் கூட்டமும் அர்த்தம் பெறுவதில்லை. நிச்சயம்.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு இன்றைக்குப் பேச நான் ஒப்புக் கொண்டிருக்கும் கூட்டம் இரண்டு காரணங்களுக்காக எனக்குள் நிறைய எதிர்பார்ப்புகளைத்தோற்றுவித்திருப்பதை உணர்ந்தபோது மேடையில் அமர்ந்திருப்பதையும் மறந்து புன்னகைக்கத் தோன்றியது.

இது சாஹித்திய அகாடமியால் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால், நிஜமாகவே எழுத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் அதிகமாக வந்திருந்தது முதல் காரணம், இரண்டாவது அன்றைக்கு நான் பேசப்போகும் தலைப்பு—

'எழுத்தாளனும், சமுதாயப் பொறுப்புணர்ச்சியும்'—

வந்திருப்பவர்களில் ஒரு சிலராவது நான் வெளியிடப் போகும் கருத்துக்களுக்கு உடன்படமாட்டார்கள். அது இப்போதே எனக்குத் தெரியும். ஆனால், இந்த முரண்பாடே அவர்களிடமிருந்து தீவிரமான கேள்விகளை எழுப்பி, பதில் சொல்வதற்காக, வித்தியாசமாக சிந்திக்கத் தூண்டும் என்பதாலேயே எதிர்பார்ப்பும், மரபரப்பும் தலை தூக்குவதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

நாலு வரிகளில் வரவேற்புரையை முடித்துவிட்டு அகாடமியைச் சார்ந்த நண்பர் என்னைப் பேச அழைக்க, எழுந்து 'மைக்'கிடம் சென்றேன்.

விஷயம் அறிந்தவர்களின் நடுவே எதைச் சொல்ல முற்படுவதும் அத்தனை சுலபமான காரியம் இல்லை என்பதைச் சொல்லும் துணுக்கு ஒன்று சட்டென்று நினைவில்



மின்ன, அந்த 'ஜோக்'கை சபையோருடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் உரையைத் துவக்கினேன்.

ஒரு பாடகரை வித்வத் சபை ஒன்றில் பாட அழைத்தார்கள், பாடகருக்கு ஏக உதறல், அதே சமயம் ஆஹோ வித்வான்கள் நிறைந்த இடத்தில் பாடச் சொல்லி விட்டார்களே! என்கிற பெருமையும் இருந்தது. தோடி ராகத்தை ஆலாபனை செய்த பின்பு, கீர்த்தனத்தை துவக்கியபோது. முன் வரிசையில் அமர்ந்திருந்த மாபெரும் வித்வான் குறுக்கிட்டு, தடுத்து. 'இன்னொரு தரம்' என்று கூற, ஒன்ஸ். மோர் கேட்கிறாரே என்கிற சந்தோஷத்தில் நம் பாடகருக்கு வாயெல்லாம் பல். இன்னொரு தரம் அதே தோடியை தனக்குத் தெரிந்த விதத்தில் பாடி, பாடலை துவங்க முற்பட, இடது பக்கம் அமர்ந்திருந்த விமர்சகர் 'இன்னொரு தரம்'என, பாடகருக்கு தலைகால் புரியாத சந்தோஷம். மூன்றாவது முறையாக அதே தோடி ராகத்தை பாடிவிட்டு கீர்த்தனையை எடுக்க முனைய வலது பக்கம் இருந்த வித்தகர் 'இன்னொரு தரம் என்று சொன்னதும் இப்போது பாடகர் நிஜமாகவே குழம்பிப் போனாராம், 'தயவு பண்ணி வேறு ராகங்களையும் பாட அனுமதியுங்கள். ஒரே ராகத்தை எத்தனை முறை பாடச் சொல்லி கேட்பீர்கள்? என்று கேட்க. முன் வரிசை வித்வான் எரிச்சலோடு சொன்னாராம், 'நீங்கள் சரியாக பாட கற்றுக் கொள்ளும் வரை...'

சபையினரோடு சேர்ந்து நானும் சிரித்தேன்.

சிரிப்பு அடங்க சில நொடிகள் காத்திருந்து விட்டு. தலைப்புக்குள் நுழைந்தேன்.

சுமார் முக்கால் மணி நேரம் எழுத்தாளனுக்கு சமுதாய பிரக்ஞை, பொறுப்புணர்வு மிகமிக அவசியம் என்று நான் நம்புகிறேன் என்று தெளிவாக, அழுத்தமாக விளக்கி விட்டு உட்கார்ந்தேன்.

எதிர்பார்த்த ரீதியிலேயே சபையோரில் நாலைந்து பேர்கள் கேள்விகளைக் கேட்கும் விருப்பத்துடன் எழுந்து நிற்க, முதல் கேள்வியே அட்டஹாஸமாக அமைந்தது.

'எழுத்தாளன் ஓர் சுதந்திரப் பறவை. இதை எழுது, அதை எழுதாதே என்று சொல்வது அவனுடைய சிறகு களை வெட்டி விடுவது போல் ஆகாதா?'

நான் தலை அசைத்து அந்த கூற்றை ஏற்றேன்.

'ஒப்புக் கொள்கிறேன்...எழுத்தைப் பொறுத்தவரை ஒரு எழுத்தாளருக்குச் சுதந்திரம் மிக மிக அவசியம். அவருக்கு இஷ்டப்பட்டதை அவர் எழுதலாம் ஆனால் அதில் தரம் இருக்க வேண்டும். அதில் பொறுப்புணர்வு இருக்க வேண்டும, அல்லவா? இவை தவிர நாட்டில் நம்மைச் சுற்றி நடக்கும் அநீதிகள், தகாத நடவடிக் கைகள், நம்மை பாதிப்பதும், எழுத்தின் மூலம் அவற் றிற்கு ஒரு பரிகாரம் தேட நாம் முயற்சிப்பதும் இயல்பு தானே? இதைத்தான் 'கமிட்மெண்ட்-பொறுப்புணர்ச்சி என்று நான் குறிப்பிடுகிறேன் - தீக்குள் விரலை வைத் தால் சுடும். மின்சாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினால் 'ஷாக்' அடிக்கும் என்பது அடிப்படை உண்மை. இதைப் போலவே தவறான சிந்தனைகள் சமுதாயத்துக்குப் பெரும் சீர்கேடுகளைத் தரும் என்பதனையும் யாரும் மறுக்க முடியாது. 'நான் எழுத்தாளன்; எதை வேண்டு மானாலும் எழுத, சிந்திக்க எனக்கு உரிமை, சுதந்திரம் உள்ளது என்கிற வாதம் என்னைப் பொறுத்தவரை நியாமானது அல்ல. சமுதாயத்தில் ஓர் அங்கமாக இருக்கும் எவருக்குப் அது பற்றின பிரக்ஞை இருப்பது அவசியம். தவிர...'

என்னை முடிக்க விடாமல் இன்னொருவர் குறுக் கிட்டார்.

மன்னிக்க வேண்டும், உங்கள் கருத்தில் எனக்கு உடன் பாடு இல்லை, எழுத்தாளன் ஒரு கலைஞன், அவருக்கு



எதற்கு 'கமிட்மெண்ட்' இருக்க வேண்டும்? ஒரு கிரியே டிவ் பர்ஸனுக்கு சமுதாயப் பிரக்ஞையோ, பொறுப் புணர்ச்சியோ இருக்க வேண்டிய அவசியம் என்ன? கலை ஞன், சமூகசேவை செய்பவராக இருக்க வேண்டும் என் கிற உங்கள் எதிர் பார்ப்பு தவறு...'

துவக்கத்திலேயே கேள்வி பதில் சூடு பிடித்துவிட்ட திருப்தியோடு நான் பதில் கூறினேன்.

'எழுத்தாளர் ஒரு கலைஞர்; சமூகசேவை செய்ய வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை என்று நண்பர் கூறியதைக் கேட்கும்போது எனக்கு வருத்தமாக இருக்கி றது, எந்தக் கலைஞரும் அடிப்படையில் ஒரு மனிதர். இதை மறக்கக் கூடாது. தனி நபர் பலர் சேர்ந்துதான் சமுதாயம் உருவாகிறது. அதனால் கலைஞராகி விட்ட காரணத்துக்காக,சமுதாயம் என்கிற அடிமண்ணிலிருந்து, மனிதர் என்கிற வேரைப் பிரிப்பது முறையான செயலாக எனக்குப் படவில்லை. மனிதராகப் பிறந்த நாம் ஒவ்வொ ருவரும், காலப்போக்கில் ஒவ்வொரு தொழிலை மேற் கொண்டிருக்கிறோம். அவ்வளவே. தொழிலுக்கு முக்கி யத்துவம் கொடுத்து மனிதரை ஒதுக்க முற்பட்டால் விளைவுகள் பயங்கரமாய் இருக்கும். நிச்சயம் என்னைக் கேட்டால், இப்படி 'சமூக சேவை' என்று கட்டம் கட்டிப் பிரிப்பதும் அதை அரசாங்கமோ. சில நிறுவனங்களோ, தனிப்பட்ட நபர்களோதான் செய்யவேண்டும் என்பது போல தனிப்பட்டு பேசுவதும் தவறு என்று சொல்வேன். 'சமூக சேவை என்றால் என்ன? கொஞ்சம் நிதானமாக சிந்திக்க வேண்டும். மனிதராகப் பிறந்த எவரும், நல்ல குடிமகனாக வாழ வேண்டிய எவரும், தன் அன்றாட வேலைகளில் ஒன்றாக கடமையாக, சமூக சேவையையும் கருதுவதே சரியானது. கடமையாக, நம் வீட்டையும் சுத்தமாக வைத்துக்கொள்ள நாம் முனைவதில்லையா? இதில் நம் உடல், மனம் இரண்டுமே அடக்கம்தானே?

தெருவை சுத்தமாக வைக்கும் ஸ்கேவன்ஜர் துப்புரவுத் தொழிலாளி, டாக்டர் நர்ஸ் மற்ற தலைவர்கள், மனோ தத்துவ நிபுணர்கள், வேதாந்திகள், செய்வதும், சொல்வதும்? சொல்வதெல்லாமும் கூட சமூக சேவையின் பங்கு தானே? நம் வரைக்கும் நிற்கும் போது சுத்தம் எனக்கருதப் படுவது நாம் வசிக்கும் தெரு நாட்டை அடையும் போது சோஷியல் ஸர்வீஸாக மாறி இதற்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை என்று ஆகிவிடுகிறது. இந்த ரீதியில் எண்ணங்களை அணைத்து நாட்டினரும் வளர்த்துக் கொண்டு விட்டது துர்பாக்கியமானது. மனிதராகப் பிறந்து, இந்தச் சமுதாயத்தில் ஓர் அங்கத்தினராக வாழ முற்பட்டு விட்ட நாம் ஒவ்வொருவரும் நம்மை- உடல், சிந்தனை, மனம், சுற்றுப்புறம் அது மேன்மேலும் வளரத் ஆக்கப் பூர்வமான செயலில் ஈடுபடுவதும் உலகத்துக்கே நல்லது அல்லவா? அதனால் இவ்வளவு சீக்கிரம் இப்படி சமூக சேவை, அது இது என்று நம் அன்றாடக் கடமைகளைக் கூட கட்டம் கட்டி ஒதுக்கும் பழக்கத்தை நிறுத்துகின்றோமோ, அவ்வளவு நல்லது என்று நம்புகிறேன். இதை ஓர் எழுத்தாளராக மட்டும் கூறவில்லை, முக்கியமாய் மனிதன் என்கிற பொறுப்புடனும் சொல்கிறேன்...'

பதிலை ரசித்து ஏற்றுக் கொண்டதற்கு சாட்சியாக பலத்தை கைத்தட்டல் எழுந்தது.

ஓசை அடங்கின பின்னரும் ஒன்றாய் ஒரே ஒரு கைத்தட்டல் மட்டும் கேட்க, அந்தத் திசையில் ஏறிட்டேன்.

அட! என்றது மனசு.

யமுனா.

இவன் எப்போது வந்தான்? நான் கவனிக்கவே இல்லை. நிச்சயம் வரவேற்புரை போது அவன் வந்திருக்கவில்லை. நான் தான் பார்வையைச் சுழற்றி தெரிந்த முகங்களைத் தேடினேனே! நான் உரையைத் துவங்கியபின், இந்த பக்கமாய் திரும்பி பேசிய நிமிஷத்தில் பக்கவாட்டு வாசல் வழியாக நுழைந்து முதல் காலி இருக்கையில் உட்கார்ந்திருக்க வேண்டும்.



அவனை நான் கவனித்துவிட்டதை உணர்த்தும் தினுசில் தலை அசைத்துப் புன்னகைத்தேன்.

கண்களைச் சிமிட்டாமல் சில நொடிகளுக்கு யமுனாவை பார்த்த போது, அவன் மெலிந்துவிட்ட மாதிரி தோன்றியது. முகத்தில்கூட எப்போதும் வெளிச்சம் போடும் குறும்புகாணாமல் போய்விட்டது போல இருக்கு, சட்டென்று மனசு கனத்தது.

கொள்கை, தனித்தன்மை என்று வேண்டாத எண்ணங்களை வளர்த்துக் கொண்டு இப்படி தானும் சிரமப்பட்டு அடுத்தவர்களையும் வேதனைக்குள்ளாக்குவதை இவனும் ரமணனும் இன்று இல்லாவிட்டாலும் என்றைக் காவது புரிந்து கொள்வார்களோ?

திருமணம் நின்று விளையாட்டு போல மாசங்கள் நான்கு கடந்து விட்டன.

இரண்டு பேருமாய் என்னிடம் ஒன்றாய் வந்து, விஷயத்தைச் சொல்லி பிரிந்து பிறகு, ஏதாவது செய்து இவர்களை சரிபடுத்த முயற்சி பண்ணலாமா-என்று நான் யோசிக்க கூட அவகாசம் தராமல், சரியாய் இரண்டாம் நாளே ரமணன் மட்டும் இருட்டினபிறகு ஸாரி ஸர்-போன் பண்ணாம வந்துட்டேன். முக்கியமான விஷயம்-அதான், என்றபடி வந்து நின்றான்.

டெல்லிக்கு உடனே செல்லும்படி அவசர மாற்றல் உத்தரவு வந்துவிட்டதாம். ஜாயினிங் டைம் கூட நாலு நாட்கள்தான் கொடுத்திருக்கிறார்களாம். மறுநாள்

விமானத்தில் புறப்படுகிறானாம். ஒரு மாசம் ஹோட்டலில் தங்கி வீடு பார்த்து ஏற்பாடு செய்த பிறகு ஒரு நடை சென்னைக்கு வந்து சாவகாசமாய் உடைமைகளை எடுத்துச் செல்லத் திட்டமாம்.

கிளம்பும் முன் ரமணன் கொஞ்சம் தயங்கினான்.

'நா டெல்லிக்குப் போறதோ, மத்த விவரங்களோ யமுனாவுக்குத் தெரிய வேணாம், விலகிடறதனு முடிவு எடுத்தப்புறம், அனாவசிய பேச்சு எதுக்கு இல்லையா ஸர்?'

அவனும் அவளும் தங்களுக்குத்தான் எல்லாம்தெரியும் என்கிற எண்ணத்தில் தீர்மானித்துவிட்டார்கள். அப்புறம் வாயைத் திறந்து நான் பேச இடம் எங்கே இருக்கிறது?

இதுவரை கொடுத்த வாக்கை நான் மீறவில்லை என்பதைவிட அதற்கான சந்தர்ப்பத்தையே யமுனா ஏற்படுத்தவில்லை என்பதுதான் உண்மை.

இந்த நாலு மாசத்தில் ஐந்தாறு தடவைகள் என்னை அவன் சந்திக்க வந்திருந்தால் அதிகம்.

'என்ன, ஆளைக் கண்ணுலேயே காணோம்?' என்று ஒருதரம் நான் கேட்டபோது, தலையை பின்னுக்குத்தள்ளி சிரித்தான். 'நீங்க ஊர்ல இருந்தாதானே அங்கிள்' என்றான்—

ஓரளவுக்கு அதுவும் நிஜம்தான்.

ஆனாலும், அவள் என்னைத் தவிர்க்கிறாள். இதில் சந்தேகமேயில்லை.

சந்தித்த நாட்களிலும் 'ரமணன்' என்று ஒருதரம்கூட அந்த பேரை உச்சரிக்கவும் இல்லை, தன்னிரக்கத்தோடு புலம்பவும் இல்லை.



எதுவும் நடக்காத மாதிரி அல்லது அத்தனையும் மறந்து விட்ட மாதிரி ஒரு நடத்தை, பேச்சு...

'ஸார், கேள்வி பதில் செஷனை முடிச்சிடலாமா?'

நிர்வாகி, அருகில் குனிந்து வினவ, நான் நிமிர்ந்தேன்.

வாசகர் கேள்வி கேட்பதைக் கூட காதில் வாங்காமல், என்ன அசட்டுத்தனம் இது!

'கேள்விய சரியா கவனிக்க...இன்னொருதரம் கேட்க முடியுமா? ஸாரி' என்று கூறி, அடுத்த கேள்விக்குப் பதில் அளிக்கத் தயாரானேன்.

# 18

**ரமணன்**

புது டெல்லி.

டிஸம்பர் மாதம்.

காலை ஏழுமணி.

முன்னிரவிலேயே வானத்திலிருந்து தரைக்கு இறக்கி விட்டிருந்த ஷட்டர்களைத் தூக்க மறந்து விட்டது போல ஊரெங்கும் கருமை கலந்த சாம்பல் பனிப் போர்வை

மாருதியை, இந்தியா கேட்டை அடுத்திருந்த மைதானத்தை ஒட்ட நிறுத்திவிட்டு. இறங்கி, சாவி போட்டு கதவைப் பூட்டுவதற்குள் கைவிரல்கள் மறத்துப் போயின.

மூக்கு நுனியும், காது மடல்களும் விண் விண்ணென்று தெறித்தன; எலும்புகளில் ஓட்டை போட்டு புல்லாங் குழல் வாசிப்பதைப் போன்ற காற்றின் வீச்சில் உடம்பு உதறியது.

குளிர். அத்தனை பனி.

சட்டென்று ரமணனுக்கு அம்மாவின் வெறுப்பு கலந்த பேச்சு நினைப்புக்கு வந்தது.

'இது என்ன தம்பி இங்க இப்படி குளிருது? வயித்துக் குள்ளார குடுகுடுனுகுளிர் குறுக்கும் நெடுக்கும் ஓடுறதுல நிக்க முடியல, உக்கார முடியல கைய நீட்ட முடியல கால மடக்க முடியல ஒரு ஜாமானை தூக்க முடியல. உருப்படியா ஒரு காரியத்தையும் செய்ய முடியாம எமக் குளிர். ஆளை உண்டு இல்லைன ஆக்கிட்டு தான் விடும் போல இருக்கு...தெரியாத்தனமா வந்து மாட்டி கிட்டம் தம்பி...கிடைச்ச அன்னிக்கு டிக்கெட் எடுத்து முதல்ல எங்கள ஊருக்கு அனுப்பிடு, புண்ணியமா போகும்... தெரியாமத் தான் கேக்கிறேன், எப்படி ஜனங்க உசிரோடு வாழுறாங்க இந்த ஊர்ல...யம் மாடி பயங்கர குளிர்... நமக்கு வாணாம் சாமீ...'

அவன் அங்கு வந்து செட்டில் ஆன இரண்டாம் வருஷம் ஆஹா டெல்லி-என்று நூறாயிரம் கற்பனைகளுடன் வந்து இறங்கின முத்துலட்சுமி,முழுசாய் மூன்று நாட்கள் போவதற்குப் பிள்ளையோடு வசதியாய் ஒரு மாசம் போல தங்கி மதுரா, காசி, ஆக்ரா எல்லாம் பார்த்து விட்டு நிதானமாய் ஊர் திரும்ப வேண்டும் என்கிற எதிர் பார்ப்புகளை டெல்லியில் கடுமையான பனி, ஒரே விரட் டாய் விரட்டி விட, நாலாம் நாளிலிருந்தே, எங்கள ஊருக்கு அனுப்பிச்சுடு தம்பி...தண்ணியத் தொட்டா தேள் கொட்டற மாதிரி வலிக்குது, மூட்டு வீங்கிபோச்சு... இன்னும் சிக்கல் அதிகமாகி படுத்த படுக்கையா



ஆயிட றத்துக்கு முன்னால மரியாதையா அனுப்பிச்சிடு... வருஷத்துக்கு ஒருதரமோ, இரண்டுதரமோ முடிஞ்சப்ப நீ அங்க வா...அப்ப உன் கூட இருந்து சந்தோஷப் பட்டுக்கறேன். இந்தக் குளிர் நமக்குத் தாங்காதுப்பா...' என்று புலம்ப முற்பட, உண்மையாகவே பெற்றவர் களுக்கு டெல்லி குளிர் தாங்கவில்லை என்பதே உணர முடிந்ததால் காசு போனாலும் பரவாயில்லை என்று தீர் மானித்து உடனடியாய் அவர்களை விமானத்திலேயே சென்னைக்கு ரமணன் திருப்பி அனுப்பி வைத்தான்.

அவர்களைச் சொல்லி குற்றம் இல்லை. சென்னை யிலேயே பிறந்து, வளர்ந்து ஐம்பது, அறுபது வருஷங் களுக்கு மேல்வாழ்ந்துவிட்ட பலருக்கு வட இந்தியாவின் அந்த குளிரோ, அல்லது மண்டையை ஓட்டை போடும் உலர்ந்த வெயிலோ லேசில் பழகுவதில்லை தான்.

அவனுக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் சிரிக்காமல் சொல்லுவார், மெட்ராஸ் ஹாஸ் த்ரீ ஸீஸன்ஸ்-ஹாட், ஹாட்டர், ஹாட்டஸ்ட், என்று. உண்மை தானே! சென்னையைப் பொறுத்தவரை வெயில், அதிக வெயில், மிக அதிகமான வெயில் என்றுதானே வருஷம் பூராவும் சீதோஷ்ண நிலை இருக்கிறது!

புன்னகைத்துக் கொண்டே வண்டியைப் பூட்டின ரமணன் கோட் பாக்கெட்டுகளில் கைகளை நுழைத்த படி, காலை வீசுப் போட்டு நடக்க ஆரம்பித்தான்.

அணிந்திருக்கும் ஸ்வெட்டர், கோட், ஸாக்ஸ், ஷூவையும் மீறிக்கொண்டு குளிர் இப்படி மிரட்டுவது முதல் சில நிமிஷங்களுக்குத்தான். ஐந்து நிமிஷம் முகத் தில் அறையும் காற்றை லட்சியம் பண்ணாமல் விறுவிறு வென்று நடந்துவிட்டால், ரத்த நாளங்கள் சுறுசுறுப்

படைந்து தேகத்தின் உஷ்ணத்தை அதிகரிக்கச் செய்த பின், அப்புறம் குளிராவது, மண்ணாங்கட்டியாவது... ஜிகுஜிகுவென்று ஒரு வித வெப்பம் உடம்பு பூராவும் பரவி அதுவரை இல்லாத சக்தியை ஜனிக்க வைத்து, வயசில் பத்தைக் குறைத்து. பாரதி ஆசைப்பட்ட ரீதியில் 'விசையுறு பந்தினைப் போல் உள்ளம் வேண்டியபடி செல்லும உடல் கேட்டேன்!' என்கிற இளமையைத் தந்து விடாதா ஹோ! அது ஒரு சுகம்! அனுபவித்துப் பார்த்தவங்களால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய போதை!

இந்தியா கேட்டைச் சுற்றிக் கொண்டு நடந்த நிமிஷதில், சாம்பல் பூத்த, அந்த விடியாத நேரத்திலும் எப்போதும் அங்கு ஜ்வாலையோடு தென்படும் அமர் ஜவான் ஜோதியை துல்யமாகக் காண முடிந்தது. பக்கத்திலேயே அமரர்களாகிவிட்ட சிப்பாய்களுக்கு அஞ்சலி செய்யும் விதத்தில் நட்டு வைத்த துப்பாக்கியும், அதன் மேல் கவிழ்த்திருந்த தொப்பியுமாய் அசப்பில் ஒரு ஜவானைக் கண்முன் நிறுத்தும் நினைவுச் சின்னம்!

இந்தியா கேட்டைத் தாண்டி நீண்டிருந்த ராஜபாதையில் ரமணன் வேகமாய் நடந்தான்.

ராஜ்பத்-ராஜபாதை.

புது டெல்லியிலேயே அழகான சாலைகள் எவை என்று கேட்டால் இந்தியா கேட்டிலிருந்து ராஷ்டிரபதி பவன் வரை நீண்டிருக்கும் ராஜபாதையையும், வெளிநாட்டு தூதரகங்கள் இரண்டு பக்கங்களிலும் தம் தம் தனித்தன்மை கொண்ட பிரும்மாண்டமான கட்டடங்களுடன் அமைந்திருக்கும் சாந்தி பாதையையுமே ரமணன் குறிப்பிடுவான்.

ராஜ்பத்-

சாந்தி பத்-



எத்தனை பொருத்தமான பெயர்கள்!

ஜனாதிபதி மாளிகையை நோக்கிச் செல்வது ராஜ பாதை; உலகநாடுகளுக்கிடையே அமைதி நிலவ வேண்டிய அவசியத்தைச் சிறு அளவிலாவது உணர்த்தும் சாந்தி பாதை...

ராஜ்பத்தின் இரண்டு பக்கங்களிலும் முதலிலிருந்து கடைசிவரை கூடவே வரும் பச்சைப் புல்வெளிகளில் மாலை நேரங்களில் அமர்ந்தால், பொழுது போவது தெரியாமல் உட்கார்த்திருக்கலாம். அத்தனை விஷயங்கள் பராக்கு பார்க்க உள்ளன. விவசாயிகள் பேரணியிலிருந்து, விதமான காட்சிகளை அன்றாடம் அங்கு சர்வ சகஜமாகப் பார்க்கலாம்.

டெல்லிக்கு வந்துவிட்ட இந்த ஐந்து வருஷங்களில் ரமணனும் என்னென்ன கலாட்டாக்கள், கேளிக்கைகள் அந்தப் புல்வெளிகளில் நடந்து பார்த்து விட்டான்!

ஐந்து வருஷங்கள்!

சென்னையை விட்டு வந்து ஐந்து வருஷங்களாகிவிட்டன என்கிற நினைப்பு என்னமோ முதல்முறையாக உரைக்கிற தினுசில் சிந்தனை அதையே சுற்றி வருவேன் என்று அடம் பண்ணியது.

திருமணத்தை நிறுத்திவிட்டு டெல்லி பிராஞ்ச்சில் வேலையை ஒப்புக் கொண்டு, காலில் வெந்நீர் ஊற்றின மாதிரி துணிகளை அள்ளித் திணித்துக்கொண்டு ரமணன் புறப்பட்டது அவனை நெருக்கமாக அறிந்திருந்த அனைவருக்குமே ஒரு 'ஷாக்' தான்!

என்னாயிற்று?

ஏன் கல்யாணம் நின்று போனது?

சென்னையை விட்டு இந்த ஓட்டம் பிடிக்க அவசியம் என்ன?

எங்கு எது கோளாறாயிற்று?

கேள்விகள்...திரும்பின பக்கமெல்லாம் கரிசனையுடன் ஆர்வத்துடன், குழப்பத்துடன் வினாக்கள்...

ஆனால், எதற்காவது பதில் சொல்ல ரமணன் சென்னையில் இருந்தால் தானே?

ஒரு மாசம் கழித்து, இரண்டாம் பேர் அறியாமல் ஊருக்கு வந்து, தேவையான உடைமைகளை எடுத்துக் கொண்டுசென்று மறுபடியும் ஒருவருஷம் கழித்து சென்னைக்கு விடுமுறையில் வந்த போது விஷயம் ஆறின கஞ்சியாகி விட்டிருந்தது.

ஒன்னரை வருஷங்கள் போல கவனத்தை எதிலும் மேயவிடாமல் வேலையில் மூழ்கிப்போய் 'இவன் ஒரு வொர்க்க ஹாலிக்' என்று ஆச்சரியப்படும் விதத்தில் உழைத்ததற்கு, பலன் இல்லாமல் போகவில்லை.

பூனாவில் இரண்டாவது கிளை திறக்கப்பட்ட போது அதற்கு மேனேஜராகச் சென்றான். அங்கு இரண்டு வருஷங்கள். அப்புறம் அஹமதாபாத் கிளையின் மேலாளராக, ஒரு வருஷம்...

இப்போது மறுபடி டெல்லிக்கு, சீனியர் மேனேஜராக ...மாசச் சம்பளம் எட்டாயிரம், கம்பெனி கார், வீடு, சம்பளத்தோடு விடுமுறை, போன், ஆள், கேளிக்கை அலவென்ஸ்...போனஸ்...கணக்குப் போட்டுப் பார்த்தால் மாசம் இருபதாயிரத்துக்குக் குறைச்சல் இல்லை!



இப்படியொரு ஏற்றத்தை வாஸ்தவமாக ரமணனே எதிர்பார்க்கவில்லை தான்.

ஆர். கே. புரத்திற்கு எதிலுள்ள சாந்தி காலனியில் மூன்று படுக்கை அறைகள் கொண்ட வசதியான ஃபிளாட்; சப்ஜியும் சப்பாத்தியும் ருசியாய் பண்ணிப் போட பகதூர்-நேபாளுப் பையன்

விடிகாலையில் எழுந்து யோகாசனம், தியானம் செய்வான். தொடர்ந்து பேப்பர்களைப் படிப்பான். அப்புறம் ஒரு மணி நேரம் போல காலை வீசிப் போட்டு நடந்து விட்டு எட்டுக்குத் திரும்பினதும் ஷேவ் செய்ய, குளிக்க, தயாராக, டிபன் சாப்பிடமுக்கால் மணி நேரம். சாணக்கிய புரியில் அலுவலக ஐந்து நிமிஷ கார் சவாரி. ஒன்பதுக்கு வேலையைக் கவனிக்க ஆரம்பித்தால், லஞ்ச் பிரேக், அது, இது என்பதெல்லாம் கிடையாது. பல சந்தர்ப்பங்களில் சாண்ட் வீட்சைத் தின்று விட்டு இரவு ஏழு, எட்டு என்று கடிகாரத்தையே பார்க்காமல் உழைப்பது மாமூல் சமாசாரம். என்னேரத்துக்கு வீட்டுக்கு வந்தாலும் மறுபடி ஒரு நீண்ட 'வாக்' அப்புறம் குளியல். சாப்பாடு புத்தகத்துடன் படுக்கை.

வாரம் ஐந்து நாட்கள் கிட்டத்தட்ட இதே ரொடீன் தான் என்றாலும், சனி, ஞாயிறு மட்டும் ரொம்ப வித்யாசமாக இருக்கும்.

கொஞ்சம் நிதானமாக எழுந்து தியானம், 'வாக்'கை முடித்து, வாரப் பாத்திரிகைகளைப் படித்து, மெதுவாகக் குளித்து பத்து மணி சுமாருக்கு ஒரு ஏர்பேசில் மாற்றுடைகளுடன் கிளம்புவான், டெல்லியைத் தாண்டி ஃபரிதாபாத்தில் இருக்கும் எஸ். ஓ. எஸ். கிராமத்தை அடைந்தால் அன்றும், மறுநாளும் மாலை வரை குடியிருப்பு அங்குதான்.

எஸ். ஓ. எஸ். கிராமம் வழக்கமான அனாதை ஆஸ்ரமங்களிலிருந்து மாறுபட்டு ஒரு குடும்பமாகத் திகழ்ந்து,

நான் ஒரு அனாதை என்கிற உணர்வை, தாழ்வு மனப்பான்மையை வேதனையை எந்த குழந்தைக்கும் உண்டாக்க இடம் தராத ஒரு அற்புதமான ஸ்தாபனம்!

முதன் முதலில் எஸ். ஓ. எஸ், கிராமம் பற்றி ரமணன் சென்னையிலிருக்கும் போதே அறிந்திருக்கிறான்தான். தனித்தனி சிறு வீடுகளைக் கட்டி, வீட்டுக்கு ஒரு தாயைத் தேர்ந்தெடுத்து அமர்த்தி, இல்லத்துக்கு எட்டிலிருந்து பத்து குழந்தைகள் வரை வயசு கட்டுப்பாடு இன்றி இரண்டு மாச பச்சை மண்ணை முதற்கொண்டு அரவணைத்து வளர்க்கும் முறை கேட்ட மாத்திரத்திலேயே ரமணனை சிலிர்க்க வைத்திருக்கிறது.

மத்திய அரசில் புகழ் பெற்ற நிதி அமைச்சராக இருந்த திரு. டி. டி. கே., தாம்பரத்தில் தான் வசித்து வந்த பண்ணை வீட்டை தானமாகத் தர முன்வர, உமா கார்த்திக் நாராயணன். போன்று சமுதாயத்தின்பால் அக்கறை கொண்ட நபர்கள் ஒன்று சேர்ந்து சென்னையில் நடத்தும் எஸ். ஓ. எஸ். கிராமத்துக்கு முடிந்த போதெல்லாம் சென்று, தன்னால் இயன்ற உதவிகளை ரமணன் செய்திருக்கிறான்தான்.

டெல்லிக்கு வந்து, எஸ். ஓ. எஸ். கிராமத்தை நிர்வகிக்கும் டிரஸ்டிகளில் ஒருவரான நட்கர்னியின் அறிமுகம் கிடைத்த பிறகு இந்த ஈடுபாடு இன்னும் அதிகரித்ததில் ஆச்சர்யம் இல்லை.

சனி, ஞாயிறு பரிதாபாத் எஸ் ஓ. எஸ். கிராமத்துக்குப் போய், அங்குள்ள இல்லத்துக் குழந்தைகளுக்கு யோகா, தியானம், கற்றுத்தருவதும், சீனியர் செகண்ட்ரி வகுப்புகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்குப் பாடங்கள் சொல்லித் தருவதும் அவன் வேலை!



'என் பிள்ளை ரகுவீர் எட்டாவது ராங்க் வாங்கியிருக்கிறான் தெரியுமா, மாஸ்டர்ஜி?' என்று இனிப்பு லட்டுவுடன் ஒரு தாய் வந்து நின்றால்,

'என் பெண் போன பரிட்சையிலேயே ஐந்தாவது ராங்க் வந்தாள். இது என்ன பெரிய அலட்டல்?' என்பாள் இன்னொரு அன்னை உதட்டைப் பிதுக்கி—

'லல்லு - நீ ஓட்டப்பந்தயத்தில் வாங்கின மெடலை மாஸ்டரிடம் காட்டினாயா?'

'ராணி பேட்டீ - நீ ரங்கோலி போட்டிருப்பதை மாஸ்டர் பார்த்தாரா?'

ரமணன் போய் இறங்கினதும் குழந்தைகளைவிட அம்மாக்கள் அவனைத் தம்தம் பிள்ளைகளின் பிரதாபங்களோடு மொய்த்துக் கொள்வது தப்பாது.

என்னமோ தாமே சுமந்து, பெற்றுவிட்ட ஆத்மார்த்த பாசத்துடன் அந்த அன்னைகள் வரிந்து கட்டிக் கொண்டு பேசுகையில் நிஜமான அன்புக்கு வரையறை, நீள அகலம், சட்ட திட்டங்கள் கிடையவே கிடையாது என்பது ரமணனுக்கு இன்னும் இன்னும் துல்யமாகும்.

இப்படி இல்லத்துத் தாய்கள் பூரிப்பது ரமணனுக்குப் புதுசு அல்ல—

சென்னை எஸ். ஓ. எஸ். கிராமத்தில் ஏழு ஆண் பிள்ளைகளும், மூன்று பெண்களும் கொண்ட ஒரு இல்லத் தாய் தன் மூத்த மகள் வயசுக்கு வந்ததும் கை வளையலை அடகு வைத்து சிறப்பாக மஞ்சள் நீராட்டு விழாவைக் கொண்டாடவில்லையா?

ஏன், இல்லத்தில் வளர்ந்து. கல்யாணமாகிப் போன மல்லிகா, ஆறு மாசங்களுக்கு முன் அம்மா வீட்டுக்கு

பிரசவத்துக்கு வந்ததையும், ஒரு மாசம் போல அம்மா பத்தியம் போட்டு கண்ணுக்குள் வைத்து மகளைக் கவனித்ததையும், மற்ற இல்லத்துக் குழந்தைகளும், தாய்களும், சொந்தக்காரர் வீட்டில் குழந்தை பிறந்திருப்பது போல் தொட்டில். காப்பு வைபவங்களைக் கொண்டாடியதையும் கண்கள் பனிக்க உமா நாராயணன் சொல்ல அவன் கேட்டதுண்டுதானே?

டெல்லி இல்லத்துக் குழந்தைகளில் சிலருக்கு அவன் பாபா அல்லது மாமா - தாய்மார்களுக்கு 'பையா' அதாவது அண்ணன் இன்னும் வேறு சிலருக்குப் பெரியப்பா, சித்தப்பா...

எத்தனை இளசுகளுக்கு தான் அப்பா, அண்ணா மாமா பெரியப்பா என்றும், ரத்த சம்பந்தமோ, உறவு முறையோ இல்லாமலேயே எத்தனை நூற்றுக்கணக்கான உறவுகள் உண்டாகி இருக்கின்ற என்பதையும் எண்ணுகையில் பரவசமாக இருந்தது.

இப்படி ஒரு வாழ்க்கையைத்தான் யமுனாவுடன் சேர்ந்து அமைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினான். நடக்கவில்லை. தன் சாயலில், தன் குணத்தோடு, தனக்கென்று ஒரு குழந்தை வேண்டும் என்பது அவள் ஆசை. அதில் தவறேதும் இல்லை. ஆனால் அவள் நினைத்ததும், இவன் திட்டமிட்டதும் முரண்பட்டு விட்டன. ஒப்புக்கொள்ள முடியாதபடி வெவ்வேறு துருவங்களா விட்டதில் பிரிவைத் தவிர வேறு வழியில்லாமல் போய் விட்டது.

நீள நடந்து, திரும்பி, வண்டிக்கு வந்து, கதவைத் திறந்து இக்னிஷனை ஆன் செய்யும் முன் ரமணன் கொஞ்சம் நிதானித்தான்.

யமுனா...



இப்போது அவள் எப்படி இருப்பாள்?

மெலிந்து, பருத்து, முகத்தில் சற்று முதிர்ச்சி கூடி?

தெரியாது.

அவளுக்கு மணமாகியிருக்குமோ?

தெரியாது—

வேலையில் உயர்வு? இட மாற்றம்?

தெரியாது, தெரியாது.

திடுமென ஆயாஸம் மண்ட, ரமணன் காரை ஸ்டார்ட் செய்து இடது பக்கம் ஓடித்து, பெங்காலி மார்க்கெட்டை நோக்கி ஓட்டினான்.

பகதூர் பதினைந்து நாள் விடுப்பில் சொந்த ஊருக்குப் போயிருக்கிறான். அவன் திரும்பும் வரை வீட்டில் டோஸ்ட், தயிர் சாதம், பழங்கள்தான் உணவு இன்று போல என்றாவது மாற்றம் வேண்டும் என்று தோன்றினால் வெளியில் போய் சாப்பிடுவதும் உண்டு.

பெங்காலி மார்க்கெட் அந்த காலை வேளையிலும் ஜகஜகவென்று மனித நடமாட்டத்தோடு இருந்தது.

மாருதியை நிறுத்திவிட்டு, ரமணன் இறங்கி முதலில் தென்பட்ட கடையின் முன் சென்றான்.

கண்ணாடி அலமாரிகளில் அம்பாரமாய் மிக்சர், ஓமப்பொடி, மசாலா முந்திரி வகையறாக்கள். அருகில் விதவிதமாய் இனிப்பு தினுசுகள்.

இந்தப்பக்கம் சற்று தள்ளி ராட்சஸ சைஸ் தோசைக் கல்லில் வெந்து கொண்டிருந்த ஆலுடிக்கியா, கார

சோமாசு, தயிர் வடை, 'சாட்' வகை பதார்த்தங்களைக் கொண்ட பாத்திர வரிசை.

எண்ணெய் வழிய வழிய சன்ன படூரா...உருளை போண்டா...இத்யாதிகளை தட்டுத்தட்டாக வைத்துக் கொண்டு மேஜையில் அமர்ந்திருந்த பலர் உண்டு கொண்டிருக்க ரமணன் அந்த எண்ணெய் புகை வயிற்றைப் பிரட்ட வைக்கிற பாவனையில் முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

'க்யா சாஹியே ஸாப்?'

'ஏக் படா கிளாஸ் அனார் ஜூஸ்'

மாதுளம்பழ ரசத்துக்கு ஆர்டர் கொடுக்க, கடைக்காரர் சிவந்த முத்துக்களை ஜூஸரில் போட்டுப்பிழிந்து, கண்ணாடி டம்ளர் நிறைய ஜூஸை அவனிடம் நீட்டினார்.

வாங்கி ஒரு வாய் ருசித்துக் குடித்தான்.

காலை வேளையில் எளிமையாய் மோர் ஜூஸ் என்று சாப்பிடாமல் எண்ணெய் தின்பண்டங்களையும், இனிப்புகளையும் எப்படித்தான் சிலர் சாப்பிடுகிறார்களோ என்கிற எரிச்சல் அவனுள் தலை தூக்கிய நொடியில்—

'ஏக் சன்னா பட்டூரா...நை...நை...ஆலு டிக்கியா அவர் தஹி படா...ஓ! நை...எக் பிளேட்...சாட்' என்று குரல் அருகாமையில் ஒலிக்க,

கையிலிருந்து பழச்சாறு ததும்புவதையும் லட்சியம் பண்ணாமல் வேகமாய் திரும்பிய போது நெஞ்சுக் கூட்டுக்குள் பறவைகள் சிறகடித்துப் பறக்கிற படபடப்பு ரமணனுக்கு எழுந்தது.



# 19

**யமுனா**

'என்னப்பா சொல்ற நீ?'

'புரியல? வேலைய விடப் போறேன்னு சொல்றேன்'

'விட்டுட்டு?'

'ஊர் ஊரா சுத்தப் போறேன்'

'சுத்தி?'

'புதுப்புது இடங்கள, மனுஷங்களப் பாக்கப் போறேன்'

'பாத்து?'

'ஸ்டாப் இட்' லேசான எரிச்சலுடன் குறிக்கிட்ட வசந்தரா, எதிரில் அமர்ந்திருந்த ராணியை ஏறிட்டு அதட்டினாள்.

'ரொம்ப ஸீரியஸான விஷயத்த, விளையாட்டு போல யமுனா தான் சொல்றான்ற, 'அந்தாதி' மாதிரி அவ கடைசிவார்த்தையையே கேள்வியாக்கிநீயும் கேலியா பேசினா என்ன அர்த்தம்?ம்?'

ஐய்யையோ...நா கேலி பண்ணலப்பா; யமுனா வேலைய விடப் போறேன்னு சொல்றது எனக்குப் பெரிய ஷாக்கா இருக்குப்பா...அதிர்ச்சில கோர்வையா கேள்வி வரமாட்டேங்குதுபா...'

நிஜமான பதட்டத்துடன் பதில் கூறிய ராணி, எட்டி அருகில் அமர்ந்திருந்த யமுனாவின் கையைப் பற்றிக் கொண்டாள்.

'என்னப்பா—திடும்னு இப்படி ஒரு குண்ட தூக்கிப் போடறே? எதுக்காக இந்த முடிவுக்கு வந்தே? கொஞ்சம் விவரமாதான் சொல்லுப்பா...'

வசுந்தராவும் முன்னால் சாய்ந்து யமுனாவின் அருகில் குனிந்தாள்.

'அம்மா இல்லாம இருக்கறது கஷ்டமா இருக்கா யமுனா? அதான் மெட்ராஸ் விட்டே போயிடணும்ன்ற தீர்மானத்துக்கு வந்துட்டியா?'

ஸ்னேகிதிகளின் ஆத்மார்த்தமான கரிசனத்தைப் புரிந்து கொள்ள முடிந்ததில் யமுனா சட்டென்று உணர்ச்சி வசப்பட்டாள்.

நெஞ்சிலிருந்து உருண்டையாய் துக்கம் மிதந்து மேலெழுந்து தொண்டைக் குழிக்குள் உட்கார்ந்து கொண்டதில், ஒரு வார்த்தை பேசுவது கூட சிரமமாய் இருக்கும் போல இருந்தது.

நாற்காலியில் சாய்ந்து மூடிக் கொண்டாள்.

படப்படப்பாக இருந்தது.

மூடிய கண்ணோரங்களில் திரண்டு விட்ட நீர் கொப்பளங்கள் இமைகளை உறுத்தின.

நோ—

அழக்கூடாது.

அழுவது அம்மாவுக்குப் பிடிக்காத விஷயம்.

'மனுக்குனு, நினைச்ச மாத்திரத்துல அழறதாலயே பொம்பளை ஆம்பிளைங்க ஒண்ணு 'வீக்கர்



செக்ஸ்'னு ஒதுக்கிடறாங்க, இல்லைனா 'அழுதே சாதிச்சிடுவா'னு மட்டமா கேலி பண்றாங்க...தெரியமாத்தான் கேக்கறேன், தனக்கு தான் வலி வேதனைன்ற மாதிரி எதுக்கு எல்லா பொம்பளைங்களும் சின்ன விஷயங்களுக்கு கூட அழ ஆரம்பிச்சிடறாங்க? ம்? திஸ் ஈஸ் ஷ்யர் நான்சென்ஸ் யம்மு...என்னைப் பொறுத்தவரை என் கண்ணீர் எனக்கு ரொம்ப உசத்தியானது, ப்ரஷ்யஸ்... அதகண்டவங்க முன்னால வெளியிட்டு, அதோட மதிப்பு குறைக்கறது, எனக்கு நானே செஞ்சுக்கற அவமரியாதை தானே நினைக்கறேன்...'

அம்மா...

எத்தனை வித்தியாசமான மனுஷி அவர்!

தொலை நோக்கு கண்ணோட்டம், ஆழமான சிந்தனை, மனித நேயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தெளிவான கருத்துக்கள்...

தனிநபராக அம்மா வாழ்ந்தவிதம் உயர்வு என்றால், பாடசாலையை அவர் நடத்தி வந்த முறை அதை விட பெருமை கொள்ளும் சமாசாரம்.

இப்படி ஊருக்கே உசத்தியாக இருந்தால் தானே அம்மா போன அன்று தெரு பூராவும் ஜனங்கள் வந்து அடைத்துக் கொண்டார்கள்!

முந்தின மாசம் பத்தாம் தேதி, அந்த காலை ஒன்பது மணி நேரத்தை மறுபடி நினைத்துப் பார்த்தபோது உடம்பு உதறிப் போட்டது.

காலையில் எழுந்து இரண்டு பேரும் ஒன்றாய் உட்கார்ந்து தான் காபி சாப்பிட்டார்கள். அன்றைய தினசரி செய்திகளை விமர்சித்தார்கள். அப்புறம் யமுனா எழுந்து சென்று குளித்து, தயாராகி, சிற்றுண்டி சாப்பிட வந்தபோது அம்மா அத்தனை சுரத்தாக இல்லாததை அவள் உணர்ந்தாள்.

'என்னம்மா?' என்றதும், மங்கையர்கரசி வலியுடன் புன்னகைத்தார்.

'காலைல தூங்கி எழுந்ததுலேந்தே இடது தோள் பட்டை நெஞ்சிலே நமநமனு இருந்தது...எசகு பிசகா படுத்திருப்போம்னு விட்டுட்டேன். ஆனா, இப்ப இடது கைக்குள்ளே ஒரே குடைச்சல்...'

'காலைல பேசிட்டிருந்தப்போ சொல்லவேயில்லயே—மா'

பதில் கூறாது புன்னகைக்க முயன்றவரின் முகத்தில் வலி கோடு இழுக்க, யமுனா சரக்கென்று அருகில் சென்றாள்.

'ஹெச். எம். ஹாஸ்பிடலுக்குப் போய் டாக்டர் பால சுப்ரமணியத்த பார்த்திட்டு வந்திடலாமா -மா?'

'கிளம்பி போகணும்னு நினைச்சாலே கஷ்டமா இருக்கு...அவரால வேணா வர முடியுமானு கேக்கறியா?' கஷ்டப்பட்டு பேசிய மங்கையர்க்கரசி அடி உதட்டைக் கடித்துக் கொண்டார். நிமிர்ந்து உட்கார முடியாத தினுசில் டேபில் மேல் சாய்ந்து கொண்டார்.

டாக்டரிடம் பேசிவிட்டு யமுனா திரும்பி வருவதற்குள் நெற்றி. கழுத்தில் வியர்வை மொட்டு கட்டியிருந்தது.



நிமிர்ந்தவர் முகம் நன்றாகவே இல்லை.

'என்னம்மா செய்யுது?'

மங்கையர்கரசியின் முகம் வெளுத்து, உதடுகள் உலர்ந்திருந்தன.

'என்கிட்ட உக்கார் யம்மூ?'

உட்கார்ந்தாள்.

'கையப்பிடிச்சிக்கோ'

பிடித்துக் கொண்டாள்.

'நீ புத்திசாலி...நல்லது, கெட்டது புரிஞ்சவ...உன் மனசாட்சிக்கு எது சரினு தோணுதோ, அதச் செய்... பாடசாலை பொறுப்ப ஏத்துக்க இஷ்டமில்லாட்டி வேணாம்-மத்த ட்ரஸ்டிஸ்கிட்ட விட்டுடு...டேக் கேர்... எப்பவும் ப்ராக்டிகலா நடந்துக்க முயற்சி பண்ணு... அப்புறம்...'

நிறுத்தி நிறுத்தி, சின்ன குரலில் தேவையில்லாத விவரங்களை அம்மா பேச, முதல் முறையாக யமுனா பயந்தாள்.

'ம்மா...எதுக்கு இப்ப இதெல்லாம் சொல்றே?'

'தைரியமா இரு யம்மூ...டேக் கேர்'

வார்த்தைகள் கிசுகிசுப்பாய் வெளிப்பட, யமுனா 'ராஜூ' என்று கத்தினாள்.

ஓடிவந்தவனிடம் 'கார் சாவி எடு-டாக்டர் வர வரைக்கும் காத்திருக்க வேணாம்' என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, மங்கையர்க்கரசி, கொள கொளவென்று வாந்தி எடுத்தார், கண்கள் செருக முன்னால் மகள் மேல் சாய்ந்தார்.

அப்புறம்...

அப்புறம் என்ன?

ஈஸ்ட்ரஜன் ஹார்மோன் சுரப்பதனால் பெண்களுக்கு ஹார்ட் அட்டாக் வருவது பெருமளவுக்குத் தடுக்கப் படுகிறது; உடம்பை ஒல்லியாய், ஆரோக்கியமாய் வைத்துக் கொள்வதும், சுறுசுறுப்பாய் இருப்பதும் இருதய நோய் வராமல் தடுக்கும் - போன்ற நம்பிக்கைகளை பொய்க்கும் வகையில், ஒரு சின்ன சிகிச்சைக்கு கூட இடம் தராமல், ஓரிரு மணி நேரத்தில் தபதபவென்று ராசஸத் தனமாய் வளர்ந்து, ஆளையே கபளீகரம் பண்ணிவிட்ட மாஸிவ் ஹார்ட் அட்டாக் - அதுவும் ஐம்பத்தைந்து வயசில்!

எதிர்பாராதது நடந்துவிட்ட போதும் 'தைரியமாய், ப்ராக்டிகலாய் இரு' - என்று அம்மா சொன்னபடிதான் யமுனாவும் இருந்தாள், இருக்க முயற்சிக்கிறாள்.

அம்மா தன் கண்களைத் தானமாகக் கொடுக்க விரும்பினார் என்பதும், இறந்து ஆறு மணி நேரத்துக்குள் கண்களை எடுக்க வேண்டும் என்பதும் நினைவுக்குவர போன் செய்து. மருத்துவரை வரவழைத்து ஆகவேண்டியவற்றை கவனித்ததிலிருந்து, கத்தி, அழுது புரளாமல் அமைதியாய் சடலத்தின் அருகிலேயே அமர்ந்து, துக்கம் விசாரிக்க, வந்தவர்களிடம் பேச வேண்டியவற்றை பேசி, இடுகாட்டுக்குத் தானும் சென்று சிதைக்கு கொள்ளி வைத்தது வரை துணிச்சல், விவேகத்தோடு கூடிய செயல்கள் அல்லாமல் வேறு என்ன?

இருப்பினும் :முடியவில்லை...

தனியாய் வீட்டில் படுப்பதும், சாப்பிடுவதும்,வளைய வருவதும் சித்ரவதையாகவே இருக்கின்றன.



ஒவ்வொரு மூலையிலும் சதா ஞாபகத்தைக் கிளறும் ஏதேதோ நிகழ்ச்சிகள், பேச்சுக்கள்...

அப்பா போனதும் பெரிய அதிர்ச்சி தான், ஆனால் அம்மா கூட இருந்ததில் தாங்க முடிந்தது.

இப்போது முடியவில்லை...

'யமுனா...'

தோள்மீது கைவைத்து வசுந்தரா பரிவுடன் அழைக்க, கண்களைத் திறந்தாள்.

உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள். இமைகளைச் சிமிட்டி கண்ணீரைக் கலைத்து விட்டாள்.

'ஸாரி...'

'எதுக்குபா ஸாரி... உன் நிலை எங்களுக்குப் புரியாதுன்னா நினைச்சே?'

'.........'

'நிஜமாவே வேலையை விட்டுடப்போறியா யமுனா?'

'ம்'

'அம்மா இல்லாம இருக்கறது கஷ்டமா இருந்தா, லீவு போட்டுட்டு எங்கயாச்சும்,ஏன் ஏதாவது வெளிநாட்டுக்கு கூட, போய்ட்டு வாயேன் யமுனா...அதுக்காக வேலையை விடணுமா?'

'இல்ல வசு...லீவு போட்டுட்டுப் போனாலும் திரும்ப நா இங்க, அம்மாவோட வாழ்ந்த வீட்டுக்கு, பழைய சூழ்நிலைக்கு, வந்துதானே ஆகணும்?'

'மெட்ராஸ விட்டுட்டு ஒரேயடியா போயிடறது சாத்தியம்னா நினைக்கறே?'

'முடியாதுதான்...ஆனா, சில வருஷங்களாவது தள்ளி இருக்கறது உதவும்னு நம்பறேன்...'

ராணி விரல்களால் மேஜைமீது தாளம் போட்டவாறு, யோசனையுடன் பேசினாள்.

'வெளி ஊர்ல எங்கயாவது வேற வேலைக்கு முயற்சி பண்ணியிருக்கியா?'

'ம்ஹூம்'

'அப்புறம்?'

'வேல பண்ணணும்ன்ற நிர்பந்தம் எனக்கு இல்ல ராணி... சில மாசங்கள் கல்கத்தா, டெல்லி, பம்பாய்னு சுத்தப் போறேன். அங்கங்க தூரத்து உறவுக்காரங்க, ஸ்னேகிதங்க இருக்காங்க... மனசுக்குப் பிடிச்ச வேலை கிடைச்சா ஒத்துப்பேன். இல்லாட்டி ஏதாவது வாலண்டரி ஆர்க்கனைசேஷன்ல சேர்ந்து சமுதாயத்துக்காக உழைக்கலாம்னு நினைக்கறேன்.'

'அதுக்கு உங்கம்மாவோட 'பாடசாலை'யை விட சிறந்த இடம் கிடைக்குமா, யமுனா?'

'ஒத்துக்கறேன்—ஆனா, இரண்டு காரணங்களுக்காக அதச் செய்ய எனக்கு விருப்பம் இல்ல... 'பாடசாலை'க்குள்ள நுழைஞ்சாலே அம்மா நினைப்பு மூச்சை முட்ட வைக்குது...தவிர,பள்ளிக்கூட பொறுப்பைஏத்துக்கிட்டா, அப்புறம் சாகறவரைக்கும் அத விடக்கூடாது... மனசு இருக்குற நிலைல 'டைம் லிமிட்' இல்லாத எந்த பொறுப்பையும் இபப நா ஒப்புக்கவிரும்பலை...அமமாக்கு பள்ளிக்கூடம் ஒண்ணுதான் முக்கியம். எனக்கு அப்படி இல்ல... எத்தனையோ நல்ல காரியங்கள்ல நானும் கலந்துக்



கணும்னு நினைக்கறேன். அந்த விஷயத்துல அம்மா குணம் வேற, என்னுது வேற...'

அவள் தீர்மானமாக, ஆனால் தெளிவாக இருப்பதை உணர்ந்த பிறகு ஸ்னேகிதிகள் வாதாடுவதை நிறுத்திக் கொண்டார்கள்.

முடிவு எடுத்த விதத்தில் யமுனா அடுத்த வாரத்தில் ராஜினாமா கடிதத்தை மேலதிகாரியிடம் கொடுத்தாள், தொடர்ந்துவந்த நாட்களில் பள்ளிக்கூட நிர்வாகிகளிடம் தன் எண்ணத்தை விளக்கி, ட்ரஸ்டி பொறுப்பிலிருந்து விலகினாள்.

ராஜூவுக்கு ஆறு மாசம் சம்பளம் கொடுத்து, சொந்த ஊருக்கு அனுப்பினாள். சில முக்கிய சாமான்களை மாடி அறையில் போட்டு பூட்டிவிட்டு, பேப்பரில் விளம்பரம் கொடுத்து கீழ்ப்பகுதியை கம்பெனி ஒன்றுக்கு, மூன்று வருஷங்களுக்கு வாடகைக்கு விட்டாள்.

தெரிந்தவர்களிடம், முக்கியமாய் அங்கிள் சந்திர சேகரிடம், சொல்லிக் கொண்டு இரண்டு ஸூட்கேஸ் நிறைய சாமான்களோடு ஹௌரா மெயில் ஏறி, முதலில் கல்கத்தாவுக்குச் சென்றாள்

ராஷ்பிகாரி அவன்யூவில் இருந்த சுமாரான ஹோட்டலில் தங்கிக் கொண்டு, பேலூர் ராமகிருஷ்ண மடம், ரவிந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதன், அன்னை தெரிஸாவின் 'மிஷனரிஸ் ஆஃப் சாரிடீஸ்' போன்ற இடங்களுக்கு அடிக்கடி சென்று அவற்றில் எங்காவது தன்னால் பொருத்திக் கொள்ள முடியுமா என்று பார்த்தாள். கூடவே அம்மாவின் நண்பர்களைச் சந்தித்து வேலை வாய்ப்புகளையும் ஆராய்ந்தாள்.

நாற்பது நாட்கள் இப்படி...

கல்கத்தா வாழ்க்கை தற்காலிகமாய் போதும் என்று தோன்றத் துவங்கியதும், குளிர் உடம்பை விரைக்கச் செய்ய ரயிலில் பயணிக்கப் பிடிக்காமல், விமானம் மூலம் டெல்லிக்கு வந்தாள்.

ஜன்பத் சாலையில் இருந்த ஜன்பத் ஹோட்டலில் அறை எடுத்துக் கொண்டு தங்கினாள்.

காசு அதிகம்தான். ஆனாலும் அது குறித்து யமுனா கவலைப்படவில்லை.

முதல்நாள் ஆக்ரா போய்விட்டு, வந்தாள். அடுத்த நாள் 'ஸிட்டி டூர்' எடுத்துக் கொண்டு நகரை வலம் வந்தாள்.

மூன்றாம் நாள் ஏற்கனவே மனு போட்டிருந்த ட்ராவல் ஏஜன்ஸிக்கு நேர்முகத் தேர்வுக்குச் சென்றாள். கனாட் பிளேஸில் இருந்த அலுவலகத்துக்குப் போய், காத்திருந்து, பேட்டியை முடித்தவளுக்கு அலுப்பாக இருக்க, இரவு சாப்பிடப் பிடிக்காமல், சூடாய் ஒரு கப் பால் மட்டும் அருந்திவிட்டுப் படுக்கப் போனதில், காலையில் எழுந்திருக்கும் போதே நல்ல கப கப பசி...

பெங்காலி மார்க்கெட்டுக்குப் போய் சூடாய் சோலே பட்டூரா, சமூஸா சாப்பிட்டால் என்ன?

நினைப்பே வயிற்றுப் பசியை அதிகமாக்க, ஆட்டோ பிடித்து, பெங்காலி மார்க்கெட்டுக்குச் சென்றாள்.

சனிக்கிழமை, விடுமுறை நாள் என்பதாலோ என்னமோ, காலை வேளையிலேயே கூட்டம் கடைகளில் கணிசமாய் இருந்தது.

உள்ளே உட்காரப் பிடிக்காமல், வெளியில் பட்டூரா பொறித்துக் கொண்டிருந்த ஆள் அருகில் நின்று, சர்வரிடப் தனக்குத்தெரிந்த ஹிந்தியில் ஏக் சன்னா பட்டூரா... நை ... நை... ஆலு டிக்கியா, அவுர் தஹி படா...ஓ !நை...



ஏக் பிளேட் சாட்...' என்று தன் இயல்புக்கேற்ப மாற்றி மாற்றி ஆர்டர் கொடுத்து முடித்த சில நொடிகளில் மிக மிக அருகில் 'அஞ்சு வருஷம் கழிச்சு மறுபடியும் விதி சதி செய்யுதா? என்று சிரிப்புடன் ஒருகுரல் வினவ, மனசும், உடம்பும் தூக்கிவாரிப் போட அவசரமாய் யமுனா திரும்பினாள்.

# 20

**ரமணன்**

**கொ**ஞ்சம் இளைப்பு,

கொஞ்சம் கறுப்பு.

முன்பு இருந்ததை விட கொஞ்சம் நீண்டு இடுப்பைத் தொட முயற்சித்த முடி...

இமை தவிர யமுனாவிடம் வேறு எந்த மாற்றமும் தெரியவில்லை, அப்படியேதான், அதே கவர்ச்சி, துறுதுறுப்புடன்...

எதிரில் காண்பதை நம்பமாட்டாமல் கண்கள் அகல, வாய் லேசாகத் திறந்திருக்க, பிரமித்துக் காணப்பட்டவளின் முன்பு கையை ஆட்டி, அவள் கலனத்தை ரமணன் கலைக்க முயன்றான்.

'ஹலோ...யாருனு புரியலையா? இல்லைனா, அஞ்சு வருஷம் கழிச்சு விதி மறுபடி செஞ்சிருக்கற சதி தந்த அதிர்ச்சியா?'

கண்களைச் சிமிட்டி ரமணன் வினவ, யமுனா தன் நிலைக்கு வந்து புருவங்கள் உயர, உரக்க கத்தினாள்.

ஐய்ய்யோ! ரமணன்! நீ! இங்க! ஐய்ய்யோ!' என்று அதிசயித்தவளால் வேறு ஏதும் பேசமுடியாது போன தினுசில் 'ரமணன்...ரமணன்'...என்று அவன் பேரைத் தொடர்ந்து அழைக்க, ரமணன் வாய் விட்டுச் சிரித்தான்.

'மறுபடி என்னை சந்திச்சா, நூத்தி எட்டு தடவை என் பேரைச் சொல்றதா நேர்ந்துகிட்டிருக்கியா? ஜமாய் மூணு தரம் ஆச்சு...சட்டுபுட்டுனு முடிச்சிட்டா, நாமா வேற பேச்சு பேச வசதியா இருக்கும்'

யமுனா எட்டி அவன் கையைப்பற்றி, உடம்பு உதறி போட்டதில் பிடித்த வேகத்திலேயே கையை விலக்கிக் கொண்டாள்.

'குட்னஸ்! நீ அப்படியே இருக்கே ரமணன்!'

'நீயும்தான் யமுனா...துளி மாறல...'

'பொய் சொல்லாதே...இங்க பாரு...காதோரத்துல... நரை...'

குனிந்து, ஒருபக்க தலைமுடியைத் தூக்கி அவள் காட்ட, அட, ஆமா!' என்றான் ரமணன் நிஜமான ஆச்சர்யத்துடன் பின்னர் கேலியாய் 'இதுக்குதான் வயசைக் குறைச்சு சொல்லக் கூடாதுனு பெரியவங்க சொல்றாங்க ...உண்மை வயசை நரை காட்டிக் கொடுத்துடுச்சு. பாத்தியா...இப்பவாவது சமத்தா ஒத்துக்க, நா உன்னை விட வயசுல சின்னவன்னு...பாரு...ஐயா தலைல ஒருநரை கூட கிடையாது!' என்று சீண்டியதும், யமுனா தலையைப் பின்னுக்குத் தள்ளி சிரித்தாள்.



'அந்த 'அல்ப' ஆசை வேற உனக்குள்ள இருக்கா? சரி-உன் சந்தோஷத்தக் கெடுப்பானேன். உன்னைவிட நா பெரியவதான்...திருப்தியா?'

'ஒப்புக்கிட்டா சரி'

யமுனா லேசான பெருமிதத்துடன் காதோரத்து முடியைக் கோதிவிட்டுக் கொண்டாள்.

'இது 'விஸ்டம்' நரை ரமணன் ... வர்றதுக்கு கொடுத்து வச்சிருக்கணும், தெரியுமா?'

'போச்சுடா! இது என்ன புது கதை?'

'புதுசும் இல்ல, கதையும் இல்ல...'விஸ்டம் க்ரே ஹேர்'னு கேள்விப் பட்டதில்லை...வயசுக்கும் இந்த நரைக்கும் சம்பந்தமே இல்ல...முதிர்ச்சி வந்து விவேகத்தோட சிந்திக்கத் துவங்கிட்டதுக்கு இது சாட்சி...'

ரமணன் கைகளை சப்தமில்லாமல் தட்டினான்.

'அட ராமா!'

'கூப்பிட்டுட்டியா! எங்க மாறிட்டியோ-னு கொஞ்சம் நப்பாசை பட்டேன். பரவாயில்லை!'

யமுனா பொய்யான ஆயாசத்துடன் தோளைக் குலுக்கி, கைகளை விரித்தாள்.

'ஒண்ணு தனக்கா தெரியணும்...இல்லாட்டி விவரம் தெரிஞ்ச மத்தவங்க சொன்னா கேக்கணும்! ரெண்டும் இல்லாட்டி எப்படி?ம்? ஓகே—உன் வழிக்கே வந்து உன்னை ஒத்துக்க வைக்கறேன். உன் பக்கத்துல துணைக்கு நிக்கற ராமரோட கதை. ராமாயணம் படிச்

சிருக்கே இல்ல? அதுல, ஒரு இடம் வருது. ஒரு நாள் தசரத சக்ரவர்த்தி கண்ணாடி முன்னால நின்னுகிட்டு பார்த்தப்போ, காதோரத்துல நரை மினுமினுப்பா தெரிஞ்சுதாம். 'அட—இது எப்போ வந்தது'னு கவனிச்சப்போ, அந்த நரை முடி 'உனக்கு வயசாயிடுச்சு. இன்னும் ராஜ்ய பரிபாலனம் செய்திட்டிருந்தா எப்படி? பையனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணி, நாட்டுப் பொறுப்பைக் கொடுத்திட்டு நீ போற வழிக்கு புண்ணியத்தைத் தேடு'-னு விவேகத்தோடு அறிவுரை சொல்லிச்சாம். புத்தி வந்த தசரதரும் உடனே முடிசூட்டு விழாவுக்கு ஏற்பாடு பண்ணினாராம்! என்ன மிஸ்டர் ராமர்-நா சொல்றது சரிதானே? உங்க பக்தனை இப்பவாவது இது 'விஸ்டம் க்ரேஹேர்'-விவேகத்தைத் தரும் நரை—வயசுக்கும், இதுக்கும் சம்பந்தம் இல்லாதது-னு ஒத்துக்கச் சொல்லுங்க...'

ரமணன் சன்னமாய் விசிலடித்தான்.

'நீ மாறலேன்னு நா சொன்னது தப்பு யமுனா... எக்கச்சக்கத்துக்கு மாறியிருக்கே, ராமாயணத்துலேந்து உதாரணம் நீ சொல்றே? நம்ப முடியலையே!'

'ஆச்சர்யப்படறத அப்புறமா வச்சுக்கலாம்! முதல்ல 'உனக்கு வயசாகல...நீ சத்தியமா என்னைவிட சின்னப் பொண்ணுதான். இது 'விஸ்டம் க்ரே'-னு ஒத்துக்கப் போறியா, இல்லியா?'

'அட, ராமா! விடமாட்டியா?'

'அட, சுட்டபொம்மா' ஏன் விடணும்?'

இருவரும் வாய்விட்டுச் சிரிக்க, சுற்றி இருந்தவர்கள் திரும்பி பார்த்தார்கள்.



'அஞ்சு வருஷம் கழிச்சு சந்திச்சிருக்கோம். 'நீ எப்படி இருக்கே?'னு கூட கேக்கத் தோணாம, என்னமோ நேத்து சாயங்காலம்தான் கடைசியா பாத்த மாதிரி இது என்ன வேண்டாத பேச்சு?'

'அதானே!' என்று ஆமோதித்த யமுனா, 'நீ எப்படி இருக்கேனு?' கேட்கலைனு சொல்லறப்போ, புஸ்தகத்துல படிச்ச ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருது...உன் வீட்டில் தண்ணீர்க் கஷ்டம் இருப்பதை, உன் வேலைக்காரியின் நடவடிக்கைகளை, உன் முதுகு வலியை, உன் பிள்ளை படுத்துவதை—விளக்கி நீ புலம்புவதைக் கேட்க யாருக்கும் வாஸ்தவத்தில் நேரம் இல்லை. 'எப்படி இருக்கிறாய்?' என்பது சம்பிரதாயத்துக்காக மட்டுமே கேட்கப்பட்ட கேள்வி...' எப்படி? பிரமாதமா இல்லை?' என,

கேட்டுவிட்டு அவன் சிரிக்க, அவள் சேர்ந்து கொள்ள மறுபடி அக்கம்-பக்கத்தவர்கள் 'என்னவாயிற்று உங்களுக்கு?' என்கிற பாவனையுடன் ஏறிட, ரமணன் குரலைத் தழைத்துக் கொண்டான்.

'நட்ட நடுவுல நின்று, நாம சிரிக்கறது மத்தவங்களுக்கு இடைஞ்சலா இருக்கும்...உட்கார்ந்து பேசலாம் வா—'

கடைக்குள் நுழைந்து ஒரு ஓரமாய், அதிக கூட்டம் இல்லாத மேஜையைத் தேர்ந்தெடுத்து உட்கார்ந்தார்கள்.

அரை நிமிஷம் எதுவுமே பேசாமல் ஒருவரை ஒருவர் வெறித்தார்கள். அப்புறம், ஒரே சமயத்தில் சிரித்தார்கள்.

'என்ன பாக்கறே?' என்றாள் யமுனா.

'நீ ஏன் சிரிச்சே?' என்றான் ரமணன்.

'நீ சிரிச்சே, அதான்—'

'நீ பாத்தே, அதான்.'

இருவரும் மறுபடி சேர்ந்து உரக்க சிரித்தார்கள்.

'மெட்ராஸ்லேந்து ரெண்டு 'ஓாஸ்' காலங்கார்த்தால வந்து கழுத்த அறுக்குதுங்கனு நினைக்கப் போறாங்க—'

'எவன் என்ன வேணா நினைச்சுக்கட்டும்...ஐ டோண்ட் கேர்...என் சந்தோஷம் எனக்கு...'

ரமணன் கண்கள் இடுங்க யமுனாவை ஏறிட்டான்.

'என்ன பாத்தது நிஜமாவே உனக்கு சந்தோஷமா இருக்கா, யமுனா?'

'உனக்கு?'

'கேள்வி கேட்டது நா—'

யமுனா பதில் கூறமுன் சர்வர் ஆர்டர் பண்ணியிருந்த பலகாரங்களுடன் அருகில் வந்து, தட்டுகளை மேஜைமேல் வைத்தான்.

'நீ என்ன சாப்பிடறே?'

ரமணன் கையிலிருக்கும் டம்ளரை உயர்த்திக் காண்பித்தான்.

'மாதுளம்பழ ஜூஸ்...'

யமுனா புன்னகைத்தாள்.

'காலை வேளைல வாக், தியானம், சாப்பாட்டுல எண்ணெய், இனிப்பு கூடாது, நொறுக்குத் தீனி 'ஜங்



ஃபுட்' கூடவே கூடாது...எக்ஸ்ட்ரா எக்ஸ்ட்ரா... எல்லாம் இன்னும் அப்படியே தானா?'

ரமணன் பதில் கூறாது புன்னகைத்தான்.

'நீ மாறவேயில்ல ரமணன்!'

அவளுக்கு முன் அமர்ந்திருந்த பலகார தட்டுகள் மேல் பார்வை வீசிய ரமணன் 'நீயும்தான்' என்றான் கேலியுடன்.

'ஏதாவது கொஞ்சம் சாப்பிடேன். தயிர் வடை? எனக்கு இத்தனை அயிட்டம்ஸ் ஜாஸ்தி...ஒண்ண எடுத்துக்கயேன்...ப்ளீஸ்...'

அந்தப் பார்வை, கெஞ்சலுடன், நீண்ட இடைவெளிக்குப் பிறகு எதிர்பாராமல் சந்தித்த சந்தோஷமும் சேர்ந்து கொள்ள, ரமணன் அவள் நீட்டிய தயிர் வடை தட்டை வாங்கிக் கொண்டான்.

'தாங்க்ஸ்.'

ஒரு வாய் சாப்பிட்ட பிறகு சொல்லி வைத்த மாதிரி இருவரும் நிமிர்ந்தார்கள்.

'இப்படி எதிரும் புதிருமா நாம உட்கார்ந்து கிட்டு தயிர் வடை சாப்பிடறப்போ, உனக்கு என்ன ஞாபகம் வருது?'

யோசிக்காமல் ரமணன் பதில் கூறினான்.

'முத தடவையா நீயும் நானும் நம்ம ஆபீஸ் காண்டீன்ல சந்திச்சது?

யமுனாவின் கண்கள் மகிழ்ச்சியில் பளிச்சிட்டன.

'கரெக்ட்...இந்த டேபிள்ல வந்து உட்கார்ந்த நொடி லேந்து அதே நினைப்புதான் எனக்கும். டெல்லி—பெங் காலி ஸ்வீட் மார்ட்-எல்லாம் மறந்து போய், மௌண்ட் ரோட் ஆபீஸ் காண்டீன்ல நீயும் நானும் இருக்கற மாதிரி பிரமை...அன்னிக்கும் நா தயிர்வடை தான் ஆர்டர் பண் ணேன், நினைப்பு இருக்கா?'

'ஏன் இல்லாம! ஆர்டர் பண்ணிட்டு, தயிர் வடைல இருக்கற பூந்தி 'காரல்' வாசனை வரும். வேணாம், மைசூர், போண்டா குடுங்கனு மாத்னியே, அது கூட நினைப்பு இருக்கும்...'

யமுனா தலையைப் பின்னுக்குத் தள்ளி சிரித்தாள்.

'முதல் நாள் விஸ்டுல சந்திச்சோம், அதுக்கும் முத நாள் தியேட்டர்ல...ப்பா...ரெண்டு நாளும் என்னமா நீ சண்டை போட்ட...'

தயிர் வடையை விழுங்கிய ரமணன் அவசரமாய் குறுக்கிட்டான்.

'யாரு? நா? சண்டை! நல்ல கதை நீ சொல்றது! படத்துக்கு லேட்டா வந்ததோட தொண தொணனு பேசிட்டே இருந்தது நீ! 'கொஞ்சம் சும்மா இருந்து, மத்தவங்கள படம் பாக்க விடுங்க'னு நா சொன்னதும் வரிஞ்சு கட்டிகிட்டு சண்டைக்கு வந்தது நீ? விஸ்டுலேயும் ஒரு அடாவடிதான். 'ஒவ்வொரு மாடியா நிறுத்தி, விளையாட இது என்ன எக்ஸிபிஷனா-னு கேட்டுட் டேன்னு கோபம் மூக்குமேல ஏறி உட்கார சண்டை போட்டது நீ...அப்புறம்...'

நீளமாய் பட்டியல் போட்டவன் முன் கை நீட்டி ஓகே...ஸாரி... நீ சண்டை போடவேயில்ல... நீ பரம



சாது—நா தான் போட்டேன். நாதான் சண்டைக்காரி. போதுமா? ஆளை விடு...' என்ற கேலிச்சிரிப்புடன் பேசிய யமுனா, 'சரி-இப்ப எதுக்கு பழைய பேச்சை எடுக்கணும்? இங்க டெல்லியில நீ என்ன பண்றே, அதச் சொல்லு' என்றாள்.

'நீ எதுக்கு டெல்லிக்கு வந்தே, அத மொதல்ல சொல்லு.'

'எதுக்கும் இல்ல...சும்மா...'

'என்ன சும்மா?'

'சும்மானா சும்மாதான்...'

'லீவு எடுத்துகிட்டு வந்திருக்கியா?'

'ம்ஹூம்'

'அப்புறம்?'

'வேலை இருந்தாதானே லீவு எடுக்க?'

'அப்படின்னா?'

'ஸிம்பில்...வேலைய விட்டுட்டேன்'

'எப்போ?'

'ம்ம்ப்? ரெண்டுமாசம் முன்னால...'

'வேலைய விட்டுட்டுடெல்லில என்ன பண்றே?'

'அதான் சொன்னேனே சும்மா வந்திருக்கேன்?'

ரமணன் மேஜைமேல் இருந்த நீர்துளியை ஆள்காட்டி விரலால் இழுத்துக் கோடு போட்டான்.

'நீ டெல்லில என்ன பண்றே?'

'நா இங்க வேலையா இருக்கறது உனக்குத்தெரியாதா யமுனா?'

'ம் ஹூம்'

'சந்திரசேகரன் ஸரை இந்த அஞ்சு வருஷமா நீ பாக்கவே இல்லியா?'

'பாத்தேனே! ஆனா, உன்னைப் பத்தி அவரும் பேச மாட்டார், நானும் கேக்க மாட்டேன்...'

குற்ற உணர்வோ, தயக்கமோ இன்றி யமுனா பேச ரமணன் அவள் பார்வையைத் தவிர்த்தான். பேச்சை மாத்தினான்.

'நா இங்கதான் ஸீனியர் மானேஜரா இருக்கேன் யமுனா.'

'அட்றா சக்கை! குடு கைய...ஸீனியர் மானேஜரா! வரிசையா டபின் ப்ரமோஷனா வாங்கிட்டியா? என்ன இருந்தாலும் உன்னை யாரும் அடிச்சுக்க முடியாதுப்பா!'

மனப்பூர்வமாக யமுனா பாராட்டுவதை உணர முடிய, சந்தோஷப் பூக்கள் ரமணனுள் மலர்ந்து சன்னமாய் மணத்தைப் பரப்பின...

'அப்போ—வீடு, ஆள் எல்லாம்; தடபுடல் படுதுனு சொல்லு...'

'வந்து பாரேன்.'

'வராம! இன்னிக்கே வந்து...' உற்சாகத்துடன் பேசிக் கொண்டு போன யமுனா ஏதோ நினைப்புக்கு வந்து விட்ட தினுசில் நிறுத்தினாள். மௌனித்தான்.



ரமணன் விழித்தான்.

'சொல்ல வந்தத ஏன் சொல்லாம நிறுத்திட்ட?'

'ஒண்ணுமில்ல...'

'சொல்லப் போறியா இல்லியா?'

யமுனா நிமிர்ந்து அவனை அழுந்தப் பார்த்தாள்.

நீளமாக ஒருதரம் மூச்சை வெளியிட்டு, 'ஆல்ரைட்' என்றாள்.

'நா பாட்டுக்கு என்னமோ பிளான் பண்ணா எப்படி' உன் நிலைமை என்னனு தெரியாம?'

அவள் பேசியது புரியாமல் ரமணன் புருவங்களை உயர்த்தினான்.

'என்ன ஆச்சு எனக்கு இப்போ, திடீர்னு நீ தயங்க?'

'ஓகே ... நேரடியாவே கேட்டுறேன் ... உனக்குக் கல்யாணம் ஆயிடுச்சா?'

ரமணன் மேஜையைத் தட்டிச் சிரித்தான்.

'அப்பாடா-இதுதானா? நா என்னவோ ஏதோனு பயந்திட்டேன்...'

'பதில் சொல்லு ரமணன்!'

அவன் முன்னால் சாய்ந்து கண்களைச் சிமிட்டினான்.

'ஆயிருந்தா வீட்டுக்கு வர மாட்டியா?'

'அ? அதெல்லாம் ஒண்ணும் இல்ல. ஏன் வராம? உன் மனைவிய பாக்க எனக்கு மட்டும் ஆசை இல்லியா? ஆனா,

பழைய ஸ்னேகிதத்த நினைச்சுகிட்டு தடதடனு வந்து எதையாவது பேசி உன் நிம்மதிய நா கெடுத்துடக் கூடாது பாரு...'

ரமணன் புன்சிரிப்போடு 'இல்லை' என்று தலை அசைத்து மறுத்தான்.

'அப்படி ஏதாவது செஞ்சு என் நிம்மதிய கெடுக்கறது உனக்கு சாத்தியமே இல்ல, யமுனா...உன் மனசு ரொம்ப உசந்தது, எனக்குத் தெரியும்...எனிவே உனக்கு அந்தக் கவலையே வேணாம்...நா இன்னும் கல்யாணம் செஞ்சுக்கல...'

'ஓ!'

ரமணன் தன் மீது வைத்திருக்கும் மதிப்பு துளிகூட மாறவில்லை என்பது புரிய யமுனா எட்டி அவன் கையைப் பற்றினாள், ததும்பிய பரவசத்தை மறைக்காது பேசினாள்.

'இத்தனை வருஷம் கழிச்சு உன்னைச் சந்திச்சது எனக்கு எக்கச்சக்க சந்தோஷத்த தந்திருக்கு, தெரியுமா?- என, அவள் கையை ரமணன் பதிலுக்கு அழுத்தி 'எனக்கும் தான்' என்றான் அதே தீவிரத்துடன்.

## 21

### யமுனா

மெதுமெதுவாய் ஊறிய நீர்திரண்டு முத்தாக வெளிப்பட்டு, கன்னத்தில் கோடு இழுத்து, மேஜை மேல் தெரித்ததும் எதிரில் அமர்ந்திருந்த ரமணனிடம் வெளிப்



படையாகத் தோன்றிய பதட்டம் இதத்தைத் தருவதை உணர முடிய, யமுனாவுக்கு சந்தோஷத்தில் புன்னகைக்க வேண்டும்போல இருந்தது.

ஓ!...

வேண்டியவர், புரிந்து கொள்பவர் முன் கண்ணீர் சிந்துவது கூட ஒரு சுகம்தானோ?

புரிந்து கொள்வார் என்கிற நம்பிக்கை இருந்து விட்டால், எந்தச் சங்கடமும் இல்லை, குற்ற உணர்வும் இல்லையோ!

அழுவது கூட ஒரு வடிகால்தானோ? அசலாய் மருந்து தானோ?

'ய...மு...னா...' - குரல் பூராவும் கரிசனம் வியாபிக்க, பதட்டம் துளியும் குறையாமல் முன்னால் சாய்நத ரமணன், அவசரமாய் பாக்கெட்டிலிருந்து கைக்குட்டையை எடுத்து அவளிடம் நீட்ட, அதை யமுனா வாங்கிக் கொண்டாள்.

மூக்கை உறிஞ்சி, கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தவளைப் பார்த்து ரமணன் 'ப்ளீஸ்' என்று கெஞ்சியதும், மென்மையாய் சிரித்தாள்.

ரமணன் 'ப்ஷ்' என்று நிம்மதி பெருமூச்சு விட்டான்.

அப்புறம் 'ஒரு நிமிஷம் பயந்துட்டேன், யமுனா' என்றான் சின்ன குரலில்...

'எதுக்கு?'

'எதுக்கா? நீ அழுது நா இப்பத்தான் முத தடவையா பாக்கறேன் தெரியுமா? இரும்புப் பொம்பளைனு நினைச்

சிட்டிருந்த கண்ணுல தண்ணியப் பார்த்ததும், என்னடா செய்வோம், எப்படி சமாதானப்படுத்துவம்னு அரண்டு போயிட்டேன்'

யமுனா தலையைச் சாய்த்து அவனை ஏறிட்டாள்.

'நீ அழவே மாட்டியா, ரமணன்?'

'ம்ஹூம்...'

'இதுவரைக்கும் எதுக்கும் அழுததேயில்லியா?'

ரமணன் யோசனை பண்ணுகிற பாவத்துடன் மேஜை மேல் விரல்களால் தாளம் போட்டான்.

'அது இருக்கட்டும் - எல்லா பொம்பளைங்க மாதிரி எதுக்கெடுத்தாலும் அழறது உனக்கு சாத்தியமா?'

யமுனா உதட்டைச் சுழித்தாள்.

'நீ என்ன நினைக்கறே?'

'அதான் ஏற்கனவே சொல்லிவிட்டேனே! உன்னை முத முதல்ல பாத்தப்பறம் உனக்கு மானசீகமா நா என்ன செல்லப் பேர் வைச்சேன்னு இதுவரைக்கும் உன்கிட்ட சொன்னதேயில்ல...பெங்கால் டைரக்ஸ். ஆமா, யமுனா, உன்னை...பார்த்தப்போ கம்பீரமா நடந்து வர்ற பெண் புலிதான் நினைப்புக்கு வந்தது.

யமுனா தலையைப் பின்னுக்குத் தள்ளி உரக்க சிரித்தாள்.

'இப்போ? நா அழுததும் ஏன்டா அப்படி நினைச்சோம்னு தோணுதா?'

'சேச்சே...அந்த மாதிரி இல்ல...ஆனா, பொது இடத்துல, அதுவும் நாலு பேர் பார்க்க நீ அழுதது நா



கொஞ்சம் கூட எதிர்பார்க்காதது தான்...சொல்லு...நீ அடிக்கடி அழற ரகமா, என்ன?'

'ம்ஹூம்...சின்ன வயசுலேந்து நா அழுத நாட்கள ஒரு கை விரல்களை மட்டும் மடக்கி எண்ணிடலாம்... அழறது அம்மாக்குப் பிடிக்கவே பிடிக்காது...ஸோ, அந்த பழக்கம் என்னிக்குமே இருந்தது இல்ல...அம்மா போனப்புறம் அழறது இது ரெண்டாவது தடவை...சந்திரசேகரன் அங்கிள பார்த்தப்போ ஒரு தரம்...இது ரெண்டாவது...ஆனா, நிஜத்த சொல்லணும்னா, வேணுங்கறவங்க எதிர்ல அழறது சுகமா தான் இருக்கு ரமணன்...'

ரமணன் கண்களைச் சிமிட்டினான்.

'அப்ப, நா வேணுங்கறவன்னு ஒத்துக்கறே'

யமுனா சிரித்தாள்.

'அதுல என்ன சந்தேகம்! எப்பவோ ஒத்துக்கிட்டேனே! அது சரி-பேச்ச மாத்நாதே...நீ அழவே மாட்டியா?'

'ம்ஹும்'

'வெளிப்படையா இல்லாட்டியும். மனசுக்குள்ளயாவது?'

'ம்ஹூம்'

'இதுவரைக்கும் ஒருதரம் கூட, எதுக்கும்...எந்த இழப்புக்கும் மனசு கலங்கினது இல்ல?'

'எந்த இழப்புக்கும்' - என்பதை லேசாக யமுனா அழுத்தியதைப் புரிந்து கொள்ளாமல் 'ம்ஹூம்' என்று

சின்ன பையனின் உற்சாகத்தோடு ரமணன் தலை அசைக்க, யமுனா மௌனித்தாள்.

'நீயும், நானும் பிரிந்த போது கூட நீ வருந்த வில்லையா?' என்று கேட்க நினைத்ததைக் கஷ்டப்பட்டு தடுத்து நிறுத்தினாள்.

ரமணனைத் தன் பிரிவு எதிர்பார்த்த அளவு பாதிக்க வில்லை என்கிற எண்ணம் ஏமாற்றத்தைத் தர, அடுத்த டேபிளில் அமர்ந்திருந்த சர்தார்ஜி குடும்பத்திடம் கவனத்தைச் செலுத்தி, தன்னை நிதானப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

'ஐயோ - மீண்டும் அந்த வேதனையை நினைவு படுத்தாதே-நான் தவித்த தவிப்பு, சொல்லி மாளாது. உறங்க முடியாமல், சாப்பிட பிடிக்காமல் எப்பொழுதும் நெஞ்சில் கனம். நரக வேதனை என்றால் என்ன என்று அப்போது தான் உணர்ந்து கொண்டேன்'— என்று ஸினிமாவில் ஹீரோ, ஹீரோயினிடம் வசனம் பேசுகிற மாதிரி இரண்டு வரிகள் சொல்லமாட்டானா என்ற ஏக்கம் தலைதூக்குவதைப் புரிந்துகொள்ள முடிய, கோபத் துடன் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

'பைத்தியக்காரத் தனமாய் என்ன நினைப்பு இது! எதற்காக அசட்டு பிசட்டென்று இப்படியொரு தவிப் புக்கு இடம் கொடுக்கறேன்'-என்கிற கேள்வி எழுந்து எரிச்சலை அதிகமாக்கியது.

ரமணனும், தானும் பிரிய தீர்மானித்த பிறகு நடந்த நிகழ்ச்சிகளை ஒருதரம் ஞாபகப்படுத்திக் கொண்டாள்,

சந்திரசேகரன் அங்கிள் வீட்டில் விடைபெற்று. ட்ரைவ் இன் ஹோட்டலுக்குச் சென்று ஸ்வீட், காரத்



தோடு டிபன் சாப்பிட்டு, பள்ளிக்கு வந்து அம்மாவிடம் விஷயத்தைச் சொல்லி, அசம்பாவிதமாக எதுவும் நடக் காத தினுசில் வெகு சாதாரணமாகத்தானே இருந்தேன்!

கத்தல், அழுகை, உடைந்து போய் புலம்பல்?

ம்ஹூம்-சுத்தமாய் கிடையாது

நான் அத்தனை விவேகத்தோடு நடந்து கொண்டு விட்டு என்னைப் பிரிந்ததற்காக ரமணன் மனசு வருத்தப் பட வில்லையே என்று புழுங்குவது எத்தனை மடத்தனம்!

சட்டென்று யமுனாவின் காதோரங்கள் சிவந்தன. தன் சங்கடத்தை ரமணன் புரிந்து கொள்ளக்கூடாது என்கிற எண்ணத்தோடு, டேபின் மேல் இருந்த டம்ளரை எடுத்து தண்ணீரை வேகமாய் குடித்தாள் காலி டம்ளரின் விளிம்பை ஆள் காட்டி விரலால் சுண்டி ஓசைப்படுத் தினாள்.

ரமணன் அவள் கையை மென்மையாகத் தட்டி 'ஸாரி' என்றான்.

'எதுக்கு?'

'அம்மா பத்தின பேச்ச எடுத்ததுக்கு...'

'உனக்கு எப்படி தெரியும் அம்மாபோயிட்டது! ஹவ் ஈஸ் அம்மா-னு சாதாரணமா விசாரிக்கற மாதிரிதானே கேட்டே'

யமுனா பதில் கூறியதைத் தொடர்ந்து என்ன பேசு வது என்று புரியாத மாதிரி இருவரும் சும்மா இருந்தனர்.

ரமணன் சுற்றுமுற்றும் பராக்கு பார்த்தான்.

யமுனா வேலை அற்று கண்ணாடிடம்ளரைத் தட்டி 'ணங்ணங்' என்று ஓசை எழுப்பினாள்.

அரை நிமிஷம் சென்றதும் ஒருவரை ஒருவர் ஏறிட்டு, ஒரே சமயத்தில் சிரித்தார்கள்.

'எதுக்கு சிரிக்கறே?'

'நீ?'

யமுனா மேஜை மீது விரல்களை நடத்தி, அவன் கையை லேசாகக் கிள்ளினாள்.

'சொன்னா இன்னும் அதிகமா சிரிப்பே?'

'பரவாயில்ல, சொல்லு...'

'அஞ்சு வருஷம் கழிச்சு சந்திச்சிருக்கோம் - உருப்படியா பேச எத்தனையோ விஷயங்கள் இருக்கறப்போ, எதையும் பேசாம சின்னப் பசங்கமாதிரி, 'அழுவியா? ஏன் சிரிச்சே?'னு கேட்டுக்கிட்டு இருக்கோமேனு நினைச்சேன் சிரிப்பு வந்தது!'

ரமணன் முன்னால் சாய்ந்து முழங்கையை ஊன்றி உள்ளங்கையில் முகத்தைத் தாங்கிக் கொண்டான்.

'நீ சொல்றது ரொம்பசரி யமுனா. முன்னே மணிக் கணக்கா என்னென்ன விஷயங்கள் விவாதிச்சிருக்கோப்: நினைச்சுப் பார்த்தா ஆச்சர்யமா கூட இருக்கு...எவ்ரிதிங் அண்டர் த ஸன்னு சொல்வாங்களே, அந்த மாதிரி நாம தொடாத, அலசாத ஸப்ஜெக்டே இல்லேனு சொல்லலாம், இல்ல?'

யமுனா 'ம்ம்' என்று பலமாய் ஆமோதித்ததும் மறுபடி சேர்ந்து எந்த அர்த்தமும் இன்றி சிரித்தார்கள்.

சிரிப்பு அடங்கியதும் ரமணன் மணிக்கட்டைத் திருப்பி கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு 'கடவுளே! மணி பத்தரை!' என்றான் திடுக்கிட்டு...



'அதனால என்ன ரமணன்! இன்னிக்கு லீவுதானே?'

'லீவுதான். ஆனா, எஸ். ஓ. எஸ். கிராமத்துல பத்து மணிக்கு இருக்கணும்! நேரத்துக்குப் போகலைனா, பசங்க, அம்மாக்கள் எல்லாரும் வாச கேட்டுக்கே வந்திடுவாங்க...'

யமுனா எஸ். ஓ. எஸ். வில்லேஜ் பற்றி அறிவாள். சென்னை இல்லத்துக்கு அவனோடு ஓரிரு முறைகள் போயிருக்கிறாள் என்பதால் ஆர்வத்துடன் வினவினாள்.

'இந்த ஊர்லயும் எஸ். ஓ. எஸ். வில்லேஜ் இருக்கா? அங்க காலைல வர்றதா சொல்லி இருக்கியா?'

'இன்னுக்கு மட்டும் இல்ல யமுனா...ஒவ்வொரு சனிக்கிழமையும் நா அங்க போறது வழக்கம்...'

யமுனா நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளி விட்டு எழுந்து நின்றாள்.

நானும் உன் கூட வரட்டுமா?'

ரமணன் தயங்கினான்.

'கஷ்டம்'

'என்ன கஷ்டம்!'

'இன்னிக்குப் போனா, ராத்திரி தங்கிட்டு நாள சாயங்காலம்தான் திரும்புவேன் உனக்காக போன உடனேயே திரும்ப...'

அவனை முடிக்க விடாமல் யமுனா குறுக்கிட்டாள்.

ஏன் திரும்பணும்! உன்கூட நானும் அங்கேயே தங்கிடறேன்! எப்படி ஐடியா!'

ரமணன் வியப்புடன் புருவங்களை உயர்த்தினான்.

யமுனா அவன் வியப்பு புரிந்த தினுசில் சிரித்தாள்.

'மெட்ராஸ்ல நீ அங்கப் போறப்ப எல்லாம் 'கூட வா'னு கூப்பிடுவே... 'சும்மா ஒரே எடத்துக்குப் போனா 'போர்' அடிக்குது...சமூக சேவைனாலும், ஒவ்வொரு தரம் புதுப்புது இடங்களுக்குப் போய், புதுப்புது மனுஷங்களுக்கு உதவணும்னு சொல்லி நா வர மறுத்திடுவேன்! அத நினைச்சுப் பார்த்து, 'என்னடா, இன்னிக்கு இவ இப்படி பேசறாளே! ரொம்பத்தான் மாறிட்டாளே!-னு திகைச்சுப் போயிட்டயா?'

ரமணன் சர்வர் கொண்டு வந்திருந்த பில்லுக்கான பணத்தோடு, தாராளமாவே டிப்ஸையும் சேர்த்து தட்டில் வைத்துவிட்டு எழுந்து நின்றான்.

'உன்னோட இருக்கறதுல ஒரு சௌகர்யம் யமுனா... நீயே கேள்வி கேட்டுட்டு, நீயே பதில் சொல்லிடுவே... பாதி சமயம் எனக்கு யோசிக்க வேண்டிய அவசியமே இருக்கறதில்ல ...அந்த விஷயத்துல அன்னிக்குப் பார்த்த மாதிரிதான் இன்னிக்கும் நீ இருக்கே... நோ சேன்ஜ் அட் ஆல்...'

கடையைவிட்டு வெளியேறி படி இறங்கிக் கொண்டிருந்த யமுனா நின்றாள்.

இடுப்பில் கைகளை வைத்துப் பொய்யாய்வர வழைத்துக் கொண்ட கலவரத்துடன் கேட்டாள்.

'அப்படீன்னா நா மாறவே இல்லேன்னா சொல்றே?'



'இது பாராட்டு தானே! எதுக்காக என்னமோ தப்பா பேசிட்ட மாதிரி பதட்டப்படறே!'

இரண்டடி வைத்து அவன் எதிரில் வந்து யமுனா நின்று கொண்டாள்.

'ஐம் ஸாரி மை டியர் ரமணன்-நீ சொன்னது பாராட்டு இல்லை...இன்ஸல்ட்...'

அழுத்தமாக யமுனா குற்றம் சாட்ட, ரமணன் விழித்தான்.

'அ?'

'நிஜம்மாதான் சொல்றேன். நா மாறவே இல்லனு நீ சொன்னா அது நிச்சயமா 'காம்ப்ளிமெண்ட்' இல்ல...'

'இது என்னடா புது வம்பா இருக்கு!'

ரமணன் சிரித்து நிலைமையைச் சமாளிக்கப் பார்க்க, யமுனா விரலைச் சொடுக்கி அவன் கவனத்தை ஸ்திரப் படுத்தினாள்.

'விளையாடாம கேளு ரமணன்...முன்ன ஒருதரம் அங்கிளோட 'பீச் ஹவுஸ்'ல கூட நாம இதப்பத்தி விவாதிச்சிருக்கோம் நீ மறந்திட்டியோ, என்னமோ... வளர்ச்சி வேணும்னு நினைக்கறவங்க மாற்றத்துக்குத் தயாரா இருக்கணும். மாற்றம் வந்தாதான் வளர்ச்சி நா மாறவே மாட்டேன்னு சொல்றவங்க தேங்கின குட்டைக்குச் சமம். பாசி பிடிச்சு, கொசு உற்பத்தி ஆகி, நாற்றம் எடுத்து...யக்... யாருக்கும் எந்த உபயோகமும் இல்லாம...ஸோ, வளர்றதுக்கு உதவுற மாற்றம் இல்லாம பாசி பிடிச்ச குட்டை நீர் மாதிரி வீணாப் போறதுல எனக்கு உடன்பாடு இல்ல... மாற்றங்கள இயல்பா ஏத்துக்கற நதியா வாழத்தான் ஆசைப்படறேன், சரி

ஏதோ காரணத்தால பெரிய நதியா இருக்க முடியாட்டியும், சலசலத்து ஓடற சின்ன ஓடையா வாழ்ந்து அப்பப்ப ஒரு செடி உயிர் வாழ, ஒரு மனிதர் தாகம் தீர்க்கவாவது உதவணும்ன்றது தான் என் விருப்பம். ஏன், வாழ்க்கையோட லட்சியம்னு கூட சொல்லலாம். இத்தனையும் அஞ்சு வருஷம் முன்னாலயே உனக்கு நா சொல்லி இருக்கேன். எல்லாத்தையும் மறந்திட்டு 'மாறவே இல்லேனு குண்டைத் தூக்கிப் போடறியே. இது இன்ஸல்ட் இல்லாம வேற என்ன?'

மூச்சு விடாமல் யமுனா கொஞ்சம் விளையாட்டு, தீவிரம் கலந்து பேச, ரமணன் இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டான்.

'அம்மா, தாயே...தெரியாம சொல்லிட்டேன். நீ மாறிட்ட...அடியோடு. உச்சி முதல் பாதம் வரை எக்கச்சக்கத்துக்கு மாறிட்ட, ஏத்துக்கறேன்...போதுமா? என்ன திருப்தி இல்லையா? ஓகே...இப்ப பாரு...'

பேசியவன் தன்னைக் கடந்து சென்ற நபரின் தோளைத் தட்டி நிறுத்தினான்.

'இது யமுனா...இவள நா அஞ்சு வருஷம் முன்னால பாத்ததுக்கு இப்ப, ரொம்ப மாறிட்டா ஸர்' என்று தமிழில் கூறி, இவன் சொல்வது புரியாமல் திகைத்த ஹிந்திக்கார நபரிடம் 'ஸாரி- ஐ ஸ்போக் இன் தமிழ்...ஐ ஜஸ்ட் வாண்டட்டு டெல் யூ. தட் யமுனா ஹாஸ் சேன்ஜ்ட் என்று சொன்னதையே ஆங்கிலத்தில் கூற, என்னாயிற்று எனக்கு' என்கிற பார்வையுடன் அந்த ஆள் நகர, யமுனா வாய் விட்டுச் சிரித்தாள்.

செய்த ரகளை போதாது என்பது போல ரமணன், அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வண்டியை நெருங்கி,



முன் இருக்கையில் அமர்ந்திருந்த பெண்மணியிடம் தெரியுமா உங்களுக்கு? யமுனா மாறி...' என்று தொடங்க, அவன் கையைப்பிடித்து யமுனா அவசரமாய் இழுத்தாள்.

திருதிருத்த பெண்மணியைப் பார்த்து புன்னகைத்து 'ஸாரி என்றவள், ரமணனிடம் இப்படி கலாட்டா பண்றத நிறுத்த போறியா இல்லியா?' என்று அதட்டலாய் கேட்டு விட்டுத் தொடர்ந்து சிரித்தாள்.

'நிறுத்தறேன். ஆனா, நீ மாறிட்டேனு நா ஒத்துக்கறதா நீ ஒத்துக்கோ...'

யமுனா தலையைப் பின்னுக்குத் தள்ளி சிரித்தாள்.

'ப்பா...விசு ஸினிமால வர்ற டயலாக்மாதிரி இருக்கு.'

'ஹேய். பேச்ச மாத்தாதே...ஒத்துக்க...'

'ஓகே...ஓகே, ஒத்துக்கறேன்...இனியாவது உன் சேஷ்டைகளை நிறுத்துவியா?' எனக்கு சிரிச்சு சிரிச்சு வயித்த வலிக்குது...

கண்களில் சுரந்துவிட்ட நீரைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்த யமுனா அவனை நோக்கி மந்தஹாஸமாய் புன்னகைத்தாள்.

'நா மாறிட்டேனோ இல்லியோ - நீ சத்தியமா மாறிட்ட ரமணன் இந்த மாதிரி நாலு பேர் பார்க்க கொட்டம் அடிக்கற ரகமா மூன்ன நீ இல்ல... 'அவன் பார்க்கிறான், இவ கவனிக்கிறான்'னு ரொம்பத்தான் பிகு பண்ணிப்ப. இப்ப பொது எடத்துல, கடையில, என்ன ஹூட்டி, அத்தனை பேரும் பார்க்கற மாதிரி?! அஞ்சு

வருஷ டெல்லி வாழ்க்கை உன்னை எப்படி மாத்திடுச்சு! க்ரேட்! இந்த ரமணனை எனக்கு இன்னும் பிடிச்சிருக்கு தெரியுமா?'

கண்களைச் சிமிட்டி பேசியவள், அவன் கையைப் பற்றிக் கொண்டு கடைசி வரிகளை கிசுகிசுப்பாய் அவனுக்கு மட்டும் கேட்கும் த்வனியில் கூறியபோது அந்தக் குளிரிலும் உள்ளங்கையில் வியர்க்கிற மாதிரி ஒரு சிலிர்ப்பு அவனுள் தோன்றி உடம்பை லேசாக உதறிப் போட வைத்தது.

## 22

**ரமணன்**

'தூங்கிட்டியா?'

'சரியா சொல்லிட்டியே ரமணன்! எப்படி 'போன்ல' பேசறப்பவே கண்டுபிடிச்சே? ஆனாலும் நீ எமகாதகன்மா...ஒருமணி நேரமா செமைத்தூக்கம்.'

'கிட்ட இருந்தேன்னா காத புடிச்சு ஒரே திருகா திருகி இருப்பேன். யார்கிட்ட 'ஒரு மணி நேரமா செமைத் தூக்கம்'னு கதை விடறே! உன்னை 'ஜன்பத்' ஹோட்டல்ல நா எறக்கிவிட்டு இன்னும் அரைமணி கூட ஆகல!'

யமுனா உரக்க சிரித்தாள்.

'பின்னே? அசட்டு பிசட்டுனு கேள்வி கேட்டா' அப்படித்தான் பதில் சொல்வேன்...அரைமணி கூட ஆகல...அதுக்குள்ள 'தூங்கிடுவேனா?'



'சரி-தூங்கல...நா போனப்புறம் என்ன பண்ணே?'

'ம்ம்...நீ வாசல்ல எறக்கி விட்டப்புறம், நா ரிஸப்ஷனுக்கு வந்து, சாவி வாங்கிகிட்டு, காரிடார்ல நடந்து...'

'ஐயோ... தெரியாத்தனமா கூப்பிட்டேன். மணி ஒன்பதரை கூட ஆகலியே, ஸ்வாரஸ்யமா கொஞ்ச நாழியாவது பேசிட்டு இருக்கலாமேனு தப்புகணக்கு போட்டுட்டேன் ஸாரி...யமுனா...குட்நைட்...'

யமுனா மீண்டும் சிரித்தாள்.

'அடுத்தவங்கள அறுக்கறது உன் உரிமை மட்டும்னு நினைக்காதே, ரமணன்...'

சிரித்தவள் தொடர்ந்தாள்.

'சரி, என்ன செஞ்சிட்டிருந்தேன்னு சொல்லட்டுமா, லெட்டர்ஸ் வந்திருந்தது...நாள் பூரா ரூம்ல இல்லையா? இப்பத்தான் பார்த்தேன். படிச்சிட்டிருந்தேன்...'

'ரீல்...சரியான ரீல்...இன்னிக்கு குடியரசு தினம்... போஸ்டல் ஹாலிடே... யார்கிட்ட காது குத்தற யமுனா?'

'காதும் குத்தல...மூக்கும் குத்தல...நேத்து வந்த லெட்டர்ஸ இந்த ஹோட்டல்ல இன்னிக்குதான் தந்தாங்க...ஏன்-னு கேட்டதக்கு ஏதோ சொல்லி சமாளிக்கறாங்க...'

'லெட்டர்ஸ்-னு பன்மைல சொல்றியே! யார் கிட்டயிருந்து?'

'ஒண்ணு வசுகிட்டயிருந்து... அடுத்தது...சொல்ல மாட்டேன்...ஆனா ஒரு குட்நியூஸ்... டட்டடாண்... ஸர்ப்ரைஸ்...நேர்ல பாக்கறப்போ தான் சொல்வேன்.'

ரமணன் கெஞ்சலாக 'ப்ளீஸ் யமுனா' என்றான்,

'மாட்டேன்...டேன்...டேன்...டேன்...'

ரமணன் 'ப்ச்' என்று அலுப்புடன் சூள் கொட்டினான்.

'சரி-சொல்லாட்டிபோ...வசு என்ன எழுதி இருக்கா?'

'நாம இத்தனை வருஷம் கழிச்சு சந்திச்சது நம்ப மாட்டாம, கதைல வர்ற மாதிரி இருக்குனு எழுதியிருக்கா...'

'அவ மட்டும் இல்ல யமுனா, நாம திரும்ப சந்திச்சது கேக்கறவங்க யாருமேதான் இது எதிர்பாராம நடந்ததுனு சொன்னா நம்ப மாட்டேங்கறாங்க...'

'ஒருத்தரைத் தவிர...அங்கிள்.'

'கரெக்ட்...நாம ஒண்ணா போன் பேசிவப்ப கொஞ்சம் ஆச்சர்யம், நிறைய சந்தோஷப்பட்டாரே ஒழிய-எதேச்சையாவா 'மீட்' பண்ணிங்க-னு ஒருதரம் கூட கேக்கல...'

'அங்கிள் நல்ல எழுத்தாளர் மட்டும் இல்ல, பர்ஃபெக்ட் ஜென்டில்மென் கூட...'

'ஒத்துக்கறேன்...'

'இன்னிக்கு நாம 'ரிபப்ளிக் டே பரேட்' பார்த்துட்டு இருந்தப்போ, எனக்கு திடும்னு அவர் நினைப்பு வந்துடுச்சு ரமணன்!'



'பரேட் பார்க்கறப்போ, சந்திரசேகரன் ஸர் நினைப்பா ஏன்?'

யமுனாவின் குரல் லேசான பரபரப்பில் உயர்ந்தது.

'அங்கிள் காலேஜ் படிக்கறப்போ பெஸ்ட் என். ஸி. ஸி காடட்-ஆ மெட்ராஸ்லேந்து டெல்லிக்கு வந்து பரேட்ல பங்கெடுத்திருக்காரே ரமணன், உனக்குத் தெரியாது?'

'நிஜமாவா?'

'என்ன நிஜமாவா? அங்கிள் என். ஸி. ஸி. யுனிஃபார்ம்ல 'மார்ச்' பண்ணிட்டு வந்தார்னா, எல்லார் பார்வையும் அவர் மேல தான் இருக்குமாம்! எங்கப்பா சொல்லிருக்கார்!'

மேற்கொண்டு என்ன பேசுவது என்று புரியாத நினுசில் சில நொடிகளுக்கு மௌனித்த ரமணன் 'நா ஏன் போன் பண்ணேன்னு நீ கேக்கவே இல்லியே யமுனா?' என 'அதானே!' என்று யமுனா ஆமோதித்தாள். பின்னர் 'எதுக்கு கூப்டே ரமணன்? நாள் பூராவும் ரெண்டு பேரும் ஒண்ணா குடியரசு தின கொண்டாட்டங்கள பாத்து, வெளில சாப்பாடு, அரட்டை அடிச்சது திருப்தி தரலியா?'

ரமணன் தனக்குத்தானே புன்னகைத்துக்கொண்டான்.

'இல்லை-உன்னை இறக்கி விட்ட மறு நிமிஷமே வண்டியை நிறுத்தி விட்டு உன் பின்னே வந்து பேசவேண்டும் போல இருந்தது. சமாளித்துக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டேன். ஆனால் அரை மணிக்கு மேல் உன் குரலை கேட்காமல் தாக்கு பிடிக்க முடியவில்லை. அதான் கூப்பிட்டேன் என்று டயலாக் அடிக்கலாமா என்று நினைத்தவன், அது வெறும் கேலி வசனம் அல்ல;

உண்மையும் கலந்திருக்கிறது என்று புரிய, எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

'சொல்லு ரமணன், எதுக்கு கூப்டே!'

'வீட்டுக்கு வந்து புஸ்தக அலமாரிய குடஞ்சிட்டிருந்தேன். நல்ல கருத்துக்கள் எப்பவோ எழுதி வச்ச டைரி கிடைச்சது. படிக்கறேன், கேக்கறியா?'

'ஷ்யூர்'

'நாம் பார்க்கும் சூரிய அஸ்தமனம் தான் உலகின் வேறொரு கோடியில் சூரிய உதயமாக மலர்கிறது புது சாய் பிறக்கும் நாள் தர இயலாத எதையும் மறையும் நாள் தன்னோடு எடுத்துச் செல்ல முடியாது...'

யமுனா சன்னமாய் விஸில் அடித்தாள்.

'எவ்வளவு நம்பிக்கை தர்ற கருத்து!'

'இத கேளு...வாழ்க்கை என்பது எதிர்பாராமல் நிகழ்பவற்றை ஏற்கப் பழகும் கலை...' எப்படி?

'க்ரேட்!' என்ற யமுனா 'நீ டி. வி. 'ஆன்' பண்ணியிருக்கியா ரமணன்?' என்றாள். 'திடுமென எங்கேயிருந்து எங்க தாவறே?'

'எம். எஸ்.' பஜன்ஸ் பாடறாங்க...வையேன்... காந்திஜிக்கும் பிடிச்ச 'ஹரி துமஹரோ' பாடறாங்க... கேளு ரமணன்...'

யமுனாவின் விருப்பப்படி ரமணன் தொலைகாட்சியை இயக்க. அவள் அறையில் அவளும், அவன் வீட்டில் அவனும் மௌனமாய் ரிஸீவரைக் கையில் பிடித்தபடி டி. வி யில் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியைப் பார்த்து, கேட்டார்கள்.

பாட்டு முடிந்த பிறகு 'எனக்கு இன்னிக்கு மனசு நிறைஞ்சிருக்கு ரமணன்' என்று யமுனா மெல்லிய குரலில் கூற 'எனக்கும்' என்றான் ரமணன்.



'தாங்ஸ்'

'எதுக்கு?'

'எனக்கு இத்தனை சந்தோஷத்தை நீ கொடுத்ததுக்கு!'

'அதே ஹாபினஸ்ஸ நீயும் எனக்கு கொடுத்திருக்கியே யமுனா! அப்போ நானும் பதிலுக்கு தாங்க்ஸ் சொல்லட்டுமா?'

யமுனா சிரித்தாள்.

'இது எப்படி இருக்கு-னு சொன்னா, ஒரு ஊர்ல ரெண்டு அடிமுட்டாள்கள் ஸ்னேகிதமா இருந்தாங்களாம். ஒருநாள் ராத்திரி ஒருத்தன் வீட்டுக்கு இன்னொருத்தன் போனானாம். அவன் கிளம்பறப்போ முதல் நண்பன் 'டேய் ராத்திரி வேளைல எப்படி தனியா போவே? நான் உன் வீடு வரைக்கும் துணைக்கு வரேன்னு-சொல்லிட்டு கூட வந்தானாம். அப்புறம் அவன் எப்படி தனியா போவான்னு இவன் மறுபடி அவன் வீடுவரை கூட போனானாம். திரும்ப இவன் எப்படி தனியா... போவான்னு அவன் வர,...விடிய... விடிய... ரெ...ண்டு... பே...பேரும்...ஹ்ற...ஹ்ற. 'ஹோஹா...'

மேலே தொடரமுடியாமல் யமுனா உரக்க சிரிக்க முற்பட, ரமணனும் சேர்ந்து கொண்டான்.

பாதி சிரிப்பில் திடுமென நிறுத்திவிட்டு ரமணன் 'ஐடியா' என்றான் உற்சாகமாய்.

'யாருக்கு? அந்த ஊரஸ் ஸ்னேகிதர்களுக்கா?'

'சிரிக்காம கேளு யமுனா? ஒரு பிரமாதமான ப்ளான்...இன்னும் பதினைந்து நிமிஷத்துல நா அங்க வரப் போறேன்...வந்து...'

அவனை முடிக்க விடாமல் யமுனா சிரிப்புடன் குறுக்கிட்டாள்.

'ராத்திரி பூரா ஜன்பத்துக்கும், சாந்தி காலனிக்கும் போயிட்டு வந்திட்டு இருக்கலாம்னு சொல்றியா? ப்பா... எப்பேர்ப்பட்ட ப்ரிலியண்ட் ஐடியா...'

'பேசாம நா சொல்றத கேப்பியா? ப்ளீஸ்...ரெடியா இரு...நாம வெளியே போப்போறோம்...'

'எங்க நைட் ஷோவுக்கா?' என்று வினவின போது வாஸ்தவத்திலயே அந்தக்குரலில் வியப்பு மண்டியிருந்தது.

'டட்டடாண்...ஸர்ப்ரைஸ்... சொல்லமாட்டேன்...'

'ஹேய்... ரமணன்!' என்று அவள் அழைப்பதை லட்சியம் பண்ணாமல் தொடர்பைத் துண்டித்தவன் விஸில் அடித்தவாறு முகம் கழுவி, உடைகளை மாற்றிக் கொண்டு, வெளியே வந்தான்.

வண்டியை வேகமாக விரட்டிக்கொண்டு ஜன்பத் ஹோட்டலுக்கு வந்தபோது மணி பத்தே கால்.

வரவேற்பு கூடத்தில் அவனுக்காகக் காத்திருந்த யமுனா 'சரியான ஊர் பொறுக்கிங்க-னு இந்த ஹோட்டல்ல வேலை பாக்கறவங்க மட்டமா நினைச்சுக்கப் போறாங்க' என்று நையாண்டியாய் முணுமுணுத்துக் கொண்டே படி இறங்க, ரமணன் 'நினைச்சுக்கட்டுமே!' என்றான் தோளைக் குலுக்கி...

கனாட்பிளேஸுக்குப் போனார்கள்.

ஓடியன் தியேட்டர் அருகில் வண்டிய நிறுத்தி விட்டு 'இறங்கு' என்றான்.

யமுனா உதட்டைப் பிதுக்கினாள்.

'இதுல என்னப்பா 'ஸர்ப்ரைஸ்' இருக்கு! பெரிய டட்டடாண் வேற, ராகத்தோட! நாதான் நைட் ஷோவானு ஏற்கனவே கேட்டுட்டேனே! ஆனா, ரமணன் மணி என்ன தெரியுமா? பத்தரை! ஒரு ரீல் ஓடியிருக்குமே! பரவாயில்லியா? உனக்கு விளம்பர ஸ்லைட்லேந்து பாத்தா தானே திருப்தி?'



ரமணன் கண்களைச் சிமிட்டி மறுபடி 'டட்டடாண் என்றான்...

'போனாப் போறதுனு மூணு சான்ஸ் தந்தேன்... ஊகிக்கப் பாரு...நைட் ஷோ...இல்ல...அப்புறம்?'

யமுனா சுற்று முற்றும் பார்வையை வீசினாள்.

ஜோடி ஜோடியாய் மனிதர்கள் எலும்பை ஓட்டை போடும் குளிரைப் பொருட்படுத்தாது...

பீடா வகையறாக்கள் விற்கும் கடைகள்...

பார்த்த வகையில் எதுவும் புரியாமல் தான்போயிற்று 'கிணத்துல கல் போட்டுட்டேன்...நீ சொல்லு...'

'அ? அ? அத்தன சுருக்க சொல்லிடுவேனா! லெட்டர்ல ஏதோ குட் நியூஸ் வந்திருக்கு நேர்ல பாக்றப்ப தான் சொல்லுவேன்னு கண்டிஷன் போட்டியே! அத மொதல்ல சொல்லு...'

யமுனா பாராட்டும் விதமாகத் தலையைச் சாய்த்து உதட்டைச் சுழித்தாள்.

'ப்பா... என்ன ஞாபகசக்தி ரமணன், உனக்கு? எனக்கு கூட லெட்டர் வந்தது மறந்து போச்சு...'

'பாராட்டு இருக்கட்டும்...விஷயத்துக்கு வா...'

'இங்க ஒரு ட்ராவல் ஏஜன்ஸில இன்டர்வ்யூக்குப் போயிருந்தேனே, ஞாபகம் இருக்கா? அங்க சேரச் சொல்லி அப்பாயிண்ட்மென்ட் லெட்டர் வந்திருக்கு!'

ரமணன் அவள் கையைப் பற்றி குலுக்கினான்.

'கங்க்ராட்ஸ்... பெரிய ட்ரீட் ஒண்ணு இருக்குனு சொல்லு...'

'உனக்கு இல்லாததா? என்னிக்கு, என்ன வேணும்னு சொல்லு... ஜமாய்ச்சிடலாம்...ஆனா, இப்படி எமகுளிர்ல ராத்திரி பத்தரை மணிக்கு நிக்க வச்சு தொடர்ந்து பேசினேன்னா நாளைக்கு ட்ரீட்டும் இருக்காது, மண்

ணாங் கட்டியும் நடக்காது... நிம்மோனியா வந்து ஹாஸ்பிடல்ல தான் ரெண்டு பேரும் இருப்போம்...இப்ப, உன் ஸர்ப்ரைஸ் என்னனு சொல்லப் போறியா இல்லியா? இன்னும் ஒரு நிமிஷம் போனா பேச வராம பல்லு கட்டிடும் போல இருக்கு...'

'ஸாரி' என்ற ரமணன் அவள் கையைப் பற்றி இருந்த பிடியை விடாமல் தியேட்டரை ஒட்டி இருந்த சந்தில் அழைத்துச் சென்றான்.

ஒரு பக்கமாய் வரிசையாய் கடைகள்.

முதல் கடை முன் நின்றவன் அவளை ஏறிட்டு சின்ன பையன் போல வெட்கத்துடன் சிரித்தான்.

கடையில் விற்பனையாகிக் கொண்டிருந்த தின்பண்டங்களைப் பார்த்த யமுனா புருவங்களை உயர்த்தினாள்.

'இங்க? நீ? புரியலையே ரமணன்!'

'சுடச்சுட ஆலு டிக்கியாவும், குலாப்ஜாமூனும் இந்த கடைல பிரமாதமா இருக்குமாம்! என் ப்ரெண்ட்ஸ் சொல்லி இருக்காங்க...'

யமுனா கண்களை இடுக்கிக் கொண்டு அவனை நம்பாமல் பார்த்தாள்.

'இருக்கட்டும். ஆனா. இப்படி கண்ட எடத்துல. வேலை கெட்ட வேளைல சாப்பிடறது உனக்குப் பிடிக்காதே ரமணன்!'

ரமணன் மீண்டும் வெட்கத்துடன் சிரித்தான். சின்ன குரலில் கேட்டான்.

அஞ்சு வருஷம் முன்னால பார்த்த மாதிரியே இருந்தா எப்படி யமுனா? மாற்றம் வேணாமா? மாறுதல் இருந்தா தானே வளர்ச்சி! அதான் இனி சின்னச் சின்ன விஷயங்கள்ல மாறிடலாம்னு தீர்மானம் பண்ணிட்டேன்!'

'எப்போலேந்து?"



'அரைமணி முன்னாலேந்து!' என்று யோசிக்காமல் அவன் பதில் கூற இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

யமுனா கடைபக்கம் திரும்பினாள்

பெரிய தோசைக் கல்லில் வட்ட வட்டமாய் ஆலுடிக்கியா வெந்து கொண்டிருக்க, பக்கத்து அடுப்பு வாணலியில் பொன்னிற விரல்களாகக் கொதிக்கும் குலாப் ஜாமூன்கள்...

என்ன வேண்டும்? என்கிற பார்வையுடன் ஏறிட்ட கடைக்காரரைப் பார்த்து புன்னகையுடன் யமுனா கூறினாள்...

'ரமணன் உங்க கடையில இந்த நேரத்துல சாப்பிடப் போறாராம்-ஜனவரி குளிரையும் மீறிகிட்டு இன்னிக்கு மழை கொட்டப் போவுது...எதுக்கும் முன் எச்சரிக்கையா கடைய நீங்க மூடிடறது நல்லது-என்று நீளமாய் பேச, அவர் திருதிருக்க, ரமணன் செல்லமாக அவள் தலையில் குட்டினான்.

பிறகு பதார்த்தங்களை ஆர்டர் செய்தான்.

கொதிக்கும் ஆலு டிக்கியாவை வாயில் போட்டு, சூட்டின் காரணமாய் விழுங்க முடியாமல் தவித்துக் கொண்டே ரமணன் அவளிடம் கேட்டான்.

'ஒண்மு கேம்மா மூப்பா எமூத்மூக்க மாம்மியே?'

வாயில் டிக்கியாவைப் போட்டுக் கொண்டிருந்த யமுனாவும் அதே ரீதியில் பதில் கூறினாள்.

'எம்மு சொம்மேனு புமியலை மூமமூன்...'

டிக்கியாவை விழுங்கக் கூட முடியாமல் இருவருக்குமே சிரிப்பு பொத்துக் கொண்டு எழ, தொடர்ந்து வந்த நிமிஷங்களில் உரக்க சிரித்தார்கள். ரமணன் கைக் குட்டையை எடுத்துக் கண்களை துடைத்துக் கொண்டான்.

'டீன் ஏஜ் பசங்க மாதிரி நடந்துக்கறத பாக்கறவங்க மனசுக்குள்ள கேலி பண்ணிப்பாங்க, நிச்சயம்...'

'யமுனா தலை அசைத்து மறுத்தாள்.

'டீன் ஏஜ் பசங்க இவ்ளோ கன்னா பின்னானு நடந்துக்க மாட்டாங்க ரமணன்! நாம இன்னும் மோசம் !

ரமணன் 'இன்னும் ரெண்டு பிளேட் டிக்கியா?' என்று ஆர்டர் கொடுக்க, 'யாருக்கு?' என்றாள் யமுனா...

'நமக்குதான்'

'வயிறு ரொம்பி போச்சு ரமணன்...'

'ஒன் ஃபார் தி ரோட்...' என்று குடிப்பவர்கள் கடைசி கிளாஸுக்குச் சொல்வதுபோல அவன் அபிநயித்ததும், மறுபடி சிரித்தார்கள்.

யமுனா அவன் தோளில் முஷ்டியால் குத்தினாள்.

'இந்த ரமணன் எனக்குப் புதுசு... ஆனா இவனை— இன்னும் பிடிச்சிருக்கு... என்னாச்சு உனக்கு ரமணன்? நா எதிர்பார்க்காத என்னெல்லாமோ செய்யறே? ம்?'

ரமணன் கண்களைச் சிமிட்டினான்.

'இதுக்கே இப்படிச் சொன்னா? இன்னும் நா பேசப் போற ஸப்ஜெக்ட் கேட்டா என்ன சொல்லப்போறியோ?'

இது என்ன புது ஸஸ்பென்ஸ்?'

'நிச்சயம் கோவிக்க மாட்டியே?'

'வெளையாடாதப்பா...'

'ஓகே—இப்ப ஒரு நாளைக்கு ஹோட்டலுக்கு நீ எத்தனை செலவு பண்றே!'

சொன்னாள்.

'சாப்பாட்டுக்கு?'

யமுனா மந்தஹாஸமாய் புன்னகைத்தாள்.

'அதெல்லாம் டெல்லிக்கு வந்த மொத நாலு நாள் மட்டும்தான். உன்னைச் சந்திச்சப்புறம் சாப்பாட்டுச் செலவே அம்மாக்கு இல்லை...எல்லாம் உன் தயவு...'

ரமணன் அவள் கையைப்பற்றிக் கொண்டான். இது நாழிகை இல்லாத தீவிரத்துடன் கேட்டான்.



'நாம சந்திச்சு நாலு வாரம் ஆச்சு. தினமும் 'மீட்' பண்றோம். முடிஞ்சவரைக்கும் பொழுதை ஒண்ணா கழிக்கறோம். அப்படி இருக்கறப்போ, ஏகப்பட்ட பணம் செலவழிச்சுக்கிட்டு நீ ஏன் ஜன்பத் ஹோட்டல்ல இருக்கணும்? என் பிளாட்டுல மூணு பெட்ரூம் இருக்கு...நீ ஏன் உன் சாமான்களை எடுத்துக்கிட்டு என் வீட்டுக்கே வந்திடக் கூடாது? நீயும் சரி, நானும் சரி, நல்லது கெட்டதை யோசிக்கத் தெரிஞ்ச 'க்ரோன் அப்ஸ்.' மனசுக்கு சரினு தோணறதைச்செய்யறதுக்கு என்னிக்குமே நீயும், நானும் தயங்கினதில்ல... அந்த நம்பிக்கையில கேக்கறேன்...'வொய் டோண்ட் யூ ஷிப்ட்டு மை ஹவுஸ்?'

# 23

**நான்**

**வி**மானக் கூடத்தில் நுழைந்ததுமே, இரும்பு கிராதி தடுப்புக்கு அந்தப் பக்கம் நின்றிருந்த அவ்விருவரையும் நான் பார்த்து விட்டேன்.

என்னை அடையாளம் கண்டு கொண்டு அவர்கள் உற்சாகமாய் கைகளை ஆட்ட, பதிலுக்கு நானும் கையை வீசினேன். தொடர்ந்து 'பெட்டிகளை எடுத்து வந்து விடுகிறேன்' என்றும் சைகையால் விளக்கி விட்டு கன்வேயர் பெல்டிடம் சென்றேன்.

கால் மணியில் ஒருபெரிய்ய அட்டைப் பெட்டி, சின்ன ஸூட்கேஸை ட்ராலியில் வைத்து தள்ளிக் கொண்டு நான் வெளியே வந்ததும், கேட் அருகிலேயே நின்றிருந்த யமுனா ஒரே எட்டில் நெருங்கி, 'ஹாய் அங்கிள்' என்று உற்சாகமாகக் கத்தி இறுக அணைத்துக் கொண்டபோது அவள் கண்களில் என்னால் நட்சத்திரங்களைப் பார்க்க முடிந்தது.

முயல் குட்டிமாதிரி மார்பில் ஒட்டிக் கொண்டவளை தோளோடு சேர்த்து இணைத்து, பின் முதுகில் வாத்ஸல்யத்தோடு தட்டிக் கொடுத்து 'ஹலோ யமுனா—எப்படி இருக்கே?' என்றேன்.

தலையை உயர்த்தி யமுனா என்னை ஏறிட்டாள்.

'ரொம்ப ஷார்ட் நோட்டீஸ் கொடுத்திருக்கமே எங்க வராம இருந்திடுவீங்களோனு பயந்துகிட்டே இருந்தேன் அங்கிள்...இப்ப உங்களைப் பார்த்ததும்தான்' அப்பாடா'னு இருக்கு...'

'நான்? வராமல்? உங்க கல்யாணம்? நடந்துவிடுமா பெண்ணே? விட்டுடுவேனா?' -ட்ராமா பாணியில் குரலை அழுத்தி வினவியதும் யமுனா தலையைப் பின்னுக்குத் தள்ளி உரக்க சிரித்தாள். அருகே அது நாழிகை எதுவும் பேசாமல் நின்றிருந்த ரமணனும் சேர்ந்துகொள்ள. எட்டி அவன் கையைப் பற்றி 'என்னப்பா மாப்பிள்ள, எப்படி இருக்கே? வந்ததுலேந்து இன்னும் ஒருவார்த்தை கூட நீ பேசலயே—என்ன மாப்பிள்ளை முறுக்கா?' என்று கேலியுடன் வினவ, ரமணன் சிரித்துக் கொண்டே தலை அசைத்து என் கூற்றை மறுத்தான்.

'பேசறதா? எங்க ஸர்? யமுனா இருக்கறப்போ வேற யாருக்காவது வாயத் திறக்க சான்ஸ் கிடைக்குமா? அவ பேசி முடிச்சிட்டு, மூச்சு எடுக்கக் கொஞ்சம் தாமதிக்கறப்ப ஹலோ சொல்லலாம்னு காத்திட்டு இல்ல இருக்கேன்...அதுசரி, என்ன ஸர், 'மாப்பிள்ளை வீட்டச் சேர்ந்த பெரியவரா இருந்து, கல்யாணப் பெண்ணை அதட்டி, உருட்டி வைக்கற எடத்துல வைப்பீங்கனு இல்லை நா நம்பிகிட்டு இருந்தேன்! இப்படி சொல்லாம கொள்ளாம கட்சி மாறினா எப்படி ஸர்?'

தான் பதில் கூறுவதற்குள் யமுனா அவனைப் பார்க்க திரும்பி நின்று கொண்டு சொடுக்கும் போட்டு, 'ஹு!' என்றாள் அலட்சியமாய்.



'அங்கிள்? மாப்பிள்ளை வீட்டுக்காரர்! ஓ...நோ இம்பாஸிபிள் கனவில் கூட அப்படி நடக்காது மிஸ்டர் ரமணன் —வீணா வேண்டாத ஆசையெல்லாம் வளத்துக்காதீங்க—இப்பவே சொல்லிட்டேன்...'

ரமணன் போலியான அடக்கத்துடன் குரலைத் தழைய விட்டுக் கொண்டான். 'ஏன் அப்படி சொல்றீங்க-னு நா தெரிஞ்சுக்கலாமா மிஸ் யமுனா?' என்றான் தொடர்ந்து.

'தாராளமா—எங்கப்பாவும், அங்கிளும் சின்ன வயசு ஸ்னேகிதங்க, எனக்கு? நினைவு தெரிஞ்ச நாளா இவர் எனக்கு அங்கிள் உனக்கு? ஜஸ்ட் பத்து வருஷமா ஒரு எழுத்தாளர் வாசகரா பழக்கம். தட்ஸ் ஆல். அதனால் மாப்பிள்ளை வீட்டுக்காரரா அங்கிள் கல்யாணத்துக்கு வந்து அதிகாரம் பண்ண, சம்பந்தி சண்டை போட, சான்ஸே இல்ல...புரியுதா?'

அவர்கள் இருவரும் நான் ஒருத்தன் இருப்பதையே மறந்துவிட்டு, தங்களுக்குள் கேலியாய் பேசிக் கொள்ள, ஐந்து வருஷங்களுக்கு முன் அவர்களைச் சேர்ந்து பார்த்த போது தோன்றிய அதே வியப்பு கலந்த சந்தோஷம் என்னை ஆக்ரமித்தது.

இரண்டு பேரும் அப்படியேதான்—அதே பேச்சு, கேள், எதிர் எதிரான கருத்துக்கள்—கூடவே எக்கச்சக்கக் காதல்—என்று இருக்கிறார்களா?

ஐந்து வருஷ இடைவெளியில் நிறைய மாறி இருக்கலாம் என்று எதிர்பார்த்தது தவறோ? மாற்றம் நல்லதா. இல்லை, அதே தீவிர, அலாதி தனித்தன்மையுடன் இருப்பது நல்லதா!

'எக்ஸ்யூஸ் மீ...' பெட்டிகள் கொண்ட ட்ராலிகளுடன் வந்த இதர பயணிகள் மூன்றாவது முறையாக எரிச்சலுடன் குரல் கொடுக்க, 'ஸாரி' என்று பொதுவாக-

முணுமுணுத்து கிட்டே பேசலாம் வாங்க' என்று கூறி அவசரமாய் என் ட்ராலியை நகர்த்தினேன்.

ரமணன் முன்னால் வந்து என்னிடமிருந்து ட்ராலியைப் பற்றிக்கொள்ள, மூவருமாய் வண்டி நிறுத்தி இருந்த இடத்தை நோக்கிச் சென்றோம்.

டிக்கியில் அட்டைப் பெட்டி கொள்ளாததால் அதைப் பின் ஸீட்டில் ஒரு பக்கமாய் ரமணன் தூக்கி வைத்தான்.

'நீங்க முன் ஸீட்டுல வசதியா உக்காந்துக்கங்க அங்கிள்—நா பின்னால உக்காரறேன்' என்றவாறு அட்டைப் பெட்டியை நகர்த்த முயன்று, முடியாது போக 'ப்பா என்ன கனம்! இத்தனை கனமா என்ன கொண்டு வந்திருக்கீங்க அங்கிள்?' என்ற யமுனா, உள்ளே ஏறி அமர்ந்தாள்.

'எல்லாம் உங்களுக்குதான்...'

'எங்களுக்காக? என்ன அங்கிள்?'

'சொல்லமாட்டேன்...ஸர்ப்ரைஸ்... டட்டடாண்?'.

யமுனாவின் வழக்கப்படி நான் கூறியதும் அவள் சிரித்துக் கொண்டே பின்னாலிருந்தபடியே எட்டி, என் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

நிஜம்மா சொல்றேன் அங்கிள்...நீங்க வந்தது எங்கப்பா அம்மாவே நேர்ல வந்தமாதிரி எனக்கு நிறைவா இருக்கு...'யு ஹாவ் மேட் மீ வெரி ஹாப்பி...'

உணர்ச்சி வசப்பட்டு விட்ட தினுசில் யமுனாவின் குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட, நான் அவள் கையைத் தட்டிக் கொடுத்தேன். காரை ஸ்டார்ட் செய்துவிட்ட ரமணனும் 'ஆர் யு ஒகே?' என்கிற பாவனையுடன் திரும்பி அவளை ஏறிட்டான்.

'பெற்றவர்கள் ஸ்தானத்திலிருந்து உன் கல்யாணத்தை நடத்தும் உத்தேசத்தோடு தானே நானும் வந்திருக்கி



றேன்' —என்று சொல்ல விரும்பியதைக் கூறாமல் நான் நிதானித்தேன்.

யமுனா ஏற்கனவே நெகிழ்ந்து போயிருக்கிறாள், இந்த சமயத்தில் நானும் இப்படி பேசுவது, இவளை மேலும் உணர்ச்சி வயப்படுத்தலாம் என்பது புரிய, மௌனித்தேன். பார்வையை வெளியே வீசினேன்.

நாலு நாட்கள் முன்னால் ராத்திரி பத்துமணி இருக்கும் தொலைபேசி ஒலித்தது.

டெல்லியிலிருந்து யமுனாதான் பேசினாள்.

குரலில் ரங்க ராட்டினத்தில் சுற்றும் குழந்தையின் உற்சாகம்.

'ஹாய் அங்கிள்—எப்படி இருக்கீங்க?'

நான் சிரித்தேன்.

'பேசி பத்து நாள் ஆன மாதிரி இது என்ன கேள்வி இன்னிக்கு காலைலதான் இதே கேள்வியைக் கேட்டு பேசினே நினைப்பு இல்லையா?'

அவள் ஏதோ சொல்ல விருப்புவது புரிந்தது. ஆனாலும் ஏதோ தயக்கம்.

'ரமணன் பேசணும்னு சொல்றார் அங்கிள்.'

தொடர்ந்து மூடிய ரிஸீவர் வழியாக தர்க்கமுணுமுணுப்புகளை என்னால் கேட்க முடிந்தது.

'குட் ஈவ்னிங் ஸர்'—என்ற ரமணன் மேற்கொண்டு என்ன பேசுவது என்று புரியாமல் தவித்து விட்டு 'டெல்லி பக்கம் வர்றதா இருக்கீங்களா ஸர்?' என்று கேட்டு முடிப்பதற்குள் யமுனா அவனைத் தடுத்து வர்றதா இருக்கீங்களானு கேக்காதீங்க ரமணன், டெல்லிக்கு வாங்க-னு சொல்லுங்க' என்று அவசரமாய் திருத்துவது எனக்குக் கேட்டது.

'இரு யமுனா—குறுக்க பேசாத' என்று அவளிடம் கூறியவன் என்னிடம் ஸாரி ஸர்—' என்றான். தொடர்ந்து 'இல்ல...வந்து...நீங்க இங்க வரமுடிஞ்சா நல்லா இருக்கும் ஸர். இல்லேன்னா நாங்க அங்க வரலாம்னு...' என்று இழுக்க,

அட! அப்படி இருக்குமா?

என்னால் விஷயத்த ஊகிக்க முடிந்தது.

எதிர்பார்த்தது தான். ஆனாலும் இவ்வளவு சீக்கிரம் தீர்மானிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

ஒருதரம் செருமிக் கொண்டேன்.

'எலன விஷயம் ரமணன்? நமக்குள்ள என்ன பார் மாலிடி? போன்லியே தயங்காம சொல்லு...'

'இல்ல ஸர் வந்து...'

ரமணனை விட யமுனாவை வெளிப்படையாகப் பேசவைப்பது சுலபம் என்பதால் யமுனாவ பேசச் சொல் ரமணன்' என்றேன்.

'அங்கிள்,'

'என்ன விஷயம் யமுனா?

'நேர பாக்கறப்போ சொல்றோமே அங்கிள்!'

'பரவாயில்ல சொல்லு...'

'நாங்க...'மறுபடி தயக்கம்

ஐந்து வருஷங்களுக்கு முன் தாங்கள் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்து விட்டதை அவள் என்னிடம் தெரிவித்த விதம் ஞாபகத்துக்கு வர, நிலைமையின் இறுக்கத்தை குறைக்கும் உத்தேசத்தோடு, நான் உற்சாகமாகக் கேட்டேன்.

'என்னமா-பாஸிடிவ், நெகடிவ் ஒண்ணா இணைஞ்சு மின்சாரம் உற்பத்தி பண்ணற முடிவுக்கு வத்திருக்கீங்களா?'

நான் எதிர்பார்த்த விதத்திலேயே சட்டென்று தயக்கம் நீங்க யமுனா சிரிக்க, அதற்குப்பிறகு பேசுவது மூவருக்குமே சுலபமாக இருந்தது.

கல்யாணம் செய்து கொள்ளத் தீர்மானித்து விட்டார்களாம். முடிவுக்கு வந்து ஒருநாள் ஆகிறதாம். ஐந்து வருஷங்கள் கழித்து சந்தித்த நொடியிலேயே காதல் மாறாமல் அப்படியே இருப்பது இரண்டு பேருக்குமே



புரிந்து விட்டதாம். நாலுவாரம் கழித்து யமுனாவைத் தன் வீட்டுக்கு குடிவர கேட்டுக் கொண்டபோது, ரமணனுக்கு தான் செய்ய வேண்டியது என்ன என்று தெளிவாகி விட்டதாம். அவன் வீட்டுக்கு வந்து ஒரு வாரம் ஆவதற்குள் யமுனாவாலும், நிலைமையின் தீவிரததை உணர முடிந்ததாம், மனம் விட்டுப் பேசினார்களாம். இருவருமே திருமணத்துக்குத் தயாராக இருப்பது புரிய, முதலில் என்னிடம் சொல்கிறார்களாம்.

'ரிஜிஸ்டர் மேரேஜ்னா ஒரு மாசம் போல காத்திருக்கணும் ஸர்-அதனால டெல்லி 'மலை மந்திரி முருகன் கோவில்ல ஸிம்பிளா கல்யாணத்த வச்சிக்கலாம்னு அபிப்ராயப்படறோம்.'

ரமணன் பேசப்பேச என் வியப்பும் அதிகமானது.

கோயிலில்? கல்யாணம்? யமுனாவுக்கு! கோயில், சாமி எல்லாவற்றிலும் நம்பிக்கை இல்லாதவள் காதலுக்காக விட்டுக் கொடுத்திருக்கிறாளா? அப்படியென்றால் இது மிகப் பெரிய மாற்றம் அல்லவா?

என் ஆச்சர்யத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் 'கல்யாணத்த எப்ப வைச்சிக்கறதா பிளான்?' என்று கேட்டேன்.

'உங்களுக்கு சௌகரியப்பட்டா வர்ற வெள்ளிக்கிழமை இல்லாட்டி அடுத்த வாரத்துல ஒரு நல்ல நாள்ல...'

வெள்ளிக்கிழமை என்றால் இன்னும் நாலு நாளில் முடியுமா?

'உங்க வீட்டுல சொல்லிட்டியா ரமணன்?'

'இன்னும் இல்ல ஸர்-உங்க வசதிய தெரிஞ்சுகிட்டு தான் மத்தவங்க கிட்ட பேசணும்ங்றதுல யமுனாவும் நானும் உறுதியா இருக்கோம்...'

முடிவு செய்த பிறகு நான் சொல்ல என்ன இருந்தது! தவிர, எப்போதோ நடந்திருக்க வேண்டிய நல்ல காரியம் ஐந்து வருஷங்கள் கழித்தாவது நடக்கப் போகிறதே என்கிற சந்தோஷம் ததும்பிய நிமிஷத்தில் சொல்ல வேறு என்ன இருந்தது?

இந்திரா காந்தி இண்டர்நேஷனல் ஏர்போர்ட்டுக்கு சாலை பிரிந்த இடத்தில் இருந்த ஸ்பீட் பிரேகர் வண்டியை, ஆளை உதர வைத்தது.

ஸ்பீட் பிரேகர் செய்ததற்கு தான் மன்னிப்பு கேட்கிற தினுசில் 'ஸாரி' என்று முனகிய ரமணன் 'வீட்டுக்குப் போய் சாப்பிட்டு ஹோட்டலுக்குப் போலாமா ஸர்? போற வழில தான் வீடு...' என்றான்.

'சாப்பாடா? வேணாம்பா...ஃப்ளைட்ல சாப்பிட்டாச்சு...ஆமா, எனக்கு எந்த ஹோட்டல்ல புக் பண்ணி இருக்கீங்க?'

'ஜன்பத்ல அங்கிள். அங்க தான் நானும் இருக்கேன்'

தலையை ஒடித்து, யமுனாவை ஏறிட்டேன்.

நீ ரமணன் வீட்டுல இல்ல இருக்கே!'

'இருக்கே இல்ல, இருந்தே...முந்தா நாள் வரைக்கும் இருந்தேன். நேத்து ரமணனோட பேரண்ட்ஸ் வந்ததும் ஷிப்ட் பண்ணிட்டேன்...ஸாரி-மாறிட்டேன்னு சொல்றது தப்பு- ரமணன் மாற வச்சிட்டான் வீட்டை விட்டு வர்றதுல எனக்கு இஷ்டமே இல்ல...பத்து நாளா ஒண்ணா இருந்துட்டு, இப்ப பெரியவங்க வர்றப்போ ஹோட்டலுக்கு ஷிஃப்ட் பண்றது வேஷம் போடற மாதிரி எனக்குத் தோணுது. சொல்லிப் பார்த்தேன். ரமணன் கேக்கல... 'அப்பா அம்மா அந்த காலத்து மனுஷங்க...ஒரே வீட்டுல இருந்தாலும் நமக்குள்ள ஒண்ணும் நடக்கலைன்றத நம்பறது அவங்களுக்குக் கஷ்டமா இருக்கும் - வீணா அவங்கள ஏன் சங்கடப்படுத்



தணும். நீ ஜன்மத்துக்குப் போயிடு - அங்கிள் கூட இருப்பார்'னு வேண்டாத பண்பாடு டயலாக் எல்லாம் பேசினான். எனக்கு சம்மதமே இல்ல - ஆனாலும் சும்மா சும்மா வாதம் பண்ண வேணாம்னு விட்டுக் கொடுத்தேன். நீங்க என்ன அங்கிள் சொல்றீங்க?'

நான் பதில் கூறாது சாலையை வெறித்தேன். எது கூறினாலும் அது ரமணனின் சங்கடத்தை அதிகமாக்கும் என்பது புரிய, பேச்சை மாற்றினேன்.

'உங்க வீட்டுலேந்து வந்துட்டாங்களா ரமணன்?'

'எஸ் ஸர் - கால ஃப்ளைட்ல வந்தாங்க. அம்மா, அப்பா அக்கா. அவங்க குடும்பம் - எல்லாரும்.'

உன் கூட தான் தங்கி இருக்காங்களா?'

'ஆமா.'

'மெட்ராஸ்லேந்து வேற யாராச்சும் வராங்களா?'

'என் பிரண்ட் ராணி நாளைக் காலைல தமிழ்நாடு எக்ஸ்ப்ரஸ்ல வரா அங்கிள்.'

ஏதேதோ பேசிக் கொண்டே ஜன்பத் ஹோட்டலை அடைந்தோம்.

எனக்காக ஒதுக்கப்பட்ட அறைக்குள் நுழைந்து, ஆர்டர் செய்த 'ஹாட் சாக்லெட்'டை குடித்த பிறகு 'காலைல பாக்கறேன் 'ஸர்' என்று ரமணன் விடை பெற்றுக் கொள்ள, அவனை அனுப்பி விட்டுப் பத்து நிமிஷங்களில் மீண்டும் யமுனா என் அறைக்கு வந்தாள்.

அவர்களின் திருமணத்திற்கு என் பரிசாக ஒன்பதாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கி வந்திருந்த 'பிரிடானிகா என்ஸைக்ளோ பீடியா புத்தகங்கள் அடங்கிய அட்டைப் பெட்டியை ஒரு ஓரமாய் நகர்த்திவிட்டு, உடை மாற்றிக் கொள்ளத் தயாரானவன், யமுனாவைக் கண்டதும் மறுபடி பேச உட்கார்ந்தேன்.

# 24

**ரமணன்**

**மோ**திபாக் பாலத்தில் இறங்கி, வண்ண வண்ணமாய் பூத்திருந்த ரோஜா தோட்டத்தைத் தாண்டி, வலப்பக்கம் திரும்பி நடந்து, நேரு பூங்காவினுள் ரமணன் நுழைந்த போது, புல்வெளியினூடே வளைந்து சென்ற பாதையில், தூரத்தில் மன்பீர்சிங்கும், அவர் மனைவியும் வழக்கமான வேகத்துடன் நடந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

ரமணன் சின்னதாக தனக்குத் தானே புன்னகைத்துக் கொண்டான்.

சாந்தி காலனிக்கு குடிவந்து நேரு பூங்காவில் காலை வேளையில் நடக்கத் துவங்கிய ஒண்ணரை வருஷங்களாய் அவர்களை அவன் நாள் தப்பாமல் பார்க்கிறான். இவன் பிரதட்சிணமாக புல்வெளியைச் சுற்றிவந்தால், அவர்கள் அப்பிரதட்சிணமாக வலம் வருவார்கள். ரமணன் இரண்டுதரம் சுற்றுவான் என்பதால் கட்டாயம் எதிரும் புதிருமாய் நாலு முறைகளாவது சந்தித்துக் கொள் வார்கள்

முதல் பத்து நாட்கள் யாரோ எவரோ என்று விட் டேத்தியாய் நடந்தபிறகு, ஒருவரை ஒருவர் ஏறிட்டு புன்னகைக்க ஆரம்பித்தார்கள். தொடர்ந்து நடந்து கொண்டே சில நொடிகளுக்கு சுய அறிமுகம், விசாரிப் புகள். அவ்வளவுதான். மற்றபடி நின்று யார் நீ, எந்த ஊர் போன்ற துருவல்களோ, வம்படிப்போ சுத்தமாய் கிடையாது

இவன் காலை ஐந்துக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டு, ஐந்து இருபதுக்குப் பூங்காவில் நுழைந்தால், மன்பூர்சிங் தம்பதி இவனுக்கு முன்னதாகவே வந்து நடந்து கொண்டி



ருப்பதற்கு அடையமாய் உடைகள் லேசாய் நனைந்திருக் கும். முகத்தில் வியர்வைத்துளிகள். மூச்சில் இரைப்பு.

அடாது மழை பெய்தாலும், வெயில், குளிர் வாட்டி னாலும், ஒரு நாள் அவர்கள் நடக்க வராமல் இருந்து இவன் பார்த்ததில்லை நடப்பதும், தேகப்பயிற்சி செய்வதும் சிலருக்கு 'அப்ஸெஷன் -வெறியாக ஆகிவிடும் என்று சொல்வார்களே அந்த ரகம்தான் மன்பீர்சிங் தம்பதி.

பெரிய மார்பகங்கள் குலுங்க சோல்ஜர் மாதிரி புருஷ னுக்கு இணையாய் வேகுவேவென்று நடந்து வருபவளைப் பார்க்கையில் இப்படி தாட்பூட் என்று நடப்பவர்களை, பேசுபவர்களை அய்ய - சரியான ஆம்பிள்ளை காமாட்சி' என்று அம்மா விமர்சித்ததும், ஆம்பிளைத் தனமா பொம்பளைங்க இருந்தா என்னம்மா? கரப்பாம் பூச்சிய பாத்து பயந்துகிட்டும், கூன் விழற மாதிரி தலையை குனிஞ்சுகிட்டும் என்ன பேசறாங்கன்றது காதுல விழாம முணுமுணுக்கறதும்தான் பெண்மைனு சொன்னா எனக்கு அந்த மாதிரி பொம்பளை பொண் டாட்டியா வர வேணாம். சரியான ஆம்பிளை காமாட் சியே வரட்டும்' என்று பதிலுக்கு ஒவ்வொரு தரமும் தான் சீண்டியதும் நினைப்புக்கு வர சிரிப்பு அதிகமானது.

மன்பீர்சிங் தம்பதி இவனைத் தாண்டினார்கள்.

'குட் மார்னிங் ரமணன் சாப்...'

'குட் மார்னிங்...'

'ஆப் கைஸி ஹோ?'

'பில் குல் டீக் ஹைஜீ'

சிரிப்புடன் அவர்கள் கடந்துபோக, ரமணன் மேலே நடந்தான்.

மன்பீர்சிங் மனைவி போல யமுனாவும் என்றைக் காவது தன்னுடன் நடக்கும் பழக்கத்தை மேற்கொள்

வாளோ என்கிற கேள்வி எழ, அது நடக்கற காரியம் இல்லை என்று புரிந்தவனாய் சின்னதாய் தலையை அசைத்துக் கொண்டான்.

நல்ல வேளையாக 'எழுந்திரு யமுனா, காலை வேளைல சுறுசுறுப்பா நீயும் என்னோடு 'வாக் வாயேன்' என்று அழைக்க வேண்டும் என்று நினைத்ததே இல்லை. சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் அவள் வரவில்லை என்கிற ஏக்கம் அவனுள்ளும் இல்லை; நான் உடன் வராததில் உனக்கு வருத்தமா?' என்று லேசான குற்ற உணர்வுடன் யமுனாவும் கேட்டதும் இல்லை; ஏன், அந்த ரீதியில் சிந்திப்பதும் இல்லை; அவரவர் விருப்பு, வெறுப்புகளுடன் மற்றவர்களை ஏற்றுக் கொள்வது எத்தனை விவேகமான செயல்! குறைநிறைகளுடன் அடுத்தவரை ஏற்கப் பழகிவிட்டால் வேண்டாத தர்க்கம் இல்லை, வேதனை இல்லை, ஒன்றும் இல்லை—இதை ஏன் புரிந்து கொண்டு வாழ்க்கையைச் சுலபமாக்கிக் கொள்ள எல்லாரும் மறுக்கிறார்கள்?

இரண்டாவது சுற்றில் மன்பீர் தம்பதியைக் கடந்த போது மறுபடி நினைவு யமுனாவிடம் தாவியது.

யமுனா என்னோடு காலை வேளைகளில் 'வாக்' வந்தால் எப்படி இருக்கும்!

மன்பீர்சிங் தம்பதி மாதிரி எதுவும் பேசாமல் உம்மணாம் மூஞ்சிகளாக நடக்க மாட்டோம். இன்னது தான் என்று இல்லாமல் எதைக் குறித்து வேண்டுமானாலும் பேசிக் கொண்டு, சிரித்துக் கொண்டு தான் செல்வோம். நிச்சயம்,

யமுனாவை 'ஆம்பிளை காமாட்சி' என்று குறிப்பிடலாமா?

ச்சே-அது நியாயமான விமர்சனமே இல்லை. யமுனாவுக்கு நிறைய . ஆண்பிள்ளைத்தனம் உண்டு தான்.



நிமிர்ந்து நிற்பதில், நடப்பதில், மனசில் தோன்றுவதை வெளிப்படையாகப் பேசுவதில் சுற்றி இருப்பவர்களைப் பற்றி கவலைப் படாமல் தலையைப் பின்னுக்குத் தள்ளி சிரிப்பதில்-எல்லாம் சாதாரண பெண்களை விட அவள் மாறுபட்டவள்தான். என்றாலும் அவை பெண்மையை இழந்து விடாத கம்பீரத்தோடு அல்லவா இருக்கும்!

யமுனாவைப் பற்றின சிந்தனை தொடர்ந்ததும் காரணமே இல்லாமல் உடனே வீட்டுக்குப் போய் அவளைப் பார்க்க வேண்டும் போல மனசும் உடம்பும் பரபரத்தன.

யமுனாவுக்கு காலை வேளையில் இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்குவது என்றால் அலாதி ப்ரியம், ராத்திரி எத்தனை நேரம் வேண்டுமானாலும் விழிக்க. பேச வெளியே போய் கொட்டம் அடிக்க அவள் தயார். ஆனால் விடிகாலையில் எழுந்திரு என்பது மட்டும் ஆகாத சமாசாரம். இவனும் நேர் எதிர், எத்தனையோ விஷயங்களில் அவர்கள் எதிரெதிரான ரசனைகள் கொண்டிருப்பதில் இதுவும் ஒன்று.

திருமணமாகி நாலைந்து நாட்கள் வரையில் வீட்டில் உறவு மனிதர்கள் இருந்ததாலும், இரவு நீண்ட நேரம் கண் விழிப்பதாலும், யமுனாவுக்கு சம்மதமில்லை என்பதாலும் இவன் 'வாக்' போவதை நிறுத்தி வைத்திருந்தது நிஜம். ஆனால், அதற்குப் பிறகு காலை நடை தரும் சுறுசுறுப்பு இல்லாமல் நான் முழுவதும் மந்தப்பட்டுப் போகிற உணர்வு எழுந்ததும், சரி-அவள் வராவிட்டால் என்ன. நான் மட்டும் போய் வருகிறேன் என்கிற தீர்மானத்துடன் பழையபடி ரமணன் ஐந்துக்கு எழுந்து ட்ராக் ஸூட்டையும், கான்வாஸ் ஷூவையும் மாட்டிக் கொண்டு தன் பழைய வழக்கத்தை மீண்டும் தொடர ஆரம்பித்து விட்டான்.

ஒரு மணி நேரம் நடந்துவிட்டு வீட்டுக்கு வந்து பகதூர் தரும் டீயைக் குடித்து, பேப்பர்களைப் படித்து முடித்து விட்டு ஏழு மணி சுமாருக்குப் படுக்கை அறைக்குச் சென்று 'குட்மார்னிங் யமுனா' என்று குரல் கொடுத்தால், ''ம்ம்...அதுக்குள்ள எழுப்பாதே ரமணன்-இன்னும் கொஞ்ச நேரம் தூங்கறேனே' என்று புரண்டு படுப்பாள்.

பல விஷயங்களில் யமுனா பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக இருந்தாலும், நிறைய சந்தர்ப்பங்களில் குழந்தைத்தனத்தோடும் இருப்பது நினைவுக்கு வர, ரமணன் மறுபடியும் தனக்குத்தானே புன்னகைத்துக் கொண்டான்.

ஏழரை மணி போல எழுந்திருப்பவள், பகதூருக்கு செய்ய வேண்டிய சமையலுக்கு 'மெனு' சொல்லுவாள். இவனை ஆபீஸ் வேலை கவனிக்கவோ, அல்லது தயாராகவோ விடாமல் அரட்டை அடிப்பாள். அப்புறம் எட்டரை மணிக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்த தினுசில் அரக்க பரக்க அலுவலகத்துக்கு கிளம்ப முனைவாள்.

யமுனா வேலைக்குப் போவதில் ரமணனுக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை. இது சம்பந்தமாய் திருமணத்திற்கு முன்பு ஒருதரம் அவளிடம் பேசக் கூட செய்திருக்கிறான்.

அப்படி தன் கருத்தை அவன் வெளிவிட்டதும் கேட்டதை நம்பமாட்டாதவளாய் யமுனா கண்ணகல அவனை வெறித்தாள்.

'என்ன சொல்றே ரமணன்?'

'வேலைக்கு நீ போய்த்தான் ஆகணுமானு கேட்டேன்...'

'போகாம?'

'டேக் இட் ஈஸீ யமுனா...'



'ஈஸீயா எடுத்துகிட்டு? ஒரு நாளைக்கு வி.ஸி.ஆர்ல ரெண்டு படம் பார்த்து, கிளப்புக்குப் போய் சீட்டு ஆடி, சில பெரிய மனுஷங்க வீட்டு பொம்பளை இருக்கற மாதிரி இருக்கச் சொல்றியா?'

கண்களில் கோபம் வெளிச்சம்போட யமுனா நிமிர்ந்து பார்த்து கேட்டதும், மேற்கொண்டு என்ன பேசுவது என்று புரியாமல் 'ஸாரி-நா அந்த அர்த்தத்துல சொல்லல' என்ற முணுமுணுப்போடு ரமணன் நகர்ந்து விட்டான்.

திருமணம் ஆனதும் தேனிலவுக்கு எங்கேயும் போக வேண்டாம் என்று தீர்மானித்தது கூட நாலு நாட்களில் யமுனா புது வேலையில் சேர வேண்டும் என்கிற நிர்பந்தத்தில் தான்.

காலையில் இருவரும் ஒன்றாகக்கிளம்பி,கனாட்பிளேஸ் அலுவலகத்தில் அவளை இறக்கி விட்டு, மாலையில் வந்து அழைத்துக் கொள்வது பத்து நாட்களுக்கு நடந்தது. அப்புறம் அதுவும் சரிபட்டு வரவில்லை.

ரமணனுக்கு முக்கியமான மீட்டிங் இருந்து அவன் முதலில் கிளம்பிப் போவதும், மாலையில் அவளுக்கு கிளையண்டை வெளியே போய் சந்திக்க வேண்டிய வேலைகளும் குறுக்கிட ஆரம்பித்த பிறகு, சென்னையிலிருந்து தன் மோபெட்டை வரவழைத்துக் கொண்டு அதில் அவளும், மாருதியில் இவனும் தனித்தனியாய் போய் வருவதுதான் இந்த இரண்டு மாசங்களாய் நடக்கிறது.

மாமூல் சுற்றுக்களை நடந்து முடித்ததும் ரமணன் நேரு பார்க்கை விட்டு வெளியேறி, வீட்டைப் பார்க்கச் சென்றான்.

வழக்கம் போல அவன் கதவைத் திறந்துகொண்டு நுழைந்த போது கடிகாரம் பணி ஆறு என்றது இனிமையாய் பாடியவாறு...

பகதூர் கொண்டு தந்த டீயைக் குடித்தவன் பேப்பர்களைப் படித்தான். சாலி கோப்பையை எடுக்க வந்த பகதூரிடம் 'அம்மா எழுந்துவிட்டார்களா?' என்று அனாவசியமாய் ஒரு கேள்வியைக் கேட்டு, அவன் 'நை ஸாப்' என்றதும், எழுந்து உள்ளே போனான்.

ரஜாயை கழுத்து வரை இழுத்துப் போர்த்திக் கொண்டு சுகமான உறக்கத்தில் இருந்தவளின் அருகில் சென்று அமர்ந்தான்.

கறுப்பு மரவட்டைகளை ஒட்ட வைத்தது போன்ற இமைகள், புருவங்களுடன் சின்ன குழந்தையின் முகபாவத்துடன் ஒருக்களித்துப் படுத்திருந்தவளைச் சில நொடிகளுக்கு ஊன்றிப் பார்த்தான்.

எட்டி, கால்களை மூடி இருந்த ரஜாயை விலக்கி மென்மையாய் உள்ளங்கால்களை வருட, யமுனா 'ம்ம்' என்ற சிணுங்கலோடு காலை இழுத்துக் கொண்டாள்.

நிமிர்ந்து ஆள்காட்டி விரலால் நெற்றி, மூக்கு, உதடு என்று கோடு இழுத்து குனிந்து அவள் காது மடலை முத்தமிட்டு 'குட் மார்னிங்' என்றான் சின்ன குரலில்.

யமுனா புரண்டு படுத்து, ரஜாயால் முகத்தை மூடிக் கொண்டாள்.

உறக்கத்திலிருந்து விடுபட மறுப்பவளைப் பார்க்கையில் ரமணனுக்கு சிரிக்கத் தோன்றியது.

பெட்ஸைட் டேபிள் மேல் இருந்த சின்னகடிகாரத்தை எடுத்து ஏழு மணி காட்டியதை ஒன்பது மணி என்று மாற்றினான். அலார முள்ளைத் திருப்பி அது ஒன்பதைத் தொட்டு இனிமையாகப் பாடமுற்பட்டதும், அலாரத்தை யமுனாவின் காதருகில் வைத்து, வலுக்கட்டாயமாகப் போர்வையை தழைத்தான்.

யமுனா கண்களைக் கிழாகத் திறந்தாள்.

'என்னப்பா, அதுக்குள்ள எழுப்பறே?'



'அதுக்குள்ளயா? மணி என்ன தெரியுமா? ஒம்பது!'

இப்போது யமுனா நன்றாக விழித்துக் கொண்டு வியப்போடு அவனை ஏறிட்டாள்.

'ஒம்பதா! பொய் சொல்றே!'

'சரி, நாதான் பொய் சொல்றேன்-அலாரம் கூடவா?'

கடிகாரத்தை அவள் முன் நீட்ட, யமுனா நம்ப மாட்டாமல் அதைக் கையில் வாங்கிப் பார்த்தாள்.

'ஆமா! ஒம்பதுதான்! இவ்ளோ நேரமா தூங்கிட்டேன்! கொஞ்சம் முன்னாலயே எழுப்பக் கூடாதா?'

ரமணன் குனிந்து அவள் தலையில் செல்லமாக முட்டினான்.

'அது சரி—இப்பவே உனக்கு இந்த கோவம் வருதே, ஏழுமணிக்கு எழுப்பி இருந்தா அடிக்கவே வந்திருப்பியே!'

யமுனா நகர்ந்து அவன் மடியில் தலை வைத்துப் படுத்துக்கொண்டாள். கலைந்திருந்த அவள் தலைமுடியை ரமணன் இதமாகக் கோதி விட்டான்.

'உனக்கு உங்க அப்பா, அம்மா தப்பா பேரை வச்சிட்டாங்க. கும்பகர்ணினு வச்சிருந்தா பொருத்தமா இருக்கும்.'

யமுனா உதட்டைச் சுழித்துச் சிரித்தாள்.

'அப்ப வைக்காட்டி என்ன, இப்ப வச்சிடேன்.'

'அதுவும் நல்ல ஐடியாதான். ஹலோ கும்பகர்ணி...'

'ஹலோ சேவல்.'

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

ஏதோ நினைவுக்குவந்த ரீதியில் யமுனா தடக்கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

'ஐய்யைய்யோ! மணி ஒன்பதா? இன்னிக்கு ஞாயித்துக்கிழமைன்றதால, வீட்டுல ப்ரேக் ஃபாஸ்ட் சாப்பிட

வேணாம்—'திருலாஸ்' போய் ஒரு வெட்டு வெட்டிட்டு, மார்னிங்ஷோ போலாம்னு பிளான் பண்ணியிருந்தேனே! இப்பவே மணி இத்தனை ஆச்சு! இதுக்கு மேல குளிச்சு, தயாராகி...

அவளை முடிக்கவிடாமல் ரமணன் குறுக்கிட்டான்.

'ஆமா-உன் இஷ்டத்துக்கு 'திருலாஸ்' 'மார்னிங், ஷோ'னு அடுக்கிகிட்டே போனா என்ன அர்த்தம்? எஸ். ஓ. எஸ். வில்லேஜுக்குப் போகணும்ன்றதே மறந்து போச்சா? உருப்படியா சனி, ஞாயிறு ரெண்டு நாளும் போயி நல்ல காரியங்கள செஞ்சிட்டிருந்தேன். ,ஒவ்வொரு வீக் எண்டும் 'போகணுமா'னு கேட்டே? நியாயம். சனிக்கிழமை போகலை. ஞாயிறு போகலாம்னு ஒத்துகிட்டேன். இப்ப அதையும் மூட்டை கட்டணும்னு நீயா முடிவு பண்ணா, நா சம்மதிப்பேன்னு நினைக்கறியா நடக்காது கண்ணம்மா...'

யமுனா நெஞ்சில் கை வைத்து மயங்குகிற மாதிரி அபிநயித்தாள்.

'கண்ணம்மா! நீ! என்னை? ஹைய்யோ- யாரோ யாரையோ கூப்பிடற மாதிரி வேடிக்கையா. இருக்குப்பா...'

ரமணன் சிரித்தான். கேலியாய் கேட்டான்.

'சாதாரணமா புருஷன், மனைவி இப்படியெல்லாம் கூப்பிட்டுப்பாங்கனு நீ கதைல படிச்சதில்லை!'

'அதானே! ஏன் நாம்ப அப்படி ஒருத்தரை ஒருத்தர் சொல்றதில்ல! இப்ப கூப்டுப் பாக்கலாமா? எங்க இன்னொருதரம் சொல்லு...'

ரமணன் வேண்டுமென்றே குரலில் அளவுக்கு மீறிய காதலை வழிய விட்டான்.

'கண்ணம்மா'

'கண்ணா'



'டார்லிங்'

'டியர்...'

ரமணனின் தலைமுடியில் விரல்களை விட்டு துளாவிய யமுனா உரக்க சிரித்துக் கொண்டே 'சகிக்கல, நமக்கு அந்த டயலாக் எல்லாம் வேணாம்—ரமணன், யமுனான்றதே நல்லா இருக்கு' என்றாள். தொடர்ந்து 'திருலாஸ்ல டிபன், ஸினிமாப் ப்ரோக்ராம் உண்டா, கிடையாதா? என்று வினவினாள்.

'திருலாஸ் உண்டு ஸினிமா வேணாம்'

'ஏன்?

'அதான் சொன்னேனே—எஸ். ஓ. எஸ். கிராமத்துக்குப் போகணும்னு'

'இன்னிக்கு ஒருநாள் ரமணன் ப்ளீஸ்'

ரமணன் 'ப்ச்' என்று சூள் கொட்டினான்.

'மணி ஒன்பது! இதுக்கு மேல எங்க போயி, எப்ப டிபன் சாப்பிடறது' என்றதும் யமுனா விரலை சொடுக்கு போட்டு 'ஆமா! மறந்தே போயிட்டேனே! உனக்கு எட்டரைக்கு மேல டிபன் சாப்பிடறது பிடிக்காதே!'... என—

'இப்பவாவது ஞாபகம் வந்தா சரி' என்றான் ரமணன்.

யமுனா அவனை நெருங்கி கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

'ஸாரிப்பா'

'இப்படியெல்லாம் ஸாரி சொன்னா நா ஒத்துக்க மாட்டேன். முறையா சொன்னா போனாப் போறதுனு மன்னிப்பேன்'

யமுனா முன்னால் சாய்ந்து அவன் நெற்றியில், இரண்டு கன்னங்களில், கடைசியில் உதடுகளில் முத்தம்

கொடுத்து 'ஸாரிப்பா' என்று மறுபடி கூறி, 'இப்ப திருப்தியா?' என்றாள்.

'ஏதோ இப்போதைக்குப் போதும்.'

யமுனா சிரித்தாள்.

'போனா போறதுனு 'ஸாரி' சொன்னா தலைக்கு மேல ஏறறியே! என்மேல ஒண்ணும் தப்பு இல்ல...நீதான் என்னை முன்னாலேயே எழுப்பல...' என்றதும் ரமணன் குறும்புடன் கண்களைச் சிமிட்டினான்.

'முன்னாலேயே, ஸோ, ஏழு மணிக்கு எழுப்பி இருந்தா கோபம் வந்திரிக்காதா?'

யமுனா 'சீச்சி' என்றபடி தலை அசைத்து மறுத்தாள்

'அப்படீன்னா—மணி இப்ப ஏழுதான்...'

'என்னது?'

சட்டென்று எழுந்து நின்று ரமணன், அலாரத்தை மறுபடி ஏழில் வைத்து விட்டு அவளிடம் நீட்ட, அவன் விளையாடியது புரிய, யமுனா பொய் கோபத்துடன் தலைகாணியை எடுத்து அவன் மேல் வீசினாள்.

'ஹேய்...ஹேய்...இப்பதானே சொன்னே கோவம் வராதுனுட்டு? அதுக்குள்ள பேச்சை மாத்தினா?'

சிரிப்பு மாறாமல் எழுந்து அவனைப் பிடிக்க அவள் எம்ப, வேகமாக நகர்ந்து பாத்ரூமுக்குள் சென்று 'நா குளிச்சிட்டு வரேன்' என்றபடி ரமணன் கதவை மூடிக் கொள்ள...

ஒருமணி நேரத்தில் இருவரும் தயாராகி கிளம்பி சாணக்கிய புரியில் இருந்த 'நிருலாஸ்' உணவு விடுதிக்குச் சென்றார்கள்.

சாப்பிட்ட நாழிகையில் 'இன்னிக்கு எஸ். ஓ. எஸ் வில்லேஜ் போக வேணாம் ரமணன், ஸினிமாக்குப் போக



லாம். ஐ'ம் இன் எ மூட்டு ஸி எ மூவி' என்று விடாமல் பல முறைகள் யமுனா சொல்லியும். ரமணன் மசிய வில்லை.

கடைசியில்

தீர்மானமாய் மறுத்ததும் அல்லாமல் 'உனக்கு வேணா நீ பாரு, தடுக்கல—உன்னை தியேட்டர்ல இறக்கி விட்டுட்டு நா எஸ். ஓ. எஸ், வில்லேஜூக்குப் போறேன்...நீ படம் பார்த்துட்டு திரும்பி வா' என்றும் கூறிவிட, தனியாகப் படம் பார்க்கப் பிடிக்காமல் யமுனா அவனோடு வீட்டுக்குத் திரும்பினாள்.

நினைத்தவகையில் ஸினிமாவுக்குப் போக முடிய வில்லை என்கிற ஏமாற்றம் இருந்ததில் அவனோடு எஸ். ஓ. எஸ். கிராமத்துக்கு வர மறுத்தவள் வீட்டுக்கு வந்த பிறகு ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு வரவேற்பு அறை சோபாவில் காலை நீட்டியபடி உட்கார்ந்துவிட; அந்த முகதூக்கல், லேசான எரிச்சலைத் தந்தாலும், அதை காட்டிக் கொள்ளாமல். அவள் நடத்தை தன்னை பாதிக்கவில்லை என்பது போல 'ராத்திரி நா வர லேட் ஆகலாம் ஸி யூ' என்று சர்வ சாதாரணமாய் சொல்லிவிட்டு ரமணன் கிளம்பிப் போனான்.

# 25

**யமுனா**

**தொ**ண்டை கட்டின சுவர்க் கோழியின் த்வனியில் நிறுத்தாமல். நீண்ட நேரமாய் அந்த ஆசாமி பேசியது தலைவேதனையாக இருந்தது.

கண்களை இடுக்கிக் கொண்டு எரிச்சலோடு எதிரில் இருப்பவரை யமுனா வெறித்தாள்.

செம்மை பருமன், நாற்காலியின் சந்து வழியாக சதை பிதுங்கித் தொங்க உட்கார்ந்திருந்தவரை—மிஸ்டர் குப்தாவைக்காண்கையில்—'இந்த ஆளை அழித்தால் தாராளமாய் சாதாரண சைஸில் நாலு நபர்களை உருவாக்கலாம்' என்று அங்கிள் சந்திரசேகரன் ஒரு நாவலில் எழுதியிருந்தது திடுமென நினைவுக்கு வர, எரிச்சலை மறந்து புன்னகைத்தாள்.

அவள் தான் சொல்வதைக் கேட்டுத்தான் மகிழ்ந்து போய் புன்னகைக்கிறாள் என்று தவறாகப் புரிந்து கொண்ட குப்தா தானும் சேர்ந்து கொண்டு சிரித்தது ஸினிமாவில் வரும் நகைச்சுவைக் காட்சியைப் போல இருக்க, யமுனா தலையைத் திருப்பி, உதட்டைக் கடித்து, வெடித்துக் கொண்டு எழுந்த சிரிப்பை உள்ளுக்குள் தள்ளினாள்

'சொல்லுங்க மேடம்' என்று ஹிந்தியில் எட்டாவது முறையாக குப்தா கேட்டதையே கேட்க, யமுனா ஆயாஸத்துடன் கையில் பிடித்திருந்த பேனாவைக் கீழே வைத்தாள். மூச்சை நீளமாய் இழுத்து 'என்ன சொல்லணும்?' என்றாள் பதிலுக்கு ஆங்கிலத்தில்.

அன்றைக்கு அவளுக்கு நிச்சயமாக நேரம் சரியில்லைதான்; இல்லாவிட்டால் குப்தா மாதிரியான ஆசாமியிடம் மாட்டிக் கொள்வாளா? 'வேளை வரலை' சுந்தரத்தைக் கேட்டால் 'இப்படி அவஸ்தை படணும்னு வேளை வந்திருக்கு' என்பார்!

குப்தா எம் டி-க்கு வேண்டப்பட்டவராம். ஹரியானாவுக்குப் பக்கத்தில் பிஸினஸ்செய்து எக்கச்சக்கமாய் சம்பாதிப்பவராம். கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டும் வருமானம் ஸ்வீட்டோடு மூன்று வேளை சாப்பாடு, வருஷத்துக்கு ஒரு குழந்தை என்று இருந்தவருக்கு திடீரென்று வெளிநாடுகளுக்குப் போய் வர வேண்டும், அதுவும் 'குடும்ப பட்டாளம் சகிதம்' என்கிற ஆசை எழுந்திருக்கிறதாம். சிங்கப்பூர், மலேஷியாவுக்குப் பதினைந்து நாட்கள் போய் ஊர் சுற்றிப் பார்த்து முடிந்த அளவுக்கு 'ஷாப்பிங் செய்து கொண்டு வரவேண்டும் என்பது திட்டமாம்.



மிஸ்டர் குப்தா என் தூரத்து உறவினர் யமுனா—கொஞ்சம் விசேஷமாய் கவனியுங்கள் என்று எம்.டி. சொன்னாலும் சொன்னார், இந்த மனிதரோடு பேசி ஒரு தீர்மானத்துக்கு வருவதற்குள் யமுனாவுக்குப் போதும் போதும் என்று ஆகிப்போய்விட்டது.

பின்னே!

முதல் நாள் சந்தித்து ஒரு மணி நேரம் போல விவரங்களையும் விளக்கி, ஒரு தினுசாய் பயண அட்டவணையை தயாரித்திருந்ததை. இன்று மறுபடியும் வந்து அநியாயத்துக்கு அத்தனையும் அடியோடு மாற்றி 'அடியைப் பிடிடா பாரதப் பட்டா' என்று புதுசாய் ஆரம்பித்தால் எரிச்சல் வராமல் வேறு என்ன செய்யும்?

வந்து உட்கார்ந்ததும் 'முதல்ல பினாங் போலாம்னு என் மனைவி சொல்றா—அங்க அவங்களுக்குத் தெரிஞ்சவங்க இருக்காங்க' என்றார். ஐந்து நிமிஷங்களில் அதைத் தொடர்ந்து 'கோலாலம்பூர் போயிட்டு அங்கேயிருந்து போனா என்ன?' என்றார். பிறகு சிங்கப்பூரை சுத்திப் பாத்துட்டு அப்புறமா மலேஷியா போறது சரியான காரியம்னு நினைக்கறீங்களா¿' என்றார்.

இது மட்டுமா முந்தின நாள் ஹோட்டலில் தங்க வேண்டும் என்றவர் இன்று 'ஹோட்டல் வேணாங்க... உறவுக்காரங்க வீட்டுலே தங்கிட உத்தேசம்' என்று கூறிவிட்டு பத்து நிமிஷ யோசனைக்குப் பிறகு 'ஹோட்டல்ல தங்கறது தேவலையா,இல்ல தெரிஞ்சவங்க வீட்டுல இருக்கறது நல்லதானு நீங்களே சொல்லுங்களேன்' என்று இவளிடமே அபிப்ராயம் கேட்டார்.

இத்தனை கலாட்டா போதாது என்று பயணம்செய்ய வேண்டிய தேதியிலிருந்து, ஏர் இந்திய விமானமா அல்லது சிங்கப்பூர் ஏர்லைன்ஸா என்பதிலும் ஆசாமிக்குக் குழப்பம் தீரவில்லை.

அவரவர் இரண்டு வாரங்களில் உலகையே சுற்றி வரும் இந்த நாளில் எட்டிப் பிடித்தால் இருக்கும் சிங்கப்பூருக்குப்போக இத்தனை சந்தேகங்களை எழுப்பி, தானும் தெளிவடையாமல், அவளுடைய நேரத்தையும் வீணடித்துக்கொண்டிருந்தால் தலையில் கை வைத்துக் கொள்ளத் தோன்றாமல் — 'ஆஹா இந்த மாதிரியான வாடிக்கையாளர் யாருக்குக் கிடைப்பார்?' என்று எம்பிக் குதிக்கவா இயலும்?'

இவர் எம். டி. சிபார்சில் வந்திருப்பவர் என்பதை வலுக்கட்டாயமாக இன்னொரு தரம் ஞாபகப்படுத்திக் கொண்ட யமுனா, கோபத்தை தலையில் தட்டி உட்கார வைத்தாள். குரலைச் சாதாரணமாக வைத்துக்கொள்ளும் முயற்சியோடு 'நிதானமா யோசிச்சு பயண திட்டங்களைச் சொல்லுங்க... அவசரம் ஒண்ணும் இல்ல...உங்க திருப்தி தான் எங்களுக்கு முக்கியம்' என்றாள்.

குப்தா பாக்கெட்டிலிருந்து கர்சீப்பை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார், ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதைப் போன்று புருவங்கள் முடிச்சுப் போட்டுக் கொள்ள, விரல்களால் மேஜைமீது தாளம் போட்டார்.

'நா என்ன சொல்ல வரேன்னா...'— அவர் முடிக்கும் முன் தொலைபேசி ஒலித்தது.

அவரிடம் 'ஒன் மினிட்' என்று கூறிவிட்டு, ரிஸீவரை எடுத்து யமுனா 'ஹலோ' என்றாள்.

'நான் தான், பிஸியா இருக்கியா?' என்றது ரமணனின் குரல்.

'ஆமா—ஒரு கிளையண்ட் இருக்கார்.'



'ஸாரி — வேலை நேரத்துல தொந்தரவு பண்ணறது தப்பு...ஆனா ஒரு நிமிஷம் பேசலாமா?'

'ம்!'

'இன்னிக்கு சாயங்காலத்துக்கு ஏதாவது ப்ரோக்ராம் வச்சிருக்கியா?'

'விசேஷமா ஒண்ணும் இல்ல...'

'குட்—என் டெபுடி, குமார்—நமக்கு விருந்து கொடுக்கணும்னு ரொம்ப நாளா கேட்டுகிட்டு இருக்கிறவன் இன்னிக்கு ராத்திரி டின்னருக்கு வர்றீங்களா-னு கேக்கறான். 'டால் ஹோட்டல்ல 'ஹவுஸ் ஆஃப் மிங்குக்'கு போகலாம்னு சொல்றான். சைனீஸ் சாப்பாடு உனக்குப் பிடிக்குமே! போலாமா? சரினு சொல்லிட்டா, டேபிள் ரிஸர்வ் பண்ணிடுவான். என்ன சொல்றே?'

டெல்லியில் பல நட்சத்திர ஹோட்டல் இருந்தாலும் 'டாஜ்'ல் உள்ள 'ஹவுஸ் ஆஃப் மிங்' சாப்பாட்டுக்குத் தனி ருசிதான். பொன்னிற எரால் பக்கோடாவும் ஹாகா நூடுல்ஸ்-ம், பேரிச்சம்பழ பான்கேக்கும் அருமையாக இருக்கும்.

ரமணன் சுத்த சைவம், அவன் சாப்பிடுவதில்லை என்பதால், வீட்டில் அசைவம் சமைப்பதில்லை. போனால் ஒரு பிடி பிடிக்கலாமே!

யமுனா உற்சாகத்துடன் 'சரி' எனறாள்.

'நா வீட்டுக்கு வர ஏழரை ஆகும். ஒரு மீட்டிங் இருக்கு. நீ தயாரா இருந்தா, நா வந்ததும், எட்டுக்கு கிளம்பிடலாம். குமார்கிட்ட 'டாஜ்'ல எட்டே காலுக்கு சந்திக்கறதா சொல்லிடறேன். ஓ.கே?'

சொல்ல வேண்டியதைக் கச்சிதமாய்க் கூறி ரமணன் தொடர்பைத் துண்டிக்க, ரிஸீவரை வைத்தவள் குப்தாவை ஏறிட்டு, 'ஸாரி' என்றாள் புன்னகையுடன்...

மறுபடி அவருடன் பயண விவரங்களை பேச முற்பட்ட பல நிமிஷங்களில் மீண்டும் தொலைபேசி அழைத்தது.

எடுத்து 'எஸ்' என்றாள்.

'யமுனா! மாதவன் பேசறேன்.'

'எந்த மாதவன்?' - பேசுவது யார் என்று யமுனாவுக்குப் புரியவில்லை.

'மாதவன். மாது. ராணியோட ஹஸ்பண்ட்.'

'ஓ! மாது! வாட் எ ஸர்ப்ரைஸ்! எங்கேயிருந்து பேசறீங்க? டெல்லிலேந்தா; எப்ப வந்தீங்க?'

'இன்னி கால பிளைட்ல!'

'ராணியும் வந்திருக்காளா? வரப்போவதா சொல்லவேயில்லியே?'

மாதவன் சிரித்தார்.

'இல்ல - அவ வரல...இங்க மினிஸ்ட்ரில அவசர வேலை இருந்துது...நாளக் காலைலியே திரும்பறேன்.'

யமுனா உரிமையுடன் ஆட்சேபித்தாள்.

'அப்படியெல்லாம் போக விடமாட்டோம் மாது... எங்க ஊருக்கு வந்தவர் நேரா வீட்டுக்கு வராம யாரோ அந்நியர் மாதிரி இப்படி போன் பண்ணா என்ன அர்த்தம்? ம்?'

'ஸாரி யமுனா -நிலைமை அப்படிக் கூட இன்னொரு ஆபீஸரும் வந்திருக்கார், அடுத்தமுறை வரப்போ கட்டாயம் உங்ககூடவே தங்கறேன்.ரமணன் எப்படிஇருக்கார்?'

'நல்லா இருக்கார், வீட்டுக்கு எப்ப வர்றீங்க? ராத்திரி சாப்பாட்டுக்கு?'

'வீட்டுக்கு வரேன் - ஆனா சாப்பிட தங்கறது கஷ்டம். ப்ளீஸ் புரிஞ்சிக்கங்க...வந்து. யமுனா நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணும்.'



'சொல்லுங்க.'

'அதுக்கு முன்னால ஒரு குட் நியூஸ் சொல்றேன். ராணி கர்ப்பமா இருக்கா.'

'வாட்!'

அவர்களுக்குத் திருமணமாகி ஆறு ஆண்டுகள் பூர்த்தி ஆகிவிட்டன. குழந்தை உண்டாகவில்லை என்று ராணிக்கு கழுத்து வரை குறை இருந்த விவரம் தெரியும் என்பதால் யமுனாவுக்குள் குபீரென்று மகிழ்ச்சி நீரூற்று கிளம்பியது.

'கங்க்ராட்ஸ்- ராணி என்கிட்ட சொல்லவேயில்லியே!'

மாதவன் வெட்கத்துடன் சிரிப்பது கேட்டது.

'நேத்துதான் உறுதியாச்சு. டெல்லிக்கு வர்றதால நானே தெரிவிக்கறேன்னு சொல்லிட்டேன்.'

'ரொம்ப சந்தோஷம் மாது ராத்திரி போன்ல ராணிகிட்ட பேசறேன். என்னமோ உதவினு சொன்னீங்களே என்ன?'

'ராணி ரொம்ப நாளா ஒரிஸா ஸில்க் புடவை வேணும்னு சொல்லிட்டிருந்தா. இங்க ஒரிஸா எம்போரியத்துல நல்லதா கிடைக்குமே! நீங்க என்கூட வந்து அவளுக்குப் பிடிச்சதா தேர்ந்தெடுத்துக் கொடுத்தா—'

யமுனா சிரித்தாள்.

'இதக் கேக்கவா இப்படி தயங்கறீங்க? கட்டாயம் வரேன். எப்ப போகலாம்?'

'சாயங்காலம் ஆறுமணிக்கு செக்ரட்டரிய சாஸ்திரி பவன்ல பார்க்கணும். அதுக்கப்புறம் முடியுமா?'

'முடியுமா-வா? ஷ்யூர் எங்க சந்திக்கலாம்?'

'நீங்க ஆபீஸ்லேந்து வீட்டுக்குப் போயிடுங்க. நா ஆறரைக்குள்ள அங்க வந்திடறேன். உங்க வீட்டுக்கும் வந்த மாதிரி இருக்கும்.'

அவசியம் காத்திருப்பதாகச் சொல்லி பேச்சை முடித்து குப்தாவின் பயண விவரங்களை நீண்ட நேரம் விவாதித்து, ஒரு வழியாய் அவரை திருப்தி கொள்ளச் செய்து அனுப்பிய யமுனா, கொஞ்சம் அவகாசம் கிடைத்ததும் ரமணனோடு தொடர்பு கொண்டு, மாதவன் போன் செய்த விவரத்தைக் கூறி 'இன்னிக்கு டின்னர் ப்ளான் வேணாம்பா' என்றாள்.

ரமணன் அவள் கருத்தை ஏற்கவில்லை.

'குமார் டேபிள்கூட 'புக்' பண்ணிட்டான் யமுனா... இப்பபோயி வேணாம்னு சொன்னா எப்படி? ஆறரைக்குப் போயிட்டு எட்டுக்குள்ள வந்திட முடியாதா?'

முயற்சி பண்றேன். ஒரு வேளை தாமதம் ஆயிட்டா.

'ஆகக்கூடாது. வார்த்தை கொடுத்திட்டு மாத்தறது நல்லாயிருக்காது. யு மஸ்ட் கம் பேக்.'

அத்தனை கறாராய் ரமணன் சொல்லியும் எட்டுக்குள் வீட்டுக்குத் திரும்புவது யமுனாவுக்கு சாத்தியம் இல்லாமல்தான் போயிற்று.

ஒரிஸா எம்போரியம் மூடிவிட்டதில், கரோல் பாக்குக்குச் சென்று, அங்கு நாலு கடைகளில் ஏறி இறங்கி, ராணிக்கு விருப்பமான வெள்ளை நிறத்தில் ஒரிஸா பட்டு புடைவை, இரண்டு 'கோட்டா புடவைகள்' மசக்கை சமயத்தில் சாப்பிட உப்புபோட்டு வறுத்த பிஸ்தா பருப்பு பெங்காலி மார்க்கெட்டில் வட இந்திய மிக்சர் என்று ஒவ்வொன்றாக வாங்கிக் கொடுத்து அவள் வீட்டுக்கு வந்தபோது மணி எட்டே முக்காலை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

வாசலில் மாருதி இல்லை.

'எட்டேகால் வரையில் ஐயா காத்துப் பார்த்துவிட்டு தனியாகச் சென்றார்' என்ற விவரத்தை பகதூர் கூற, சரி, நேரமாகி விட்டதால் ரமணன்தான் மட்டும் புறப்



பட்டு போய்விட்டார் என்று விஷயத்தை சாதாரணமாக எடுத்துக் கொண்டவள் அப்புறம் அதை அதோடு மறந்தாள்.

குளித்தாள். பகதூர் செய்து போட்ட சப்பாத்தியை சாப்பிட்டாள். ராணியை தொலைபேசியில் அழைத்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்து, சில நிமிஷங்களுக்கு அரட்டை அடித்தாள்.

அன்றைய தபாலில் வந்திருந்த குங்குமம் பத்திரிகையை படித்தாள்.

ஆங்கிலப் படம் ஒன்றை வி. ஸி ஆரில் போட்டுப் பார்த்துக் கொண்டிருக்கையில் சுமார் பத்தரை மணி அளவில், வாசக்கதவில் சாவி போட்டு திறக்கும் ஓசை கேட்க, ரமணன்தான் என்பதைப் புரிந்து கொண்டு படுக்கை அறையில் இருந்தவாறே 'ஹாய்' என்று குரல் கொடுத்தாள்.

ரமணன் உள்ளே வந்தான். 'ஸோ? டின்னர் எப்படி இருந்தது?' என்று வினவியவளை நிமிர்ந்து கூட பார்க்காமல், பதிலும் கூறாமல் உடைகளைக் களைந்து, பாத்ரூமுக்குச் சென்று வந்தான். பைஜாமா குர்தா அணிந்து 'ப்ரிப்' கேஸிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு வரவேற்பு கூடத்துக்குச் சென்று சோபாவில் உட்கார்ந்ததும் தானே ஓஹோ! இவன் கோபமாய் இருக்கிறானா என்ற கேள்வி அவளுள் தோன்றியது.

வி. ஸி. ஆரை நிறுத்திவிட்டு எழுந்து போய் அவன் அருகில் அமர்ந்தாள்.

'ஹலோ!'

ரமணன் மௌனமாய்ப் புத்தகத்தைப் படிப்பதைத் தொடர்ந்தான்.

'கோபமா? எதுக்கு? நா டின்னருக்கு வரலைன்றதாலயா?'

இதற்கும் ரமணன் பதில் பேசாதிருக்க, எட்டி புத்த கத்தைத் தழைத்தாள்.

'என்னப்பா, சின்ன பையனாட்டம் நடந்துக்கறே? என்ன நடந்திட்டது இப்ப?' ரமணன் சரக்கென்று நிமிர்ந் தான்.

இன்னும் என்ன நடக்கணும்? செய்யலாமானு கேட்டு ஏற்பாடு பண்ணத மதிக்காம நடந்துகிட்டதும் இல்லாம, துளி வருத்தமோ, தவிப்போ இல்லாமப் பேசினா என்ன அர்த்தம்?'

'ப்பா—ஸாரி சொல்லலைனா உனக்கு இந்தக் கோபம் ஓகே—ஐம் வெரி—ஆனா வேணும்னா செஞ்சேன் ரமணன்? வராதவர் வந்திருந்தார். 'கூட வந்து துணி செலக்ட் பண்ணிக் குடு'னு கேட்டார். போனேன். தப்பா ரமணன்!'

'நீ யாரோடையும் வெளில போறத தப்புனு நா சொல்லல. ஆனா எட்டுக்கு வரேன்னு சொல்லிட்டு வராம இருந்ததுதான் எனக்குப் பிடிக்கல...அத முதல்ல நீ புரிஞ்சிக்க. எதையும் நேரத்துக்கு செய்யறதுதான் என் வழக்கம்னு உனக்குத் தெரியாதா?'

'தெரியும். ஆனா எட்டுக்கு வரேன்னு நா சொல் லலை. நீதான் வானு சொன்னே!'

'குமார் என்கூட வேலை பாக்கறான். வரேன்னு சொல்லிட்டு வராம இருந்தா அவன் என்ன நினைப்பான் தனியா 'டாஜ்'ல போய் எறங்கினதும் அவங்க தவிச்சுப் போயிட்டாங்க. எனக்கும் ரொம்ப அவமானமாப் போச்சு.'

யமுனா 'ப்ச்' என்று சூள் கொட்டினாள்.



'ஒண்ணுமே இல்லாதத நீ பெரிசு பண்றே ரமணன், நா ஏன் வரலைன்றத எடுத்துச் சொன்னா அவங்க புரிஞ் சிக்கப் போறங்க...அத விட்டுட்டு, அவமானம், அது இதுனு அசட்டுத்தனமா நீ பேசறத கேட்க எனக்கு ஆச்சர்யமா இருக்கு.'

ரமணன் குரலை உயர்த்திக் கத்தினான்.

'எஸ், அசட்டுத்தனம்தான். ஒத்துக்கறேன். நௌ லீவ் மி அலோன்.'

யமுனா கண்கள் இடுங்க அவனை ஏறிட்டாள்.

'என்ன ஆச்சு ரமணன் உனக்கு? ராணி எனக்கு எவ்னோ நெருக்கமான ஸ்னேகிதினு உனக்குத் தெரியும் ஆறு வருஷம் கழிச்சு உண்டாயிருக்கிறவ ஆசைப் பட்டதை வாங்கித் தரணும்னு மாது நினைச்சார், போனேன். நாளைக்கு அவர் ஊருக்குப் போயிடறார், லோ, இன்னிக்கு வாங்கினாதானே உண்டு. உன் 'க்லீக்' குமார் இந்த ஊர்லியே இருக்கறவர். எப்ப வேணா அவரோட நாம சாப்பிடப் போகலாம் இதை நினைச்சுப் பாக்காம அனாவசியமா கோபப்படறியே!'

ரமணன் எரிச்சலுடன் தோளை குலுக்கினான்

'ராணிக்கு புடவைய வேணும்னா நாளைக்கு வாங்கிப் போஸ்ட்ல அனுப்பேன். யார் தடுக்கறாங்க. கர்ப்ப மாறது பெரிய்ய அதிசயமா'?

பெண்ணுக்கு முதல் கர்ப்பம் ரொம்ப ஒரு அற்புத மான அனுபவம்—இதை நினைவில் வைத்துக் கொள்ளா மல் நீ பேசுவது எனக்கு வருத்தமாக இருக்கிறது—என்று சொல்ல நினைத்தாலும் அரை நிமிஷம் போல யமுனா உதட்டைக் கடித்துக் கொண்டு எதுவும் பேசாமல் சும்மா உட்கார்ந்தாள்,

பிறகு, எழுந்து நின்றாள்.

'உனக்கு 'மூடு! சரியில்ல, இப்ப நா என்ன சொன்னாலும் நீ ஒத்துக்கப் போறதில்லை...சரி—விடு—நா படுக்கப் போறேன்; நி வரலியா?'

'எனக்குத் தூக்கம் வரல...'

பத்து வயசு பையன்போல அவன் அடம் பிடிக்கற மாதிரி தோன்ற, யமுனாவுக்குள் முதல் முறையாக எரிச்சல் நமநமத்தது.

இவன் ஆபீஸ் நண்பனின் விருந்து இவனுக்கு முக்கியம் என்றால், என் ஸ்னேகிதியின் கர்ப்பம் எனக்கு அதைவிட உயர்வு என்று ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறான் என்கிற எண்ணம் எரிச்சலை அதிகமாக்க, இடுப்பில் கையை வைத்து அவனை அழுத்தமாக ஏறிட்டாள்.

'படுக்க வந்தா வா—இல்லாட்டி ராத்திரி பூரா இங்கேயே சோபால உட்கார்ந்து படிச்சிட்டு இரு...எனக்கொண்ணும் இல்ல...ஆனா, ஆம்பிளை சொல்றத பொம்பளை கேக்கணும்ன்ற அர்த்தத்துல நீ பேசறது எனக்குப் பிடிக்கல' என்று கோபத்தின் சாயலோடு பேசி விட்டு இரண்டடி நடந்தவள் நினைத்துக் கொண்டு திடுமென நின்றாள்.

அவன் கையிலிருந்த புஸ்தகத்தைப் புரட்டித் தலைப்பை படித்தான்.

'இஃப் டுமாரோ கம்ஸ்...ஓ! ஸிட்னிஷெல்டன் புக்கா? ரொம்ப பழசாச்சே! நீ இன்னுமா இத படிக்கல?'

ரமணன் பதில் பேசாது புத்தகத்தை பிரித்துப் படிக்க முற்பட; அந்த அலட்சியம் யமுனாவினுள் ஒரு



சீற்றத்தை உண்டு பண்ணி இவனைச் சீண்டினால் என்ன என்று வக்ரமாக நினைக்க வைத்தது.

வேண்டுமென்றே நமுட்டாய்ச் சிரித்துக் கொண்டு மீண்டும் அவனருகில் உட்கார்ந்தாள்.

'ரொம்ப ஸ்வாரஸ்யமான புஸ்தகம், இது ரமணன்! ஒரு பொம்பளை எத்தனை துணிச்சலா தன்னை காயப் படுத்தினவங்கள பழி வாங்கறான்றதுதான் கதை...'

எந்த புஸ்தகத்தையும் முதல் பக்கத்திலிருந்து வரிசைக் கிரமமாகப் படிப்பது மட்டுமல்லாது, கதை தெரிந்து விடக் கூடாது என்பதற்காகப் பின் அட்டையில் அச்சடிக்கப்பட்டிருக்கும் குறிப்புகளைக்கூடப் புரட்டிப் படிக்காமல் இருப்பதுதான் அவனுடைய வழக்கம் என்பதை ஞாபகத்தில் இருத்திக் கொண்டு பேசினாள்.

'இந்தக்கதை என்னன்னா...ட்ரேஸி'னு ஒரு பெண். இவளுக்கும் பணக்காரனான...ம்ம்...அவன் பேர் என்ன, அ, சார்னிக்கும் கல்யாணம் நடக்க நிச்சயம் ஆகியிருக்கு...அப்ப...'

அவளைத் தொடரவிடாமல் ரமணன் திரும்பி முறைத்தான்.

அந்த முறைப்பு யமுனாவின் வக்ர குஷியை அதிகப் படுத்தியது. கவலைப்படாமல் கதையை விவரித்தாள்.

'ட்ரேஸி மேலே பொய் கேஸ் போட்டு 'ஜோ ரோமானே'ன்றவன் அவளை ஜெயிலுக்கு அனுப்பிட்டான்...அப்புறம்...'

'ஸ்டாப் இட் யமுனா...'

அடிக் குரலில் ரமணன் அதட்டியதைப் பொருட்படுத்தாமல் யமுனா அவசரமாய்த் தொடர்ந்தாள்.

'ஜெயிலேந்து வெளில வந்து ஜோ ரோமானோவ், ஏமாத்தின வக்கீல் பொரி பேர்ப்பை, உண்மைய தெரிஞ்சுக்க கூட விரும்பாம கல்யாணத்த நிறுத்திட்ட சார்லஸை அவ ரொம்பப் புத்திசாலித்தனமா திட்டம் போட்டுப் பழிவாங்கறா-அப்புறம்...'

ரமணன் எட்டி அவள் தோளைப் பற்றி முரட்டுத்தனமாய் உலுக்கினான்.

'நிறுத்தப் போறியா, இல்லியா?'

யமுனா தலையைப் பின்னுக்குத் தள்ளி உரக்கச் சிரித்தாள்.

'ஒரே ஒரு எடத்த மட்டும் சொல்லிட்டு நிறுத்திடறேன்- பழி வாங்கற உணர்ச்சி அதிகமாகி, பக்கா திருடியாவே மாறிடற ட்ரேஸி ஒரு பணக்காரக் குடும்பம் ஊர்ல இல்லாதப்போ அந்த வீட்டுக்குத் திருடப் போறா ...நகைகள் எடுக்கற சமயத்துல அலாரம் அடிக்க, போலீஸ்காரங்க வந்திடறாங்க...ஆள் அடையாளம் தெரியாம இருக்க வேண்டி க்ரீம் எடுத்து முகத்துல அப்பிகிட்டு. வாசல்ல நிக்கற போலீஸ்காரர் முன்னால தைரியமா போய் நின்னு 'நா இந்த வீட்டுச் சொந்தகாரரோடு உறவுகாரி. தெரியாம அலாரத்துல கை வச்சிட்டேன்'னு சமயோஜிதமா சொல்லி நிலைமையைச் சமாளிச்சு...'

அவள் மேலே பேசும் முன் தாடைகள் இறுக ரமணன் விருட்டென்று எழுந்து நின்றான்.

புத்தகத்தை இரண்டாகக் கிழித்து அவள் மடியில் போட்டு 'இனிமே இத நா படிக்கமாட்டேன். திருப்தியா? என்னை நீ புரிஞ்சிகிட்டிருக்கேனு இத்தனை நாளா நினைச்சிட்டிருந்தது தப்புனு இப்பத்தான் புரியுது...' என்று மிகுந்த ஆவேசத்தோடு கூறிவிட்டுத் திரும்பி நடக்க, அந்த ஆத்திரத்துக்கு ஈடு கொடுக்கும் குரலில்,



நிஜம்தான். என்னைப் புரிஞ்சிக்க நீ முயற்சி பண்ணாதப்போ நா மட்டும் உன்னை ஏன் புரிஞ்சுக்கணும்?, என்றாள் யமுனா அழுத்தம் திருத்தமாய்...

# 26

**ரமணன்**

அழுத்தமாக எழுதியதில் பென்ஸிலின் ஊக்கு உடைந்து போயிற்று.

வழக்கமாய் டேபிள் மேல் தன் உபயோகத்திற்காக வைத்திருக்கும் மற்றொரு பென்ஸிலை ரமணன் தேடினான். முகம் துடைக்கும் துண்டு, சமீபத்திய பெண்கள் பத்திரிகை, இரண்டு நாவல்கள். கைப்பை-என்று மேஜை மீது களேவர மாகக் கிடந்த பொருட்களை நகர்த்தி தூக்கித் தேடிப் பார்த்தான். ம்ஹூம் பென்ஸிலைத் தவிர வேண்டாதது என்னென்னமோ தான் இருந்தன.

வேறு பென்ஸில் இல்லாவிட்டால் போகிறது இதையே சீவிக் கொண்டு ஆபீஸ் வேலையை விட்ட, இடத்திலிருந்து தொடரலாம் என்கிற உத்தேசத்துடன் மேஜை இழுப்பறையைத் திறந்தான், எப்போதும் இழுப்பறையின் வலது பக்கமாய் 'ஷார்ப்பனர், ரப்பர், பேனாவின் ரீஃபில் இத்யாதிகளை ஒரே இடமாய் வைப்பது அவன் பழக்கம் என்பதால், குறிப்பிட்ட இடத்தில் கையை வைத்தான். 'ஷார்ப்னர்' இல்லை. இழுப்பறையை மூடும் வேகத்தில் உள்ளே நகர்ந்து விட்டதா? ட்ராயரை நன்றாக வெளியே இழுத்து அடிவரைக்கும் பார்த்தான்.

இரண்டு பழைய லிப்ஸ்டிக் தண்டுகள், ஹேர்பின்கள், ரப்பர் பாண்டுகள், காகிதத் துண்டுகள், கடைகளில் சாமான்கள் வாங்கினதற்கான பில்கள், ஒரு சானிடரி நாப்கின் என்று கன்னாபின்னா வென்று என்னென்னவோ கண்களில் பட்டதே ஒழிய, ஷார்ப்னரைக் காணோம். சரி, பிளேடு? அடியில் போடப்பட்டிருந்த தினசரி தாளைத் தூக்கி விட்டுப் பார்த்தபோதும் கிட்டாமல் போக, இது நாழிகை அடக்கி வைத்திருந்த எரிச்சல் சுரீரென்று வெளிப்பட்டது.

'சட்! வீடா இது! ஒரு ஒழுங்கு இல்லாமல், வைத்த பொருட்கள் வைத்த இடத்தில் இல்லாமல்?'

'யமுனா!'

சில நொடிகள் காத்துப் பார்த்து எந்தப் பதிலும் வராமல் போக, நாற்காலியைப் பின்னால் சாய்த்து அங்கிருந்தவாறே அறைக்கதவு வழியாகக் கூடத்தைப் பார்த்தான். இரட்டை சோபாவில் காலை நீட்டி, சரிந்து யமுனா படுத்திருப்பது தெரிந்தது. கையில் புத்தகம். மார்பின் மீது தட்டில் வறுத்த மசாலா கடலைகள், ஒவ்வொன்றாகக் கடலைகளை எடுத்துத் தின்றுகொண்டே மிகுந்த ஸ்வாரஸ்யத்துடன், தான் கூப்பிடுவது கூட காதில் விழாமல் படிப்பவளைக் காண்கையில் ரமணனின் எரிச்சல் அதிகமானது.

மணி இரவு பத்து. சாப்பிட்டதோ கொஞ்சம் முன்னால்தான்! அரைமணி ஆவதற்குள் தட்டு தீனியை வைத்துக் கொண்டு கொறிப்பது எப்படி இவளுக்குச் சாத்தியமாகிறது! இன்று மட்டுமல்ல—தினமும் இதே கதைதான்.

பன்னிரண்டு மணிக்கு முன் யமுனா படுக்க வந்ததாக சரித்திரம் கிடையாது. . திருமணமான ஓரிரு வாரங்கள்



வரையில் அவளுக்காக இவனும், இவனுக்காக அவளும் தூங்கும், சாப்பிடும் நேரங்களை விட்டுக் கொடுத்துக் கொண்டாலும், மேலும் சில நாட்கள் போவதற்குள் இது என்ன கஷ்டம்! பேசாமல் அவரவர்க்கு வசதியானதையே தொடரலாமோ என்கிற ஞானோதயம் பிறந்துவிட்டது. அதுவும், முக்கால்வாசி சமயங்களில் யமுனா தாமதமாய் எழுந்துவிட்டு காலைச் சிற்றுண்டி சாப்பிடாமல் ஒரு கிளாஸ் பால், ஆப்பிள் என்று கால்வயிற்றுக்கு எடுத்துக் கொண்டு கிளம்பிவிடுவதால், பிரேக் ஃபாஸ்ட் ரமணனுக்கு மட்டும்தான்.

இரவு சாப்பாட்டை எட்டு-எட்டரைக்குள் முடித்துவிடுவதில்தான் ரமணனுககு உடன்பாடு, படுக்கை செல்லும்போது வயிறு காலியாக இருக்கவேண்டும் என்று யோகாஸ்திரம் சொல்லுகிறதே! இத்தனை வருஷங்களாக கடைப்பிடித்துவரும் வழக்கம் திருமணமானதும் தடைபட்டுப்போனது உறுத்தத் தொடங்கியபின், திராத அலுவலக வேலையாய் வெளியே போக வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தாலே ஒழிய, வீட்டில் சாப்பிட எட்டு மணிக்கு உட்கார்ந்து விடவேண்டும் என்று தீர்மானித்து, அதையே யமுனாவிடம் கூறியதும் அவள் கண்ணலகுப் புருவங்களை உயர்த்தினாள்.

'எட்டுக்குள்ளார சாப்பிட்டுடணுமா, ஏன்பா?'

'படுக்கறப்போ வயிறு ஹெவ்யா' இருந்தா தூக்கம் வர மாட்டேங்குது யமுனா...அது ஆரோக்கியமான பழக்கமும் இல்ல...'

'நா சாப்ட்ட உடனே படுப்பேனே - நல்லாதானே தூக்கம் வரும்!'

ரமணன் பதில் கூறாது மௌனிக்க, யமுனா தலையை பின்னுக்குத் தள்ளி சிரித்தாள்.

இதெல்லாம் நமக்கு நாமே போட்டுக்கற விலங்குகள் ரமணன். பசிச்சா சாப்பிடணும். அத விட்டுட்டு பசிக்குதோ, இல்லையோ, எட்டாயிருக்கா, சாப்பிட உட்காரணும்னா அத கேக்கறப்பவே எனக்கு சிரிப்பு வருது. காலைல அஞ்சுக்கு எழுந்திருக்கணும், ரெண்டு நிமிஷத்துல குளிக்கணும். நாலு நிமிஷத்துல டிபன் சாப்பிடணும் இத்தனை மணிக்குத் தூங்கப்போகணும்னு கறாரா இருக்க, நாம என்ன மெஷின்களா? ஓ-நோ-மனுஷங்க... எப்பப்ப என்னென்ன செய்யத் தோணுதோ அத செய்யணும். அப்பதான் வாழ்க்கைய ரசிக்க முடியும் என்னபா நான் சொல்றத ஒத்துப்பியா, இல்லையா?"

அவளுடன் வாதிக்கப் பிடிக்காமல் ரமணன் நகர்ந்து விட்டாலும் அன்றிலிருந்து இரவு எட்டு மணிக்கு 'நா சாப்பிடப் போறேன் யமுனா-நீ வர்றியா?' என்று பேருக்கு அவளிடம் கேட்டுவிட்டு, பகதூரை அழைத்து தனக்குச் சாப்பாடு எடுத்து வைக்கச் சொல்லும் வழக்கத்தை மேற்கொண்டு விட்டான்.

அவன் தீவிரமாய் இருக்கிறான் என்பதை உணர முடிய, யமுனாவும் இது குறித்து அவனோடு விவாதித்ததில்லை. மனசு இருந்து, பசியும் எடுத்தால் 'நானும் சாப்பிடறேன்-இன்னிக்கு லஞ்ச் சரியா சாப்பிடல' என்றவாறு கூட வந்து உட்காருவாள்' இல்லாவிட்டால் 'ஆபீஸ் விட்டதும் ஸ்னேகிதங்களோடு ஹோட்டலுக்குப் போய் டிபன் சாப்பிட்டதுல பசிக்கல... நா அப்புறமா சாப்பிட்டுக்கறேன்' என்றோ, 'மத்தியான சாப்பாடு ரொம்ப ஹெவி, கூடவே நாலு கப் டீயும் குடிச்சிருக்கேன் இன்னிக்கு எனக்கு சாப்பாடே வேணாம்' என்றோ, சொல்லி புஸ்தகத்தோடு உட்கார்ந்து விடுவாள். அல்லது வி. ஸி. ஆரைப் போட்டு விட்டு, காலை நீட்டிப் படுத்து விடுவாள்



ஆனால், சாப்பாடு வேண்டாம் என்று சொல்லுவாளே தவிர-சரியாய் ஒரு மணி நேரம் செல்வதற்குள் எழுந்து சமையற்கட்டுக்குச் சென்று ஸாண்ட்வீச் உருளைக்கிழங்கு வறுவல், கச்சோடி, ச்சூடா-என்று எதையாவது தட்டு நிறைய எடுத்து வந்து நொறுக் முறுக்' கென்று ரமணனுக்கு ஆத்திரம் எழுப்பும் வகையில் சாப்பிட்டுக் கொண்டே இருப்பாள.

சாப்பாட்டில் என்று இல்லை, உறங்குவதிலும் அவர்கள் தம் தம் இஷ்டப்படி செய்வது தான் சரி என்று சீக்கிரமே புரிந்து கொண்டு விட்டார்கள்,

இரவு உணவு உண்டு, ஆபீஸ் வேலை செய்து விட்டோ, டி.வி பார்த்த பிறகோ சுமார் பத்தரைக்குள் உறங்கச் செல்வது ரமணனுக்கு பிடித்தமானது. ஆனால் யமுனாவுக்கு அதில் சம்மதமில்லை.

தாமதமாய் சாப்பிட்டு, கொஞ்ச நேரம் வி.ஸி. ஆரில் படம் பார்த்து, நொறுக்குத் தீனியுடன் ஒரு புஸ்தகத்தையும் படித்து விட்டு, மணி பன்னிரண்டைத் தாண்டி, ஒன்றை நெருங்குகையில் முதல் கொட்டாவி எழுந்து, கண்களில் லேசாக அயர்ச்சி படர்ந்த பிறகே படுக்க வ:ருவது அவளுக்கு சாத்தியம். அவளைப் போய் பத்து, பத்தரைக்கு வந்து படு என்றால்?

கல்யாணமாகி பதினைந்து நாட்கள் வரை எப்படியோ இரண்டு பேரும் தாக்குப்பிடித்தனர்; அப்புறம் முகமூடிகளை அணிவது மூச்சைத் திணற வைக்க, வேஷம் போடாமல் இருவருமே தங்கள் பழக்கங்களை மேற்கொள்ள முற்பட்டதை இப்போது நினைத்துப் பார்க்கையில் ரமணனுக்குத் திருப்தியாகவே இருந்தது.

நாங்கள் 'ஸ்ட்ராங்-மைண்டட் இண்டிவிஜிவல்ஸ்'— அவரவர் விருப்பு, வெறுப்புகள் அவரவருக்கு முக்கியம்.

நல்ல வேளையாய் அதைப் புரிந்து கொண்டு இருவருமே செயல்படுகிறோம்.

என் வழி எனக்கு-அவள் வழி அவளுக்கு.

ஐந்துக்கு எழுந்திருக்கறதே என் தூக்கம் கெடுகிறது-'பத்து மணிக்குள் ஏன் உறங்கச் செல்கிறாய்? நீ என்ன சின்ன குழந்தையா?' என்று யமுனாவும் கேட்கவில்லை. அது என்ன ஏழுமணி வரை தூக்கம்? வேளை கெட்ட வேளையில் கன்னா பின்ன நீனி!' என்று இவனும் குற்றம் சாட்டும் விதமாய் விரலை நீட்டியதில்லை. அந்த வரையில் சந்தோஷம்.

எல்லாம் சரி-ஆனால் வீட்டை இப்படி கந்தர கோளமாய் வைத்திருப்பது தாங்க முடியவில்லையே-இதற்கு என்ன செய்வது?

மேஜையில் உட்கார்ந்து நிம்மதியாய் ஆபீஸ் வேலைகளைக் கவனிக்க முடியாமல் பென்ஸிலைக் காணோம், ஷார்ப்னர், பிளேட் வைத்த இடத்தில் இல்லை என்றால் தினமும் தேடிக்கொண்டிருக்க முடிகிறதா?

ரமணன் பார்வையைப் படுக்கை அறையைச் சுற்றி வீசினான்.

படுக்கை மீது யமுனா அன்று அணிந்து, அவிழ்த்துப் போட்டிருந்த சல்வார் கமீஸ் தாறுமாறாய்க் கிடந்தன. நாற்காலியின் முதுகில் ப்ரா! செருப்பு ஸ்டாண்டில் தலைகுப்புற கவிழ்ந்தபடி நாலைந்து ஜோடி செருப்புகள்!

பாத்ரூம் பற்றி கேட்கவே வேண்டாம்! யமுனா குளிக்க அரைமணி ஆகும். அட, அத்தனை நேரம்எடுத்துக் கொள்கிறாளே, ஒழுங்காகக் குளித்து விட்டு வந்திருப்பாளா என்றால் அதுவும் கிடையாது. ஷாம்பூ பாட்டில் திறந்து கிடக்கும்; மொஸைக் தரை பூராவும்



சோப்பு ஜலம் கொழகொழக்கும்; கவனக்குறைவாய் கால் வைத்தால் கபால மோட்சம் தான்! வாஷ் பேசின் முன் நின்று தலையைத் துவட்டிக்கொண்டதற்கு அடையாளமாய் பேஸின் முழுக்க உதிர்ந்த முடிகள் கோலம் வரைந்திருக்கும். ஹேர்-ட்ரையர் சர மேடையில் அனாதையாய்க் கிடக்கும்.

பல தடவைகள் பொறுமையுடன் அத்தனையும் அதனதன் இடத்தில் எடுத்து வைத்து, நீர்விட்டுத் தரையைச் சுத்தம் செய்து,துணியால் துடைத்து ரமணன் சீர் செய்திருக்கிறான் தான். ஆனாலும்? ஆனாலும்?

வாழ்நாள் பூராவும் அவள் ஓட்டி அடிப்பாள்,இவன் கர்ம சிரத்தையாய் சுத்தம் செய்ய வேண்டுமா?

எத்தனையோ முறைகள் சொல்லியாயிற்று-'யமுனா-ப்ளீஸ்—இன்னும் கொஞ்சம் அக்கறையுடன் இரேன்'—என்று—பலன் தான் இல்லை. இவன் எது சொன்னாலும், தலையை பின்னுக்குத் தள்ளி சிரிப்பாள். அப்புறம் 'ரிலாக்ஸ்'பா என்பாள், அந்தச் சிரிப்பு மாறாமல்—அவ்வளவ தான்-அடிப்படையே உதைக்கும்போது எங்கேயிருந்து 'ரிலாக்ஸ்' செய்வது?

மறுநாள் கொடுக்க வேண்டிய ஸ்டேட்மெண்டை பூர்த்தி செய்யாமல் தேவையற்ற சிந்தனைகளில் மூழ்கி அமர்ந்திருப்பது கோபத்தை எழுப்ப, குரலை உயர்த்தி, 'ய...முனா' என்று மறுபடி அழைத்தான் ரமணன்.

இந்த முறை அவன் அழைப்பு காதில் விழ, இருநத இடத்திலிருந்தே 'எஸ்' என்றாள் யமுனா.

'என் பென்ஸில் எங்கே?'

'எந்த பென்ஸில்?'

'டேபிள் மேல வைச்சிருப்பேனே...'

'எந்த டேபிள் மேல...'

ஆத்திரம் அதிகமாக 'வெளையாடாதே... எத்தனை டேபிள் பெட்ரூம்ல இருக்கு?' என்றான் ரமணன் அதட்டலாக...

'ஓ! அதுவா? நா பார்க்கல-பா'

'நா எடுக்கல... நீயும் பார்க்கல...அப்புறம் கால் மொளைச்சா ஓடியிருக்கும்? வந்து தேடி எடுத்துக் குடு...'

யமுனா சிரித்தாள்.

'என் ஐப்ரோ பென்ஸிலக் கூட ரெண்டு நாளா காணோம்...நீ அத தேடிக் குடேன்...'

ரமணன் அவசரமாய் நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எழுந்தான். கால்களை அகல அகலமாய் வைத்து அறை வாசலில் வந்து நின்றான்.

'வெளையாடறியா?'

யமுனா ஒரு கை நிறைய கடலைகளை வாயில் போட்டு மென்றவாறே மீண்டும் சிரித்தாள்.

'நீ இப்படி இருக்கறது எனக்குப் பிடிக்கல யமுனா.'

'எப்பழி இழுக்கழழு?'

'கொஞ்சம் கூட கட்டுப்பாடு இல்லாம... வீட்டை நல்லா வச்சிக்கணும்ன்ற பிரக்ஞை இல்லாம...'

யமுனா கண்களைச் சிமிட்டினாள். வாயில் இருந்த கடலைகளை விழுங்கினாள்.

'எனக்குப் பிடிச்சிருக்கே!'



ரமணன் தலையில் ஒரு தரம் அடித்துக் கொண்டு அவளுக்கு எதிரில் இருந்த சோபாவில் வேகமாய் உட்கார்ந்தான்.

சில நொடிகளுக்கு சும்மா இருந்து அவளையே வெறித்தான். அப்புறம் 'சில விஷயங்களைப் பத்தி நாம் பேசிடறது நல்லதுனு நினைக்கறேன்' என்றான் நிதானமாக...

யமுனா எழுந்து உட்கார்ந்த வேகத்தில் தட்டுநழுவி கடலைகள் சோபாவிலும், கார்பெட் மீதும் வாரி இறைந்தன.

கீழே விழுந்தவற்றை எடுக்கக்கூட முனையாமல் யமுனா இருக்க, ரமணனின் தாடை இறுகியது.

எழுந்து உட்கார்ந்தவள் புத்தகத்தை பக்கத்தில் குப்புற கவிழ்த்தாள். ரமணனின் நிலையைப் புரிந்து கொள்ளாமல் தன் இயல்புபடி சீண்டலாகப் பேசினாள்.

'நானே உன்கிட்ட இன்னிக்குப் பேசணும்னு இருந்தேன் ரமணன்-ஆபீஸ் வேலை பண்றப்போ தொந்தரவு வேணாம்னு விட்டுட்டேன்-நீயா வந்து பேசலாம்னு சொல்றே-குட்-முதல்ல நீ சொல்ல வந்ததச் சொல்றியா, இல்ல நா பேசட்டுமா?'

ரமணன் அவள் கேள்விக்குப் பதில் கூறாமல் எழுந்து, சோபாவில் கிடந்த கடலைகளைப் பொறுக்கி தட்டில் போட்டான். கம்பளத்தின் மீது விழுந்திருந்தவைகளை எடுக்கும்போது யமுனா தொடர்ந்தாள்.

'இன்னிக்கு ராணிகிட்ட போன்ல பேசினேன், மசக்கை தொந்தரவு அதிகமா இருக்காம். காலைல எழுந்தா காபி கூட குடிக்க பிடிக்கலையாம். பாவம்பா-

ஆனாலும் அதெல்லாம் பெரிசு பண்ணாம, எத்தனை சந்தோஷமா இருக்கா தெரியுமா ரமணன்? 'ப்ரெக்னன்ஸி'ன்றது சொல்லித் தெரியற அனுபவம் இல்ல-உணர்ந்தா தான் புரியும்'னு ரொம்ப பெருமிதத்தோட பேசினா... அத கேட்டதுலேந்து குழந்தை பத்தியே நானும் நினைச்சுகிட்டு இருக்கேன்...

பேசியவள் குனிந்து, அருகில் மண்டியிட்டு கடலைகளை பொறுக்கிக் கொண்டிருந்தவனின் கழுத்தை கட்டிக் கொண்டாள். கொஞ்சலாய்க் கேட்டாள்?

'கல்யாணமாகி நாலு மாசம் பூர்த்தி ஆயாச்சு ரமணன். குழந்தைப் பெத்துக்கறதப் பத்தி பிளான் பண்ண வேணாமா?'

செய்து கொண்டிருந்த காரியத்தை நிறுத்தி விட்டு ரமணன் அவளை ஏறிட்டபோது அவன் கண்களில் அதிர்ச்சி வெளிச்சம் போட்டது.

'நமக்கு? குழந்தை? கடவுளே! அது வேறயா? இப்பவே வீட்டை இந்த மாதிரி நீ வச்சிருக்கே-குழந்தை வேற பிறந்தாச்சுன்னா, அதுவும் நீயுமா சேர்ந்துகிட்டு வீட்டையே தலை கீழா கவுத்துடுவீங்க ...வேணாம்மா ஆளை விடு...'

யமுனா செல்லமாக அவன் தலையில் முட்டினாள்.

'இந்த மாதிரியெல்லாம் பயமுறுத்தினா நா விட்டுக் கொடுத்திடுவேன்னு நினைச்சியா' நடக்காதுப்பா... கல்யாணம் பண்ணிக்கறதப் பத்தி மறுபடியும் நாம பேசினப்ப, நீ என்ன சொன்னே, அத ஞாபகப்படுத்திக்க...'

'என்ன சொன்னேன்?'

'அன்னிக்கு, ஜன்பத் ஹோட்டல்லேந்து இந்த வீட்டுக்கு நா குடி வந்த மறுநாள், 'நாம கல்யாணம் பண்ணி



கிட்டா என்ன?'னு நீ கேட்டப்போ, நா 'குழந்தை பெத்துக்கறது ஒரு ப்ரச்னையா ஆகாதா?'னு எதிர் கேள்வி கேட்டேன். அதுக்கு நீ 'இந்த அஞ்சு வருஷத்துல நா மாறியிருக்கேன் யமுனா...குழந்தை தாம்பத்திய வாழ்க்கைக்குத் தேவை தானோனு கூட சில சமயங்கள்ல நினைச்சிருக்கேன்...ஸோ கல்யாணம் பண்ணி ஒரு வருஷம் போல ஆகி, நீயும் நானும் விருப்பப்பட்டா ஒரே ஒரு குழந்தை பெத்துக்கலாம்னு சொல்லலை?'

தன்னை அணைத்திருந்த அவள் கரங்களை ரமணன் விலக்கினான். எழுந்து நின்று இடுப்பில் கையை வைத்து, தீர்க்கமாய்ப் பார்த்தவாறு கேட்டான்.

'நா சொன்னது இருக்கட்டும்...நீ என்ன பதில் சொன்னே-அதை ஞாபகப்படுத்துக்கயேன்...'

'என்ன சொன்னே? ம்ம்...அ...'நா கூட அஞ்சு வருஷத்துல மாறி இருக்கேன் ரமணன்-குழந்தைங்க பிறந்தா பொறுப்பும், தொந்தரவும் அதிகம்தான்னு புரிஞ்சிக்க முடிஞ்சிருக்கு...நீ சொல்ற மாதிரி கல்யாணமாகி ஒரு வருஷம் கழிச்சு ரெண்டு பேருக்குமே குழந்தை வேணும்னு தோணிச்சுன்னா, பெத்துக்கறத 'பிளான்' பண்ணலாம்னு சொன்னேன்...'

'அப்ப அப்படி சொல்லிட்டு இப்ப தடால்னு மாறினா?'

யமுனா தோளைக் குலுக்கினாள்.

'நமக்கோ கல்யாணம் ஆயாச்சு-அப்புறம் ஒரு வருஷம் ஏன் காத்திருக்கணும்? இப்பவே எனக்கு வேணும் போல தோணுதே...'

'எனக்குத் தோணலியே'

'அடாவடியா பேசற ரமணன்!'

'யார் அடாவடியா பேசறாங்க? நீயா, நானா? குடும்பப் பொறுப்பைச் சரியா கவனிக்க முடியல...அதுக்குள்ள குழந்தை ஆசையா? ஐயோ-நா செத்தேன்...'

யமுனா முதல் முறையாக சீற்றத்துடன் குரலை உயர்த்தினாள்.

'சும்மா சும்மா 'குடும்பத்தை சரியா கவனிக்கல'னா என்ன அர்த்தம்' கடைக்குப் போய் சாமான்கள வாங்கலியா? பகதூருக்கு என்னென்ன செய்யணும்னு 'இன்ஸ்ட்ரக்ஷன்' கொடுக்கலியா? என்ன குறை கண்டுட்ட இப்ப, நீ?'

ரமணன் போலி பாராட்டாய் கைகளைத் தட்டினான்.

'ஆஹா-பிரமாதமா வீட்டை பாத்துக்கறே-மெடல் தான் கொடுக்கணும்—வச்ச சாமான் வச்ச இடத்துல இல்ல...தேடாம ஒரு பொருள் கிடைக்க மாட்டேங்குது... ஒரு பென்ஸில் அது கூட காணோம்...கேட்டா, 'என் ஐப்ரோ பென்ஸில தேடிக்குடு'னு பதில் பேசற...

யமுனா கோபத்துடன் தலைமுடியைக் கோதிக் கொண்டாள்.

'எஸ்-அப்படித்தான் கேப்பேன். என்ன தப்பு உன் பொருளை நா தேடித்தரணும்னு நீ எதிர்பார்த்தா என்னுத நீ எடுத்துத் தரணும்னு நா கேக்கக்கூடாதா? இந்த மேல்ஷாவனிஸ' பேச்செல்லாம் என்கிட்ட வேணாம்... நானும் வெளில போயி வேலை பாக்கறேன். ஞாபகமிருக்கட்டும். ஒவ்வொருத்தர் பொண்டாட்டி மாதிரி வீட்டுல தூங்கிகிட்டு பொழுத போக்கல...'

'நா உன்னை வேலைக்குப் போகச் சொல்லலியே... அது உன்...'

அவனை முடிக்க விடாமல் யமுனா கத்தினாள்.



'போகாம? உன் ஷூவைத் துடைச்சிகிட்டு, உன் வரவுக்காக 'வழி மேல் விழி வைச்சு' நாள் பூரா காத்துகிட்டு இருக்கறது தான் உசத்தினு சொல்றியா?'

சமையல் அறையில் படுத்திருந்த பகதூர் என்னவோ ஏதோ என்கிற பதைப்புடன் எட்டிப் பார்ப்பது புரிய, ரமணன் தன்னை நிதானப்படுத்திக் கொண்டான்.

இப்படி ஆளாளுக்குப் பேசுவதினால் ஆகப் போவது ஒன்றும் இல்லை அவரவர் சொல்வது அவரவருக்குச் சரி என்று இருக்கும் போது வீண் கத்தலும், கசப்பும் தான் கடைசியில் மிச்சமாகும்.

அரை நிமிஷம் அப்படியே நின்று சிந்தித்தவன், ஒரு முடிவுக்கு வந்தது போல குரலைத் தழைத்துக் கொண்டான்.

'ஆல்ரைட்—மேலே மேலே பேசி பிரயோஜனம் இல்லை...உன் இஷ்டப்படிதான் நீ இருக்கப் போறே! ஓகே-ஐ'ல் அக்சப்ட் இட்...ஆனா, உன் நடவடிக்கையால் என் 'டிஸிப்ளின்' கெட, நா விடப் போறதில்ல...ஒரே ரூம்ல இருந்தா தானே வம்பு? நா கெஸ்ட் பெட்ரூமுக்கு போயிடறேன். என் ஆபீஸ் வேலை, மத்ததெல்லாம் அங்கயே பாத்துக்கறேன். உன் ரூமை எப்படி பிடிச்சிருக்கோ அப்படி வச்சிக்க...ஆனா, தயவு பண்ணி என் அறைக்குள்ள வந்து ரகளை பண்ணாதே...சரியா?'

பேசியதோடு நிற்காமல் ராத்திரி பத்தரை என்று கூட பார்க்காமல், பகதூரின் உதவியுடன் எழுதும் மேஜையை விருந்தாளிகளின் அறைக்கு எடுத்துப் போனான். அலமாரியில் இருந்த உடைகள், இதர சாமான்களையும் அள்ளிக் கொண்டு போய் வைத்துவிட்டு, அங்கேயே உறங்க முற்பட்டது கூட பெரிய விஷயம் அல்ல, ஆனால், அந்த நிகழ்ச்சியை 'அதற்கென்ன பண்ணுவது—இதுதான் சரியான நடவடிக்கை என்றால் அப்படி செய்வது தானே முறை' என்று இருவருமே

எந்த வித உறுத்தலும் இன்றி ஒருவித அலட்சியத்தோடு ஏற்றுக் கொண்டதை இங்கே அவசியம் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

# 27

**யமுனா**

இடது பக்க முகம் தலைகாணியில் புதைந்தபடி இருந்ததால், வலது கண்ணை மட்டும் திறந்து ட்ரெஸிங் டேபிள் மேல் எப்போதும் வைத்திருக்கும் புகைப்படத்தை யமுனா ஏறிட்டாள்.

அம்மாவின் தோளில் கை வைத்து அவரை அணைக்கும் அப்பா; வாயின் சிரிப்பு கண்களில் வெளிச்சம் போட சந்தோஷத்தோடு அம்மா...

அம்மா! எத்தனை அபூர்வமான மனுஷி அவர்!. இன்றோடு அவர் மறைந்து ஒரு வருஷம் ஆகிவிட்டதென்றால் நம்ப முடியாமல்தான் இருந்தது.

யமுனா தலையைத் திருப்பிப் படுக்கைக்குப் பக்கத்து முக்காலியில் இருந்த டேபிள் காலெண்டரைப் பார்த்தாள். வருஷம் பிறந்து, காலெண்டரை வாங்கிய கையோடு சிகப்பு மையினால் வட்டமிட்டிருந்த தேதி அன்று பத்து என்பதை தெளிவாக உணர்த்தியது.

படுத்திருந்த நிலையிலிருந்து மாறாமல் விழிகளை மட்டும் நகர்த்தி, மேஜை கடிகாரத்தைக் கவனித்தாள்.

காலை மணி ஏழரை.



போன வருஷம் இதே நேரத்தில் அம்மாவும் அவளுமாய் ஒன்றாய் அமர்ந்து காபி குடித்து, அன்றைய தினசரியை செய்திகளை விமர்சித்தது நினைவுக்கு வந்தது.

அப்போது கூட அம்மா சாதாரணமாய் இருக்கிற மாதிரிதானே தெரிந்தது. ஆனால், இவள் குளித்து, தயாராகி, சிற்றுண்டி சாப்பிட வந்தபோது அம்மா அத்தனை சுரத்தாக இல்லாததை முதல் முறையாக உணர்நதாள்.

'என்னம்மா?' என்றதும், மங்கையர்கரசி வலியுடன் புன்னகைத்தார்.

'காலைல தூங்கி எழுந்ததுலேந்தே இடது தோள் பட்டை, நெஞ்சிலே நமநமனு இருந்துது...எசகு, பிசகா படுத்திருப்போம்னு விட்டுட்டேன். ஆனா, இப்ப இடது கைக்குள்ள ஒரே குடைச்சல்...'

'காலைல பேசிட்டிருந்தப்போ சொல்லவேயில்லையேமா'

பதில் கூறாது புன்னகைக்க முயன்றவரின் முகத்தில் வலிகோடு இழுக்க, யமுனா சரக்கென்று அருகில் சென்றாள்.

'ஹெச்.எம். ஹாஸ்பிடலுக்குப்போய் டாக்டர் பால சுப்ரமணியத்த பார்த்திட்டு வந்திடலாமா—மா?'

'கிளம்பிப் போகணும்னு நினைச்சாலே கஷ்டமா இருக்கு...அவரால வேணா வர முடியுமானு கேக்கறியா?' கஷ்டப்பட்டுப் பேசிய மங்கையர்க்கரசி அடி உதட்டைக் கடித்துக் கொண்டார், நிமிர்ந்து உட்கார முடியாத தினுசில் டேபிள் மேல் சாய்ந்து கொண்டார்

டாக்டரிடம் பேசிவிட்டு யமுனா திரும்பி வருவதற்குள் நெற்றி, கழுத்தில் வியர்வை மொட்டு கட்டியிருந்தது.

நிமிர்ந்தவர் முகம் நன்றாகவே இல்லை.

'என்னம்மா செய்யுது?'

மங்கையர்க்கரசியின் முகம், வெளுத்து, உதடுகள் உலர்ந்திருந்தன,

'என்கிட்ட உட்கார் யம்மூ.'

உட்கார்ந்தாள்

'கையைப் பிடிச்சிக்கோ.'

பிடித்துக் கொண்டாள்.

'நீ புத்திசாலி...நல்லது, கெட்டது புரிஞ்சவ—உன் மனசாட்சிக்கு எது சரினு தோணுதோ, அதச் செய்... பாடசாலை பொறுப்ப ஏத்துக்க இஷ்டமில்லாட்டி வேணாம்—மத்த டிரஸ்டிங்கிட்ட விட்டுடு...டேக்கேர்... எப்பவும் பிராக்டிகலா நடந்துக்க முயற்சி பண்ணு... அப்புறம்...'

நிறுத்தி நிறுத்தி, சின்ன குரலில் தேவையில்லாத விவரங்களை அம்மா பேச, முதல் முறையாக யமுனா பயந்தாள்.

'ம்ம்...எதுக்கு இப்ப இதெல்லாம் சொல்றே?'

'தைரியமா இரு யம்மூ...டேக் கேர்'

வார்த்தைகள் கிசுகிசுப்பாய் வெளிப்பட 'ராஜூ' என்று கத்தினாள்.

ஓடிவந்தவனிடம் 'கார் சாவி எடு—டாக்டர் வர வரைக்கும் காத்திருக்க வேணாம்' என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, மங்கையர்க்கரசி, கொளகொள



வென்று வாந்தி எடுத்தார். கண்கள் செருக முன்னால் மகள் மேல் சாய்ந்தார்.

அப்புறம்...

அப்புறம் என்ன?

அவ்வளவுதான். நினைத்த நினைப்பு இல்லாமல் அம்மாவின் கதை முடிந்து விட்டது.

அன்றைக்கு அம்மா பார்த்த பார்வையும், சில நிமிஷங்களுக்குள் தவித்த தவிப்பும் மறுபடி கண்முன் நடக்கற மாதிரியான தீவிரத்துடன் நினைவுக்கு வர, யமுனா பதட்டத்துடன் எழுந்து உட்கார்ந்தாள்.

'நேற்று இத்தனை நேரம் அம்மா என்னோடு இருந்தாள்,' 'போன வாரம்', போன மாசம்—என்று நம்மை மீறி நகர்ந்து போகும் மணித்துளிகளைப் பிடித்து நிறுத்தி விட முடியாமல் அவஸ்தை பட்ட மாதிரி இனி 'போன வருஷம்' என்பதும் இந்த நிமிஷத்தோடு காணாமல் போய் விடும் அப்புறம் இரண்டு, மூன்று என்று வருஷங்கள் ஓடி, அம்மா போய் பத்து ஆண்டுகள் கூட ஆகிவிடும்' என்பதை நினைத்தபோது வலியில் உடம்பு உதறிப் போட்டது.

'என்கிட்ட உட்கார் யம்மூ,'

கையப் பிடிச்சிக்கோ...'

'உன் மனசாட்சிச்கு எது சரினு தோணுதோ, அதச் செய்...டேக் கேக்... எப்பவும் ப்ராகடிகலா நடந்துக்க முயற்சி. பண்ணு...'

அம்மா கடைசியாய் கூறிவிட்டுப் போன வார்த்தைகள் மறுபடியும் ஞாபகத்தில் சுழல, யமுனாவின் தவிப்பு அதிகமானது.

மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து கொள்வாய் என்று உன்மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று அம்மா சொன்னாரே, நான் அப்படி நடந்து கொள்கிறேனா?

சில வாரங்களாகவே சதா மனசில் ஏதோ நமநமப்பு பிடிக்காததைத் தொடர்ந்து செய்யும் வேதனை...வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறாமோ... என்கிற உறுத்தல்... யதார்த்தத்தை எதிர் நோக்கப் பயந்து, ஓடி ஒளியும் உதைப்பு...

'தைரியமாய் இரு யம்மூ...'

மயங்கி விழும் முன் அம்மா கூறின அந்த வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் இருந்து வருகிறேனோ? என்கிற கேள்வி மீண்டும் மீண்டும் தலைதூக்க, யமுனா அரை நிமிஷம் பரிதவித்தாள்.

நெஞ்சுக் கூட்டில் பறவைகள் சிறகடித்தன.

வயிற்றிலிருந்து விவரிக்கத் தெரியாத வேதனை மெள்ள கிளம்பி மேலே வந்து தொண்டைக் குழியில் பரவுகிற மாதிரி தோன்ற, கண்கள் கலங்க முற்பட்டன.

நோ—அழக் கூடாது.

அழுவது அம்மாக்குப் பிடிக்காத விஷயம்.

'மனுக்குனு, நினைச்ச மாத்திரத்துல அழறதாலேயே பொம்பளைங்கள ஆம்பிளைங்க ஒண்ணு 'வீக்சர் செக்ஸ்'னு ஒதுக்கிடறாங்க, இல்லைனா 'அழுதே காரியத்த சாதிச்சிடுவா'னு மட்டமா கேலி பண்றாங்க...தெரியாமத்தான் கேக்கறேன், தனக்கு தான் வலி வேதனைன்ற மாதிரி எதுக்கு எல்லா பொம்பளைங்களும் சின்ன விஷயங்களுக்குக் கூட அழ ஆரம்பிச்சிடறாங்க? ம்? திஸ்



இஸ் ஷியர் நான் சென்ஸ் யம்மு...என்னைப் பொறுத்த வரை என் கண்ணீர் எனக்கு ரொம்ப உசத்தியானது, ப்ரஷியஸ்...அத கண்டவங்க முன்னால வெளியிட்டு, அதோட மதிப்பக் குறைக்கறது, எனக்கு நானே செஞ்சுக்கற அவமரியாதைனே நினைக்கறேன்...'

அம்மா...

எத்தனை வித்தியாசமான மனுஷி அவர்

அம்மா இருந்திருந்தால் இப்போது கொஞ்ச நாட்களாக உள்ளுக்குள் பிராண்டும் விஷயத்தை வாய்விட்டு வெளியே சொல்லி, இதுக்குத் தீர்வு என்னம்மா?' என்று கேட்டிருக்கலாமோ?

யமுனா சலிப்புடன் புன்னகைத்துக் கொண்டாள்.

ஏன் இப்படி பைத்தியக்காரத்தனமாய் சிந்திக்கறேன்?

அம்மா இருந்திருந்தால் இன்றைக்கு அனுபவிக்கும் அவஸ்தையே இல்லாமல் அல்லவா போயிருக்கும்?

யமுனா போர்வையை உதறியவாறு எழுந்து நின்றாள்.

காரணமேயில்லாமல்; 'போர்வையை மடிச்சு வக்கறது கூட உனக்கு முடியாத காரியமா?' என்று ரமணன் கண்டிக்கும் வார்த்தைகள் ஞாபகத்துக்கு வர, சலிப்போடு கீழே தள்ளிய போர்வையை எடுத்தாள்.

ஏனோ தானோ என்று மடித்து படுக்கை மேல் போட்டாள்.

பாத்ரூமுக்குள் சென்றவள் பற்களைத் துலக்கினாள். முகத்தை குளிர்ந்த நீர் விட்டுக் கழுவிக் கொண்டாள்.

அறைக்கதவைத் திறந்து, வெளியே வந்து 'பகதூர்-டீ' என்று குரல் கொடுத்த வண்ணம், கூடத்து சோபாவில் காலை மடித்து உட்கார்ந்தாள்.

மேஜையில் கிடந்த தினசரிகளைப் பிரித்துப் பார்க்க இடம் கொடாமல் 'போன வருஷம் இத்தனை நேரம் அம்மா உயிரோடு இருந்தாரே?' என்கிற சிந்தனை மறுபடி தொண்டையை இறுகச் செய்தது.

யமுனா வலுக்கட்டாயமாகத் தன்னை உலுக்கிக் கொண்டாள். வேண்டுமென்றே கவனத்தை மற்ற விஷயங்களில் செலுத்தினாள்.

வீடு நிசப்தமாக இருந்தது.

கடந்தஒரு வாரமாய் ரமணனின் அக்கா கௌரியும், அவள் குழந்தைகளும் வந்திருந்ததில் இவள் எழுந்துவரும் போதும் கூடம் கத்தலும், சிரிப்புமாய் கலாட்டாவாக இருக்கும்.

கௌரியின் கணவர் 'மாஸ்கோ' விற்கு ஆறு மாச பயிற்சிக்காகச் சென்றிருக்கிறார். குழந்தைகளுக்குப் பள்ளி விடுமுறையாக இருந்ததோடு, 'இத சாக்கு வச்சுகிட்டு பசங்களோடவா' என்று ரமணன் வருந்தி அழைத்ததையும் ஏற்று கணவரை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு அப்படியே தம்பி வீட்டில் ஒருவாரம் இருக்கவென வந்தவர்கள் இன்று காலை விமானத்தில் ஊர் திரும்புகிறார்கள். அவர்களை ஏற்றிவிட ரமணன் போயிருக்கிறான். திரும்பும் சமயம்தான்.

விமானம் ஆறுக்குப் புறப்பட்டது என்றால் இன்னும் ஏன் ரமணன் வீட்டுக்கு வரவில்லை? ஒருவேளை 'காலை வாக்'கை முடித்துவிட்டு வருகிறானோ?

அம்மாவின் முதல் நினைவு தினத்தில் என்னென்ன செய்யப் போகிறோம் என்பதை ஒரு வாரத்திற்கு முன்பே யமுனா தீர்மானித்து விட்டாள்.



முதலில் ரத்ததானம். ஆல் இண்டியா மெடிகல் இன்ஸ்டிட்யூட்டுக்குச் சென்று ரத்த தானம் பண்ண வேண்டும். அப்புறம் பஞ்சாபி ஹோட்டலில் ஸ்பெஷலாய் ஆர்டர் கொடுத்திருக்கும் 'தந்தூரிசிக்கன்' களை வாங்கிக் கொண்டு 'ஆஷா நிகேதன்' நடத்தும் முதியோர் இல்லத்துக்குப் போய் அங்கு அந்த மூத்தோர் 'சிக்கன்' சாப்பிடுவதை ரசித்து, அவர்களோடு சேர்ந்து சாப்பிட வேண்டும்...

அம்மாவுக்கு 'தந்தூரி சிக்கன்' பிடித்தமான பதார்த்தம். எப்போது வெளியே சாப்பிடப் போனாலும் தப்பாது 'தந்தூரி சிக்கனும்-நான் ரொட்டியும்' ஆர்டர் பண்ணி விடுவார். இதனாலேயே நாலு நாட்கள் முன்னதாக 'ஆஷா நிகேதனு'க்குச் சென்று பத்தாம் தேதி சாப்பாட்டுச் செலவு தன்னுடையதாக இருக்க வேண்டும் என்று சொன்னபோது மறக்காமல், அன்றைய உணவோடு 'தந்தூரி சிக்கன்' சேர்த்து இல்லத்துப் பெரியவர்களுக்குத் தர முடியுமா?' என்று கேட்டாள்.

'தந்தூரி சிக்கனா? அது ரொம்ப விலை உயர்ந்த உணவாயிற்றே! நாங்கள் இங்கே அதைத் தயாரிப்பது முடியாத காரியம். நீங்கள் வெளியே ஆர்டர் பண்ணிக் கொண்டு வந்தால் சாப்பாட்டோடு சேர்த்து பரிமாறுவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை...' நிர்வாகி கூறியதும், அந்த இல்லத்தில் மொத்தம் எண்பது வயதானவர்கள் இருக்கிறார்கள், அனைவருமே அசைவம் சாப்பிடுவார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு அவர்களோடு, இல்லத்தில் வேலை பார்ப்பவர்களுக்கும் சேர்த்துத் தான் 'வறுத்த கோழி' கொண்டு வருவதாகச் சொல்லி சாப்பாட்டுக்கான பணத்தைக் கட்டின யமுனா அன்றே தந்தூரி சிக்கனை பெரிய அளவில் தயாரித்துத் தர இயலுமா என்று தெரிந்த இரண்டு ஹோட்டல்களில் விசாரித்தாள். நபருக்கு அரை பிளேட் என்று வைத்துக்

கொண்டாலும் சுமார் ஐம்பது கோழிகளையாவது சமைக்க வேண்டிவரும்; பெரிய ஆர்டர் என்பதால் பிளேட்டுக்கு முப்பது ரூபாய் சார்ஜ் செய்து, நல்லவிதமாய் செய்து தருவதாக பஞ்சாபி ஹோட்டல் முதலாளி கூற, அதை ஏற்று அன்றே முன் பணமும் தந்துவிட்டு வந்தான்.

எக்கச்சக்கவிலை கொடுத்து வெளியே தயாரிப்பதை விட உசத்தியாய், மலிவாய் வீட்டிலேயே சமைப்பது சிறப்பு தான்! பகதூரிடம் காசைத் தந்தால் இன்னொரு ஆளையும் உடன் அமர்த்தி, அவனே ஒருநாள் பூராவும் முனைந்து வீட்டிலேயே அருமையாய்ச் செய்திருப்பான் நிச்சயம்! ஆனால்? இந்த வீட்டிலா? அசைவ சமையலா? எனக்கு மீன் வறுவலோ, கறியோ தேவை என்றால்கூட வெளியே போய் சாப்பிட வேண்டிய நிர்பந்தம் இருக்கையில் இந்த வீட்டிலாவது, சிக்கன், அதுவும் பெரிய அளவில் செய்வதாவது!

இது குறித்து சமீபத்தில் ரமணனுக்கும் தனக்கும் நடந்த காரசாரமான பேச்சு ஞாபகத்துக்கு வர, யமுனா எரிச்சலுடன் கைவிரல்களைச் சொடுக்கிக் கொண்டாள்.

அது நடந்து பத்து, பதினைந்து நாட்கள் இருக்கும். ஒரு ஞாயிறு அன்று சாப்பிட உட்கார்ந்தவளுக்கு சப்பாத்தியும், பருப்பும், சப்ஜியும் வேண்டியிராமல் போனதில் 'தினமும் சைவம் சாப்டுட்டு நாக்கு செத்துப் போச்சு என்று முணுமுணுக்க, 'ஏன்? மத்தியான வேளைல உன் இஷ்டப்படி ஹோட்டல்ல சாப்பிடறது திருப்தி தரலியா? இப்பவும் வெளியே போய் தாராளமா சாப்பிடு, நா தடுக்கல' என்று ரமணன் சீண்ட; வாய்க்கு வேணுன்றத சாப்பிட ஹோட்டலுக்கு தான் போகணும்னா, இத என் வீடுனு ஏன் சொல்லிக்கணும்? பேசாம பழையபடி 'ஜன்பத்' ஹோட்டலுக்கே குடி போயிடலாமே!' என்று யமுனா காட்டமாகக் கேட்டு, சாப்பிடாமல் எழுந்து போக...



அன்றைக்கு வழக்கத்தை விட பேச்சு இரண்டு பேர் வாயிலிருந்துமே கடுமையாகத்தான் வெளிப்பட்டு விட்டது...

அன்றுதான் என்றில்லை. வரவர வாதம் இல்லாமல் சுமூகமாய் எந்தக் காரியம் தான் நடக்கிறது?

ஆறு மாசங்களுக்கு முன்பு காணப்பட்ட சகஜ பேச்சு, கேலி, சிரிப்பு எல்லாம் துளித்துளியாய் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டன.

புரியவில்லை, யோசித்த வரையில் கசப்பே மிஞ்சுகிறது!

முதல் நாள்கூட அப்படித்தான்.

காலைச் சிற்றுண்டியை எல்லோருமாக ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த போது ரமணன் சொன்னான்—

'சாயங்காலம் சீக்கிரமா வந்திடு யமுனா...நாளைக்கு அக்கா ஊருக்குப் போறதால கடைகளுக்குப் போய் பசங்களுக்கு ட்ரெஸ் ஏதாவது வாங்கித் தரலாம்!'

பழரசத்தை ஒரு வாய் குடித்தவள் 'முடியாது' என்று தலை அசைத்தாள்.

'கஷ்டம் ரமணன்-நாளைக்கு அம்மாவோட நினைவு தினம் இல்லியா, அதுக்காகச் சில ஏற்பாடுகளைச் செய்யணும்.'

என்ன ஏற்பாடு என்பது போல ரமணன் ஏறிட, யமுனா விளக்கினாள்.

'ஆஷா நிகேதன் இன்மேட்ஸுக்கு நாளைக்கு சாப்பாடு போடறே...தந்தூரி சிக்கனோட...அத அங்க பண்ண மாட்டாங்களாம். ஸோ, வெளியே பஞ்சாபி ஹோட்டல்ல ஆர்டர் கொடுத்திருக்கேன். சாயங்காலம்

போயி முழு பணமும் கட்டினாதான் ரெடி பண்ணு வோம்னு சொல்லி இருக்காங்க...'

'தந்தூரி சிக்கனா? அத்தனை பேருக்குமா? அந்த வயசானவங்களுக்கு அது ஜீரணமாகுமா?'

'நிர்வாகி சரினு சொல்லிட்டாரே!'

சில நொடிகளுக்கு ரமணன் மௌனித்தான். அப்புறம் தனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாதது போல் பேச்சை மாற்றினான்.

'ஒருமணி நேரம் பர்மிஷனோட கிளம்பி அந்த காரியத்தைக் கவனிச்சிட்டு, வீட்டுக்கு வா-அப்புறமா ஷாப்பிங் போகலாம்.'

'முடியாது-பா. நாளைக்கு லீவு போட்டிருக்கறதால இன்னிக்கு கவனிக்கவேண்டிய வேலைகள் நிறைய இருக்கு. நா வராட்டி என்ன, நீ குழந்தைகள அழைச்சிட்டு போயேன்.'

சம்பாஷணை அத்துடன் முடிந்து விட்டாலும், ரமணனுக்குத் தன் மேல் அதிருப்தி என்பதை புரிந்து கொள்ள முடிந்தது. அந்த கோபத்தின் காரணமாய் 'தந்தூரி சிக்கன், சாப்பாடு எல்லாத்துக்கும் நிறைய செலவு ஆகுமே- பணம் இருக்கா' என்று கூடக் கேட்காதது அவளுக்கு வருத்தமாக இருந்தது.

அட-இவன் காசு யாருக்கு வேண்டும்? அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனாலும், 'உன்னிடம் பணம் இருக்கிறதா?' என்று மரியாதைக்காவது கேட்க வேண்டாமா! அது என்ன அவ்வளவு அலட்சியம்? இவன் சகோதரி குழந்தைகளுக்கு உடைகள் வாங்குவது இவனுக்கு முக்கியம் என்றால், என் தாயாரின் நினைவு தினம் அதை விட எனக்கு முக்கியமானது என்று ஏன் புரிந்து கொள்ள மறுக்கிறான்?



முந்தின நாள் நடந்த பேச்சு வார்த்தை ஆத்திரத்தை அதிகரிக்கச் செய்ய, யமுனா பெருமூச்சுடன் எழுந்தாள்.

அவள் குளித்துத் தயாரான நிமிஷத்தில் ரமணன் உள்ளே நுழைந்தான்.

யமுனா நினைத்ததைப் போலவே அவன் காலை நடையையும் முடித்துக் கொண்டே வந்திருந்தான். உடை நனைந்திருந்தது. முகத்தின் அயர்ச்சி, வியர்வை...

அம்மாவின் நினைவு தினத்தைப் பற்றி ஏதாவது கேட்பான் என்கிற எதிர்பார்ப்புடன் நின்றவளிடம் ஒரு வார்த்தை கூட பேசாமல் அவன் தன் அறைக்குச் சென்றான். எட்டரைக்குள் தயாராகி டிபன் சாப்பிட வந்து உட்கார்ந்தான். அப்போதும் ஒரு வார்த்தை இல்லை.

உன் கோபம் என்னை ஒன்றும் பண்ணாது என்பதை உணர்த்துகிற மாதிரி யமுனா தானாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

'இன்னிக்கு அம்மாவோட 'டெத் டே' ரமணன்'

'ம்.'

'ரத்ததானம் கொடுக்க, நீயும் வரேன்னு சொன்னியே' எப்ப போலாம்?

சாப்பிட்டுக் கொண்டிருந்ததை நிறுத்தாமல் ரமணன் பதில் கூறினான்.

'நா வரலை...!நீ மட்டும் போ'

யமுனா புருவங்களை உயர்த்தினாள்.

'வரலியா ஏன்!'

'எல்லாத்துக்கும் காரணங்களைச் சொல்லிட்டு இருக்க முடியுமா.'

'யமுனா கண்களை இடுக்கிக்கொண்டு அவனை வெறித்தாள்.'

'என் மேல கோவம்னா, அத நேரடியா சொல்றத விட்டுட்டு, ரத்த தானம் செய்ய மாட்டேன்னு பிடிவாதம் பண்றது நல்லா இல்ல ரமணன்...'

'......?

'நேத்து நா ஷாப்பிங் வரலை-னா இத்தனை டென்ஷன்? யு ஆர் சைல்டிஷ்......'

'........'

'வேலய முடிச்சிட்டு வீட்டுக்கு வந்தப்ப நீங்கள்ளாம் வெளில போயிருந்தீங்க...சாப்பிட வரமாட்டீங்கனு பகதூர் சொன்னான். அதனால நா சாப்பிடுட்டு, அம்மாவ பத்தின நினைப்பு அதிகமாகி, மனசு சரியில்லாம போனதால படுக்க போயிட்டேன்... நா செஞ்சதுல என்ன தப்பு?'

'......'

இதற்கும் பதில் கூறாது ரமணன் மெளனிக்க, யமுனா கோபத்தில் குரலை உயர்த்தினாள்.

'திஸ் ஈஸ் ஷியர் நான்சென்ஸ்... இப்ப நா என்ன பண்ணிட்டேன்னு கேக்கறது எதுக்கும் பதில் சொல்லாம இருக்கே?'

ரமணன் கையில் எடுத்த ரொட்டியைக் கீழே வைத்து விட்டு அடிக் குரலில் பேசினான்.

'வேணாம்-வீணா என் கோபத்த அதிகமாக்காத...... இன்னிக்கு உங்கம்மாவோட டெட் அனிவர்ஸி?, இந்த நேரத்துல எதையும் கிளப்ப வேணாம்னு தானே கஷ்டப் பட்டு அடக்கிகிட்டு இருக்கேன்...தயவு பண்ணி எழுந்து போயிடு...'



யமுனா கோபம் மாறாமல் 'ஹ' என்றாள்.

'எங்கம்மா மேல ரொம்ப அக்கறைதான்—பாராட்ட றேன்—பரவாயில்ல...கேக்க வேண்டியத கேட்டுடு.. என் வேதனை அதிகமாகுமென்றதால நீ சிரமப்பட்டு எதையும் அடக்கிக்க வேணாம்...'

ரமணன் எழுந்து வாஷ்பேஸினில் கையைக் கழுவிக் கொண்டான்.

'சொல்லப் போறியா இல்லையா?'

'ஆல்ரைட்—நேத்து ராத்திரி ஊருக்குப் போயிட்டு வரேன்னு உன்கிட்ட அக்கா சொல்லிக்க வந்தப்ப நீ அவங்ககிட்ட என்ன சொன்னே?'

யமுனா புருவங்கள் முடிச்சுப் போட சிந்தித்தாள்.

'என்ன சொன்னேன்?'

'தாலி போட்டுக்கறதப் பத்தி பேச்சு வந்தப்போ?'

'ஓ? அதுவா? நீ ஏன் தாலியே போட்டுக்கறதில்லே'?னு கேட்டாங்க, நா சிரிச்சுகிட்டே 'நீங்க ஏன் போட்டுக் கறீங்க?'னு கேட்டேன்...அதுக்கு...'

அவளைத் தொடர்ந்து பேசவிடாது ரமணன் அதட்டி னான்.

'ஷட் அப் யமுனா-இப்படிப் பேச உனக்கு வெக்கமா இல்ல? உனக்கு தான் தாலி, கணவன், குடும்பம், எதுவும் முக்கியம் இல்லை... ஆனா அக்கா அவைகளைப் பெரிசா மதிக்கறவங்க...வெளிநாட்டுக்குப் புருஷனை அனுப்பிட்டு அவர் நல்லபடியா திரும்பி வரணும்னு கவலைப்பட்டு கிட்டு இருக்கறவங்ககிட்ட போய், ஏன் தாலி போட்டுட்டு இருக்கீங்கனு அச்சான்யமா கேக்கறது உனக்கே நியாயமா

படுதா... படிச்ச பொம்பள பேசற பேச்சா இது? ஏர்போர்ட்ல அக்கா இதச் சொல்லி அழுதிட்டாங்க...சேச்சே வரவர...உன் போக்கும் பேச்சும்... எனக்கு சுத்தமா பிடிக்கல...'

படபடத்தவன் அதற்குமேல அங்கு நிற்கப் பிடிக்காத தினுசில், ப்ரீஃப் கேஸை எடுத்துக் கொண்டு வேகமாய் வெளியேற, ரொம்ப நேரத்துக்கு ஒரு அதிர்ச்சிக்கு யமுனா உள்ளாகி அங்கேயே உட்கார்ந்திருந்தாள்.

பிறகு 'எப்பவும் ப்ராக்டிகலா இரு யம்மூ - மனசாட்சிக்கு விரோதமா நடந்துக்காதே'—என்று அம்மா சொன்ன புத்திமதியை நினைவில் நிறுத்தி தன்னை நிதானப்படுத்திக் கொண்டு சிந்தித்தாள். ரத்ததானம் செய்து, முதியோர் இல்லத்துக்குச்சென்று திட்டமிட்டபடி காரியங்களைச் செய்த போதும் விடாமல் யோசனை செய்தவள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

அதன்படி, வீடு திரும்பி, மாலையில் ரமணன் வரும் வரை காத்திருந்தவள், அவன் உடை மாற்றிக் கொண்டு முன் அறையிலேயே அலுவலக வேலையைக் கவனிக்கத் தொடங்கியதும் எதிரில் வந்து நின்றாள்.

துளி பதறாமல், கலங்காமல் தீர்மானம் செய்து கொண்ட விதத்தல் வார்த்தை வார்த்தையாக வெளியிட்டாள்.

'நாம தப்பு பண்ணிட்டோம், ரமணன்.'



# 28

**யமுனா, ரமணன்**

யமுனா மெதுவாக நடந்து வந்து அவன் கைகளைப் பற்றி மார்பின் மீது வைத்துக் கொண்டாள். கண்களைச் சிமிட்டாமல் அவனை ஏறிட்டு சின்னக் குரலில் பேசினாள்.

'ஐ'ம் ஸாரி ரமணன்...இந்த மாதிரி நீயும் நானும் பேச வேண்டிய அவசியம் வந்திட்டத நினைக்கறப்போ எனக்கு ரொம்ப வருத்தமாதான் இருக்கு...ஆனா, என் ரமணன் புரிஞ்சிப்பான்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கு...ஆறு மாசமா நாம தெரிஞ்சோ, தெரியாமலோ போட்டுக்க துவங்கிட்ட முகமூடிகளைக் கழட்டி வச்சிட்டு பேசலாமா ரமணன்? ரொம்ப மூச்சு முட்டுது...இனியும் வேஷம் போட்டம்னா ஸ்வாசிக்க முடியாம, திணறி செத்துப் போயிடுவமே-னு பயமா இருக்கு...ப்ளீஸ் ரமணன் ஷால் வி டாக்?'

அந்தப் பார்வை, அந்த முகபாவம், அந்த தொனி, அந்த நிதானம், அந்தத் தீவிரம் எல்லாம் சுமார் ஐந்தரை வருஷங்களுக்கு முன் தியஸாபிகல் சொஸைடியின் அடர்ந்த மரங்களூடே நடந்து கொண்டு பேசின யமுனாவை ஞாபகப்படுத்த, ரமணனின் உடம்பு உதறியது. ஒருவித வேகத்தோடு தன்னைப் பிடித்திருந்த அவள் கைகளைத் தானும் பதிலுக்கு அழுத்திப் பற்றியவன் 'சொல்லு' என்பது போல அவளை லேசான பரபரப்போடு பார்த்தான்.

'நா எத பத்தி பேசப்போறேன்-னு உன்னால கண்டிப்பா ஊகிக்க முடியும் ரமணன் ஏன்னா, எனக்குள்ள உண்டாகியிருக்கிற அதே உறுத்தல் உனக்குள்ளும் ஜனிச்சிருக்கும்னு தெரியும். நாம ரெண்டு பேரும் பல விதங்கள்ல முரண்படறவங்கதான், ஆனாலும் ஒரு விஷயத்துல

அவரவர் தனித்தன்மையை இழக்காம, சுயமரியாதை யோட வாழணும்ன்றத கொள்கையாவே வச்சிருக்கற துல-மட்டும் ரொம்ப ஐடென்டிகல்...ஒத்துக்கற இல்லப்பா?'

ரமணன் பதில் கூறாது மௌனிக்க, யமுனா தொடர்ந்தாள்.

'இந்த தனித்தன்மைதான் நம்பளை ஈர்த்து, ஒருத்தரை மத்தவர் விரும்ப வச்சது; காதலிக்கத் தூண்டிச்சு... ஏன்? இப்ப, நாம தப்புப் பண்ணிட்டம்-னு சொல்ல தைரியத்தையும் தந்திருக்கு...என்ன ரமணன், நா சொல்றது, சரிதானே?'

தான் கூறுவதை அவன் மனசார ஏற்றுக் கொள்ள வேண்டுமே என்கிற எதிர்பார்புடன் அவள் நிறுத்த, ரமணன் சட்டென்று நெகிழ்ந்தான்.

இந்தக் குணம் தான். இப்படி மனசில் நினைத்து விட்டதை வர்ணம் பூசி மழுப்பாமல் அப்பட்டமாகப் பேசும் யமுனா தான் முதன் முதலில் தன் வயப்படுத்தி' பாரதி கனவு கண்ட புதுமைப் பெண்ணுக்கு இவள் உயிர் வடிவம் கொடுக்கிறாளா என்கிற வியப்புடன் அவளை மதிக்க, நேசிக்க அவனைத் தூண்டியது.

ரொம்ப நாட்களுக்கு பிறகு அந்த யமுனாவை மறுபடியும் உணர்ந்துவிட்ட மாதிரியான சிலிர்ப்பு நெஞ்சில் பரவ, ரமணன் பிடித்திருந்த பிடியை இன்னும் இறுக்கினான். மெள்ள அவளைத் திரும்பி, கட்டில் அருகே நடத்திச் சென்று, உட்கார வைத்து தானும் நெருங்கி அமர்ந்தான்.

சமாதானப்படுத்தும் குரலில் பேசினான்.

'ஐ'ம் ஸாரி டு யமுனா...கொஞ்ச நாளாவே நானும் சரியா சித்திக்கறதில்ல, நடந்துக்கறதில்லேன்றது தானே



உண்மை? ஐ'ம் ரியலி ஸாரி...நீ யோசிச்சு எது பேசினாலும் அது நிச்சயம் சரியான கோணத்துலேந்துதான் இருக்கும். அதுல எனக்குக் கொஞ்சம்கூட சந்தேகம் இல்ல...ஆனா, யமுனா-வொய் டுடே? இன்னொரு நாள், ஸோ, நாளைக்கே வேணாலும் பேசக் கூடாதா? இன்னிக்கு அம்மாவோட 'டெத் அனிவர்ஸரி' ஏற்கனவே, நா ரொம்ப கேவலமா நடந்துகிட்டேன்ற உறுத்தலோட இருக்கேன். நீ காலைல கேட்ட மாதிரி, உன்மேல கோபம்-னா அத வெளிப்படையாக உன்கிட்ட நானே வெளிப்படுத்தியிருக்கணும். அதவிட்டுட்டு, ரத்த தானம் கொடுக்க மறுத்ததும் அம்மாவோட அனிவர்ஸரி ஏற்பாடுகள்ல கலந்துக்காததும் ஒரு ஆரோக்கியமான சிந்தனை உள்ள மனுஷன் செய்யற காரியமே இல்ல... ஐ வாஸ் மீன்...ஐ'ம் ரியலி ஸாரி...இன்னி பூரா ஆபீஸ்ல ஒரு வேலை செய்ய முடியாதபடி இந்த உணர்வு பிராண்டி எடுத்ததுல நானே உன்கிட்ட மன்னிப்பு கேட்கணும்னு தான் இருந்தேன். ராத்திரி சாப்பிடறப்பவோ, இல்ல படுக்கறத்துக்கு முன்னாலியோ கண்டிப்பா வலிய வந்து 'ஸாரி'னு சொல்லி இருப்பேன். நீ என்ன நம்பறே இல்ல?'

சின்ன பையனின் தவிப்புடன் அவன் வினவ, யமுனா புன்னகைத்தாள்.

அவன் பிடியிலிருந்து ஒரு கையை விடுவித்துக் கொண்டு, அவன் தலைமுடியைக் கோதிவிட்டாள்?

'நம்பாம என்னப்பா? எதுக்காக அனாவசியமா என்கிட்ட நீ பொய் சொல்லணும்? நாம ரெண்டு பேருமே ஒருத்தரை ஒருத்தர் மதிக்கறோமே தவிரவும், உன் மேல எனக்கோ, என்கிட்ட உனக்கோ பயமே கிடையாதே!'

ரமணன் அவள் கூற்றை பலமாக ஆமோதித்தான்.

'அதே மாதிரி வேணும்னே வீம்புக்காக காயப்படுத்தறதும் நம்பளால முடியாத சமாசாரம். அந்த நம்

பிக்கை இருக்கறதாலத்தான் இப்ப உன்கிட்ட நா பேச வந்திருக்கேன் ரமணன்.'

'ஐ அக்ரி வித் யூ—கண்டிப்பா பேசியே தீரணும்—நீ சொன்ன மாதிரி ரெண்டு பேருமே முகமூடி அணியத் துவங்கி ரொம்ப நாளாச்சு—இட் ஈஸ் டைம் தட் வி ரிமூவ் அவர் மாஸ்க்ஸ்...ஆனாலும், இன்னிக்கு அம்மா இறந்த தினம்ன்றதால நீ 'எற்கனவே மனசு நொந்து இருக்கே...இந்த பேச்சுகளும் இன்னிக்கு இருக்கணுமா? இன்னொருநாள் மனசு நிதானமா இருக்கறப்ப வச்சுக்கலாமே, ப்ளீஸ்?'

யமுனா தீர்மானமாய் 'முடியாது' என்று தலை அசைத்தாள்.

'இல்ல ரமணன்-இன்னிக்கு நாம பேசிடறது தான் அம்மாவோட நினைவு நாள்ல நாம செய்யற சரியான காரியம்னு நினைக்கிறேன். அம்மாவுக்கு வேஷம் போட்டா பிடிக்காது. மனசாட்சி ஏற்காத காரியத்த தொடர்ந்து செய்யறது பிடிக்காது. தேவையில்லாம அடுத்தவங்களுக்காக வாழறதும் பிடிக்காது. இதையெல்லாம் தானே நாம கிட்டத்தட்ட ஆறு மாசமா செஞ்சிட்டிருக்கோம்? ஸோ, 'மேக் அப்'ப கலைக்க இது சரியான நேரம்தான்...வேறு ஏதாவது காரணத்துக்காக இப்ப பேச வேணாம்னு நீ சொன்னா, இன்னொரு நாள் வச்சிக்கலாம்...எனக்கு ஆட்சேபனை இல்ல...மனசு தெளிஞ்சு போச்சு ரமணன். இனிமே கோபம் கத்தல் அலுப்பு-எதுவுமே இல்லை...'

ரமணன் அவள் தோளில் பெருமிதத்துடன் தட்டிக் கொடுத்தான்.

'இந்த மாதிரி வேகமா நீ பேசறத கேக்கறப்போ எனக்கு மனசு ஹாஹானு பொங்கிப் போகுது யமுனா—



'பார்ரா' என் யமுனா எத்தனை வித்தியாசமான 'பெண்'னு கத்திகிட்டு குதிக்கணும்னு போல இருக்கு... இல்ல, உனக்கு சரினா, எனக்கும் இன்னிக்கே பேசிடறதுல சம்மதம்தான். கொஞ்ச நாளாவே உன் கிட்ட மனசு விட்டு பேசணும்னு துடிப்பா இருக்கு...அக்கா வந்ததுல அவகாசம் கிடைக்காதது காரணமா, இல்லை, துணிச்சல் வராதது காரணமானு புரியல...'

யமுனா சிரித்தாள்.

'ரெண்டுமே இல்ல ரமணன்-நாம எதுவும் புரியாம குழம்பி இருந்தது தான் காரணம. எனக்குள்ளவும் உறுத்தல் எக்கச்சக்கமா இருந்தது. ஆனா இதுதான் வேணும்னு இதத்தான் செய்யணும்ன்ற தெளிவு இன்னி வரை வரலை...காலைல நீ 'வர வர உன் பேச்சோ, போக்கோ சுத்தமா பிடிக்கலை'னு சொல்லிட்டுப் போனதும் தான் 'இவன் பேச்சும், போக்கும் எனக்கும் பிடிக்கலையே'ஸோ, ரெண்டு பேரும் மனசு விட்டுப் பேசிட்டா என்ன-னு தோணுச்சு. நிதானமா சிந்திச்சேன் குழப்பம் போய் தெளிவு வந்தது...அதான் பேசி ஒரு முடிவு எடுத்திடலாம்னு நேரா உன்கிட்ட வந்திட்டேன்...

ரமணன் எழுந்து, கைகளை முதுகுப் பக்கமாகக் கட்டிக் கொண்டு, இப்படியும் அப்படியும் உலாத்தினான். நடந்த படியே, சிந்தனையோடு பேசினான்.

'உன் பேச்சும், போக்கும் பிடிக்கலைனு சொன்னதால, உன்னையே பிடிக்காம போச்சுனு நீ அர்த்தம் பண்ணிக்க கூடாது. சரியா சொல்லணும்னா, ஐ ஸ்டில் லவ் யு வெரிமச்...ஆயுசு பூரா உன்னை நா காதலிச்சு கிட்டே தான் இருப்பேன். ஆனா, அதுக்காக கூடவே ஒண்ணா இருந்து உன் நடத்தையை ஏத்துக்கணும் மான்றதுதான் கேள்வி. சின்ன வயசுலேந்து நா யோகா, தியானம், நேரம் தவறாத காரியங்கன்னு கண்டிப்பா

வளர்ந்தவன் யமுனா...உன்னை எவ்வளவுதான் நேசிச்சாலும் உனக்காக கூட அந்த பழக்க வழக்கங்களை மாத்திக்கறது எனக்கு சிரமமா இருக்கு...எல்லா விஷயங்களிலும் கட்டுப்பாடே இல்லாம இருக்கறது உனக்கு ஸ்வபாவமாவே ஆயிடுச்சு...என்னால அத ஒத்துக்க முடியல...'

யமுனா எழுந்து வந்து அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

'உன் கஷ்டம் எனக்கு நல்லாவே புரியாதுபா. ஏன்னா, அதே மாதிரி பாரம் தூக்கற ஆயாஸம்தான் 'ஒவர் டிஸிப்ளினால' எனக்குன்னும் உண்டாயிருக்கு... சுதந்திரமா இருக்க முடியாம இரும்புச் சங்கிலிகளைப் பிணைச்சுகிட்ட மாதிரி எப்பப்பாரு மனசுல ஒரு கனம். இஷ்டப்பட்ட, விரும்பியபடி செய்ய முடியாம இருக்கறது ஒரு கூண்டுல அடைச்ச மாதிரியான அவஸ்தைய எனக்கு உண்டாக்கி இருக்குனா, அத உன்னால புரிஞ்சிக்க முடியுதா?'

தோளை உயர்த்தி 'முடிகிறது' என்று செய்கை காட்டிய ரமணன் அரை நிமிஷம் அப்படியே நின்று யோசித்துவிட்டு மெதுவாகக் கேட்டான்.

'எனக்கொரு சந்தேகம் யமுனா... அஞ்சு வருஷம் முன்னால முத முதல்ல பார்த்தப்பவும் சரி, அப்புறமா ஆறு மாசம் முன்னால சந்திச்சப்புறம் சரி, நான் பூரா ஒண்ணா இருப்பமே:அப்ப ஏன் ரெண்டு பேருக்குமே இந்த மூச்சுத் திணறல் வரலை? அப்பவும் கூட நீ உன் குணத்தோடயும் நா என் இயல்போடவும் தானே இருந்தோம்? அப்ப உறுத்தாதது. இப்ப மட்டும் ஏன் வேதனைப் படுத்தது?'

யமுனா அவனெதிரில் நகர்ந்து நின்று கொண்டு தீவிர முகபாவம் மாறாமல் பதில் கூறினாள்.

'மத்தியானம் பூரா இது பத்தி யோசிச்சிட்டிருந்ததால உன் கேள்விக்கு என்னால பதில் சொல்ல முடியும்னு



தோணுது நாம காதலிச்சப்போ நாள் முழுதும், பகல், இரவுனு சேர்ந்து சேர்ந்து எங்க இருந்தோம் ரமணன்? நாலைஞ்சு மணி நேரம் அப்புறம் ஒரு இடைவெளி, மறுபடி சில மணி நேரம்-னு தானே பொழுதைக் கழிச்சோம்? காதலர்களா இருக்கும்போது முகமூடிகள் அணியறது ரொம்ப சுலபம்-ஏன்னா அது கொஞ்ச நேரத்துக்குதான். பிரிஞ்சதும் கழட்டி வச்சிடலாம், மூச்ச முட்டது. ஆனா, கல்யாணமானதும் அப்படி இல்ல- இருப்பத்தி நாலு மணி நேரமும் கூடவே தங்கி, படுத்து, பேசி, சாப்பிட்டு வளையவரும் போது முகமூடிய கழட்டி வைக்க தனிமை கிடைக்காம, மூச்சு திணறத் துவங்கி நம்ப குணத்த பாதிச்சுதில, சிடு மூஞ்சிகளா ஆயிட்டம்னு நினைக்கறேன்.'

'பாஸிபிள்... இப்படி நீ விளக்கம் சொல்றப்ப ஒரு விஷயம் எனக்கு ஞாபகத்துக்கு வருது யமுனா...'

'என்ன?'

'உனக்கு மைக்கேலைத் தெரியுமா? ம்ஹூம்... தெரியாது. அவன் அமெரிக்கால ரொம்ப வருஷம் படிச்சிட்டு இப்ப பாம்பேல இருக்கான். அவனும் அமலான்ற பொண்ணும் ரெண்டு வருஷமா ஒண்ணா ஒரே வீட்டுல கணவன் மனைவி போல வாழறாங்க...லிவ்விங்டு கெதர்...ஆனா, கல்யாணம் பண்ணிக்கல. ஏன்?னு கேட்டப்போ மைக்கேல் 'கல்யாணம்ன்றது ஒரு பந்தம்—உறவு வாழ்க்கைல உறவுகள் பொறுப்பை ஏற்படுத்திடும், பொறுப்பு இருந்தா எதிர்பார்ப்பு தானா வந்திடும் எதிர் பார்ப்பு ஏமாற்றத்துக்கு இடமளித்து கடைசில உறவைக் கசப்பாக்கிடும். அதனால கமிட்மெண்ட் இல்லாம நல்ல ஸ்னேகிதர்களா வாழ்ந்து எதிர்பார்ப்பையும் ஏமாற்றத்தையும் தவிர்க்க விரும்பறோம்'னு மனப்பூர்வமான நம்பிக்கையோட சொன்னான். அப்ப அவன் சொன்னது விளங்கல...இப்ப பட்டப்புறம் புரியுது. ஒரு விதத்துல அவன் சொன்னது நமக்கும் பொருந்தும்னே நா நினைக்

கறேன் கல்யாணத்துக்கு முன்னால நாம எதிர்பார்ப்புகள் இல்லாம இருந்தோம். ஆனா, கல்யாணத்துக்கப்புறம், அந்த உறவு தந்த உரிமைல நமக்காக அடுத்தவர் மாறணும்னு நினைக்க ஆரம்பிச்சுட்டோம். நூத்துக்கு தொண்ணூறு பேர், இதுதான் வாழ்க்கை-னு முடிஞ்ச ரீதில மாத்திகிட்டு இருப்பாங்க. ஆனா, நீயும் நானும் அலாதி தனித்தன்மை கொண்ட இண்டிவிஜிவல்ஸ்' முடியலை...'

யமுனா புன்னகைத்தான்.

'ஸோ? நாம காதலர்களாவே ஆயுசு பூரா இருந்திருந்தா வம்பே வந்திருக்காதுனு சொல்றே—அப்படித்தானே?'

ரமணன் பதிலுக்கு வேதனையுடன் புன்னகைத்தான்.

'ஐ' ம் ஸாரி...'

யமுனா அவன் கையைத் தட்டிக் கொடுத்தாள்.

'நிலைமை இப்படி ஆனதுக்கு என்னமோ நீ மட்டும் தான் காரணன்றமாதிரி 'ஸாரி'னு சொன்னா? இதுல எனக்கும் பங்கு இருக்குப்பா...,

ரமணன் நடந்து அவளைவிட்டு நகர்ந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். விரல்களால் மேஜை மீது தாளம் போட்டான்.

'அஞ்சரை வருஷம் முன்னால ஒன்ணால வாழ முடியாதுன்றத புரிஞ்சுகிட்டு, சென்ஸிபிளா பேசி, நல்ல நண்பர்களா பிரிஞ்சவங்க, திடும்னிட்டு ஏன் மாறி கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சோம்? எதனால ஆறு மாசத்துக்குள்ள 'இது சரிபடாது'னு பேசறதுல வந்து நிக்கறோம் யமுனா? இவ்வளவு ப்ராக்டிகலா சிந்திக்கறவங்க, ஏன் திருமண பந்தம் வேணாம்—னு உறுதியா நிற்கல?'



யமுனா மேஜையின் மேல் உட்கார்ந்து நகங்களை ஆராய்ந்தபடி பேசினாள்.

'இது குறிச்சும் நா யோசனை பண்ணிட்டேன். என்னைப் பொறுத்தவரை அம்மாவ இழந்து ஒரு சூன்யத்துல இருந்தேன். அப்ப உன் நெருக்கம் எல்லா விதத்துலேயும் இதமா இருந்தது'

'எனக்கு அப்படி எந்த 'வலி'யும் இல்லியே யமுனா! ஆனா, இந்த நிமிஷம் நினைச்சுப் பாக்கறப்போ வேலை வேலைனு வேற எதுவும் கவனம் செலுத்தாம தனியா இருந்தவனுக்கு சூழ்நிலைலேந்து ஒரு மாற்றம் இனிமை தந்தது தான் காரணம்?'

யமுனா முன் சாய்ந்து கரிசனத்துடன் சொன்னாள்.

'இன்னொரு முக்கிய காரணத்த மறந்திட்டியே! நாம நிஜமாகவே ஒருத்தர் ஒருத்தர் நேசிக்கறோம்...'

ரமணன் பெருமூச்சொன்றை வெளியிட்டான்.

ஏதோ ஒண்ணோ, இல்ல எல்லாத்துலேயும் கொஞ்சம் கொஞ்சம் சேர்ந்து காரணமாச்சோ? மொத்தத்துல அறிவுபூர்வமா சிந்திக்காம, நாம உணர்ச்சி வசப்பட்டு தப்பான முடிவு எடுத்தோம்—ன்றதுதானே நிஜம்?'

'சரியா சொல்லிட்டே ரமணன்—நீ சொல்றத கேக்கறபோ அங்கிள் ஒரு கதைல 'புத்தியை முடிவெடுக்க விடாமல், ஹிருதயம் தீர்மானம்பண்ண அனுமதித்தாள் னு எழுதியிருக்கறது நமக்குப் பொருந்தும்'

ரமணன் முகவாயைத் தேய்த்துவிட்டுக் கொண்டான்.

'நம்ப 'சரி'னு நினைக்கறத மத்தவங்களும் அதே ரீதில ஏத்துப்பாங்கனு எதிர்பாக்கறியா?'

யமுனா உதட்டைப் பிதுக்கினாள்

'தெரியாது...எடுத்துக்கலாம்—புரிஞ்சுக்காம சண்டை போடலாம். எதுவானாலும் ஐ ரியலி டோண்ட் கேர்... அம்மா சொன்ன மாதிரி அடுத்தவங்களுக்காக நம்ம விருப்பு வெறுப்புகளை ஒதுக்கிட்டு எத்தனை நாள் வாழ முடியும்? அது வேஷம்...என்னால முடியாதுப்பா...

'என்னாலயும்தான்...அது சரி ரெண்டு பேருமே யதார்த்தத்தை ஒத்துக்கறது சந்தோஷமா இருக்கு மேற்கொண்டு என்ன செய்யலாம்?'

'நீ சொல்லு...-

ரமணன் எட்டி அவள் கையைப் பற்றினான்.

முடிவு எதுவானாலும், காயப்படாம எடுத்துப்பியா?

யமுனா வேண்டுமென்றே தன் இயல்புப்படி தலையை பின்னுக்குத் தள்ளி சிரித்தாள்.

'நான் பூரா 'ப்ராக்டிகலா இரு—மனசாட்சிக்கு விரோதமில்லாம நடந்துக்க'னு அம்மா சொன்ன வார்த்தைகள் காதுலியே ஒலிக்கக் கொண்டுதானே வலிய வந்து பேச்செடுத்தேன். சொல்லு...நீ எடுக்கற முடிவுல நிச்சயம் எனக்கும் சம்மதம் இருக்கும்ன்ற நம்பிக்கை இருக்கு...

ரமணன் தயக்கமில்லாமல் சொன்னான்.

'முன்ன எடுத்த அதே முடிவுதான் யமுனா...'

'நண்பர்களா பிரியறதா?'

'எஸ்'

யமுனா எழுந்து நின்று அவன் கையைப் பிடித்துக் குலுக்கினாள்.



'மனப்பூர்வமா ஒத்துக்கறேன்'

ரமணன் அவள் கையை விடாமல் கேட்டான்.

'வருத்தமா இருக்கா?'

'எஸ்...ரொம்ப...ஆனா. அது இந்தத் தீர்மானத்தால இல்ல...முதல்ல யோசிக்காம நடந்துகிட்டமேனு'

'எனக்கும்...'

இரண்டு நிமிஷம் அப்படியே நின்று ஒருவரை ஒருவர் வெறித்தார்கள்.

பின் 'மனசு இப்ப லேசா இருக்கு ரமணன்...இப்போதைக்கு இவ்வளோ போறும்...பாக்கியை நாளைக்கு நிதானமா பேசிக்கலாம்' என்று யமுனா கூறியதும், அவளை அருகில் இழுத்து அணைத்து, வகிட்டில் ஒருதரம் மென்மையாய் ரமணன் முத்தமிட்டான்.

'குட்நைட் ரமணன்.'

'குட்நைட் யமுனா...'

சரியாக ஐந்தரை வருஷங்களுக்கு முன் எங்களைப் போல இந்தனை விவேகம். யதார்த்த கண்ணோட்டத்தோடு எத்தனை பேர் இருப்பார்கள் என்கிற புளகாங்கிதம் வலியையும் மீறிக்கொண்டு எழுந்தது போல இப்போதும் தலை தூக்குவதை உணர முடியும். சந்தோஷத்தோடு யமுனா அறையைவிட்டு வெளியேற, அதற்குத் துளியும் குறையாத அதே பெருமிதம் நெஞ்சில் முட்டியதால் மேற்கொண்டு எந்த வேலையும் செய்யப் பிடிக்காமல், விளக்கை அணைத்துவிட்டுச் சில வாரங்களாய் தோன்றி இருந்த ஹிம்சை மறந்து விட்ட நிம்மதியுடன் ரமணனும் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்க முனைந்தான்.

# 29

**நான்**

மண்ணாங்கட்டி...

ஷீயர் நான்சென்ஸ்—

போதை மருந்து, ஆல்கஹால் என்று எதையாவது அளவுக்கு மீறி எடுத்துக் கொண்டு விட்டு, அந்த போதையில், தன் நிலை மறந்து, மூளையைக் கழற்றி வைத்து விட்டு எழுதியிருக்கிறார்களா!

அப்படியே ஏதோ கோளாறு, அதான் இப்படி ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், இரண்டு பேருக்குமா ஒரே சமயத்திலா புத்தி பிரண்டு போயிருக்கும்? கடிதத்தை இருவரும் சேர்ந்து அல்லவா எழுதியிருக்கிறார்கள்!

அவநம்பிக்கையும், ஆத்திரமும் ஒன்றாக எழ மறுபடியும் கையிலிருந்த கடிதத்தைப் படித்தேன்.

'அன்பான அங்கிள் ஸர்,

இந்தக் கடிதம் உங்களுக்கு அதிர்ச்சியைத் தரலாம். ஆனாலும் நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்கிற நம்பிக்கை முழுமையாய் இருப்பதால் விவரத்தை உங்களுக்குத் தெரிவிக்கிறோம். (எப்போதும் போல இதை முதவில் அறிந்து கொள்பவரும் நீங்கள் தான்!)

நாங்கள் தவறு செய்துவிட்டோம். எஸ்-துளி குழப்பம் இல்லாமல் இப்படி ஒப்புக் கொள்ள நேர்ந்தது குறித்து எங்களுக்கு எந்தவித தயக்கமும் இல்லை-சரியாகச் சொல்ல வேண்டும் என்றால், தவறு செய்துவிட்டோம் என்பதை உணர்ந்த பிறகும், அதை ஏற்கத் துணிவில்லாமல் காலங்கடத்துபவர்கள் போல அன்றி, தெளிவோடு யதார்த்த நிலையை எதிர்நோக்க நாங்கள் முனைந்தது எங்களுக்கு நிறைவையே தருகிறது. 'கையில்புண் இருந்தால் அதை இனம்கண்டு கொண்டு, உடனடியாய் சிகிச்சை பெறுவதுநல்லதா, அல்லது, 'புண்ணா என் கையிலா? இல்லையே, என்று அசட்டுப் பிடிவாதம் பிடித்து, புண்ணை சீழ் கோக்க வைத்து கையையே இழப்பது விவேகம்?'—என்று நீங்களே ஒரு கட்டுரையில் எழுதியிருக்கிறீர்கள், அதன்படி பிரச்னை உண்டாகி விட்டதை ஒப்புக்கொண்டு புத்திசாலித்தனத்தோடு நடக்க நாங்க தீர்மானித்து விட்டோம்.

காதலர்களாக இருந்தபோது எழாத பிரச்னைகள், ஒருவருடன் ஒருவர் சதா சர்வகாலம் கணவன், மனைவியாக வாழ முற்பட்டதும் எங்களிடையே எழுந்து, இருவருமே பொறுப்பான தாம்பத்திய வாழ்க்கைக்கு ஏற்றவர்கள் இல்லை என்கிற உண்மையை உணர்த்திவிட்டன

முன்பு நிச்சயம் ஆனபிறகு தலை எடுத்து, நிலைமையைப் புரியவைத்து, நல்ல நண்பர்களாகப் பிரியவைத்த விவேகம், இந்தமுறை ஏனோ காலந் தாழ்ந்து எங்களைச் சந்திக்க வைத்துவிட்டது மறுபடியும் உங்கள் எழுத்துக்களைதான் உதாரணம் காட்ட வேண்டிவருகிறது- 'புத்தி பூர்வமாக முடிவை எடுக்காமல் நாங்கள் ஹ்ருதய பூர்வமாக தீர்மானம் செய்தது -தவறுதான். நடைமுறைக்கு ஒத்துவருமா என்று எண்ணிப் பார்க்காமல், உணர்ச்சிகளுக்கு முதலிடம் கொடுத்துவிட்டோம்-தவறுதான்.

ஆனாலும், சிந்தித்துப் பார்த்தபோது கணக்கு தப்பாகி விட்டதை இரண்டு பேராலுமே மனப்பூர்வமாய் உணரமுடிய, போனது போகட்டும், இனியாவது தெளிவுடன் செயல்படுவோம் என்கிற உறுதியுடன் மீண்டும் நாங்கள் நல்ல நண்பர்களாகப் பிரிய முடிவு எடுத்து விட்டோம்.

**Better late than never**-உண்மைதானே?

எங்கள் தீர்மானம் எந்த விதத்திலாவது உங்களை வருத்தினால். வி ஆர் ஸாரி—

வேறு என்ன சொல்ல?

அன்புடன்,

யமுனா,

ரமணன்-

படித்து முடித்தபோது கைவிரல்கள் லேசாக நடுங்குவதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

கடிதத்தைக் கண்டம் துண்டமாகக் கிழித்து எறிந்து 'முட்டாள்களே!' என்று உரக்க கத்த வேண்டும் ஃபால இருந்தது.

என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், இவர்கள் மனசில்?

வாழ்க்கை என்பது விளையாடும் சமாசாரமா, வேண்டுமென்றால் காதலிக்க, மணக்க, வேண்டாம் என்றால் ஓகே-நண்பர்களாகப் பிரியலாம்-என்று கூறி விலக.

இருவருமே-ஸ்ட்ராங் மைண்டட் இன்டிவிஜிவல்ஸ், அலாதி தனித்தன்மை, துணிச்சல் நிறைந்தவர்கள் அறிவு ஜீவித்தனத்தோடு சிந்திக்கக் கூடியவர்கள்;

இருந்தாலும்? மேடு பள்ளங்கள் நிறைந்த வாழ்க்கையில் விட்டுக் கொடுப்பதும், கேட்டு வாங்குவதும, அனுசரித்துச் செல்வதும் ஒரு அங்கம் என்பதை உணராவிட்டால் என்ன புத்திசாலித்தனம் இருந்து என்ன?

ம்ஹூம்.

கோபம் தணியாமல் எழுந்து ஜன்னலருகில் சென்றபோது டாக்டர் டயர் என்கிற மேல்நாட்டு மனயியல் நிபுணரின் கருத்து ஞாபகத்துக்கு வந்தது.



'ஒருவர் அதி மேதாவியாய் இருந்து, பெரிய படிப்பு படித்து பல பட்டங்களை வாங்கியிருக்கலாம், ஆனாலும், எதைச் செய்தால் நிம்மதிவரும்; தனக்கு எது வேண்டும், வேண்டாம்; எது ஒத்துக்கொள்ளும், கொள்ளாது போன்ற அடிப்படை விஷயங்களைக்கூட புரிந்து கொள்ள முடியாமல் வாழ்க்கையோடு முரண்டிக் கொண்டே இருப்பவராயின், அந்த மெத்தப் படித்த நபரைவிட யதார்த்தம் புரிந்து வாழ்க்கையை அதுவரும் விதத்திலேயே ஏற்றுக் கொண்டு சந்தோஷத்தையும், நிம்மதியையும் நிலை நிறுத்திக் கொள்ளும் படிப்பற்ற நபர் நிச்சயம் புத்திசாலி தான்!'

நிஜம்.

சந்தோஷத்தையும், நிம்மதியையும் இழந்துவிட்டு வெறும் தனித்தன்மையையோ, அறிவுஜீவித்தனத்தையோ தக்க வைத்துக் கொள்வதில் அர்த்தம் என்ன?

மேஜையிடம் திரும்பி வந்து கவிழ்ந்து உட்கார்ந்து கொண்டேன்.

சிந்தனை புரண்டு புரண்டு படுத்தது.

யமுனா, ரமணன் கண்ணோட்டத்திலிருந்து விஷயத்தைப் பார்க்க முனைந்து எதிர் கேள்வி கேட்டது.

இப்படி விலகுவதில்தான் அவர்களுக்கு நிம்மதி என்றால், தம்தம் தனித்தன்மையை விட்டுக் கொடுக்காமல் இருப்பதில்தான் அவர்களுக்குச் சந்தோஷம் என்றால், அதைப் புரிந்து கொள்ளாமல், பழிப்பது நியாயமா?

உதட்டைக் கடித்து முகவாயை நீவி விட்டுக் கொண்டேன்.

விலகுவதினால் அவர்களின் தனித்தன்மை பாதுகாக்கபடும் என்கிற நம்பிக்கை எனக்கு எழுந்தால், யமுனா

ரமணன் செய்வது அவர்களைப் பொருத்தவரை சரியானது என்று ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால், எங்கே?

அற்புதமான நட்பினால் ஆறு வருஷங்களுக்கு முன் ஈர்க்கப்பட்டவர்கள் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்தார்கள். குழந்தை பெறுவது பற்றின பேச்சு எழுந்ததும் இவள் வேணும் என்று ஆசைப்பட, அவன் வேண்டாம் என்று பிடிவாதம் பிடிக்க, நாம் எதிர் எதிர் ரசனை கொண்டவர்கள். நண்பர்களாகப் பிரிவதுதான் நல்லது என்று தங்களுக்குள்ளேயே முடிவுசெய்து பிரிந்தனர். அப்புறம் பேச்சு வார்த்தை எதுவும் இல்லாமல் முழுசாய் ஐந்து வருஷங்கள், தொடர்ந்து டெல்லியில் எதிர்பாராமல் சந்திப்பு. மறுபடியும் கல்யாண ஆசை. குழந்தை இல்லாமல் இருக்கக்கூட நான் தயார் என்று யமுனா கூற, 'வேணுமானால் ஒண்ணு பெற்றுக் கொள்ளலாம்' என்று ரமணன் சொல்ல, மஹா சந்தோஷத்தோடு புருஷன் மனைவியானார்கள். ஆனால், ஆறு மாசம் போவதற்குள் நாம் ஒருவரோடு ஒருவர் இருப்பது சரிபட்டு வராது. திருமண பந்தம் ஏற்றதல்ல-பிரிந்து விடலாம்' என்கிற தீர்மானத்துக்கு ஒருமனதாக வந்திருக்கிறார்கள்! முதலில் சந்தோஷம் இதுதான் என்று நம்பி திருமணத்திற்குச் சம்மதித்தவர்கள் பிறகு 'இல்லை' பிரிவதுதான் 'நிம்மதி' என்று விலகினார்கள். மறுபடி 'இணைவது மகிழ்ச்சி தரும்' என்று கல்யாணம் செய்து கொண்டார்கள். இப்போது 'தவறு செய்து விட்டோம் தனித்து இருப்பதுதான் சரியானது' என்கிற தீர்மானத்துக்கு வந்திருக்கிறார்கள்.

ஆக, இன்னும் இவர்களுக்கு எது சந்தோஷம், எது நிம்மதி என்று புரியவில்லை என்பதுதான் நிஜமோ? இப்படி நாளுக்கு ஒரு கருத்துடன் இருப்பது எந்த அளவுக்கு வாழ்க்கையில் அவர்களுக்கு உதவப் போகிறது!



யோசித்த வரையில் கன்ஸிஸ்டென்ஸி—'நிரந்தர கருத்துக்கள்'-இல்லாமல் போனதே இருவரின் குணத்திலும் காணப்படும் மிகப்பெரிய குறை என்று தோன்றியது

கன்ஸிஸ்டென்ஸி-குணம், சிந்தனையில் நிரந்தரம்- இது எந்த அளவுக்கு ஒருவருக்கு அவசியம்? சிந்தித்தேன்.

ஒரு நபர் என்றைக்கும் மாறாமல் இருப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை மாற்றம் இருந்தால் தான் வளர்ச்சி என்பதால் மனமாற்றம் மிக, மிக அவசியம்- இல்லாவிட்டால் மனிதன் பாசி பிடித்த குட்டையாகி விடுவான், நிச்சயம். ஆனால், எந்த ஒரு மாற்றமும் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமே தவிர வீழ்ச்சிக்கு அல்ல.

யமுனாவும் ரமணனும் அபிப்ராயங்களை அவ்வப்போது மாற்றிக் கொண்டே இருப்பது, நிச்சயம் அவர்கள் வளர்ச்சிக்கு உதவுகிறது என்று ஏனோ என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அதி புத்திசாலிகளாகவும், அடிப்படையில் நல்லவர்களாகவும் இருந்தும், யதார்த்தமாகச் சிந்தித்து, வாழ்க்கையை அது வரும் விதத்திலேயே ஏற்க முற்படாமல், முரண்டிக் கொண்டு நிற்கிறார்களே என்று வேதனையாக இருந்தது. இந்த முரண்டலின் காரணமாய் வீணாகக் காயப்படப் போகிறார்களே என்று கவலையாகவும் இருந்தது. கூடவே, தங்களுக்குத் தான் எல்லாம் தெரியும் என்று கண்ணைக் கட்டிவிட்ட குதிரைகளாக நடந்து கொள்வதில் பல நல்ல விஷயங்களை இழக்கிறார்களே என்று வருத்தமாகவும் இருந்தது.

ப்ரச்னைகளோ, மேடு பள்ளங்களோ இல்லாத வாழ்க்கை இல்லை என்பதைப் போல, விட்டுக்கொடுத்து, அனுசரித்துப் போகாவிட்டால் அந்த வாழ்க்கையிலும்

நிம்மதி காண முடியாது என்கிற உண்மையை ஏன் யமுனாவும், ரமணனும் புரிந்து கொள்ளவில்லை?

வேதனை, தவிப்பாக மாற எழுந்து உலாத்தினேன்.

விலக எது காரணமானது!

முன்பு குழந்தை, இப்போது? அதே தானா?

இருக்காதே—'இந்த விஷயத்தில் நாங்கள் மாறி விட்டோம்' என்று என்னிடம் அவர்களே கூறினார்களே!

அப்புறம்?

புரியவில்லை.

யோசித்த வரையில் குழப்பம் அதிகமாயிற்று உடனேயே டெல்லிக்குத் தொடர்பு கொண்டு அவர்களிடம் பேசி காரணத்தைத் தெரிந்து கொள்ள முடிந்தால் தேவலை போல மனசு பரபரத்தது.

யமுனா, ரமணன் இருவருமே தெளிவோடு கடிதத்தை எழுதியிருப்பதிலிருந்து அவர்கள இடிந்து போய் உட்காரவில்லை என்று உணர முகவாயை நிமிர்த்திய வண்ணம் உணர்ச்சி வசப்படாமல் அறிவு பூர்வமாக எங்களைப்போல எத்தனை பேர்களால் சிந்திக்க முடியும்?" என்கிற' பெருமை கண்களில் வெளிச்சம் போட அவரவர் வேலையைக் கவனிக்கச் சென்றிருப்பார்கள்—நிச்சயம்

நான் ஊகித்தது சரி என்பது மட்டுமல்ல, என் எதிர்பார்ப்புக்கு ஒருபடி மேலேயே போய் தங்கள் தனித்தன்மையை நடவடிக்கைகளில் காட்டியிருக்கிறார்கள் என்பதும் இரவு எட்டுமணி சுமாருக்கு டெல்லியை கூப்பிட்டபோது புரிந்தது.

ரமணன் மட்டும் வீட்டில் இருந்தான்.

பேசுவது நான்தான் என்று தெரிந்ததும் அடக்கத்துடன் 'விஷ்' செய்தான் தானே தொடர்ந்தான்.



'எங்க லெட்டரைப் பார்த்ததும் நீங்கபோன் பண்ணுவீங்கனு நாங்க எதிர்பார்த்தோம் ஸர்...'

அந்தப் பணிவும், மரியாதையும் வேண்டியிருக்காமல் 'என்ன ரமணன் இது பெரிய குண்டா தூக்கிப் போட்டுட்டு' ஒண்ணுமே நடக்காத மாதிரி 'குட் ஈவினிங்ஸர்'னு விஷ் பண்றே?' என்றேன் அதட்டலுடன்...

'ஐ'ம் ஸாரி ஸர். உங்க வருத்தம் எனக்குப் புரியுது. ஆனா, இந்த முடிவு தவிர்க்க முடியாது.

'மண்ணாங்கட்டி! ஆறு மாசம் போறதுக்குள்ள முடியும், முடியாதுனு புரிஞ்சு போச்சா? என்னப்பா பேசற? கல்யாணம்ங்கறது ஆயிரம்காலத்துப் பயிர்-அதுல பல தினுசான அனுபவங்கள் இருக்கத்தான் செய்யும். ஒதுக்க வேண்டியத ஒதுக்கிட்டு, எடுத்துக்க வேண்டியத எடுத்துக்கிடறதுதானே விவேகம்? என்ன ஆச்சு உங்க ரெண்டு பேருக்கும்? யு லவ்ட் ஈச் அதர் ஸோ மச்...'

ரமணன் மென்மையாகக் குறுக்கிட்டான்.

'ஸர் ஒரு சின்ன திருத்தம்...வி லவ்ட்' இல்ல, வி ஸ்டில் லவ் ஈச் அதர்'நாங்க ஒருத்தரை ஒருத்தர் இன்னமும் நேசிக்கறது நிஜம் ஸர்...'

எனக்குத் தலையைச் சுற்றியது.

காதல் இருக்கிறது,ஆனால் சேர்ந்து வாழும் அளவுக்கு இல்லை; ஒருவரை மற்றவர் நினைத்தால் மனசு ஹா ஹா என்று அன்பில் உருகுகிறது. ஆனால், சின்னச் சின்ன விஷயங்களில் விட்டுக் கொடுக்கும் அளவுக்கு இல்லை. அப்படித்தானே?

ரமணன் பேசப் பேச அதில் தெரிந்த முரண்பாடுகள் என் கோபத்தை அதிகமாக்கின.

அவனோடு பேச பிடிக்காமல் 'யமுனாவைக் கூப்பிடு. என்றேன்.

'ஸாரி ஸர் அவ இங்க இல்ல...'

'இல்லியா...வெளிய போயிருக்காளா.'

'இல்ல ஸர் எப்போ புருஷன் மனைவியா வாழ வேணாம்னு தீர்மானிச்சிட்டமோ அப்புறம் இங்க இருக்கறது சரியில்லனு, சாமான்களோட வெளிய போயிட்டா...'

'எங்க?'

'தனியா ஃபிளாட் கிடைக்கற வரைக்கும் ஜன்பத்ல தான் தங்குவானு நினைக்கறேன். ஏன்னா, அவளை சாமான்களோடு அங்க தான் எறக்கிட்டு வந்தேன். இப்போதைக்கு உடனே சந்திக்க வேணாம்னு நினைச்ச தால, இதுக்கு மேல் மத்த விவரங்கள் எனக்குத் தெரியாது ஸர்... 'ஐ'ம் ஸாரி...'

பத்தாம் தேதி பிரிவது என்கிற தீர்மானத்துக்கு வந்தார்களாம். பன்னிரண்டாம் தேதி எனக்குக் கடிதம் எழுதிப் போட்டுவிட்டு, அன்றே சாமான்களோடு யமுனா கிளம்பி விட்டாளாம்...

இத்தனை வருஷங்களாய் ரமணன் மீது நான் வைத்திருந்த மதிப்பில் சின்னதாய் ஒரு கறுப்புப் புள்ளி விழுந்து விட்ட மாதிரி தோன்ற,மேற்கொண்டு ரொம்ப பேசாமல் தொடர்பைத் துண்டித்தேன்.

ஒரு நிமிஷம் அப்படியே உட்கார்ந்து கொஞ்சம் ஆஸ்வாசப்படுத்திக் கொண்டபின், ஜன்பத் ஹோட்டலின் நம்பரைச் சுற்றினேன்.

யமுனா அறையில் இருந்தாள்.



'ஹலோ அங்கிள்' என்றாள் உற்சாகமாய். எதுவுமே நடக்காத தினுசில்.

'என்ன யமுனா இது?'

'என்ன அங்கிள்?'

வெளையாடாதே...நா நிஜமாகவே அப்ஸெட் ஆயிருக்கேன்...என்ன ஆச்சு உங்க ரெண்டு பேருக்கும்?'

'ஒண்ணும் ஆகல அங்கிள்... 'காலுக்கொதவாத செருப்பை கழட்டி எறினு பழமொழியே இருக்கே! மாரிட் லைஃப் ஒத்துக்கல்ல...விலகிட்டோம்...ஸிம்பிள்...'

குரலை உயர்த்திக் கத்தினேன்

'எதுமா ஸிம்பிள்? காதலிக்கறதும் விலகறதுமா?'

யமுனா மௌனித்தாள். என் கத்தலும் கேள்வியும் அவளைக் காயப்படுத்தி விட்டதை உணர முடிய நான் குரலைத் தழைத்தேன்.

'ஐ!ம் ஸாரி யமுனா...லெட்டர் வந்ததுலேந்து ஒரேயடியா குழம்பிப் போயிட்டேன். அந்த அதிர்ச்சியில கடுமையா பேசிட்டேன்...'

'பரவாயில்ல அங்கிள்-உங்களுக்கு இல்லாத உரிமையா? ஆனா, நீங்க கூட, ;பிராக்டிகலா இருக்க வேண்டி நாங்க எடுத்த முடிவ புரிஞ்சுக்கலையே-னு வருத்தமா இருக்கு...'

வெளிப்படையாக யமுனா குற்றம் சாட்டியதும் சமாதானம் செய்யும் முயற்சியில் இதமாகப் பேசினேன்.

'நாளைக்கு டெல்லிக்கு வரட்டுமா யமுனா, வந்து, உன்னோட நாலு நாள் தங்கி. உங்க ப்ராப்ளம் என்னனு தெரிஞ்சுக்கிட்டு, ரமணன் கிட்ட பேசி...'

என்னை முடிக்கவிடாமல் யமுனா குறுக்கிட்டாள்.

'ஸாரி அங்கிள்... ...அதுக்கெல்லாம் அவசியமே இல்ல......விஷயம் முடிஞ்சு போயாச்சு...இனிமே அது குறிச்சு எதுவும் செய்யறதுக்கில்ல ப்ளீஸ் அண்டர்-ஸ்டாண்ட்டே வேணாம்னு ஆயிடுச்சுன்னா விலகிடணும் அங்கிள்...நம்ப அன்பை யாருக்காகவும் எதுக்காகவும் மலிவு சரக்காக்கிடக் கூடாது'னு நீங்களே எழுதியிருக் கிங்கதானே?'

'அன்பு வேணாம்னு சொல்றவங்களுக்குதான் அந்த கருத்து பொருந்தும்...உங்க விஷயத்துல அப்படி இல்லையே!' நீங்க ஒருத்தரை ஒருத்தர் இன்னமும் நேசிக் கிறதா ரமணன் சொன்னானேம்மா?'

'கரெக்ட்...ஆனா காதல் இருக்குன்றதுக்காக சுயமரி யாதைய, 'ஸெல்ஃப் ஐடென்டிய' விட்டுட முடியுமா? அங்கிள்?'

அதே குதர்க்க வாதம். சற்று முன் ரமணன் பெரிய வார்த்தைகளுக்குச் சற்றும் குறையாத அழுத்தத்தோடு வெளிப்பட்ட கருத்துக்கள்,

எனக்கு எரிச்சலாக இருந்தது.

தூங்குபவர்களைத்தான் எழுப்ப முடியும் உறங்குவது போல பாசாங்கு செய்பவர்களை?

'ஹூம் முடியாது. முடியவே முடியாது.

எனக்கு— எல்லாம்— தெரியும்—நீ யார்...எனக்கு— புத்தி சொல்ல? என்று எடுத்தெறியும் போது அப்புறம் பேச என்ன இருக்கிறது?

'ரமணன் கிட்ட பேசினீங்களா அங்கிள்?'

'ம்'



'நா ஜன்மத்ல இருக்கறத அவன்தான் சொன்னானா?'

'ம்'

ஒற்றை வார்த்தையில் பதில் கூறியதிலிருந்து யமுனா என் வருத்தத்தைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்...

'அங்கிள்' என்றாள் சின்ன குரலில்...

'ம்'

'ஸாரி அங்கிள்...உங்களுக்குப் பிடிக்காதத செஞ்சு உங்கள நோக அடிக்கணும்ன்றது எங்க நோக்கமே இல்ல...இப்படி முடிவு எடுக்கறதத் தவிர எங்களுக்கு வேற வழி தோணல...ஆயுசு பூரா முகமூடி மாட்டிகிட்டு, போலியா வாழறத விட, இது மேல்னு தோணிச்சு... ப்ளீஸ், அண்டர்ஸ்டாண்ட் அப்புறம், உங்களை ஏன் டெல்லிக்கு வர வேணாம் சொன்னேன்னா, இன்னும் ரெண்டு நாள்ல சிங்கப்பூர், மலேஷியா போக திட்டம் போட்டிருக்கேன். ஒரு க்ரூப் ட்ராவல் குழுவோட மானே ஜரா போக முன்னயே கம்பனில கேட்டாங்க—அப்ப போகல...இப்ப ஒத்துக்கிட்டேன்...பத்து நாள் எனக்கு வித்தியாசமா பொழுது போகும் நல்ல ஐடியா இல்ல அங்கிள்?'

பழைய உற்சாகத்தோடு நீளமாய் யமுனா பேசிக் கொண்டே போக தாடை இறுக நான் மௌனித்தேன்.

இனி பேச என்ன இருக்கிறது? தீர்மானம் செய்து விட்டார்கள்; மேற்கொண்டு செய்ய வேண்டியவைகளில் இருவருமே அலாதி தெளிவு காட்டுகிறார்கள். பெரியவர், எங்கள் பால் அன்பு வைத்திருப்பவர் என்கிற மரியாதை யில் நடந்தவற்றை உங்களுக்குத் தெரிவிக்கிறோம். அவ் வளவே, இது நாங்கள் இருவர் மட்டுமே சம்பந்தப்பட் —து. இதில் நீங்க தலையிட வேண்டாம் என்று துல்ய

மாய் கோடி காட்டி விட்ட பிறகும் நான், நான் என்று மூக்கை நுழைப்பதற்கு இனி இடமே இல்லை.

,ஆல் தி பெஸ்ட் யமுனா' என்று கூறி ரிஸிவரை வைத்தபோது என் கண்கள் கலங்கின.

'அருமையான பெண், அறபுதமான ஆணாக இருந்தும் என்ன பயன்? அனுசரித்துப் போதல் என்கிற குணம் இல்லாமல் போனதில், தங்கள் தலையில் தாங்களே மண்ணை வாரி போட்டுக் கொள்கிறார்களே'

இனி, அடுத்து இவர்கள் என்ன செய்வார்கள்?'

யமுனா, 'பயணக்குழு ஒன்றுடன் சிங்கப்பூர் மலேஷியா போகப் போகிறாள். அது வெற்றிகரமாக அமைந்து விட்டால் ஜப்பான். ஆஸ்திரேலியா, லண்டன். யு எஸ் ஏ. என்று செல்ல கூட வாய்ப்பு கிட்டும்தான்-சரி-அப்புறம்? எத்தனை நாளைக்கு இந்த ஓட்டம்?

ரமணன் முன் போல ஆபீஸ் வேலைகளில் தன்னை மூழ்க அடித்துக் கொள்வான்' பதவி உயர்வு பெறுவான் பணம், வசதி கூடும்...ஒகே—பிறகு?

நின்று நிதானமாய் யோசித்தபோது யமுனா, ரமணனை நான் அறிந்த வரையில் மேற் சொன்ன வாழ்க்கையும் சீக்கிரமே அவர்களுக்குச் சலிப்பைத் தர துவங்களாம் என்றே தோன்றியது...அப்படி அலுக்கத் துவற்கினால் அப்போது என்ன செய்வார்கள்?

மனசை அடைத்துக் கொண்டு எழுந்த கேள்விக்கு அன்று கிடைக்காத விடை ஐந்து மாசங்கள் கழித்து. அந்த ஜனவரி ஒண்ணாம் தேதி இலைமறைவு, காய் மறைவாக கிடைத்தது.



# 30

**நான்**

எதிர்பார்க்கவில்லை.

இப்படி இரண்டு பேரும், அடுத்தடுத்து, சற்றும் முன்னறிவிப்பு இன்றி என்னோடு ஒரே நாளில் தொடர்பு கொள்வார்கள் என்று...

ரமணன் போன் செய்ததில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை. எங்களுக்கு அறிமுகம் ஆனபிறகு வருஷாவருஷம் ஜனவரி முதல் தேதி அன்று நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் தொடர்பு கொண்டு 'புத்தாண்டு வாழ்த்துக்கள் ஸர்' என்று வாழ்த்துவது வழக்கம்தான் என்பதால் இன்று அவன் பேசியது புதுசு இல்லை.

ஆனால்,யமுனா தொலைபேசியில் அழைத்து'ஹாப்பி நியு இயர் 'அங்கிள்' என்று கூறியது நிச்சயம் வியக்க வேண்டிய சமாசாரமே.

யமுனாவா! புத்தாண்டு வாழ்த்து தெரிவிக்கிறாளா?-என்கிற ரீதியில் என் புருவங்கள் உயர்ந்ததை டெல்லியிலிருந்து பார்க்க முடிந்த மாதிரி யமுனா சிரித்தாள் பின் அந்தச் சிரிப்பு குரலில் விரவ 'நம்ப முடியலையா, அங்கிள்?' என்றாள்.

எப்படி நம்புவது? அவளை நான் அறிந்த நாளாக அவளுடைய சிந்தனைகள், நம்பிக்கைகள், கொள்கைகளையும் நன்கு அறிவேனே, அப்புறம் இது என்னடா புது மாற்றம் என்று திகைக்காமல் வேறு என்ன செய்வது?

'எனக்கு நம்பிக்கை இல்லாட்டாலும், உங்களுக்கு இருக்கே இங்கின்? அதனால, உங்களைச் சந்தோஷப் படுத்தவாவது நா 'விஷ்' பண்ணலாம் இல்லியா? 'விட்டுக் கொடுத்து வாழறதுதான் சந்தோஷத்தை அதிகரிக்கும்'னு சொல்லுவீங்க இல்ல, அது நினைப்புக்கு வந்தது, போன் பண்ணேன். எப்படி இருக்கிங்க அங்கிள்?'

யமுனா மாறிவிட்டாளா-மறுபடியுமா!

நாலைந்து மாசங்கள்கூட ஆகவில்லை அதற்குள் தனிமை அலுக்கத்துவங்கி விட்டதா?

இல்லாவிட்டால் அன்று நான் அவளோடு தொடர்பு கொண்டு பேசிய பின் இத்தனை நாட்கள் என்னைப் பற்றின நினைப்பே இல்லாத மாதிரி நடந்து கொண்டு விட்டு இன்று திடுமென பழைய அன்பு, உரிமையுடன் குழைவானேன்?

ரிஸீவரை வைத்துவிட்டு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்த போது, 'சின்னச்சின்ன விஷயங்கள்ல ஸ்பாவத்த மாத்திக்கறதுதான் எல்லாருக்கும் நல்லதுனு புரியுது-விட்டுக் கொடுத்து வாழறது சந்தோஷத்தை அதிகரிக்கும்'னு நீங்க தானே சொல்லுவீங்க' என்ற வார்த்தைகள் மட்டும் மீண்டும் மீண்டும் மனசில் அலை மோதின.

அவளை அறிந்த தாவாய் நான் வெளியிட்டுள்ள இந்த கருத்துக்கு, அப்போதெல்லாம் முக்கியத்துவம் கொடுக்க முனையாதவள் இப்போது மட்டும் திடீர் ஞானோதயம் பெற்ற தினுசில் இன்று அதைக் குறிப்பிட்டுப் பேசுவது எதனால்?

'நான் மாறிவிட்டேன் அங்கிள்-எல்லாவற்றிலும் தான்' என்று மறைமுகமாய் எனக்கு உணர்த்த முயற்சிக்கிறாளா?



'நான் மாறிவிட்டதைப் புரிந்துகொண்டு எனக்கு உதவ முடியுமா?' என்று பூடகமாகக் கேட்கிறாளா?

சிந்தனை தீவிரமாக, உட்காரப் பொருந்தாமல் எழுந்து ஜன்னலிடம் சென்று நின்று கொண்டேன்.

எனக்குப் பிடித்தமான அரளிச் செடி ஜன்னலருகில் வெளியில் நின்று கொண்டு என் வரவுக்காக காத்திருந்த மாதிரி கொல்லென்று பூத்திருந்த சிகப்பு கொத்து பூக்களை அசைத்து 'ஹோ' என்று குசலம் விசாரித்தது.

கம்பிகளின் இடுக்கு வழியாக கையை நீட்டி, வெகு அருகாமையிலிருந்த ஒரு கொத்தை கிட்டத்தில் இழுத்து, முகர்ந்து பார்த்தேன்.

அரளிப் பூக்களுக்கே உரிய அலாதி காட்டுப்பூ மணம் நாசியில் ஏறியது.

எதையும் ரசிக்கப் பிடிக்காமல் பார்வையை வெட்டியாய் தோட்டத்தில் அலைய விட்டேன்...

சற்று தள்ளித் தனியாய் மைனா ஒன்று.

வழக்கமாக மைனாக்கள் ஜோடி,ஜோடியாய்த்தானே வரும்! இதுமட்டும் ஏன் ஒற்றையாய் இருக்கிறது!

பார்வையைச் சுழற்றிக் கொய்யா, மா மரங்களை ஏறிட்டபோது அவற்றிலும் இரண்டாவது மைனாவை என்னால் பார்க்க முடியவில்லை.

என்னாயிற்று? ஒரு மைனா இரை தேடிப் போயிருக்கிறதோ? இருக்காதே. மைனாக்கள் எதைச் செய்தாலும் ஜதையாத்தானே செய்யும் என்பார்கள்! அப்புறம்? ஒன்று செத்துவிட்டதோ? இல்லாவிட்டால் 'உன்னோடு வாழப் பிடிக்கவில்லை' என்று பறந்து போய்விட்டதோ-மனிதர்கள் மாதிரி?

பிரிந்துவிட்ட மனிதர்களைப் பற்றி எண்ணம் எழுந்த போது மீண்டும் ரமணனும், யமுனாவும் கவனத்திற்கு வந்தார்கள்

ரமணன் பேசிய போதும் அந்தக் குரலில் ஏதோ ஒரு ஆதங்கம் இழைந்தது இப்போது ஞாபகத்துக்கு வந்தது.

'லீவு போட்டுட்டு மெட்ராஸுக்கு வரலாம்னு இருக்கேன் ஸர்- ஊர்ல இருப்பீங்களா, இல்ல ஏதாவது கூட்டத்துல பேச வெளியூர் போறதா இருக்கீங்களா?... உங்க கிட்ட பேசணும்...'

உங்ககிட்ட பேசணும்-யமுனா கூறின அதே வார்த்தைகள்

இவனும் பேச வேண்டும் என்கிறான். அவளும் சொல்ல விஷயம் இருக்கிறது என்கிறாள்...

என்ன விஷயம்...!

அவளிடம் சொல்ல வேண்டியவற்றை இவனும், இவனிடம் கூற விரும்புவதை அவளும் ஒருவரிடம் மற்றவர் எப்படிச் சொல்வது என்கிற தயக்கத்தில் என்னிடம் வந்திருக்கிறார்களோ?

அப்படித்தான் இருக்கும் என்பது தெளிவாக, திரும்பி, நடந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டேன்.

இரண்டு பேருமே அதி புத்திசாலிகள், அடிப்படையில் நல்லவர்கள். சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவர்கள், ஆனாலும், இடையிடையே ஏனோ தேவையில்லாமல் 'கண்ணாமூச்சி' ஆட்டம் ஆடுகிறார்கள். எதற்காக!

மனம் கனத்தது. விவரம் தெரியாமல் தவித்தது.

யமுனா, ரமணன்பால் வைத்துவிட்ட பாசத்தின் காரணமாய் என்ன விஷயம், எதற்காக மெனக்கெட்டு



தொலைபேசியில் டெல்லியிலிருந்து அழைத்தார்கள் என்று தெரிந்துவிட்டால் தேவலை போல இருந்தது.

அடுத்து வந்த நாட்களிலும் இதே அவஸ்தை, தொடர்ந்தது. நிம்மதியாய் சிந்திக்க முடியாமல், ஆழ்ந்து உறங்க முடியாமல் யமுனாவும், ரமணனும் சதா என்னை வாட்டி எடுத்தார்கள்.

என்ன சொல்லப் போகிறார்களோ, நான் என்ன செய்ய வேண்டி வருமோ என்று தவிப்பு இருப்புக் கொள்ளாமையை அதிகமாக்க, மெள்ள நடந்து தோட்டத்துக்குப் போனேன்.

பெண்ணின் சிவந்த மார்பகம் போல பூத்திருந்த விருட்சிக் கொத்துக்கள்; வானத்துக்கு நீ வைக்க ஆசைப் பட்ட மாதிரி உயரே வளர்ந்து, நெருப்பின் ஜ்வாலை போன்று மாலை வெயிலில் பூக்கள் தகதகக்க வரிசையாய் நின்ற 'குல்மொஹர்' மரங்கள், பச்சைப்புல்வெளி... தொட்டிகளில் சிரித்த க்ரோட்டன்ஸ் செடிகள்...அத்தனையும் தாண்டிக் கொண்டு நடந்தேன்.

சிந்தனை, ஓயாமல் யமுனா, ரமணனையே சுற்றி வந்தது.

எதற்காக இருவரும் ஒரே நாளில் கூப்பிட்டார்கள்?

ஒருவர் அழைப்பது மற்றவருக்குத் தெரியுமா?

திட்டமிட்டுக் கொண்டுதான் பேசுகிறார்களா, அல்லது யதேச்சையாய் இப்படி அமைந்து விட்டதா?

'உங்ககிட்ட பேசணும் அங்கிள்...'

'லீவு போட்டுட்டு மெட்ராஸுக்கு வரலாம்னு இருக்கேன் ஸர்...உங்க கிட்ட பேசணும்...'

இரண்டு பேருமே எதைப்பற்றிப் பேச விரும்புகிறார்கள்?

இதுவரையில், கடந்த ஆறு வருஷங்களாய் ஆணும் பொண்ணுமாய் நெருங்கி, பிரிய நேர்ந்த போதெல்லாம் இவர்கள் என்னை நாடி வந்திருக்கிறார்கள் அதுபோலத் தானா இப்போதும்?

கடைசியாய் ஐந்து மாசங்களுக்கு முன் ஜூலையா? எஸ். ஜூலைதான்... பிரிந்தவர்கள் எடுக்கப்போகும் அடுத்த ஸ்டெப் முக்கால்வாசி சேருவதாகத்தான் இருக்கும்! ஸோ, 'நாங்கள் மறுபடி கூடி வாழ விரும்பு கிறோம்' என்ற ஒற்றை வரியில் மரியாதைக்கு என்னிடம் தெரிவித்து விட்டு எதுவுமே நடக்காத மாதிரி, செய்த வாதங்கள், உணர்ந்த குறைகள் அத்தனையும் துடைத்துப் போட்டு விட்டுக் குடித்தனம் நடத்தத் திட்டமிடுகிறார் களா? அதைத் தெரிவிக்கத்தான் இத்தனை தயக்கமா?

'நீ வேண்டாம்' என்று பிரிந்து போன பிறகு எப்படி மீண்டும் 'நீ வேண்டும்' என்று கூறுவது என்கிற லஜ்ஜை யுடன் என்னைத் தூது அனுப்ப முயற்சிக்கிறார்களா?

இவள் மனசை அவனிடமும், அவன் விரும்புவதை இவளிடமும் தெரிவித்து, 'போனால் போகிறது... லெட் பை கான்ஸ் பீ பை கான்ஸ்... பழசை மறந்து புது வாழ்வு துவங்குங்கள்' என்று அடித்துப் பேசி, இருவருக்கு மிடையே பாலமாகச் செயல்பட வேண்டும் என்று எதிர் பார்க்கிறார்களா?

அதன் முதல் கட்டமாகப் போனில் தொடர்பு 'உங்க ளோடு பேச வேண்டும்' என்கிற பீடிகை; 'ஊருக்கு வந்து பேசட்டுமா?' என்கிற கேள்வி-எல்லாமா?

ஏனோ இந்த ரீதி நினைப்பு சந்தோஷத்தைத் தருவ தற்குப் பதிலாய் ஆயாஸத்தையே எழுப்பியது.

நடையைத் துரிதப் படுத்தினேன். அணில் ஒன்று மற்றதைத் துரத்திக் கொண்டு என்னைக் கடந்து ஓடியது.



யமுனாவும் ரமணனும் மறுபடி கணவன் மனைவி யாக வாழத் தீர்மானித்திருக்கிறார்களா அல்லது உறவு, பொறுப்பைக் கொடுத்து, எதிர்பார்ப்புகளை உண்டாக் கும் என்பதால் இவை எதுவுமே இல்லாமல் காதலர்களாக சேர்ந்து வசிக்கத் திட்டமிட்டிருக்கிறார்களா?

**Living together** - மேலை நாடுகளில் பரவி வரும் திரு மண பந்தம் இன்றி விரும்பும் வரை ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழ்வதைப் போன்று இவர்களும் வாழத் திட்ட மிட்டிருக்கிறார்களோ? வொய் நாட்? செய்தாலும் செய் வார்கள்.

தோட்டத்தை ஒருமுறை சுற்றி வந்தவன் கொன்றை மரத்தடியில் இருந்த கடப்பைக் கல் பெஞ்ச் மேல் அமர்ந் தேன்.

இந்த 'லிவ்விங் டு கெதராவ'து சாஸ்வதமாக இருக் குமா? இல்லை, அந்த ஏற்பாட்டையும் அனுசரித்துப் போக முடியாமல் ஒரு சில மாசங்களில் விலக முடிவெடுப் பார்கள். உதட்டைக் கடித்துக் கொண்டு சிந்தித்த வரை யில் பதில் சொல்லத் தெரியாமல் போக என்ன அவஸ்தை இது என்கிற ஆயாஸம் உள்ளுக்குள் மண்டுவதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

நீளமாய் பெருமூச்சொன்றை வெளியிட்டேன்.

யமுனாவும் ரமணனும் தற்சமயம் என்னிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள்?

அவர்கள் கூச்சத்துடன் இருப்பதால் நான் முனைந்து காரியத்தை முடித்துத் தரவேண்டும் என்கிற ஆர்வத்தில் தான் தொடர்பு கொண்டார்களா?

சரி, அவர்கள் விருப்பப்போல நடக்கிறது என்றே வைத்துக் கொள்வோம், அப்புறம்?

'சேர்ந்து வாழ்க்கை... எத்தனை மாசங்களுக்கு? மறுபடியும் பிரிய மாட்டார்கள் என்பதற்கு உத்திரவாதம் என்ன?

அரைநிமிஷம் மௌனமாய் இருந்துவிட்டுத் திடுமென புத்தி 'அட பைத்தியக்காரா - இத்தனை பட்டும் உனக்குத் தெளிவு பிறக்கவில்லையே!' என்று கையைத் தட்டிக் கொண்டு கேலி செய்ய, திடுக்கிட்டேன்.

பைத்தியக்காரனா? நானா?

பின்னே?-ஈர மண்ணைத்தான் இஷ்டப்படி உருவாக்க முடியும்-மண்ணைச் சுட்டு விட்டால் அப்புறம் வளையாது, நிமிராது, ஒட்டவே ஒட்டாது... 'சுட்ட மண் ஒட்டாது' பழமொழி நினைவே இல்லை? புத்தி கொக்கரித்தது.

சொடுக்குப் போட்ட மாதிரி நிமிர்ந்தேன்.

யமுனாவுக்கும், ரமணனுக்கும்தான்—தன் சிந்தனை—ரசனை—தனித்தன்மை—முக்கியம். அது முக்கியம், இந்தக் குணங்களால் அவ்விருவருமே சுட்ட மண்ணுக்கு நிகரானவர்கள். ஒட்ட நினைத்தாலும் மறுபடி மறுபடி விட்டுப் போவது இருவருமே சுட்ட மண்ணாகி விட்ட காரணத்தால் தான்...இதை உணராது,சேரவும் பிரியவும் இவர்கள் முடிவு எடுத்த போதெல்லாம் நானும் அதில் பங்கு கொண்டிருக்கிறேனே! என்ன மடத்தனம்?

இன்னும் ஒருமுறை என்ன, ஆயுசு முடியும் வரைக்கும் கூட கூடுவதும், விலகுவதுமாக இவர்கள் இருந்தாலும் எனக்கு அது ஆச்சர்யம் தராது! பாறை மேல் விதை போட்டு செடி வளர்ப்பது போன்று, விழலுக்கு நீர் பாய்ச்சும் காரியம்தான் திரும்ப இவர்களை இணைத்து வைக்க நான் பாடுபடுவதும்!

போதும்—செய்த வரையில் போதும்... இதனால் ஆகப் போவது எதுவும் இல்லை என்பதை உணர்ந்து விட்டால் விலகி நிற்பதுதானே விவேகம்?



யமுனா, ரமணன் மேல் எனக்கு எக்கச்சக்கத்துக்கு அன்பு இருக்கிறது. அவர்கள் வாழ்க்கை நன்றாக அமைய வேண்டுமே என்ற கவலையும் இருக்கிறது- ஆனாலும்? இனஃப் ஈஸ் இனஃப்...தேர் ஈஸ் எ லிமிட் ஃபார் எவ்ரிதிங்...அல்லவா?

இது நாழிகை இல்லாத நிம்மதி, பக்கத்தில் வந்து உட்கார்ந்து கையைப் பிடித்துக் கொள்ள அண்ணாந்து இலைகளூடே தெரிந்த நிர்மலமான ஆகாயத்தைக் கண்களை இடுக்கிக் கொண்டு எறிட்டேன்

'அய்யா...' திரும்பினேன்; மாணிக்கம், கையில் கார்ட்லெஸ் டெலிபோன்.

'யாருப்பா?'

'குங்குமத்திலேந்து பாவை சந்திரன் பேசறாரு...'

கை நீட்டி டெலிபோனைப் பெற்று, 'ஹலோ' என்றேன்,

'வணக்கம் ஸார்...பாவை பேசறேன்...சுட்ட மண் கடைசி அத்தியாயம் தரேன்னு சொன்னீங்களே... ஆளை எப்ப அனுப்பட்டும்?'

யோசித்தேன்.

'அத்தியாயம் மனசுல வந்திருச்சு...உட்கார்ந்து எழுத வேண்டியதுதான்...எப்படியும் ராத்திரி எழுதி, காலைல டைப் அடிச்சிடுவேன்...பதினொரு மணிக்கு அனுப்புங்களேன்...'

வணக்கம் கூறி, தொடர்பைத் துண்டித்தவன், டெலிபோனை மாணிக்கத்திடம் தந்து விட்டு எழுந்தேன்.

'மொட்டை மாடில உட்கார்ந்துகிட்டு கதை எழுதப் போறேன்...ஒரு கப் காபி எடுத்துட்டு வா.'

காபி வந்தது. குடித்துவிட்டு எழுதத் துவங்கினேன்.

அத்தியாயம் முப்பது- என்று நடுவில் எழுதி, இடது ஓரத்தில் 'நான்'-என்றும் குறிப்பிட்டேன்.

திட்டமிட்டபடி வரிசையாய்க் கருத்துக்களை வெளியிட்டேன்.

கடைசியாக-

'இன்னும் ஒருமுறை என்ன, ஆயுசு முடியும் வரைக்கும் கூட கூடுவதும், விலகுவதுமாக இவர்கள் இருந்தாலும் எனக்கு அது ஆச்சர்யம் தராது! பாறை மேல் விதை போட்டுச் செடி வளர்ப்பது போன்று, விழலுக்கு நீர் பாய்ச்சும் காரியம்தான் திரும்ப இவர்களை இணைத்து வைக்க நான் பாடுபடுவதும்...

இந்த அர்த்தமற்ற வேலை தேவைதானா? அன்பு என்கிற பேரில் கண்ணை மூடிக் கொண்டு எதையும் ஆதரிப்பதா?

நோ-அவசியமில்லை...

சுட்ட மண் ஒட்டாது என்பதை நன்றாகவே புரிந்து கொண்டு விட்டேன். இதை உணர இத்தனை வருஷங்களா- என்கிற கேள்வி எழுப்பிய சங்கடத்தை மறக்க, தனக்குத் தானே புன்னகைத்தவாறு அருகே வைத்திருந்த புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன்.

என்று எழுதி முடித்தவன், கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தேன். கதையை வித்தியாசமாக எழுதி, சின்னதாக ஜனித்த என் விழிப்புணர்வுடன் முடித்தது நிறைவாக இருந்தது.

பலவிதத்திலும் என்னை வெகுவாக ஆக்ரமிக்கத் தொடங்கிவிட்ட யமுனா, ரமணன் என்கிற நிஜவாழ்வு நபர்களை மட்டுமல்லாது, கதா பாத்திரங்களையும் முழுமையாய்ப் புரிந்து கொண்டு, அவர்களுக்கென ஒதுக்கப் பட்ட இடத்தில் அவர்களை வைத்துவிட்ட திருப்தியுடன் எழுந்து, மணி ஏழு கூட ஆகியிருக்கவில்லை என்பதால் இலக்கிய சிந்தனை'க் கூட்டத்துக்குச் செல்லத் தயாராக உள்ளே சென்றேன்.

**(சுட்ட மண் இனி ஒட்டாது)**